



பொருளாதார அபிவிருத்தி அமைச்சு



# செயலாற்றுகை


# 2014











Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொருளாதார அபிவிருத்தி அமைச்சு


# செயலாற்றுகை

# 2014

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மஹிந்த சிந்தனை - எதிர்கால நோக்கு



"உங்கள் அனைவரினதும்
எண்ணங்களை ஒன்று சேர்த்து
மனிதனைக் கட்டியெழுப்பி
குடும்பத்தைக் காப்பதற்கும்
குடும்பத்தைக் கட்டியெழுப்பி
கிராமத்தைக் காப்பதற்கும்
கிராமத்தைக் கட்டியெழுப்பி
நாட்டைக் காப்பதற்கும்
நாட்டைக் கட்டியெழுப்பி
உலகத்தை வெல்வதற்கும்

"மஹிந்த சிந்தனை" எனும்
பெயர் கொண்ட
எனது வேலைத்திட்டத்தைச்
சமர்ப்பித்துள்ளேன்......

எனது கனவு சுதந்திரமான
தேசமாகும்,
பசுமை நிறைந்த நாடாகும்,
களஞ்சியங்கள் முழுமையாக
நிரம்பிய நாளையாகும்,
ஓர் தார்மீக மனிதன் ஆவான்"

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உள்ளடக்கம்


i. பொருளாதார அபிவிருத்தி அமைச்சின் விடயங்களும் தொழிற்பாடுகளும் vii
ii. அமைச்சின் கீழ் செயற்படும் நிறுவனங்கள் ix
iii வளர்ந்து வரும் பொருளாதாரத்திற்கான அமைச்சின் மத்தியஸ்தம் xi
iv. பொருளாதார அபிவிருத்தி அமைச்சின் - தலைமைத்துவமும் நெறியாளர்களும் xiii
v. அமைச்சின் சிரேஸ்ட உத்தியோகத்தர்கள் xv
vi. மாவட்ட திட்டமிடல் பணிப்பாளர்கள் தொடர்பான தகவல்கள் xvii
முகவுரை xix
01.மாவட்டங்களின் துறைசார் முன்னேற்ற விபரம்
கொழும்பு 1
கம்பஹா 6
களுத்துறை 11

விசேட குறிப்பு 1 - திவி நெகும - தன்னிறைவான மனைப் பொருளாதாரம் 16
02.மாவட்டங்களின் துறைசார் முன்னேற்ற விபரம்
கண்டி 22
மாத்தளை 26
நுவரேலியா 32

விசேட குறிப்பு 2 - கம நெகும - வலுவூட்டப்பட்ட சமுதாயம் 37
03.மாவட்டங்களின் துறைசார் முன்னேற்ற விபரம்
காலி 41
மாத்தறை 45
அம்பாந்தோட்டை 51

விசேட குறிப்பு 3 - கிராமியப்பொருளாதார அதிகரிப்பில் கமநல திணைக்களத்தின் பங்களிப்பு 57
04.மாவட்டங்களின் துறைசார் முன்னேற்ற விபரம்
யாழ்ப்பாணம் 60
மன்னார் 65
வவுனியா 69
முல்லைத்தீவு 73
கிளிநொச்சி 77

விசேட குறிப்பு 4 - தேசிய விவசாய வர்த்தக அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டம் 82
05.மாவட்டங்களின் துறைசார் முன்னேற்ற விபரம்
மட்டக்களப்பு 83
அம்பாறை 90
திருகோணமலை 97

விசேட குறிப்பு 5 - நெல் அறுவடை விழா 102
06.மாவட்டங்களின் துறைசார் முன்னேற்ற விபரம்
குருநாகல் 103
புத்தளம் 109

விசேட குறிப்பு 6 - கிராமிய பாலங்களை நிர்மாணித்தல் 114
07.மாவட்டங்களின் துறைசார் முன்னேற்ற விபரம்
அநுராதபுரம் 115
பொலனறுவை 121

விசேட குறிப்பு 7 - தாய் சேய் சிகிச்சை நிலையங்களை அபிவிருத்தி செய்தல்
08.மாவட்டங்களின் துறைசார் முன்னேற்ற விபரம்
பதுளை 129
மொனராகலை 136




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | |
|---|---|
| விசேட குறிப்பு 8 - வாராந்த சந்தைகளை அபிவிருத்தி செய்தல் | 142 |
| 09. மாவட்டங்களின் துறைசார் முன்னேற்ற விபரம் | |
| இரத்தினபுரி | 144 |
| கேகாலை | 149 |
| விசேட குறிப்பு 9 - சுற்றுலாத்துறையின் எழுச்சி | 154 |
| விசேட குறிப்பு 10 - நிலக்கண்ணி அகற்றும் நிகழ்ச்சித்திட்ட முன்னேற்றம் | 162 |
| விசேட குறிப்பு 11 - இந்திய வீடமைப்புத் திட்டம் | 164 |
| விசேட குறிப்பு 12 - அபிவிருத்தியில் உலக உணவுத் திட்டத்தின் பங்களிப்பு | 165 |
| விசேட குறிப்பு 13 - நடமாடும் சேவை- கிராமத்திற்கு கிராமம் வீட்டிற்கு வீடு சமூகத்தேவைகளை இனம் காண்பதற்காக சமூக ஆதரவுக் கருத்திட்டம் | 166 |
| விசேட குறிப்பு 14 - தேசத்திற்கு மகுடம் நிகழ்ச்சித்திட்டம் | 168 |
| விசேட குறிப்பு 15 - கால்நடை அபிவிருத்திக் கருத்திட்டம் | 169 |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பொருளாதார அபிவிருத்தி அமைச்சின் விடயங்களும் தொழிற்பாடுகளும்

- மஹிந்த சிந்தனையின் எதிர்கால நோக்கு அரசின் ஊடாக நடைமுறைப்படுத்தப்பட எதிர்பார்த்திருக்கும் ஏனைய தேசியக் கொள்கைகளின் அடிப்படையில் நடவடிக்கைகள் மேற்கொள்ளுதல், சுற்றுலாத்துறை, முதலீடுகள் மற்றும் சகல நடவடிக்கைகளுக்கும் சம்பந்தப்பட்ட திணைக்களங்கள் மற்றும் நிறுவனங்களின் நடவடிக்கைகளுக்கும் பொருத்தமான கொள்கைகள், வேலைத்திட்டங்கள் மற்றும் கருத்திட்டங்களை தயாரித்துக் கொள்ளல்.
- சம்பந்தப்பட்ட எதிர்பார்ப்பினை எட்டுவதற்கு தேசிய திட்டமிடல் அதிகாரிகளுடன் இணைந்து அதற்கான காலப்பகுதி மற்றும் வரவு செலவுகளுக்கு ஏற்பவும் வளங்களின் அளவிற்கேற்பவும் மேற்குறிப்பிட்ட கொள்கைகள், வேலைத்திட்டங்கள் மற்றும் கருத்திட்டங்களுக்கு ஏற்ப நடவடிக்கை எடுத்தலை ஒழுங்கு செய்தல்.
- அமைச்சின் பணிப்பட்டியலில் உள்ளவாறு பொது மக்கள் சேவையை வினைத்திறனுடனும் பொது மக்கள் விருப்பத்திற்கேற்பவும் பெற்றுக்கொடுத்தல்.
- வீண்விரயம் மற்றும் சுரண்டல்களுக்கு அப்பாற்பட்டு அமைச்சின் பணிகள் மேற்கொள்ளப்படுவதை உறுதிப்படுத்துவதற்கு ஏற்றவாறு புதிய முகாமைத்துவ தொழில்நுட்ப முறைமையைப் பின்பற்றிச் சகல பணிகளையும் வழிமுறைகளையும் உரிய முறைப்படி மறுசீரமைத்தல்.
- கிராம நலன்களை தரமுயர்த்துவதற்கான முறைமையை நடைமுறைப்படுத்துதல்.
- கிராம மற்றும் பிரதேச பொருளாதார அபிவிருத்திக் கொள்கைகள் மற்றும் தந்திரோபாய திட்டங்களை வகுத்தல்
- உள்ளூர் மற்றும் பெருந்தோட்டத்துறைகளில் உட்கட்டமைப்பு வசதிகளை அபிவிருத்தி செய்தல்
- சகல பிரதேச அபிவிருத்தி வேலைத்திட்டங்கள் (மாவட்ட அபிவிருத்தி வேலைத்திட்டங்கள் உட்பட)
- பன்முகப்படுத்தப்பட்ட வரவு செலவுத்திட்ட நிதியை நடைமுறைப்படுத்துதல்.
- சுற்றுலாக் கைத்தொழில் துறையை மேம்படுத்துதல்
- சுற்றுலாத் துறைப் பிரதிநிதித்துவத்தைப் பதிவுசெய்தல்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அமைச்சின் கீழ் செயற்படும் நிறுவனங்கள்

## திணைக்களங்கள்

- வாழ்வின் எழுச்சி அபிவிருத்தி திணைக்களம்
- கமநல அபிவிருத்தி திணைக்களம்

## சட்டரீதியான நிறுவனங்கள்


- இலங்கை சுற்றுலாத்துறை அபிவிருத்தி அதிகாரசபை
- இலங்கை சம்மேளனப் பணியகம்
- இலங்கை சுற்றுலா மற்றும் ஹோட்டல் முகாமைத்துவ நிறுவனம்
- இலங்கை சுற்றுலாத்துறை ஊக்குவிப்புப் பணியகம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வளர்ந்து வரும் பொருளாதாரத்திற்கான அமைச்சின் மத்தியஸ்தம்






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தலைமைத்துவமும் நெறியாளர்களும்



கௌரவ பசில் ராஜபக்ஷ
பொருளாதார அபிவிருத்தி அமைச்சர்



கௌரவ எஸ்.எம். சந்திரசேன
பொருளாதார அபிவிருத்தி
பிரதி அமைச்சர்



கௌரவ ஆர். முத்து சிவலிங்கம்
பொருளாதார அபிவிருத்தி
பிரதி அமைச்சர்



கௌரவ எம்.எல்.ஏ.எம். ஹிஸ்புல்லா
பொருளாதார அபிவிருத்தி
பிரதி அமைச்சர்



கௌரவ சுஷந்த புஞ்சிநிலமே
பொருளாதார அபிவிருத்தி
பிரதி அமைச்சர்



வைத்திய கலாநிதி. நிகால் ஜெயதிலக
செயலாளர் - பொருளாதார அபிவிருத்தி அமைச்சு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அமைச்சின் சிரேஷ்ட உத்தியோகத்தர்கள்

| | தொலைபேசி இலக்கம் | தொலைநகல் இலக்கம் | மின்னஞ்சல் முகவரி |
|---|---|---|---|
| **செயலாளர்** | | | |
| வைத்தியகலாநிதி . நிகால் ஜெயதிலக | 0112 676 353 | 0112 676 720 | secretary@med.gov.lk |
| **மேலதிக செயலாளர்கள்** | | | |
| ஹேமா தர்மவர்த்தன (நிர்வாகம்) | 0112 673 615 | 0112 673 753 | dgip@med.gov.lk |
| சாந்த பண்டார (வறுமை ஒழிப்பும், கிராமிய அபிவிருத்தி) | 0112 673 638 | 0112 673 622 | adsecrdd@med.gov.lk |
| எசல வீரகோன் (வெளி உறவுகள்) | 0112 669 096 | 0112 669 091 | addsecer@med.gov.lk |
| பிரியந்த மாயதுன்னை (கமநலசேவைகள் மற்றும் விசேட அபிவிருத்தித் திட்டங்கள்) | 0112 673 447 | 0112 681 469 | priyanthematadunne@yahoo.com |
| | | | |
| **ஆணையாளர் நாயகங்கள்** | | | |
| என்.பி. மொண்டி ரணதுங்க (பிரதேச அபிவிருத்தி மற்றும் கண்காணிப்பு) | 0112 673 494 | 0112 673 643 | balasooriyamonty@yahoo.com |
| தம்ம திஸாநாயக்க (சமுதாயம்சார் உபாயம், மக்களவை மற்றும் திவிநெகும, ஜனசபா) | 0112 681 579 | 0112 681 964 | dhammadissa@gmail.com |
| பீ.எஸ். குணரட்ன (ஊக்குவிப்பு மன்றம்) | 0112 427 051 | 0112 399 867 | bashu@hotmail.com |
| | | | |
| **பிரதம கணக்காளர்** | | | |
| டபிள்யூ. ஏ. சரத் குமார | 0112 676 354 | 0112 673 601 | kumarawas@gmail.com |
| | | | |
| **உள்ளக கணக்காய்வாளர்** | | | |
| எச். சந்திரசேனா | 0112 166 766 | 0112 673 618 | chalpege@yahoo.com |
| | | | |
| **பணிப்பாளர்கள்** | | | |
| எச்.சி.எஸ். குணதிலக (பொறியியலாளர்) | 0113 133 471 | 0112 611 328 | chands99@hotmail.com |
| எம்.சி.கே. தம்மிக்க (கம நெகும) | 0112 673 626 | 0112 681 180 | dhammikamck@yahoo.com |
| என்.ஏ.பி. நிசங்க (சுய வேலைவாய்ப்பு) | 0112 673 652 | 0112 676 350 | Pushpana10@yahoo.com |
| எம்.ஐ.ஏ. வகாப்தீன் (பன்முகப்படுத்தப்பட்ட வரவுசெலவுத் திட்டம்) | 0112 681 644 | 0112 673 890 | miawahabdeen@yahoo.com |
| ஆர்.டி. அநுர ரணசிங்க (திட்டமிடல் மற்றும் கண்காணிப்பு) | 0112 673 568 | 0112 673 882 | dirplan@med.gov.lk |
| சி.ஆர். சூரியாராச்சி (வறுமை ஒழிப்பு மற்றும் SAARC) | 0112 681 653 | 0112 681 269 | medsaarc@gmail.com |
| உமா நிரஞ்சனன் | 0112 676 816 | 0112 673 882 | umani12@yahoo.co.in |
| ஜெயவதனி நவரட்ணம் (கமநல சேவைகள் மற்றும் அபிவிருத்தித் திட்டங்கள்) | 0112 681 657 | 0112 681 557 | jeyavathani@gmail.com |
| ஜி.டி.டி. குமார | 0112 166 760 | 0112 673 622 | gdkumara@yahoo.com |
| | | | |
| **சிரேஷ்ட உதவி செயலாளர்கள்** | | | |
| கே.என். குமாரி சோமரத்தன | 0112 673 452 | 0112 673 689 | ksomaratna@yahoo.com |
| வி. பிரேமசந்திரன் (பதில் கடமை) | 0112 673 575 | 0112 681 557 | kiruvaru@yahoo.com |
| | | | |
| **சிரேஷ்ட கணக்காளர்கள்** | | | |
| எஸ்.யு. சந்திரகுமாரன் | 0112 676 149 | 0112 674 149 | suchandrakumaran@gmail.com |
| நிலந்த பர்னான்டோ | 0112 166 700 | 0112 681 448 | nilantha232@gmail.com |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மாவட்ட திட்டமிடல் பணிப்பாளர்கள் தொடர்பான தகவல்கள்

| மாவட்டம் | பணிப்பாளர்களின் பெயர்கள் | தொலைபேசி இலக்கம் | தொலைநகல் இலக்கம் | கையடக்கத் தொலைபேசி | மின்னஞ்சல் முகவரி |
|---|---|---|---|---|---|
| கொழும்பு | திருமதி. டி.எம். நந்தாவதி திசநாயக்க | 011-2369147 | 011-2441918 | 0779-728115 | dpscolombo@yahoo.com |
| கம்பஹா | திரு. பி.ஏ. காமினி விக்கிரமபால | 033-2231722 | 033-2222759 | 0715-999875 | gampahadps@gmail.com |
| களுத்துறை | திரு. கே.ஏ .ரி. ஸ்ரீவர்தன | 034-2222621 | 034-2222621 | 0718-668875 | dpskalutara@yahoo.com |
| கண்டி | திரு. பி. முதலிஹே | 081-2224079 | 081-2201120 | 0714-919374 | dpskandy@yahoo.com |
| மாத்தளை | திருமதி.எம்.எம்.ஜி. கே.மீகாககொருவ | 066-2222143 | 066-2222143 | 0718-570578 | dpsmatale@gmail.com |
| நுவரேலியா | திருமதி. டபிள்யு. ஏ.எச். விஜயரத்தன | 052-2222522 | 052-2222610 | 0714-466002 | dpsnuwaraeliya@gmail.com |
| காலி | திருமதி. பி.என்.கே. மலலசேகர | 091-2222975 | 091-2226384 | 0773-752887 | galledps@gmail.com |
| மாத்தறை | திரு. எஸ்.யீ. விதுர பிரசன்ன | 041-2222236 | 041-2222236 | 0714-500656 | dpsmatara@gmail.com |
| அம்பாந்தோட்டை | திரு. எம்.கே. ரியூசன் | 047-2256234 | 047-2256234 | 0718-153923 | dpshambantota@gmail.com |
| யாழ்ப்பாணம் | திருமதி. ஆர். மோகனேஸ்வரன் | 021-2222427 | 021-2223712 | 0718-433045 | dpsjaf@sltnet.com |
| மன்னார் | திரு. கே. ஸ்ரீ பாஸ்கரன் | 023-2222283 | 023-2222232 | 0776-282750 | dpsmnr@gmail.com |
| வவுனியா | திரு. எம். கிருபாசுதன் | 024-2222137 | 024-2222590 | 0771-457695 | dpsvav@gmail.com |
| முல்லைத்தீவு | திருமதி. எம்.கீ. வில்வராசா | 021-2290043 | 021-2290037 | 0775-315063 | dpsmullativu@gmail.com |
| கிளிநொச்சி | திரு. எஸ். மோகனபவன் | 021-2285760 | 021-2285760 | 0773-024349 | dpskillnochchi@gmail.com |
| மட்டக்களப்பு | திரு. ஆர். நெடுஞ்செழியன் | 065-2223151 | 065-2222435 | 0714-735160 | dpsbati@gmail.com |
| அம்பாறை | திரு. எஸ். அன்வர்தீன் | 063-2222534 | 063-2222534 | 0773-304081 | dpdpsampa@gmail.com |
| திருகோணமலை | திருமதி. கே. பரமேஸ்வரன் | 026-2221955 | 026-2225338 | 0771-394182 | dpstrinco@gmail.com |
| குருநாகல் | திருமதி. எம்.ஏ.பி.எஸ்.ஜி. பண்டாரநாயக்க | 037-2221725 | 037-2222488 | 0777-724266 | dpskurunegala@gmail.com |
| புத்தளம் | திருமதி. எஸ். பி. சந்தநாயக்க | 032-2265690 | 032-2265257 | 0714-411604 | dpsput@yahoo.com |
| அநுராதபுரம் | திரு. டபிள்யு .எம்.ஆர்.பீ. வீரசேகர | 025-2235081 | 025-2235809 | 0716-844111 | dpsanuradhapura@gmail.com |
| பொலனறுவை | திரு. ஐ. மன்சூர் | 027-2222137 | 027-2224685 | 0718-052213 | dpsplane@yahoo.com |
| பதுளை | திரு. டபிள்யு. டபிள்யு. எஸ் மங்கல | 055-2222465 | 055-2222477 | 0715-154151 | dpsbadulla@yahoo.com |
| மொனராகலை | திரு. ஐ.ஏ. நீல் பர்னான்டோ | 055-2276380 | 055-2276025 | 0718-678272 | dpsmonaragala@yahoo.com |
| இரத்தினபுரி | திரு. டபிள்யு. ஜி. சமன்திலக | 045-2222870 | 045-2226000 | 0718-254969 | dpsrpura@yahoo.com |
| கேகாலை | திருமதி. பீ. அனோமா விஜேரத்ன | 035-2221611 | 035-2222782 | 0718-203732 | dps.kegalle@yahoo.com |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முகவுரை

அரசின் சக்தி வாய்ந்த பொருளாதார கொள்கைக்கிணங்க உயர்வான பொருளாதார அபிவிருத்தி வேகத்துடன் கட்டியெழுப்பும் பொருளாதாரத்தை உடைய நாடாக முன்னோக்கி செல்ல இலங்கைக்கு முடியுமாக உள்ளது. 2012 ஆம் ஆண்டில் 6.3 வீதமாக ஆக இருந்த பொருளாதார வளர்ச்சி மட்டம் 2013 ஆம் ஆண்டில் 7.3 வீதமாக வளர்ச்சி அடைந்துள்ளது. பொருளாதார வளர்ச்சி அபிவிருத்தியில் முக்கிய பங்காக இருப்பதுடன் பொருளாதார உட்கட்டமைப்பு வசதிகளிலும் சமூக உட்டகட்டமைப்பு வசதிகளிலும் பெற்றுக்கொண்ட அபிவிருத்தி இந்த வளர்ச்சிக்கு காரணமாக உள்ளது.

பொருளாதார அபிவிருத்தி அமைச்சினால் தனிநபர் அபிவிருத்திக்காக நடைமுறைப்படுத்தப்பட்ட அபிவிருத்தி வேலைத்திட்டத்திலிருந்தே தேசிய பொருளாதாரத்தை சக்திமயமாக்க நடைமுறைப்படுத்தப்பட்ட வேலைத்திட்டங்களில் பல்வேறு அபிவிருத்தி நடவடிக்கைகள் மற்றும் செயற்றிட்டங்களின் பங்களிப்பானது மேலான பொருளாதார வளர்ச்சிக்கு இன்றியமையாத ஒன்றாகும் என்றால் அது மிகையாகாது.

2014 ஆம் ஆண்டின் பொருளாதார அபிவிருத்தி அமைச்சினால் அடையாளம் காணப்பட்டதுமான பிரதேச ஒருங்கிணைப்பு குழு மூலம் செயற்றிட்டம் இனம்காணப்பட்டு நடைமுறைப்படுத்தப்படும் புதிய அபிவிருத்தி பிரவேசத்தினால் அனைத்து மக்களின் பங்களிப்பு அபிவிருத்தி வேலைத்திட்டத்தில் இணைக்கப்படுகிறது. எப்படியாயினும் இந்த புதிய வேலைத்திட்டத்தினால் சரியான செயற்றிட்டங்கள் இனங்காணப்பட வேண்டிய காலமாக கொள்வோமானால் உயர்வான பலனை பெற்றுக் கொள்ளலாம். அப்படி இனங்காணப்பட்ட செயற்றிட்டம் 2014.09.30 ஆம் திகதிக்கு பொருளாதார வளர்ச்சியின் பெறுபேறு மற்றும் சமூக பகுதிக்கு இணங்க மாவட்ட செயலாளர் அறிக்கையில் உள்ளடக்கப்பட்டுள்ளது இந்த பெறுபேற்று அறிக்கையின் படி ஒவ்வொரு மாவட்ட செயலாளருக்கும் குறிப்பிடப்பட்டுள்ள ஒதுக்கீட்டு தொகை அன்றைய திகதியில் இனங்காணப்பட்ட செயற்றிட்டங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படும்.

இந்த ஆண்டு முடியும் தருவாயில் தற்போது நடைமுறைப்படுத்தப்படும் அனைத்து செயற்றிட்டங்கள் நிறைவடையும் நிலையில் அதன் மூலம் கிடைக்கின்ற இலாபம் நோக்காகக் கொண்ட மக்களும் பொதுவாக முழு நாடும் அனுபவித்துள்ளது. மேலும் அமைச்சின் விரைவானதுமான அமைச்சின் கீழுள்ள நிறுவனங்களின் மூலம் நடைமுறையில் உள்ள தெரிவு செய்த வேலைத்திட்டம் சம்பந்தமான பெறுபேறு "விசேட குறிப்பாக" இவ்வறிக்கையில் உள்ளடக்கப்பட்டுள்ளது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


# அபிவிருத்தித் திட்டங்கள்

## மாவட்டங்களின் துறைசார்
## முன்னேற்ற விபரங்கள்
## மற்றும்
## விசேட குறிப்புகள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கொழும்பு மாவட்டம்




## மாவட்டம் தொடர்பான அடிப்படைத் தரவுகள்

| | | |
|---|---|---|
| பிரதேச செயலகப் பிரிவுகளின் எண்ணிக்கை | | 13 |
| கிராம சேவகர் பிரிவுகளின் எண்ணிக்கை | | 557 |
| நிலப்பரப்பு (சதுர கி.மீ) | | 699 |
| மொத்த சனத்தொகை (2014) | | 2,343,000 |
| குடும்பங்களின் எண்ணிக்கை (2012) | | 560,877 |
| சமுர்த்தி நன்மை பெறும் குடும்பங்களின் எண்ணிக்கை (2014) | | 50,765 |
| குடியடர்த்தி (2014) நபர்களின் எண்ணிக்கை (சதுர கி.மீ) | | 3,466 |
| சனத்தொகையை வகைப்படுத்தல் | | |
| பால் ரீதியாக (2014) | ஆண்கள் | 1,154,000 |
| | பெண்கள் | 1,189,000 |

மூலம்: தொகை மதிப்பீட்டு புள்ளிவிபரத் திணைக்களம், வாழ்வின் எழுச்சி அபிவிருத்தித் திணைக்களம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



**மொத்த நிதி ஒதுக்கீடு**
**ரூ. 4.813.0 மில்.**

நிகழ்ச்சித் திட்டம் ரீதியான ஒதுக்கீட்டு பகிர்வு

| நிதி வழங்குனர் | நிகழ்ச்சித் திட்டம் | ஒதுக்கீடு ரூபா (மில்) |
|---|---|---|
| உள்நாட்டு நிதி | ஒரு கிராமம் ஒரு நிகழ்ச்சித் திட்டம் | 660.00 |
| | கிராம எழுச்சி நிகழ்ச்சித் திட்டம் (கமநெகும) | 663.00 |
| | பலாத்நெகும / புறநெகும | 2,232.00 |
| | கிராம பாடசாலைகளில் கழிவகற்றல் மற்றும் ஏனைய வசதிகளை மேம்படுத்தல் | 90.00 |
| | பன்முகப்படுத்தப்பட்ட வரவுசெலவுத்திட்டம் | 100.00 |
| | மக்கள் பிரதிநிதிகளின் பங்களிப்புடனான திட்ட அமுலாக்கல்கள் | 350.00 |
| | வாழ்வின் எழுச்சி நிகழ்ச்சித் திட்டம் (திவி நெகும) | 300.00 |
| | கிராம பாலங்கள் மற்றும் அணுகு பாதைகளின் அபிவிருத்தி | 390.00 |
| | சிறிய நீர்ப்பாசனக் குளங்களின் அபிவிருத்தி | 28.00 |
| மொத்தம் | | 4,813.00 |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அபிவிருத்தி செயற்றிட்டங்களின் முன்னேற்றம்

## மின்சாரம்

2014ம் ஆண்டில் மின்சார வழங்கலை விஸ்தரித்தல் மற்றும் அவற்றின் பராமரிப்பிற்காக 13.06 ரூபா மில்லியன் கொழும்பு மாவட்டத்திற்கு ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இவ்வாறான 47 செயற்றிட்டங்கள் இனங்காணப்பட்டுள்ளதுடன். இவற்றில் 3 கருத்திட்டப் பணிகள் முடிவடைந்துள்ளது மேலும் 330 கருத்திட்டப் பணிகள் தற்போது நடைபெற்றுவருகின்றது. 30.09.2014 திகதி வரையான மொத்த செலவு 0.58 ரூபா மில்லியன் ஆகும். இதன்மூலம் ஏறத்தா 8,570 மக்கள் பயன் பெறுவர்.

## வீதிகள் மற்றும் பாலங்கள்

பொருளாதார அபிவிருத்தி அமைச்சினால் வீதிகள், பாலங்களின் அபிவிருத்தி வேலைத்திட்டத்திற்காக 2,374.27 ரூபா மில்லியன் ஒதுக்கப்பட்டுள்ளதுடன் 2,205 கருத்திட்டங்களில் 84 கருத்திட்டங்கள் பூர்த்தியடைந்துள்ளதுடன் மேலும் 1,759 செயற்றிட்டங்கள் நடைபெற்றுக்கொண்டிருக்கின்றன. இதற்காக 30.09.2014 வரையில் 51.92 ரூபா மில்லியன் செலவிடப்பட்டுள்ளது.





புனரமைக்கப்பட்ட யக்கஹலுவ விவேகராம 5 ஆம் ஒழுங்கை
ஹோமாஹம பிரதேச செயலகப் பிரிவு





நிர்மாணிக்கப்படும் கோணமதித்த பேருவாவெல விஜிதபுர வீதி
ஹெஸ்பாவ பிரதேச செயலகப் பிரிவு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கல்வி

பாடசாலைகளின் உட்கட்டமைப்பு வசதிகளை தரமுயர்த்தும் செயற்பாட்டில் அப்பாடசாலைகளின் கட்டடப் புனரமைப்பு, விளையாட்டு மைதான அபிவிருத்தி மற்றும் மலசல கூடங்களின் புனரமைப்பு ஆகியவற்றில் விசேட கவனம் செலுத்தப்பட்டுள்ளது. இவ்வேலைத்திட்டத்திற்காக கொழும்பு மாவட்டத்திற்கு ஒதுக்கப்பட்டுள்ள தொகை 579.97 ரூபா மில்லியன் ஆகும். 824 செயற்றிட்டங்கள் இனங்காணப்பட்டுள்ளன. 30.09.2014 திகதி வரையில் 09 முடிவடைந்துள்ளதுடன் 643 செயற்திட்டங்களின் பணிகள் நடைபெறுகின்றன. 54.74 ரூபா மில்லியன் நிதி செலவிடப்பட்டுள்ளது.



நிர்மாணிக்கப்படும் அத்திடிய மாதிரி ஆரம்பப் பாடசாலை, இரத்மலானை பிரதேச செயலகப் பிரிவு



நிர்மாணிக்கப்படும் வைத்தியா வித்தியாலயாத்தின் நீர் வழங்கல் திட்டங்கள் இரத்மலானை பிரதேச செயலகப் பிரிவு

## சுகாதாரம்

சுகாதார வசதிகளை மேம்படுத்தும் நோக்கில் வைத்தியசாலை கட்டடங்களை புனரமைத்தல் மற்றும் வைத்திய உபகரணங்களை நன்கொடை வழங்கல் போன்ற நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன. இக்கருத்திட்டத்திலிருந்து ஏறத்தாள 50,000 பயனாளிகள் பயனடைகின்றனர். இவ்வாண்டு பொருளாதார அபிவிருத்தி அமைச்சினால் 84.35 ரூபா மில்லியன் நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. மேலும் 22 கருத்திட்டங்களின் பணிகள் நடைபெறுகின்றன. இதற்காக 1.16 ரூபா மில்லியன் நிதி செலவிடப்பட்டுள்ளது.

## சமூக நலன்புரி

இம்மாவட்டத்தில் 1,064 செயற்றிட்டங்கள் இனங்காணப்பட்டுள்ளன. 30.09.2014 திகதி வரையில் தெரிவுசெய்யப்பட்ட கருத்திட்டங்களில் 17 முடிவடைந்துள்ளதுடன் 723 செயற்றிட்டப்பணிகள் நடைபெறுகின்றன. 856.97 ரூபா மில்லியன் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இவற்றிற்காக 2.16 ரூபா மில்லியன் செலவிடப்பட்டுள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



கொடிகமுவ (தெற்கு) புனரமைக்கப்படுகின்ற சுதர்மராம கோயிலின் தர்மசாலைக் கட்டிடம் மகரஹம பிரதேச செயலகப் பிரிவு

## சிறிய நீர்ப்பாசனம்

பொருளாதார அபிவிருத்தி அமைச்சு இம் மாவட்டத்தில் சிறிய நீர்ப்பாசனக் கால்வாய்கள், விவசாயக்கிணறுகள் மற்றும் விவசாய வீதிகளை புனரமைக்கும் நோக்கில் 31.82 ரூபா மில்லியன் ஒதுக்கப்பட்டுள்ளது. மேலும் 30.09.2014 அன்று வரை 78 செயற்றிட்டங்கள் இனங்காணப்பட்டுள்ளதுடன் இவற்றில் 4 முடிவடைந்துள்ளது 74 செயற்திட்டப்பணிகள் நடைபெறுகின்றன

## குடிநீர் வழங்கல் மற்றும் பொது சுகாதாரம்

இம்மாவட்டத்தின் குடிநீர் வழங்கல் மற்றும் பொது சுகாதாரம் வசதியை மேம்படுத்தும் முகமாக நீர்த்தாங்கிகள் வழங்கல் போன்ற 242 கருத்திட்டங்கள் இனங்காணப்பட்டுள்ளன. இதற்காக 80.65 ரூபா மில்லியன் நிதி ஒதுக்கப்பட்டுள்ளதுடன் ஏறத்தா 51,500 பயனாளிகள் பயன் பெறுவர் என எதிர்ப்பார்க்கப்படுகின்றது. மேலும் இவற்றில் 15 கருத்திட்டப் பணிகள் நிறைவடைந்துள்ளதுடன் 106 கருத்திட்டப்பணிகள் நடைபெறுகின்றன. 2.01 ரூபா மில்லியன் செலவிடப்பட்டுள்ளது.

## வர்த்தகம்

பொருளாதார அமைச்சினால் வர்த்தக நடவடிக்கைகளை அபிவிருத்தி செய்வதற்காக கொழும்பு மாவட்டத்திற்கு 174.99 ரூபா மில்லியன் ஒதுக்கப்பட்டுள்ளது. 30.09.2014 திகதி வரை 8 செயற்றிட்டங்கள் இனங்காணப்பட்டுள்ளன. இவற்றில் 6 செயற்திட்டப்பணிகள் நடைபெறுகின்றன. 6.40 ரூபா மில்லியன் நிதி செலவிடப்பட்டுள்ளதுடன் ஏறத்தா 61,850 பயனாளிகள் பயன் பெறுவர்.


## வாழ்வாதார அபிவிருத்தி

கொழும்பு மாவட்டத்தின் மக்களின் வாழ்வாதார அபிவிருத்தியை மேம்படுத்த விவசாயம், மீன்பிடி மற்றும் கால்நடை வளர்ப்பு போன்ற 89 செயற்றிட்டங்கள் 30.09.2014 வரையில் இனங்காணப்பட்டுள்ளது. இதற்காக 25.49 ரூபா மில்லியன் நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. இதனூடாக 40,000 பயனாளிகள் பயனடைவர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கம்பஹா மாவட்டம்




## மாவட்டம் தொடர்பான அடிப்படைத் தரவுகள்

| | | |
|---|---|---|
| பிரதேச செயலகப் பிரிவுகளின் எண்ணிக்கை | | 13 |
| கிராம சேவகர் பிரிவுகளின் எண்ணிக்கை | | 1177 |
| நிலப்பரப்பு (சதுர கி.மீ) | | 1387 |
| மொத்த சனத்தொகை (2014) | | 2,328,000 |
| குடும்பங்களின் எண்ணிக்கை (2012) | | 593,675 |
| சமுர்த்தி நன்மை பெறும் குடும்பங்களின் எண்ணிக்கை (2014) | | 118,942 |
| குடியடர்த்தி (2014) நபர்களின் எண்ணிக்கை (சதுர கி.மீ) | | 1,736 |
| சனத்தொகையை வகைப்படுத்தல் | | |
| பால் ரீதியாக (2014) | ஆண்கள் | 1,132,000 |
| | பெண்கள் | 1,196,000 |

மூலம்: தொகைமதிப்பு புள்ளிவிபரத் திணைக்களம், வாழ்வின் எழுச்சி அபிவிருத்தி திணைக்களம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அபிவிருத்தி திட்டங்களின் முன்னேற்ற மீளாய்வு - கம்பஹா மாவட்டம்



**மொத்த நிதி ஒதுக்கீடு ரூபா 5,763.0 மில்.**

### நிகழ்ச்சித் திட்டம் ரீதியான ஒதுக்கீட்டு பகிர்வு

| நிதி வழங்குனர் | நிகழ்ச்சித் திட்டம் | ஒதுக்கீடு ரூபா (மில்) |
|---|---|---|
| உள்நாட்டு நிதி | ஒரு கிராமம் ஒரு நிகழ்ச்சித் திட்டம் | 1,177.00 |
| | கிராம எழுச்சி நிகழ்ச்சித் திட்டம் (கமநெகும) | 766.00 |
| | பலாத்நெகும / புறநெகும | 2,583.00 |
| | கிராம பாடசாலைகளில் கழிவகற்றல் மற்றும் ஏனைய வசதிகளை மேம்படுத்தல் | 78.00 |
| | பன்முகப்படுத்தப்பட்ட வரவுசெலவுத்திட்டம் | 90.00 |
| | மக்கள் பிரதிநிதிகளின் பங்களிப்புடனான திட்ட அமுலாக்கல்கள் | 325.00 |
| | வாழ்வின் எழுச்சி நிகழ்ச்சித் திட்டம் (திவி நெகும) | 260.00 |
| | கிராம பாலங்கள் மற்றும் அணுகு பாதைகளின் அபிவிருத்தி | 390.00 |
| | சிறிய நீர்ப்பாசனக் குளங்களின் அபிவிருத்தி | 94.00 |
| மொத்தம் | | 5,763.00 |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அபிவிருத்தி செயற்றிட்டங்களின் முன்னேற்றம்

## மின்சாரம்

மின்னிணைப்பு வழங்கல் மற்றும் பராமரித்தலுக்கென 11.75 ரூபா மில்லியன் நிதி ஒதுக்கீட்டில் 26 மின்சாரக் கருத்திட்டங்கள் இனங்காணப்பட்டுள்ளன. 30.09.2014 வரையில் 3 செயற்றிட்டங்கள் நிறைவு செய்யப்பட்டுள்ளதுடன் 8 வேலைத்திட்டங்கள் செயற்படுத்தப்படுகின்றன. இதற்கான 2.02 ரூபா மில்லியன் செலவிடப்பட்டுள்ளது. அண்ணளவாக 685 பயனாளிகள் நன்மையடைவார்கள்.

## வீதிகள் மற்றும் பாலங்கள்

பொருளாதார அபிவிருத்தி அமைச்சினால் 4,034 வீதிகள் மற்றும் பாலங்களின் அபிவிருத்தி வேலைத்திட்டத்திற்காக 2669.19 ரூபா மில்லியன் ஒதுக்கப்பட்டுள்ளதுடன் 30.09.2014 வரை 629 செயற்றிட்டங்கள் நிறைவு செய்யப்பட்டுள்ள அதே வேளை 1715 வேலைத்திட்டங்கள் நடைபெற்றுக்கொண்டிருக்கின்றன. இதற்கான மொத்த செலவு 267.68 ரூபா மில்லியன் ஆகும்.







தொட்டுப்பொல வீதி கொங்கிரீட் இடல்
கந்தான பிரதேச செயலகப் பிரிவு







கொங்கிரீட் இடப்பட்ட பசியவத்த வீதி
நீர்கொழும்பு பிரதேச செயலகப் பிரிவு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கல்வி

ஆரம்ப மற்றும் இரண்டாம் நிலைப் பாடசாலைகளின் உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துவதற்காக 247.72 ரூபா மில்லியன் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதுடன் 375 செயற்றிட்டங்கள் இனங்காணப்பட்டுள்ளன. 30.09.2014 வரை 13 செயற்றிட்டங்களின் வேலைகள் பூர்த்தி செய்யப்பட்டுள்ளன. இதற்காக 1.06 ரூபா மில்லியன் நிதி செலவிடப்பட்டுள்ளது. 76 செயற்றிட்டங்களின் வேலைகள் நடைபெற்றுக்கொண்டிருக்கின்றன.




நிர்மாண வேலைகள் - கெரவலப்பிட்டிய வித்தியாலோக வித்தியாலயம்
வத்தளை பிரதேச செயலகப் பிரிவு

முன்பு



பின்பு



புனரமைக்கப்பட்ட வனலுவவ ஆரம்ப பாடசாலைக்கட்டிடம்
தொம்பே பிரதேச செயலகப் பிரிவு

## சுகாதாரம்

இவ்வாண்டு பொருளாதார அபிவிருத்தி அமைச்சினால் கம்பஹா மாவட்டத்தின் சுகாதார வசதிகளை மேம்படுத்தும் நோக்கில் வைத்தியசாலை கட்டிடங்களை புனரமைத்தல் மற்றும் வைத்திய உபகரணங்களை வழங்கல் போன்ற நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன. இதற்காக 207.04 ரூபா மில்லியன் நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. 30.09.2014 வரை 3 செயற்றிட்டங்கள் நிறைவு செய்யப்பட்டுள்ள அதே வேளை 10 வேலைத்திட்டங்கள் நடைபெற்றுக்கொண்டிருக்கின்றன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சமூக நலன்புரி

இம்மாவட்டத்தில் சமூக நலன்புரிச் செயற்றிட்டங்களுக்காக 809 கருத்திட்டங்கள் இனங்காணப்பட்டுள்ளன. இதற்காக 698.57 ரூபா மில்லியன் ஒதுகீடு செய்யப்பட்டுள்ளது. 30.09.2014 திகதி வரையில் தெரிவு செய்யப்பட்ட கருத்திட்டங்களில் 182 நிறைவடைந்துள்ளது. இதற்காக 19.17 ரூபா மில்லியன் நிதி செலவிடப்பட்டுள்ளது. 300 செயற்றிட்டப்பணிகள் நடைபெறுகின்றன.







பலநோக்கு கட்டிடத்தின் நிர்மாண வேலை – திம்பிரிகஸ்கட்டுவ தொஸ்தரகவத்த
கந்தான பிரதேச செயலகப் பிரிவு





பலநோக்கு கட்டிடத்தின் நிர்மாண வேலை பிரிபன
நீர்கொழும்பு பிரதேச செயலகப் பிரிவு


## சிறிய நீர்ப்பாசனம்

விவசாய வீதிகள், நீர்ப்பாசனக் கால்வாய்கள் மற்றும் விவசாயக் கிணறுகளை அபிவிருத்தி செய்வதற்காக 189.66 ரூபா மில்லியன் ஒதுக்கப்பட்டுள்ளது. இதனடிப்படையில் 332 செயற்றிட்டங்கள் இனங்காணப்பட்டுள்ளன. 30.09.2014 வரை 14 செயற்றிட்டங்களின் வேலைகள் பூர்த்தி செய்யப்பட்டுள்ளன. இதற்காக 13.23 ரூபா மில்லியன் நிதி செலவிடப்பட்டுள்ளது. 106 செயற்றிட்டங்களின் வேலைகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. அண்ணளவாக 8,935 பயனாளிகள் நன்மையடைவார்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# களுத்துறை மாவட்டம்




## மாவட்டம் தொடர்பான அடிப்படைத் தரவுகள்

| | | |
|---|---|---|
| பிரதேச செயலகப் பிரிவுகளின் எண்ணிக்கை | | 14 |
| கிராம சேவகர் பிரிவுகளின் எண்ணிக்கை | | 762 |
| நிலப்பரப்பு (சதுர கி.மீ) | | 1,598 |
| மொத்த சனத்தொகை (2014) | | 1,236,000 |
| குடும்பங்களின் எண்ணிக்கை (2012) | | 302,045 |
| சமுர்த்தி நன்மை பெறும் குடும்பங்களின் எண்ணிக்கை (2014) | | 64,224 |
| குடியடர்த்தி (2014) நபர்களின் எண்ணிக்கை (சதுர கி.மீ) | | 785 |
| சனத்தொகையை வகைப்படுத்தல் | | |
| பால் ரீதியாக (2014) | ஆண்கள் | 600,000 |
| | பெண்கள் | 636,000 |

மூலம்: தொகைமதிப்பு புள்ளிவிபரத் திணைக்களம், வாழ்வின் எழுச்சி அபிவிருத்தி திணைக்களம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அபிவிருத்தி திட்டங்களின் முன்னேற்ற மீளாய்வு - களுத்துறை மாவட்டம்



**மொத்த நிதி ஒதுக்கீடு**
**ரூபா 3,663.80 மில்.**

### நிகழ்ச்சித் திட்டம் ரீதியான ஒதுக்கீட்டு பகிர்வு

| நிதி வழங்குனர் | நிகழ்ச்சித் திட்டம் | ஒதுக்கீடு ரூபா (மில்) |
|---|---|---|
| உள்நாட்டு நிதி | ஒரு கிராமம் ஒரு நிகழ்ச்சித் திட்டம் | 762.00 |
| | கிராம எழுச்சி நிகழ்ச்சித் திட்டம் (கமநெகும) | 439.00 |
| | பலாத்நெகும / புறநெகும | 1,477.00 |
| | கிராம பாடசாலைகளில் கழிவகற்றல் மற்றும் ஏனைய வசதி-களை மேம்படுத்தல் | 80.00 |
| | பன்முகப்படுத்தப்பட்ட வரவுசெலவுத்திட்டம் | 65.00 |
| | மக்கள் பிரதிநிதிகளின் பங்களிப்புடனான திட்ட அமுலாக்கல்கள் | 250.00 |
| | வாழ்வின் எழுச்சி நிகழ்ச்சித் திட்டம் (திவி நெகும) | 160.00 |
| | கிராம பாலங்கள் மற்றும் அணுகு பாதைகளின் அபிவிருத்தி | 320.00 |
| | சிறிய நீர்ப்பாசனக் குளங்களின் அபிவிருத்தி | 95.00 |
| வெளிநாட்டு நிதித் திட்டங்கள | | 15.80 |
| மொத்தம் | | 3,663.80 |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அபிவிருத்திச் செயற்றிட்டங்களின் முன்னேற்றம்

## மின்சாரம்

களுத்துறை மாவட்டத்தில் மின்சார வழங்கலை விஸ்தரித்தல் மற்றும் பராமரித்தல் அடங்கலான 12 செயற்றிட்டங்கள் 1.06 மில்லியன் ரூபா நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு அமுல்படுத்தப்பட்டு வருகின்றன. 30.09.2014 திகதி வரையில் 3 செயற்றிட்டங்கள் பூர்த்தி செய்யப்பட்டுள்ளதுடன் 6 செயற்றிட்டங்கள் நடைபெற்றுக்கொண்டிருக்கின்றன. இவ்வேலைத் திட்டங்களிற்காக ரூபா 0.22 மில்லியன் செலவிடப்பட்டுள்ளது.

## வீதிகள் மற்றும் பாலங்கள்

2014 ஆம் ஆண்டில் பொருளாதார அபிவிருத்தி அமைச்சின் அங்கீகாரத்துடன் 1,750 வீதிகள் மற்றும் பாலங்களை அபிவிருத்தி செய்யும் பணிகளிற்காக 1,060.09 மில்லியன் ரூபா நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. 30.09.2014 திகதி வரையில் 284 செயற்றிட்டங்களின் அபிவிருத்தி வேலைகள் பூர்த்தி செய்யப்பட்டுள்ளதுடன் 841 நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. இவ்வேலைத்திட்டங்களிற்காக 278.23 மில்லியன் ரூபா செலவிடப்பட்டுள்ளது.




பஸ்தியன் வீதிக்காக நிர்மாணிக்கப்பட்டுள்ள வீதியின் கரைப் பாதுகாப்புச் சுவர்கள், பேருவளை பிரதேச செயலகப் பிரிவு

## கல்வி

களுத்துறை மாவட்டத்தில் ஆரம்ப மற்றும் இரண்டாம் தர பாடசாலைகளில் பாடசாலைக் கட்டிடங்கள், நூலகங்கள், விளையாட்டு மைதானங்கள் ஆகியவற்றை புதிதாக நிர்மாணித்தல்/ புனர்நிர்மாணம் செய்தல் போன்ற உட்கட்டுமான வசதிகளை மேற்கொள்வதற்காக அமைச்சினால் இவ்வாண்டிற்காக 195.03 மில்லியன் ரூபா நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இந்நிதியில் தெரிவு செய்யப்பட்ட 251 வேலைத்திட்டங்களுள் 30.09.2014 ஆம் திகதி வரையில் 12 செயற்றிட்டங்கள் பூர்த்தி செய்யப்பட்டுள்ளதுடன் 159 நடைபெற்றுக்கொண்டிருக்கின்றன. இதற்காக 17.17 மில்லியன் ரூபா செலவிடப்பட்டுள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சுகாதாரம்

2014 ஆம் ஆண்டில் சுகாதார வசதிகளை விருத்திசெய்யும் 34 செயற்றிட்டங்கள் களுத்துறை மாவட்டத்தில் தெரிவு செய்யப்பட்டுள்ளன. வைத்திய சாலைக் கட்டடங்களை நிர்மாணித்தல்/ புனர்நிர்மாணம் செய்தல், தாய் சேய் மற்றும் மகப்பேற்று சிகிச்சை நிலையங்களின் புனரமைப்பு, வைத்திய உபகரணங்களை வழங்கல் ஆகிய செயற்பாடுகள் அவற்றுள் அடங்குகின்றன. இவற்றிற்காக 60.45 ரூபா மில்லியன் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதுடன் 27 செயற்றிட்டங்கள் நடைபெற்றுக்கொண்டிருக்கின்றன. 30.09.2014 திகதி வரையில் இதற்காக 1.84 ரூபா மில்லியன் நிதி செலவிடப்பட்டுள்ளது.



பொலஸ்கமவில் புனரமைப்பு செய்யப்பட்ட தாய் சேய், மகப்பேற்று சிகிச்சை நிலையம்
தொடங்கொட பிரதேச செயலகப் பிரிவு

## சமூக நலன்புரி

2014 இன் முதல் மூன்று காலாண்டுப் பகுதிகளிலும் அமைச்சினால் சமூக நலன்புரி செயற்பாடுகள் சார்ந்த 493 செயற்றிட்டங்கள் இனங்காணப்பட்டு இதற்கு 311.20 ரூபா மில்லியன் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. 30.09.2014 திகதி வரையில் 37 செயற்றிட்டங்கள் பூர்த்தி செய்யப்பட்டுள்ளதுடன் 298 நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. இதற்கான மொத்த செலவினம் 26.06 மில்லியன் ரூபா ஆகும்.

## சிறிய நீர்ப்பாசனம்

களுத்துறை மாவட்டத்தில் 37 சிறிய நீர்ப்பானத்திட்டங்களின் அபிவிருத்திப் பணிகளுக்காக 27.03 மில்லியன் ரூபா நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. அவற்றுள் 36 செயற்றிட்டங்கள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. இவ்வேலைத்திட்டங்களிற்காக 30.09.2014 திகதி வரையில் 0.04 மில்லியன் ரூபா செலவிடப்பட்டுள்ளது.

## குடிநீர் வழங்கல் மற்றும் பொதுச் சுகாதாரம்

குடிநீர் வழங்கல் மற்றும் பொதுச் சுகாதார வேலைகளிற்காக 133 செயற்றிட்டங்கள் இனங்காணப்பட்டு 82.16 மில்லியன் ரூபா நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. 3 செயற்றிட்டங்கள் பூர்த்தி செய்யப்பட்டுள்ளதுடன் 80 நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. இதற்காக 10.52 மில்லியன் ரூபா செலவிடப்பட்டுள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வர்த்தகம்

2014 ஆம் ஆண்டில் வர்த்தகம் சார்ந்த 4 செயற்றிட்டங்களிற்காக 12.00 மில்லியன் ரூபா நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. அவற்றுள் 30.09.2014 திகதி வரையில் ஒரு செயற்றிட்டம் பூர்த்தி செய்யப்பட்டுள்ளதுடன் 3 நடைபெற்றுக்கொண்டிருக்கின்றன.

## வாழ்வாதார அபிவிருத்தி

விவசாயம், மீன்பிடி, கால்நடை மற்றும் கிராமியக் கைத்தொழில் போன்ற துறைகளில் சுயதொழில் புரியும் மக்களின் வாழ்வாதாரத்தை அபிவிருத்தி செய்யும் நோக்குடன் அமைச்சினால் பல கருத்திட்டங்கள் அமுல்படுத்தப்பட்டுவருகின்றன. அமைச்சானது இவ்வாறான 54 செயற்றிட்டங்களை அங்கீகரித்து அவற்றிற்காக 87.17 மில்லியன் ரூபா நிதியை ஒதுக்கீடு செய்துள்ளது. 30.09.2014 திகதி வரையில் ஒரு செயற்றிட்டம் பூர்த்தி செய்யப்பட்டுள்ளதுடன் 25 நடைபெற்றுக்கொண்டிருக்கின்றன.



தேனீ வளர்ப்பு செயற்றிட்டம்,
பேருவளை பிரதேச செயலகப் பிரிவு



பச்சை வீட்டினுள் தோட்டக்கலை மற்றும்
விவசாய உற்பத்திகள்,
பேருவளை பிரதேச செயலகப் பிரிவு



கோழி வளர்ப்பு செயற்றிட்டம்,
பண்டாரகம பிரதேச செயலகப் பிரிவு



மூங்கிலினாலான உற்பத்தி பொருட்கள்,
பண்டாரகம பிரதேச செயலகப் பிரிவு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விசேட குறிப்பு - 01


# வாழ்வின் எழுச்சி நிகழ்ச்சித்திட்டம் - தன்னிறைவான மனைப் பொருளாதாரம்

**வாழ்வின் எழுச்சி தேசிய நிகழ்ச்சித்திட்டம்**

நிதி அமைச்சரான அதிமேதகு ஜனாதிபதியினால் 2011 ஆம் ஆண்டில் சமர்ப்பிக்கப்பட்ட வரவு செலவுத் திட்டத்தில் பிரதான முன்மொழிவான ஒரு மில்லியன் மனைப் பொருளாதார அலகுகளை உருவாக்குவதன் மூலம் வீட்டுப் பொருளாதாரத்தை வலுப்பெறச் செய்தல் என்னும் இலக்கை வெற்றி கொள்வதற்காக "செழிப்பான இல்லம் - வளமான தாய்நாடு" எனும் எண்ணக்கருவின் கீழ் பொருளாதார அபிவிருத்தி அமைச்சினால் பிரதான வேலைத்திட்டமாக 2011 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்ட வாழ்வின் எழுச்சி தேசிய நிகழ்ச்சித்திட்டம் கட்டம் கட்டமாக செயற்படுத்தப்படுவதனூடாக பெற்றுக்கொள்ளப்பட்ட அனுபவங்களினூடாக பல்வேறு விதமாக மாறுபட்ட மகிந்த சிந்தனையின் தொலைநோக்கை மெய்ப்பிப்பதனூடாக வெற்றிகரமாக இதுவரை செயற்படுத்தப்பட்டு வருகிறது.

**வாழ்வின் எழுச்சி தேசிய நிகழ்ச்சித்திட்டத்தின் நோக்கங்கள்**

- மக்கள் பங்களிப்புடன் மனைப் பொருளாதார அலகுகளை வலுப்படுத்துவதன் மூலம் குடும்பங்களை வலுவூட்டல்
- மனையலகுகளில் உணவு உற்பத்தியை அதிகரிப்பதன் மூலம் உணவுப் பாதுகாப்பை ஏற்படுத்தல்
- மக்களின் போசனை மட்டத்தை உயர்த்துதல்
- வாழ்க்கைச் செலவினை குறைத்தல்
- மேலதிக உற்பத்தியை சந்தைப்படுத்துவதன் மூலம் மேலதிக வருமானத்தை உருவாக்குதல்
- தொழில் முயற்சிகளை அபிவிருத்தி செய்வதன் மூலம் வேலையின்மையை குறைத்தல்
- இறக்குமதியைக் குறைப்பதில் பங்களிப்புச் செய்தல்
- ஏற்றுமதி சார்ந்த உற்பத்திகளைக் கூட்டுவதன் மூலம் அந்நியச் செலாவணியைப் பெற்றுக்கொள்ளல்
- நல்லொழுக்கமுள்ள குடும்பங்களை உருவாக்குதல்
- வாழ்வதற்கு உகந்த சுத்தமானதும் பாதுகாப்பானதுமான சூழலை உருவாக்குதல்
- 2016 ஆம் ஆண்டளவில் தனிநபர் வறுமை விகிதம் 4.2% இற்கு குறைத்தல்




கட்டம் 1 - 12.03.2011
கட்டம் 2 - 27.10.2011
கட்டம் 3 - 05.04.2012
கட்டம் 4 - 22.10.2012
கட்டம் 5 - 11.10.2013
கட்டம் 6 - 20.10.2014



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வாழ்வின் எழுச்சி தேசிய நிகழ்ச்சித்திட்டத்தின் ஆறாம் கட்டம்

"எங்கள் மரக்கறி - எங்கள் வீட்டுத்தோட்டத்திலிருந்து" என்ற எண்ணக்கருவை அடிப்படையாகக் கொண்டு வாழ்வின் எழுச்சி திட்டத்தின் ஆறாம் கட்ட ஆரம்ப நிகழ்வானது நாடு முழுவதுமாக 2014 ஒக்டோபர் மாதம் 20 ஆம் திகதி முற்பகல் 10.07 மணி சுபநேரத்தில் கிழக்கு திசையை நோக்கி ஆரம்பிக்கப்பட்டது. இந் நிகழ்ச்சித் திட்டத்தில் கீழ்வரும் செயற்றிட்டங்கள் அடங்குகின்றன.



வாழ்வின் எழுச்சி தேசிய நிகழ்ச்சித்திட்டத்தின் 6ம் கட்ட ஆரம்ப விழாவின் போது அதிமேதகு ஜனாதிபதியினால் தென்னங்கன்று நடப்படுகின்றது



வாழ்வின் எழுச்சி தேசிய நிகழ்ச்சித்திட்டத்தின் 6ம் கட்ட ஆரம்ப விழாவின் போது பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் கௌரவ பசில் ராஜபக்ஷ அவர்களினால் அகத்தி மரக்கன்று நடப்படுகின்றது

### 1. விவசாய செயற்றிட்டங்கள்

- தாழ்நாட்டு உலர்வலயம், மத்திய மலைநாடு, தாழ் நாட்டு ஈரவலயம் மற்றும் மலைநாடு போன்ற காலநிலை வலயங்களுக்கேற்ப 07 மரக்கறிவகைகள் அடங்கிய விதைப்பொதிகளை 25 இலட்சம் மனையலகுகளிற்கு வழங்குதல் (ஒரு கிராம சேவகர் பிரிவிலுள்ள மொத்த குடும்பங்களின் எண்ணிக்கையில் 50% மனையலகுகளிற்கு)
- ஒரு வீட்டிற்கு 04 வகையான மரக்கறிகள் அடங்கும் வகையில் 9 செடிகள் (தென்னந்தும்பினால் விசேடமாக தயாரிக்கப்பட்ட சாடிகளில் நாட்டப்பட்ட 3 மிளகாய்க்கன்றுகள், 2 கறிமிளகாய்க் கன்றுகள், தக்காளிச் செடிகள் மற்றும் கத்தரிச் செடிகள்) வீதம் 126 இலட்சம் கன்றுகளை 14 இலட்சம் மனை அலகுகளிற்கு வழங்குதல். (ஒரு கிராம சேவகர் பிரிவிற்கு 100 மனையலகுகள்
- 16 இலட்சம் பழக்கன்றுகளை ஒவ்வொரு மனையலகுகளிற்கும் ஒரு கன்று வீதம் வழங்குதல் (ஒரு கிராம சேவகர் பிரிவிற்கு 100 மனையலகுகள்)
- 25 இலட்சம் தென்னம்பிள்ளைகள், 10 இலட்சம் சிறு ஏற்றுமதி பயிர்கள், 12.8 இலட்சம் பெருந்தோட்டப் பயிர்கள், ஒவ்வொரு குடும்பத்திற்கும் 12 மூலிகைச் செடிகள் வீதம் 02 இலட்சம் மூலிகைச் செடிகள் வழங்குதல்.
- விசேட பயிரொன்றாக 10 மில்லியன் அகத்திக் கன்றுகளை வழங்கல் (ஒரு கிராம சேவகர் பிரிவிற்கு 75 மனையலகுகள்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 2. கால்நடை அபிவிருத்தி செயற்றிட்டம்

- வீடுகளில் கோழி வளர்ப்பு - இணங்காணப்பட்ட மனையலகுகளிற்கு 10 குஞ்சுகள் வீதம் வழங்குதல்
- பாற்பசுக்களை வளர்த்தல்
- ஆடு வளர்ப்பு
- பன்றி வளர்ப்பு
- வேறு மாற்று விலங்கு வளர்ப்பு
- பால் சார்ந்த உற்பத்திகளை பிரபல்யப்படுத்தல்
- புற்றரை மற்றும் மேய்ச்சல் தாவரம் தொடர்பான கைத்தொழில்கள்
- விலங்கு வேளாண்மைக்குத் தேவையான இயந்திரப் பொறியை உருவாக்குதல்

2014ம் ஆண்டிலும் அமுல்ப்படுத்துவதற்கு முன்மொழியப்பட்டது

## 3. மீன்பிடித்துறை அபிவிருத்தி செயற்றிட்டம்

- அலங்கார மீன்கள் மற்றும் நீர்த்தாவரங்களைச் செய்கை பண்ணல் 1000 அலங்கார மீன் வளர்ப்பு குளங்களை உருவாக்குவதற்கு அலங்கார மீன்களை வழங்குதல்
- குளங்களில் உணவிற்காக மீன்வளர்த்தல்
- ஒன்றிணைந்த மீன்வளர்ப்பு
- குளங்களில் சிறிய மீன் குஞ்சுகளை விரலிஅளவு வரை வளர்த்தல்
- கடற் தாவரங்களை செய்கை பண்ணல்
- கடல் மோதா மீன்வளர்ப்பு
- பருவகால தற்காலிக நீர் நிலைகளில் மீன் வளர்ப்பு
- வேகவைத்த புகையூட்டிய நன்னீர் கருவாடு உற்பத்தி
- தோட்டப்புற நீர் நிலைகளில் மீன் வளர்ப்பு
- கருவாடு மற்றும் மாசி உற்பத்தி

2014ம் ஆண்டிலும் அமுல்ப்படுத்துவதற்கு முன்மொழியப்பட்டது

## 4. தொழில் முயற்சி அபிவிருத்தி செயற்றிட்டம்

- உணவு, பழங்கள் சார்ந்த உற்பத்திகளுக்கான தொழில் முயற்சியாளர்களை உருவாக்குதல்
- மரத்திலான உற்பத்திகளை பிரபல்யப்படுத்தல்
- தோற்பொருள் உற்பத்திக் கைத்தொழில்கள்
- களிமண், மணல் மற்றும் சிமெந்து சார்ந்த உற்பத்திகள்
- பற்றிக் கைவேலை மற்றும் ஆடை சார்ந்த உற்பத்திகள்
- மென்பொறியியல் கைத்தொழில்கள்
- தென்னந்தும்பு சார்ந்த கைத்தொழில்கள்
- இலத்திரனியல் மின் சார்ந்த உற்பத்திக் கைத்தொழில்கள்
- இறப்பர், பிளாஸ்டிக், கன்னார் சார்ந்த உற்பத்திக் கைத்தொழில்கள்
- கடதாசி சார்ந்த உற்பத்திக் கைத்தொழில்கள்
- இரசாயனப் பொருட்கள் சார்ந்த உற்பத்திக் கைத்தொழில்கள்
- வெள்ளி, பித்தளை சார்ந்த உற்பத்திக் கைத்தொழில்கள்
- மூங்கில் பிரம்பு சார்ந்த உற்பத்திக் கைத்தொழில்கள்
- சேவை சார்ந்த உற்பத்திக் கைத்தொழில்கள்

2014ம் ஆண்டிலும் அமுல்ப்படுத்துவதற்கு முன்மொழியப்பட்டது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

2014 ஆம் வருடத்தில் வாழ்வின் எழுச்சி தேசிய நிகழ்ச்சித்திட்டமானது வாழ்வின் எழுச்சி அபிவிருத்தித் திணைக்களம், தொழில்நுட்ப உதவி வழங்கும் ஏனைய அமைச்சுக்கள் மற்றும் திணைக்களங்கள் என்பவற்றுடன் ஒன்றிணைந்து மனை அலகுகள் 2,500,000ஐ இலக்காகக் கொண்டு ஆரம்பிக்கப்பட்டது.

**வாழ்வின் எழுச்சி அபிவிருத்தித் திணைக்களம்**

பொருளாதார ரீதியாக வலுபெற்ற மனை அலகுகளை உருவாக்குவதனூடாக குடும்பத்தின் பொருளாதாரத்தை வலுப்பெறச்செய்வதை நோக்காகக் கொண்டு பொருளாதார அபிவிருத்தி அமைச்சினால் செயற்படுத்தப்படும் வாழ்வின் எழுச்சி தேசிய நிகழ்ச்சித்திட்டத்தை மேலும் வெற்றிகரமாகவும், சுமூகமாகவும் நடைமுறைப்படுத்துவதற்காக அமைச்சின் கீழ் செயற்படும் பின்வரும் திணைக்களங்கள் மற்றும் நிறுவனங்களை ஒன்றிணைத்து 2013 ஆண்டு 1ஆம் இலக்க வாழ்வின் எழுச்சி சட்டத்திற்கமைய வாழ்வின் எழுச்சி அபிவிருத்தி திணைக்களத்தை ஸ்தாபிப்பதற்கு தேவையான நடவடிக்கைகள் 2013 ஆம் ஆண்டு மேற்கொள்ளப்பட்டன.

இத்திணைக்களங்கள், வறுமை ஒழிப்பதற்காக பல்வேறு நிவாரண வேலைத்திட்டங்கள் மற்றும் அபிவிருத்தி வேலைத்திட்டங்களை செயற்படுத்துகின்றன.

**வாழ்வின் எழுச்சி அபிவிருத்தித் திணைக்கள அலுவல்களில் இணைக்கப்பட்டுள்ள நிறுவனங்கள்**

- இலங்கை சமுர்த்தி அதிகாரசபை
- இலங்கை மலையக அபிவிருத்தி அதிகாரசபை
- இலங்கை தெற்கு அபிவிருத்தி அதிகாரசபை
- சமுர்த்தி ஆணையாளர் நாயகம் திணைக்களம்
- இலங்கை மலைநாட்டு உழவர் மறுசீரமைப்புத் திணைக்களம

**வாழ்வின் எழுச்சி அபிவிருத்தித் திணைக்களம் ஸ்தாபிக்கப்பட்டதன் நோக்கம்**

- வறுமையை ஒழித்தல் மற்றும் சமூக சமத்துவத்தை உறுதிப்படுத்துகின்ற சமுதாயமொன்றை உருவாக்குவதற்காக அவசியமான முடியுமான அபிவிருத்தி நடவடிக்கைகளை எடுத்தல்,
- தனிநபர், குடும்பம், குழு மற்றும் சமூகம் என்பவற்றில் மாற்றத்தை ஏற்படுத்தும் முக்கியமாகக் கொண்டு வாழ்வாதார அபிவிருத்தி நடவடிக்கைகளை மேற்கொள்ளல்,
- ஒவ்வொரு நபரினதும் மற்றும் குடும்பத்தினதும் உணவுப் பாதுகாப்பை உறுதிப்படுத்தல்,
- தேசிய அபிவிருத்தியை விரைவாக்குவதற்காக மக்களை ஒன்றிணைத்தல் மற்றும் வலுவூட்டல்,
- மக்களின் வாழ்வாதார அபிவிருத்தியை மேலோங்கச் செய்வதற்காக நுண் நிதி வசதிகளை வழங்கல்,
- மக்களின் வாழ்வாதார அபிவிருத்திக்காக தேவையான பௌதிக மற்றும் சமூக உட்கட்டமைப்பு வசதிகளை அபிவிருத்தி செய்தல்
- மக்களின் பொருளாதார மற்றும் சமூக அபிவிருத்திக்குத் தேவையான கல்வி, ஆராய்ச்சி நடவடிக்கைகளை மேற்கொள்ளல்,
- மக்களின் வாழ்கை நிலையை உயர்த்துவதற்காக மனித வளத்தை விருத்தி செய்தல்,
- சமூகப் பாதுகாப்பொன்று தேவையானவர்களுக்காக சமூகப் பாதுகாப்பு வலையமைப்பொன்றை உருவாக்கல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




வாழ்வின் எழுச்சி அபிவிருத்தித் திணைக்களத்தின் பிரதான காரியாலயம் 27.04.2014 இல் திறந்து வைக்கப்பட்டது

**வாழ்வின் எழுச்சி வாழ்வாதார அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டத்தின் முன்னேற்றம்**

வாழ்வின் எழுச்சி அபிவிருத்தி திணைக்களத்தினால் 2014 ஆம் ஆண்டில் விவசாயம், கால்நடைவளர்ப்பு, மீன்வளர்ப்பு, கைத்தொழில் ஆகிய இலக்கு வைக்கப்பட்ட துறைகளில் நடைமுறைப்படுத்தப்பட்ட வாழ்வாதார அபிவிருத்தி செயற்றிட்டங்களின் 30.09.2014 இல் உள்ளவாறான முன்னேற்ற அறிக்கை வருமாறு

| பிரிவு | இனங்காணப்பட்ட கருத் திட்டங்களின் எண்ணிக்கை | செயற்படுத்தப்படும் கருத்திட்டங்களின் எண்ணிக்கை | ஒதுக்கீடு (ரூ.மில்) | செலவினம் (ரூ.மில்) |
|---|---|---|---|---|
| விவசாயம் | 33,215 | 1,434 | 488,14 | 29,39 |
| கால்நடைவளர்ப்பு | 25,422 | 1,463 | 485,82 | 24,80 |
| மீன்பிடித்துறை | 4,530 | 44 | 82,31 | 1,25 |
| கைத்தொழில் | 40,288 | 1,253 | 1165,47 | 32,17 |
| சந்தைப்படுத்தல் ஊக்குவிப்புக்கள் | 4,097 | 463 | 104,96 | 9,71 |
| மொத்தம் | 107,552 | 4,657 | 2,326.70 | 97.32 |

மேலும் விசேட வேலைத்திட்டமாக வாழ்வின் எழுச்சி சமூக வங்கியினூடாக செயற்படுத்தப்படும் நுண் நிதிகடன் வசதித் திட்டத்திற்கு மேலதிகமாக வாழ்வாதார அபிவிருத்தி செயற்றிட்டங்களுக்காக வாழ்வின் எழுச்சி பயனாளர்களுக்கு "திவிநெகும சஹண அருண" கடன் நிகழ்ச்சித்திட்டம் நடைமுறைப்படுத்தப்படுகின்றது. இதன் கீழ் 4 சதவீதத்திற்கு குறைந்த வட்டிக்கு ரூபா 5,000 இலிருந்து ரூபா 50,000 வரைக்குள்ளான கடன் தேவைப்பாடுகளை இனங்கண்டு கடன் பெற்றுக்கொடுக்கப்படுகிறது.

இதுவரை இனங்காணப்பட்டுள்ள 55,722 பயனாளர்களுக்கு ரூபா 5,000 வீதமும், 16,113 பயனாளர்களுக்கு ரூபா 50,000 வீதமும் கடன் வழங்கப்பட்டுள்ளது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**இதுவரை இனங்காணப்பட்டுள்ள 55,722 பயனாளர்களுக்கு ரூபா 5,000 வீதமும், 16,113 பயனாளர்களுக்கு ரூபா 50,000 வீதமும் கடன் வழங்கப்பட்டுள்ளது.**



கோழி வளர்ப்பு



வீட்டுத் தோட்டம்



நுண் நிதி கடன் திட்டத்தின் மூலம் முச்சக்கர வண்டி வழங்குதல்




திவி நெகும 6ம் கட்டத்தில் மரக்கன்றுகளை விநியோகித்தல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கண்டி மாவட்டம்




## மாவட்டம் தொடர்பான அடிப்படைத் தரவுகள்

| | | |
|---|---|---|
| பிரதேச செயலகப் பிரிவுகளின் எண்ணிக்கை | | 20 |
| கிராம சேவகர் பிரிவுகளின் எண்ணிக்கை | | 1,188 |
| நிலப்பரப்பு (சதுர கி.மீ) | | 1,940 |
| மொத்த சனத்தொகை (2014) | | 1,397,000 |
| குடும்பங்களின் எண்ணிக்கை (2012) | | 344,179 |
| சமுர்த்தி நன்மை பெறும் குடும்பங்களின் எண்ணிக்கை (2014) | | 90,248 |
| குடியடர்த்தி (2014) நபர்களின் எண்ணிக்கை (சதுர கி.மீ) | | 729 |
| பால் ரீதியாக (2014) | ஆண்கள் | 663,000 |
| | பெண்கள் | 734,000 |

மூலம்: தொகைமதிப்பு புள்ளிவிபரத் திணைக்களம், வாழ்வின் எழுச்சி அபிவிருத்தி திணைக்களம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அபிவிருத்தித் திட்டங்களின் முன்னேற்ற மீளாய்வு - கண்டி மாவட்டம்



**மொத்த நிதி ஒதுக்கீடு**
**ரூபா 4,344.0 மில்.**

### நிகழ்ச்சித் திட்டம் ரீதியான ஒதுக்கீட்டு பகிர்வு

| நிதி வழங்குனர் | நிகழ்ச்சித் திட்டம் | ஒதுக்கீடு ரூபா (மில்) |
|---|---|---|
| உள்நாட்டு நிதி | ஒரு கிராமம் ஒரு நிகழ்ச்சித் திட்டம் | 1,213.00 |
| | கிராம எழுச்சி நிகழ்ச்சித் திட்டம் (கமநெகும) | 424.00 |
| | பலாத்நெகும / புறநெகும | 1,430.00 |
| | கிராம பாடசாலைகளில் கழிவகற்றல் மற்றும் ஏனைய வசதி-களை மேம்படுத்தல் | 78.00 |
| | வனஜீவராசிகள் மற்றும் வன பாதுகாப்பு | 30.00 |
| | பன்முகப்படுத்தப்பட்ட வரவுசெலவுத்திட்டம் | 65.00 |
| | மக்கள் பிரதிநிதிகளின் பங்களிப்புடனான திட்ட அமுலாக்கல்கள் | 275.00 |
| | வாழ்வின் எழுச்சி நிகழ்ச்சித் திட்டம் (திவி நெகும) | 260.00 |
| | கிராம பாலங்கள் மற்றும் அணுகுபாதைகளின் அபிவிருத்தி | 390.00 |
| | சிறிய நீர்ப்பாசனக் குளங்களின் அபிவிருத்தி | 89.00 |
| வெளிநாட்டு நிதித் திட்டங்கள் | | 90.00 |
| மொத்தம் | | **4,344.00** |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அபிவிருத்தி செயற்றிட்டங்களின் முன்னேற்றம்

## மின்சாரம்

11 குறுகிய மின் வழங்கல் திட்டத்திற்காக 4.0 மில்லியன் ரூபா நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.

## வீதிகள் மற்றும் பாலங்கள்

2014 ஆண்டின் பொருளாதார அபிவிருத்தி அமைச்சினால் முன்னெடுக்கப்படும் பல்வேறு அபிவிருத்தி வேலைத்திட்டங்களின் கீழ் 2,474.0 மில்லியன் ரூபா நிதி ஒதுக்கீட்டில் 5,220 உள்ளக வீதிகள், பாலங்கள், சிறு பாலங்கள் செயற்றிட்டங்களை அமுல்படுத்துவதற்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது. 1,355 செயற்றிட்டங்களின் வேலைகள் பூர்த்தி செய்யப்பட்டுள்ளன. மேலும் 3,865 செயற்றிட்டங்களின் வேலைகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. 30.09.2014 திகதி வரையில் செலவிடப்பட்ட தொகை 389.31 மில்லியன் ரூபா ஆகும்.



அபிவிருத்தி செய்யப்பட்ட கிரிபிள்ள வீதி
மாததும்பர பிரதேச செயலகப் பிரிவு



நிர்மாணிக்கப்பட்டுள்ள ஹீன் ஓய பாலம்
மாததும்பர பிரதேச செயலகப் பிரிவு

## கல்வி

இம்மாவட்டத்தைச் சேர்ந்த மாணவர்களின் செயற்றிறனை உயர்த்துவதை நோக்காக கோண்டு வசதி வாய்ப்புக்களை அபிவிருத்தி செய்வதற்காக 168.65 மில்லியன் ரூபா நிதி ஒதுக்கீட்டில் 276 செயற்றிட்டங்களை அமுல்படுத்துவதற்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது. தற்பொழுது, 58 செயற்றிட்டங்களின் வேலைகள் 18.0 மில்லியன் ரூபா செலவில் பூர்த்தி செய்யப்பட்டுள்ளன



அபிவிருத்தி செய்யப்பட்டுள்ள அம்பலா
கனிஷ்ட பாடசாலையின் மைதானம்
உடுதும்பர பிரதேச செயலகப் பிரிவு

## சுகாதாரம்


36.0 மில்லியன் ரூபா நிதி சுகாதார அபிவிருத்தி, விஷேடமாக தாய்மார் மற்றும் சிறுவர் சிகிச்சை அபிவிருத்திகளை மேம்படுத்துவதற்காக ஒதுக்கிடப்பட்டுள்ளது. 1 வேலைத்திட்டமானது பூர்த்தி செய்யப்பட்டுள்ளது இதன் மூலம் 11,700 பயனாளர்கள் பிரதிலாபம் பெற்றுக்கொள்வார்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சமூக நலன்புரி

862.0 மில்லியன் ரூபா நிதி ஒதுக்கீட்டுடன் விளையாட்டு மைதான அபிவிருத்தி, சேவை நிலையங்களை நிர்மாணித்தல், மயானங்களை அபிவிருத்தி செய்தல், முன் பள்ளி மற்றும் சமூக நலன் புரி நிலையங்களுக்கு உபரணங்களை வழங்குதல் ஆகிய 1564 செயற்றிட்டங்களை அமுல்படுத்துவதற்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது. 30.09.2014 திகதி வரையில் 1327 செயற்றிட்டங்களின் வேலைகள் 131.0 மில்லியன் ரூபா செலவில் பூர்த்தி செய்யப்பட்டுள்ள. இதன் மூலம் 325,252 பயனாளர்கள் பிரதிலாபம் பெற்றுக்கொள்வார்கள் என எதிர்ப்பார்க்கப்படுகின்றது.



அபிவிருத்தி செய்யப்பட்டுள்ள உடகம
வடக்கு சேவை நிலையங்கள்
குண்டசாலை பிரதேச செயலகப் பிரிவு



நிர்மாணிக்கப்பட்டுள்ள பல்நோக்கு கட்டிடம்
குண்டசாலை பிரதேச செயலகப் பிரிவு

## சிறிய நீர்ப்பாசனம்

இந்த மாவட்டத்திலுள்ள நீர்ப்பாசனத்துறையை அபிவிருத்தி செய்வதற்காக கால்வாய்கள், அணைக்கட்டுக்கள் ஆகிய 272 செயற்றிட்டங்கள் இனங்காணப்பட்டுள்ளன. இவற்றுக்காக 147.0 மில்லியன் ரூபா நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளன, 85 செயற்றிட்டங்களின் வேலைகள் 49.72 மில்லியன் ரூபா செலவில் பூர்த்தி செய்யப்பட்டுள்ளன. இச் செயற்றிட்டங்களின் மூலம் உட்கட்டமைப்பு வசதிகள் வாழ்வாதார அபிவிருத்தி தேவைகள் உடைய 22,486 பேருக்கு பிரதிலாபம் பெற்றுக்கொடுக்க முடியும்.



அபிவிருத்தி செய்யப்பட்ட
ஹுரியாகொள்ள அணைக்கட்டு வலைவு
உடுதும்பர பிரதேச செயலகப் பிரிவு

## குடிநீர் வழங்கல் மற்றும் பொதுச் சுகாதாரம்

2014 வருடத்தில் 407 பாதுகாப்பான குடி நீர் வழங்கும் செயற்றிட்டங்களுக்காக 162.0 மில்லியன் ரூபா நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது 21 செயற்றிட்டங்களின் வேலைகள் 26.0 மில்லியன் ரூபா செலவில் பூர்த்தி செய்யப்பட்டுள்ளன


## வனஜீவராசிகள் மற்றும் வன பாதுகாப்பு

இம்மாவட்டத்தில் 04 இணங்காணப்பட்ட மின் வேலி அமைத்தல் நிர்மாணப்பணிகளுக்காக 30.00 மில்லியன் ரூபா நிதி ஒதுக்கிடப்பட்டுள்ளதுடன் அவற்றினால் 20,000 பேர் நன்மை பெற்றுக்கொள்வார்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாத்தளை மாவட்டம்




## மாவட்டம் தொடர்பான அடிப்படைத் தரவுகள்

| | | |
|---|---|---|
| பிரதேச செயலகப் பிரிவுகளின் எண்ணிக்கை | | 11 |
| கிராம சேவகர் பிரிவுகளின் எண்ணிக்கை | | 545 |
| நிலப்பரப்பு (சதுர கி.மீ) | | 1,993 |
| மொத்த சனத்தொகை (2014) | | 494,000 |
| குடும்பங்களின் எண்ணிக்கை (2012) | | 128,346 |
| சமுர்த்தி நன்மை பெறும் குடும்பங்களின் எண்ணிக்கை (2014) | | 42,737 |
| குடியடர்த்தி (2014) நபர்களின் எண்ணிக்கை (சதுர கி.மீ) | | 253 |
| சனத்தொகையை வகைப்படுத்தல் | | |
| பால் ரீதியாக (2014) | ஆண்கள் | 239,000 |
| | பெண்கள் | 255,000 |

மூலம்: தொகைமதிப்பு புள்ளிவிபரத் திணைக்களம், வாழ்வின் எழுச்சி அபிவிருத்தி திணைக்களம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அபிவிருத்தி திட்டங்களின் முன்னேற்ற மீளாய்வு - மாத்தளை மாவட்டம்



**மொத்த நிதி ஒதுக்கீடு**
**ரூபா 1,963.0 மில்.**

நிகழ்ச்சித் திட்டம் ரீதியான ஒதுக்கீட்டு பகிர்வு

| நிதி வழங்குனர் | நிகழ்ச்சித் திட்டம் | ஒதுக்கீடு ரூபா (மில்) |
|---|---|---|
| உள்நாட்டு நிதி | ஒரு கிராமம் ஒரு நிகழ்ச்சித் திட்டம் | 545.00 |
| | கிராம எழுச்சி நிகழ்ச்சித் திட்டம் (கமநெகும) | 164.00 |
| | பலாத்நெகும / புறநெகும | 552.00 |
| | கிராம பாடசாலைகளில் கழிவகற்றல் மற்றும் ஏனைய வசதி-களை மேம்படுத்தல் | 24.00 |
| | வனஜீவராசிகள் மற்றும் வன பாதுகாப்பு | 120.00 |
| | பன்முகப்படுத்தப்பட்ட வரவுசெலவுத்திட்டம் | 25.00 |
| | மக்கள் பிரதிநிதிகளின் பங்களிப்புடனான திட்ட அமுலாக்கல்கள் | 100.00 |
| | வாழ்வின் எழுச்சி நிகழ்ச்சித் திட்டம் (திவி நெகும) | 80.00 |
| | கிராம பாலங்கள் மற்றும் அணுகு பாதைகளின் அபிவிருத்தி | 120.00 |
| | சிறிய நீர்ப்பாசனக் குளங்களின் அபிவிருத்தி | 108.00 |
| வெளிநாட்டு நிதி திட்டங்கள | | 125.00 |
| மொத்தம் | | 1,963.00 |




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அபிவிருத்தி செயற்றிட்டங்களின் முன்னேற்றம்

## மின்சாரம்

மாத்தளை மாவட்டத்தின் தேர்தல் தொகுதி மட்டம் 03 இனுள் மின்சார செயற்றிட்டம் 26 அமுல்படுத்தப்பட்டுள்ளன. அதற்கான நிதி ஒதுக்கீடு 180.0 மில்லியன் ரூபா ஆகும். 4 செயற்றிட்டங்களின் வேலைகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றதுடன் பிரதிலாபம் பெற்றுக்கொள்பவர்களின் எண்ணிக்கை 2,800 ஆகும்




மின்சார விஸ்தரிப்பு, உடகம கிழக்கு பிரிவு
யடவத்த பிரதேச செயலகப் பிரிவு

## வீதிகள் மற்றும் பாலங்கள்

2014ம் ஆண்டில் மாவட்டம் முழுவதும் அடங்கும் வகையிலாக வீதிகள் மற்றும் பாலங்கள் அபிவிருத்தி 1,521 செயற்றிட்டங்கள் அமுல்படுத்துவதற்கு இனங்காணப்பட்டுள்ளது. அவற்றுள் 488 இன் வேலைகள் பூர்த்தி செய்யப்பட்டுள்ளன. இதற்காக 1,228.98 மில்லியன் ரூபா நிதி ஒதுக்கிடப்பட்டுள்ளது. 30.09.2014 ல் உள்ளவாறான செலவீடு 347.20 மில்லியன் ரூபாவாகும்.



கொங்கிரீட் இடப்பட்ட அலகொலாங்க
கல்கெடியாவத்தை வீதி
யடவத்த பிரதேச செயலகப் பிரிவு



அபிவிருத்தி செய்யப்பட்ட ராஜமல்லேவத்தை
எலகல பிரதான வீதி
அம்பன்கங்க கோரளை பிரதேச செயலகப் பிரிவு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கல்வி

மாவட்டத்தின் குறைந்த வசதி வாய்ப்புக்களையுடைய பாடசாலைகளின் உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துவதற்காக 174 செயற்றிட்டங்கள் அமுல்படுத்தபட்டுள்ளதுடன் அதற்காக 28.9 மில்லியன் ரூபா நிதி ஒதுக்கிடப்பட்டள்ளது. இது வரையில் 49 செயற்றிட்டங்களின் பணிகள் 6.28 மில்லியன் ரூபா செலவீட்டில் நிறைவு செய்யப்பட்டள்ளது.



அபிவிருத்தி செய்யப்பட்ட உடஸ்கிரிய அநகாரிக தர்மபால வித்தியாலய நுழைவு வீதி
யடவத்த பிரதேச செயலகப் பிரிவு



சீரமைக்கப்பட்ட மின்ஹாச் வித்தியாலய கட்டிடம்
யடவத்த பிரதேச செயலகப் பிரிவு

## சுகாதாரம்

மாவட்டத்தில் சிறுவர் மற்றும் தாய்மார் சிகிச்சை நிலையங்களை மேம்படுத்தும் நோக்கத்தில் 6 செயற்றிட்டங்களை அமுல்படுத்துவதற்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளதுடன் அதற்காக 0.6 மில்லியன் ரூபா நிதி ஒதுக்கிடப்பட்டுள்ளது. இதுவரையில் 2 செயற்றிட்டங்களின் வேலைகள் பூர்த்தி செய்யப்பட்டுள்ளன. இதன் மூலம் 420 பயனாளர்கள் பிரதிலாபம் பெற்றுக்கொள்வார்கள் என எதிர்ப்பார்க்கப்படுகின்றது.



புனர் நிர்மாணம் செய்யப்பட்ட
நாகொல்ல தாய்மார் சிகிச்சை நிலையம்
மாத்தளை பிரதேச செயலகப் பிரிவு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சமூக நலன்புரி

மாவட்டத்திற்குள் 993 சமூக நலன்புரி செயற்றிட்டங்கள் அமுல்படுத்தப்பட்டுள்ளதுடன் அதற்காக 142.29 மில்லியன் ரூபா நிதி ஒதுக்கிடப்பட்டுள்ளது. இது வரையில் 190 செயற்றிட்டங்களின் பணிகள் 20.9 மில்லியன் ரூபா செலவீட்டில் நிறைவு செய்யப்பட்டள்ளது.



அபிவிருத்தி செய்யப்பட்ட வெரலுகஸ்தென்ன
கிராம சேவகர் அலுவலகம்
ரத்தொடை பிரதேச செயலகப் பிரிவு




நிர்மாணிக்கப்பட்டுள்ள
பத்கொலகொள்ள சேவை நிலையம்
கல்வெல பிரதேச செயலகப் பிரிவு

## சிறிய நீர்ப்பாசனம்

இந்த மாவட்டத்திலுள்ள நீர்ப்பாசனத்துறையை அபிவிருத்தி செய்வதற்காக கால்வாய்கள், அணைக்கட்டுக்கள் ஆகிய 189 செயற்றிட்டங்கள் இனங்காணப்பட்டுள்ளன. இவற்றுக்காக 161.72 மில்லியன் ரூபா நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளன, 27 செயற்றிட்டங்களின் வேலைகள் 32.04 மில்லியன் ரூபா செலவில் பூர்த்தி செய்யப்பட்டுள்ளன. 30.09.2014 திகதி வரையில் 162 செயற்றிட்டங்களின் வேலைகள் நடைபெற்றுக்கொண்டிருக்கின்றன.



அபிவிருத்தி செய்யப்பட்ட
அல்கிகுரு அணைக்கட்டு
யடவத்த பிரதேச செயலகப் பிரிவு



அபிவிருத்தி செய்யப்பட்ட
உடுதலுபொத அணைக்கட்டு
யடவத்த பிரதேச செயலகப் பிரிவு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## குடிநீர் வழங்கல் மற்றும் பொது சுகாதாரம்

குடிநீர் வழங்கல் மற்றும் சுத்திகரிப்பு செயற்றிட்டங்கள் 35 அமுல்படுத்தப்பட்டுள்ளதுடன் அதற்காக 17.62 மில்லியன் ரூபா நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. 30.09.2014 திகதி வரையில் 04 செயற்றிட்டங்களின் வேலைகள் 7.18 மில்லியன் ரூபா செலவில் பூர்த்தி செய்யப்பட்டுள்ளன. இதன் மூலம் 900 பயனாளர்கள் பிரதிலாபம் பெற்றுக்கொள்வார்கள் என எதிர்ப்பார்க்கப்படுகின்றது.



நிர்மாணிக்கப்பட்டுள்ள மஹவெல பொது கிணறு
யடவத்த பிரதேச செயலகப் பிரிவு



சிசில மக்கள் சங்கத்தின் குடி நீர் தேவையை நிறைவு செய்வதற்காக நிர்மாணிக்கப்பட்டுள்ள கிணறு
அம்பன்கங்க கோரளை பிரதேச செயலகப் பிரிவு

## வாழ்வாதார அபிவிருத்தி


வாழ்வாதார அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் செயற்படுத்தப்படும் வாழ்வின் எழுச்சி வேலைத்திட்டத்திற்கு மேலதிகமாக ஏனைய அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டங்களின் கீழ் விவசாயம், கால்நடை வளர்ப்பு மற்றும் கிராம சிறு கைத்தொழில் செயற்றிட்டங்கள் 6 அமுல்படுத்தப்பட்டுள்ளதுடன் அதற்காக 1.56 மில்லியன் ரூபா நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இதுவரைக்குமான செலவீடு 0.65 ரூபா மில்லியனாகும். இதன் மூலம் 315 பயனாளர்கள் பிரதிலாபம் பெற்றுக்கொள்வார்கள் என எதிர்ப்பார்க்கப்படுகின்றது.

## வனஜீவராசிகள் மற்றும் வன பாதுகாப்பு

வனஜீவராசிகள் மற்றும் வன பாதுகாப்பு நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் இம்மாட்டத்தில் காணப்படும் காடுகளை அளவிடும் செயற்பாடுகள், மின்சார வேலிகளை நிர்மாணித்தல் மற்றும் முங்கில் மர நடுகை மற்றும் காற்று துப்பாக்கியை வழங்கல் ஆகிய 31 செயற்றிட்டங்கள் அமுல்படுத்தப்பட்டுள்ளதுடன், அதற்காக 120.0 ரூபா மில்லியன் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது அனைத்து செயற்றிட்டங்களினதும் வேலைகள் நடைபெற்றுக்கொண்டிருக்கின்றன.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நுவரேலியா மாவட்டம்




## மாவட்டம் தொடர்பான அடிப்படைத் தரவுகள்

| | | |
|---|---|---|
| பிரதேச செயலகப் பிரிவுகளின் எண்ணிக்கை | | 5 |
| கிராம சேவகர் பிரிவுகளின் எண்ணிக்கை | | 491 |
| நிலப்பரப்பு (சதுர கி.மீ) | | 1,741 |
| மொத்த சனத்தொகை (2014) | | 728,000 |
| குடும்பங்களின் எண்ணிக்கை (2012) | | 177,503 |
| சமுர்த்தி நன்மை பெறும் குடும்பங்களின் எண்ணிக்கை (2014) | | 39,720 |
| குடியடர்த்தி (2014) நபர்களின் எண்ணிக்கை (சதுர கி.மீ) | | 427 |
| சனத்தொகையை வகைப்படுத்தல் | | |
| பால் ரீதியாக (2014) | ஆண்கள் | 349,000 |
| | பெண்கள் | 379,000 |

மூலம்: தொகைமதிப்பு புள்ளிவிபரத் திணைக்களம், வாழ்வின் எழுச்சி அபிவிருத்தி திணைக்களம்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அபிவிருத்தி திட்டங்களின் முன்னேற்ற மீளாய்வு - நுவரேலியா மாவட்டம்




**மொத்த நிதி ஒதுக்கீடு**
**ரூபா 2,212.50 மில்.**

நிகழ்ச்சித் திட்டம் ரீதியான ஒதுக்கீட்டு பகிர்வு

| நிதி வழங்குனர் | நிகழ்ச்சித் திட்டம் | ஒதுக்கீடு ரூபா (மில்) |
|---|---|---:|
| உள்நாட்டு நிதி | ஒரு கிராமம் ஒரு நிகழ்ச்சித் திட்டம் | 491.00 |
| | கிராம எழுச்சி நிகழ்ச்சித் திட்டம் (கமநெகும) | 161.00 |
| | பலாத்நெகும / புறநெகும | 789.00 |
| | கிராம பாடசாலைகளில் கழிவகற்றல் மற்றும் ஏனைய வசதி-களை மேம்படுத்தல் | 30.00 |
| | வனஜீவராசிகள் மற்றும் வன பாதுகாப்பு | 10.00 |
| | பன்முகப்படுத்தப்பட்ட வரவுசெலவுத்திட்டம் | 40.00 |
| | மக்கள் பிரதிநிதிகளின் பங்களிப்புடனான திட்ட அமுலாக்கல்கள் | 175.00 |
| | வாழ்வின் எழுச்சி நிகழ்ச்சித் திட்டம் (திவி நெகும) | 100.00 |
| | கிராம பாலங்கள் மற்றும் அணுகு பாதைகளின் அபிவிருத்தி | 150.00 |
| | சிறிய நீர்ப்பாசனக் குளங்களின் அபிவிருத்தி | 27.00 |
| வெளிநாட்டு நிதி திட்டங்கள | | 239.50 |
| மொத்தம் | | 2,212.50 |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அபிவிருத்தி செயற்றிட்டங்களின் முன்னேற்றம்

## மின்சாரம்

மின்சக்தி விரிவாக்கம் மற்றும் பராமரிப்பு ஆகியவற்றிற்காக 1.74 ரூபா மில்லியன் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதுடன் 16 மின்சக்தி திட்டங்கள் இனங்காணப்பட்டுள்ளன. இவற்றில் 3 கருத்திட்டப் பணிகள் முடிவடைந்துள்ளதுடன் ஏனைய கருத்திட்டப் பணிகள் தற்போது நடைபெற்றுவருகின்றது. இக்கருத்திட்டங்களில் இருந்து 3,275 பயனாளிகள் பயன் பெறுகின்றனர்.

## வீதிகள் மற்றும் பாலங்கள்

வீதிகள் மற்றும் பாலங்களின் அபிவிருத்தி வேலைத்திட்டத்திற்காக 878.41 ரூபா மில்லியன் ஒதுக்கப்பட்டுள்ளதுடன் 1,330 வீதிகள் மற்றும் பாலங்கள், வீதியின் பாதுகாப்பு தடைச் சுவர்கள் , மதகுகள் ஆகியவை புனரமைப்புக்காக இனங்காணப்பட்டுள்ளன. இவற்றில் 314 புனரமைப்பு வேலைகள் முடிவடைந்துள்ளன. 30.09.2014 வரை இப்பணிகளிற்கான செலவீனம் 247.81 ரூபா மில்லியன் ஆகும்.



புனரமைக்கப்பட்ட சூரியபதன வீதி
வலப்பன பிரதேச செயலகப் பிரிவு



புனரமைக்கப்பட்ட வீரசேகர வீதி
கொத்மலை பிரதேச செயலகப் பிரிவு

## கல்வி

பாடசாலைகளின் உட்கட்டமைப்பு வசதிகளை தரமுயர்த்தும் நோக்கில் இம் மாவட்டத்திற்காக 35.08 ரூபா மில்லியன் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இந்நிதியிலிருந்து அப்பாடசாலைகளின் கட்டிடப் புனரமைப்பு, விளையாட்டு மைதான அபிவிருத்தி மற்றும் மலசல கூடங்களின் புனரமைப்பு ஆகிய வேலைத்திட்டங்களில் 202 செயற்றிட்டங்கள் இனங்காணப்பட்டுள்ளன. 30.09.2014 திகதி வரையில் 22 வேலைத்திட்டங்கள் முடிவடைந்துள்ளதுடன் 1.47 ரூபா மில்லியன் நிதி செலவிடப்பட்டுள்ளது.



புனரமைக்கப்பட்ட பாதுகாப்பு மதில் தியதிலக்க ம.வி
ஹங்குரன்கேத பிரதேச செயலகப் பிரிவு



புனரமைக்கப்பட்ட விளையாட்டுமைதானம்
கலப்பிட்டிய பாடசாலை
கொத்மலை பிரதேச செயலகப் பிரிவு




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சுகாதாரம்

இம் மாவட்டத்தின் சுகாதார வசதிகளை மேம்படுத்தும் நோக்கில் இவ்வாண்டு 18.35 ரூபா மில்லியன் நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. மேலும் 15 சிகிச்சை நிலையங்கள் அமைக்கும் செயற்றிட்டங்கள் இனங்காணப்பட்டுள்ளன. 2 கருத்திட்டங்களின் பணிகள் முடிவடைந்துள்ளதுடன் 16,675 பயனாளிகள் பயன்பெறுகின்றனர்.

## சமூக நலன்புரி

சமூக நலன்புரிச் செயற்றிட்டங்களுக்கு பங்களிப்பு வழங்கும் வகையில் விளையாட்டு மைதானங்கள் அமைத்தல், உபகரணங்கள் வழங்கல், அறநெறி பாடசாலைகள் அமைத்தல், இடுகாடுகளை புனரமைத்தல் மற்றும் நூலகங்கள் அமைத்தல் போன்ற பணிகளிற்காக 408.28 ரூபா மில்லியன் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதுடன் 945 செயற்றிட்டங்கள் இனங்காணப்பட்டுள்ளன. 30.09.2014 திகதி வரையில் தெரிவுசெய்யப்பட்ட கருத்திட்டங்களில் 79 முடிவடைந்துள்ளதுடன் 73.32 ரூபா மில்லியன் செலவிடப்பட்டுள்ளது.



சஹஸ நூலகக் கட்டடம்
ஹங்குரன்கெத பிரதேச செயலகப் பிரிவு



புனரமைக்கப்பட்ட மடல்கும்புர விளையாட்டு மைதானம்
கொத்மலை பிரதேச செயலகப் பிரிவு

## சிறிய நீர்ப்பாசனம்

இம் மாவட்டத்தில் சிறிய நீர்ப்பாசனக் கால்வாய்கள், குளங்கள் மற்றும் அணைக்கட்டுகள் புனரமைக்கும் நோக்கில் 59.82 ரூபா மில்லியன் ஒதுக்கப்பட்டுள்ளது. 27 செயற்றிட்டங்கள் முடிவடைந்துள்ளதுடன் 42.93 ரூபா மில்லியன் நிதி செலவிடப்பட்டுள்ளது.

## குடிநீர் வழங்கல் மற்றும் பொதுச் சுகாதாரம்

இம்மாவட்டத்தின் குடிநீர் வழங்கல் மற்றும் சுத்திகரிப்பு வசதியை மேம்படுத்தும் முகமாக 209.82 ரூபா மில்லியன் நிதி ஒதுக்கப்பட்டுள்ளதுடன் 622 கருத்திட்டங்கள் இனங்காணப்பட்டுள்ளன. இவற்றில் 136 கருத்திட்டப் பணிகள் நிறைவடைந்துள்ளன மேலும் ஏனைய கருத்திட்டப்பணிகள் நடைபெற்று வருகின்றன. இதற்காக செலவிடப்பட்ட நிதி 114.50 ரூபா மில்லியன். மேலும் 46,932 பயனாளிகள் பயன்பெறுகின்றனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




நிர்மாணிக்கப்பட்ட ஹிகிலியாகம நீர்வழங்கல் செயற்றிட்டம்
கொத்மலை பிரதேச செயலகப் பிரிவு



நிர்மாணிக்கப்பட்ட லெட்புறூக் நீர்வழங்கல் செயற்றிட்டம்
அம்பகமுவ பிரதேச செயலகப் பிரிவு

## வர்த்தகம்

சந்தைத் தொகுதி அமைப்பதற்காக 16.10 ரூபா மில்லியன் ஒதுக்கப்பட்டுள்ளதுடன் மேலும் 15 செயற்றிட்டங்களின் பணிகள் நடைபெற்றுக்கொண்டிருக்கின்றது. இதற்காக 0.36 ரூபா மில்லியன் நிதி செலவிடப்பட்டுள்ளது.

## வாழ்வாதார அபிவிருத்தி

வாழ்வின் எழுச்சி நிகழ்ச்சித்திட்டத்தினூடாக விவசாயம், மீன்பிடி மற்றும் கால்நடை வளர்ப்பு போன்ற பல செயற்றிட்டங்களிற்காக 20.67 ரூபா மில்லியன் இனங்காணப்பட்ட 19 செயற்றிட்டங்களிற்காக ஒதுக்கப்பட்டுள்ளது. இவற்றில் 9 செயற்திட்டப்பணிகள் முடிவடைந்துள்ளன.



போட்வூட் தாவர நாற்றுமேடை
நுவரேலியா பிரதேச செயலகப் பிரிவு

## வனஜீவராசிகள் மற்றும் வனப் பாதுகாப்பு

இம் மாவட்டத்தின் வன ஜீவராசிகளின் நிலைபேறான தன்மை மற்றும் காட்டைப் பாதுகாக்கும் முகமாக 8 மின்வேலிகள் அமைப்பதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது. மேலும் இவற்றில் ஒன்றின் பணி முடிந்துள்ளதுடன் ஏனைய 7 மின்வேலிகள் அமைக்கும் பணிகள் நடைபெற்றுக்கொண்டிருக்கின்றன. இதற்காக 100 ரூபா மில்லியன் ஒதுக்கீடு செய்துள்ளதுடன் 0.28 ரூபா மில்லியன் நிதி செலவிடப்பட்டுள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


விசேட குறிப்பு - 02

# கிராம எழுச்சி வலுவூட்டப்பட்ட ஒரு சமூகம்

கிராமத்தை மீண்டும் ஒரு முறை வாழ்வதற்குரிய வசதிகள் நிறைந்த சுபீட்சமான வாழ்க்கை நிலையமாக மாற்றுகின்ற வரை கிராம எழுச்சி என்ற நிகழ்ச்சித்திட்டத்தை நடைமுறைப்படுத்துவேன்.

மகிந்த சிந்தனையின் தொலைநோக்கு 18 ஆம் பக்கம்

2006 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 24 ஆம் திகதி மொனராகலை மாவட்டத்தின் சியம்பலாண்டுவ பிரதேச செயலாளர் பிரிவிற்கு உரித்தான "ஜயமினிகம" கிராமத்தில் கமநெகும வேலைத்திட்டம் ஆரம்பிக்கப்பட்டது. 2016 ஆண்டின் போது வளம் நிறைந்த அழகிய கிராமத்தை உருவாக்குதல் என்ற மகிந்த சிந்தனையின் எதிர்கால நோக்கு எனும் எண்ணக்கருவிற்கு அமைய கிராமத்தை தேசிய அபிவிருத்தியின் கேந்திர நிலையமாகக் கொண்டு தேசிய அபிவிருத்தி எனும் இலக்கை அடைவதே இந்தக் கிராம எழுச்சி வேலைத்திட்டத்தின் நோக்கமாகும்.






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

2006 ஆம் ஆண்டில் மிகவும் வறுமையான 119 கிராமங்களில் ஆரம்பிக்கப்பட்ட கிராம எழுச்சி வேலைத்திட்டமானது 2007 ஆம் ஆண்டில் 4000 கிராமங்கள் வரை வியாபித்தது. 2008 ஆம் ஆண்டில் நாட்டின் அனைத்து கிராமங்களிலும் செயற்படுத்தப்படும் வரையில் வேலைத்திட்டமானது தொடர்ந்து மேற்கொள்ளப்பட்டது. 2008 ஆம் ஆண்டில் கிராம எழுச்சி நிகழ்ச்சித்திட்டத்தை வெற்றிகரமாக முன்னெடுத்து செல்லும் நோக்கில் பின்வரும் 3 பிரதான அலகுகள் அமுல்ப்படுத்தப்பட்டன.

### உட்கட்டமைப்பு வசதிகள் அபிவிருத்தி

கிராம வீதிகள், மின்சார வசதிகள், சமுதாய நீர் வழங்கல் திட்டங்கள், அணைக்கட்டுக்களை புனரமைத்தல், கிராமத்திற்கு தேவையான பொதுக் கட்டிடங்களை அமைத்தல்

### வாழ்வாதார அபிவிருத்தி

கிராம மக்களுக்கு நிலையான வாழ்வாதார மார்க்கத்தை பெற்றுக்கொடுப்பதற்கு உதவக் கூடிய வருமான வழிமுறைகள் மற்றும் தொழில் வழிமுறைகள் தொடர்பான செயற்றிட்டம்

### ஆன்மீக மற்றும் சமூக அபிவிருத்தித் திட்டம்

சமூக கலாச்சார மற்றும் சமய விழுமியங்களை மீண்டும் கட்டியெழுப்புவதனூடாக மதிப்புமிக்க கிராமமொன்றை உருவாக்குவதற்கு உதவக்கூடிய நிகழ்ச்சித்திட்டம்.

இப் பிரதான பிரிவுகள் மூன்றினையும் சிறப்பாக ஒருங்கிணைத்து செயற்படுத்தும் அதேவேளை 2009, 2010 ஆம் ஆண்டுகளில் கிராமத்திற்கு எழுச்சி வேலைத்திட்டமானது இப் பிரதான பிரிவுகளின் கீழ் நாடு பூராகவும் செயற்படுத்தப்பட்டது. 2011 ஆம் ஆண்டில் சிறுவர் மற்றும் மாதர் நிலையங்கள், பாடசாலை சுகாதார வசதிகள், முன்பள்ளி அபிவிருத்தி ஆகிய சில புதிய பிரிவுகள் கிராம எழுச்சி நிகழ்ச்சித்திட்டத்திற்கு இணைக்கப்பட்டதனால் அதனூடாக அபிவிருத்தி வேலைத்திட்டங்கள் செயற்படுத்தப்படுகின்றன.

2012 ஆம் வருடத்திலிருந்து கிராமத்திற்கு எழுச்சி வேலைத்திட்டமானது அதன் புதிய பரிமாணத்திற்கமைய "ஒரு கிராமத்திற்கு - ஒரு வேலை" எனும் சங்கல்பத்தை முதன்மையாகக் கொண்டு ஒரு மில்லியன் ரூபா பெறுமதியான அபிவிருத்தி செயற்றிட்டமொன்றை அனைத்து கிராமங்களுக்கும் செயற்படுத்தும் பொருட்டு அமுல்படுத்தப்பட்டது. அதற்கமைய 2014 ஆம் ஆண்டில் ஒவ்வொரு கிராம சேவகர் பிரிவுகளிற்கும் ஒதுக்கப்படும் ஒரு மில்லியன் ரூபா பெறுமதியில் 03 அபிவிருத்தி செயற்றிட்டங்கள் செயற்படுத்தக் கூடிய வகையில் பரந்தளவாக அமுல்படுத்தப்படுகின்றது. அதன் கீழ் கிராம வீதிகள் அபிவிருத்தி, கட்டிட வசதிகள் அபிவிருத்தி, சிறியளவிலான நீர்ப்பாசனத்திட்டம், சிறுவர் மற்றும் மாதர் நிலையங்களை மேம்படுத்தல், நலன்புரி வசதிகள், விளையாட்டு மைதான அபிவிருத்தி, கல்வி வசதிகள் அபிவிருத்தி ஆகிய நிகழ்ச்சித்திட்டங்கள் செயற்படுத்தப்படுகின்றன.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மேலும் 2014 ஆம் ஆண்டில் "வாழ்வின் எழுச்சி விசேட வேலைத்திட்டம்" எனும் நிகழ்ச்சித்திட்டமானது செயற்படுத்தப்படுகிறது. மேற்கூறப்பட்ட வேலைத்திட்டத்தின் கீழ் "ஒரு கிராமத்திற்கு ஒருவேலை" எனும் நிகழ்ச்சித்திட்டத்திற்காக செயற்படுத்தப்படும் கிராம சேவகர் பிரிவிற்கு உரிய வேலைத்திட்டங்களின் பெறுமதி ஒரு மில்லியன் ரூபாவை விட அதிகரிக்கும் போது வாழ்வின் எழுச்சி விசேட வேலைத்திட்டத்திற்கு ஒதுக்கப்பட்ட நிதியிலிருந்து அந்த நிதி ஈடுசெய்யப்படும்.

## 2014 "ஒரு கிராமத்திற்கு - ஒரு வேலை" கிராம எழுச்சி விசேட வேலைத்திட்டம்

தேர்ந்தெடுத்தல் செயற்படுத்தல் மற்றும் கண்காணித்தல்




## கிராம எழுச்சி நிகழ்ச்சித்திட்டத்திற்கு ஊடாக பெற்றுக்கொள்ளப்பட்ட நன்மைகள் 2006 ஆம் ஆண்டிலிருந்து 2013ஆம் ஆண்டு வரை

| பிரிவு | செலவு (ரூபா.மில்) | நன்மை |
|---|---|---|
| கிராம வீதி | 40,181.06 | நிறைவு செய்யப்பட்டுள்ள செயற்றிட்டங்களின் எண்ணிக்கை 80,296 பயனடைவோர்களின் எண்ணிக்கை 17,562,621 ஆகும். இதனுடாக மனை பொருளாதார அலகு ஒன்றின் மூலம் உருவாக்கப்படும் பொருட்கள் மற்றும் சேவைகளை பகிர்ந்தளிப்பதற்காக புதிய வாசல் திறக்கப்பட்டுள்ளதுடன் கிராம பிரதேசங்களில் புதிய கைத்தொழில்கள் உருவாக்கப்படுவதற்கு தேவையான உட்கட்டமைப்பு வசதிகளின் அபிவிருத்தியும் ஏற்படுத்தப்பட்டுள்ளது. |
| மக்களுக்கான நீர் வழங்கல் திட்டம் | 2,061.11 | பூர்த்தி செய்யப்பட்டுள்ள வேலைத்திட்டங்களின் எண்ணிக்கை 4,616 பயனாளர்களின் தொகை 966,653 ஆகும். இது ஆரோக்கியமான வாழ்விற்கு வழிகோலியது. நீரை சேகரிப்பதற்கு தேவைப்படும் காலமும் குறைக்கப்பட்டது. |




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | |
|---|---|---|
| சிறிய நீர்ப்பாசன திட்டம் | 4,548.63 | 10,823 செயற்றிட்டங்கள் பூர்த்தி செய்யப்பட்டுள்ளன. இதன் மூலம் 1,610,188 மக்கள் பயனடைகின்றனர். நீர்த்தேக்கங்களை தூய்மைப்படுத்துவதனூடாக சூழல் மாசடைதல் குறைக்கப்படுதல், வெள்ள சேதங்களை குறைத்துக்கொள்ளமுடியும். |
| மின்சார வழங்கல் | 3,095.60 | நிறைவு செய்யப்பட்டுள்ள செயற்றிட்டங்கள் எண்ணிக்கை 5,425 ஆகும். பயனடைவோரின் எண்ணிக்கை 411,868 இருளில் மூழ்கியிருந்த மக்களின் வாழ்க்கைக்கு பெரும் பிரகாசம் கிடைக்கப்பெற்ற அதேவேளை வீட்டு மற்றும் வர்த்தக பொருளாதார செயற்பாடுகளுக்கு பொருத்தமான சூழல் ஏற்படுத்தப்பட்டுள்ளது. |
| பல்நோக்கு கட்டிடங்கள் | 1,998.42 | பூர்த்தி செய்யப்பட்டுள்ள செயற்றிட்டங்களின் எண்ணிக்கை 3,254 ஆகும். இதன் மூலம் 1,154,054 மக்கள் பயனடைகின்றனர். இதன் கீழ் கிராம பிரதேசங்களுக்கு பொது மண்டபங்கள், நூலகங்கள், பல்நோக்கு கட்டிடங்கள் அமைப்பதனூடாக அப்பிரதேசத்தை வசதிகள் நிறைந்த மக்கள் வாழும் பிரதேசமாக்கல். |
| வாழ்வாதார அபிவிருத்தி | 1,544.69 | 71,424 செயற்றிட்டங்கள் நிறைவு செய்யப்பட்டுள்ளன. பயனடைவோரின் எண்ணிக்கை 277,067 ஆகும். கிராம மக்களுக்கு நிலையான வாழ்வாதார வழியை பெற்றுக்கொடுப்பதற்கு உதவக்கூடிய வருமான வழி-முறைகள் மற்றும் தொழில் வழிமுறைகள் தொடர்பான செயற்றிட்டங்கள் இதன் கீழ் நடைமுறைப்படுத்தப்படுகின்றது. |
| சமூக அபிவிருத்தி | 1,382.97 | பூர்த்தி செய்யப்பட்டுள்ள செயற்றிட்டங்களின் எண்ணிக்கை 5,986 ஆகும். பயனாளர்களின் எண்ணிக்கை 1,074,292 ஆகும். மக்கள் மத்தியில் அருகிவரும் சமூக கலாச்சார மற்றும் சமய விழுமியங்களை மீண்டும் கட்டியெழுப்புவதனூடாக சிறந்த மக்கள் நிறைந்த கிராமத்தை உருவாக்குவதற்கு இச் செயற்றிட்டமானது ஏதுவாகின்றது. |
| சிறுவர் மற்றும் மாதர் நிலையங்கள் | 1,017.53 | பூர்த்தி செய்யப்பட்டுள்ள செயற்றிட்டங்களின் எண்ணிக்கை 1,649 ஆகும். பயனடைவோரின் எண்ணிக்கை 1,189,605 ஆகும். இதனூடாக சுகாதாரம் நிறைந்த ஆரோக்கியமான தாய்மார்கள் மற்றும் பிள்ளைகளை உருவாக்கக் கூடியதாக உள்ளது. |
| பாடசாலை மலசலகூட வசதிகள் | 1,442.13 | பூர்த்தி செய்யப்பட்டுள்ள செயற்றிட்டங்களின் எண்ணிக்கை 7,887 ஆகும். பயனாளர்களின் எண்ணிக்கை 2,510,992 ஆகும். இதனூடாக நோய் பரவும் வாய்ப்பு குறைக்கப்படும் அதேவேளை பாடசாலை சூழலும் சிறப்பாக காணப்படும். |
| முன்பள்ளி | 523.04 | பூர்த்தி செய்யப்பட்டுள்ள செயற்றிட்டங்களின் எண்ணிக்கை 5,610 ஆகும். பயனாளர்களின் எண்ணிக்கை 247,443 ஆகும். தரமான முன்பள்ளிக் கல்வியை பெறும் அதேவேளை இப்பாடசாலைகளில் மாணவர்களை சேர்க்கும் ஆர்வத்தைத் மக்களிடையே ஏற்படுத்துகிறது. |
| விளையாட்டு மைதானங்கள்/ பூங்கா வசதிகள் | 145.48 | பூர்த்தி செய்யப்பட்டுள்ள செயற்றிட்டங்களின் எண்ணிக்கை 205 ஆகும். நன்மை பெற்றுக்கொள்வோர் எண்ணிக்கை 132,009 ஆகும். இதன் மூலம் கிராம பிரதேசத்தில் பூரண சௌபாக்கியமுடைய பிரதேசமாக மாற்றுவதன் மூலம் மக்களின் ஓய்வு நேரத்தை பயனுள்ளதாக செலவிடுவதற்கு வசதிகள் ஏற்படுத்தப்பட்டுள்ளது. |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காலி மாவட்டம்




## மாவட்டம் தொடர்பான அடிப்படைத் தரவுகள்

| | | |
|---|---|---|
| பிரதேச செயலகப் பிரிவுகளின் எண்ணிக்கை | | 19 |
| கிராம சேவகர் பிரிவுகளின் எண்ணிக்கை | | 895 |
| நிலப்பரப்பு (சதுர கி.மீ) | | 1,652 |
| மொத்த சனத்தொகை (2014) | | 1,077,000 |
| குடும்பங்களின் எண்ணிக்கை (2012) | | 269,484 |
| சமுர்த்தி நன்மை பெறும் குடும்பங்களின் எண்ணிக்கை (2014) | | 72,928 |
| குடியடர்த்தி (2014) நபர்களின் எண்ணிக்கை (சதுர கி.மீ) | | 666 |
| சனத்தொகையை வகைப்படுத்தல் | | |
| பால் ரீதியாக (2014) | ஆண்கள் | 517,000 |
| | பெண்கள் | 560,000 |

மூலம்: தொகைமதிப்பு புள்ளிவிபரத் திணைக்களம், வாழ்வின் எழுச்சி அபிவிருத்தி திணைக்களம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அபிவிருத்தி திட்டங்களின் முன்னேற்ற மீளாய்வு - காலி மாவட்டம்



### மொத்த நிதி ஒதுக்கீடு ரூபா 3,599.0 மில்.

#### நிகழ்ச்சித் திட்டம் ரீதியான ஒதுக்கீட்டு பகிர்வு

| நிதி வழங்குனர் | நிகழ்ச்சித் திட்டம் | ஒதுக்கீடு ரூபா (மில்) |
|---|---|---|
| உள்நாட்டு நிதி | ஒரு கிராமம் ஒரு நிகழ்ச்சித் திட்டம் | 895.00 |
| | கிராம எழுச்சி நிகழ்ச்சித் திட்டம் (கமநெகும) | 407.00 |
| | பலாத்நெகும / புறநெகும் | 1,374.00 |
| | கிராம பாடசாலைகளில் கழிவகற்றல் மற்றும் ஏனைய வசதிகளை மேம்படுத்தல் | 60.00 |
| | வனஜீவராசிகள் மற்றும் வன பாதுகாப்பு | |
| | பன்முகப்படுத்தப்பட்ட வரவு செலவுத்திட்டம் | 50.00 |
| | மக்கள் பிரதிநிதிகளின் பங்களிப்புடனான திட்ட அமுலாக்கல்கள் | 200.00 |
| | வாழ்வின் எழுச்சி நிகழ்ச்சித் திட்டம் (திவி நெகும) | 200.00 |
| | கிராம பாலங்கள் மற்றும் அணுகு பாதைகளின் அபிவிருத்தி | 300.00 |
| | சிறிய நீர்ப்பாசன அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டம் | 113.00 |
| மொத்தம் | | 3,599.00 |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அபிவிருத்தி செயற்றிட்டங்களின் முன்னேற்றம்

## மின்சாரம்

2014 ஆம் ஆண்டில் காலி மாவட்டத்தில் கிராமிய மின்சக்தி அபிவிருத்திக்காக 13 மின்சக்தி திட்டங்கள் இனங்காணப்பட்டுள்ளதுடன் இதற்காக மதிப்பிடப்பட்டுள்ள தொகை 3.27 ரூபா மில்லியன் ஆகும். தற்போது இச் செயற்றிட்டங்கள் செயற்படுத்தப்படுகின்றன. 30.09.2014 திகதி வரையான மொத்த செலவு 0.46 ரூபா மில்லியன் ஆகும்.

## வீதிகள் மற்றும் பாலங்கள்

காலி மாவட்டத்தில் வீதி அபிவிருத்தி வேலைத்திட்டத்திற்காக 3110 இனங்காணப்பட்டுள்ளதுடன் இதற்காக மதிப்பிடப்பட்டுள்ள தொகை 810.24 ரூபா மில்லியன் ஆகும். இதற்கான 30.09.2014 திகதி வரையான மொத்த செலவு 207.46 ரூபா மில்லியன் ஆகும்.



கொங்கிறீட் கல் பதித்து சீரமைக்கப்பட்ட கங்காநம்கே குருகொடெல்ல வீதி வெலிவிடிய திவிதுரே பிரதேச செயலகப்பிரிவு



கொங்கிறீட் இடப்பட்ட கல்கெடிய குறுக்கு பாதையின் இரு பக்கத்திற்குமான கால்வாய் முறைமை வெலிவிடிய திவிதுரே பிரதேச செயலகப்பிரிவு

## கல்வி

2014 ஆம் ஆண்டில் காலி மாவட்டத்தின் கிராமப்புற பாடசாலைகளின் உட்கட்டமைப்பு வசதி அபிவிருத்திக்காக 374 செயற்றிட்டங்கள் அங்கீகரிக்கப்பட்டுள்ளன. அதற்காக மதிப்பிடப்பட்டுள்ள தொகை 207.38 ரூபா மில்லியன் ஆகும். இச் செயற்றிட்டங்களை அமுல்படுத்துவதற்கு இதுவரையில் 14.24 ரூபா மில்லியன் நிதி செலவிடப்பட்டுள்ளது.

## சுகாதாரம்

காலி மாவட்டத்திற்குள் சுகாதார வசதிகளை மேம்படுத்துவதற்காக 54 செயற்றிட்டங்கள் இனங்காணப்பட்டுள்ளதுடன் இதற்காக 94.08 ரூபா மில்லியன் நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. வேலை நடைபெற்றுக்கொண்டிருக்கும் இச் செயற்றிட்டங்களுக்கு இதுவரை 1.18 ரூபா மில்லியன் நிதி செலவிடப்பட்டுள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சமூக நலன்புரி

மாவட்டத்தின் சமூக நலன்புரிச் செயற்றிட்டங்களுக்கு பங்களிப்பு வழங்கும் வகையிலான 882 செயற்றிட்டங்கள் இவ்வருடத்தில் அமுல்படுத்தப்படுவதுடன் இதற்காக மதிப்பிடப்பட்டுள்ள தொகை 422.51 ரூபா மில்லியன் ஆகும். 30.09.2014 திகதி வரையில் மொத்த செலவு 10.02 ரூபா மில்லியன் ஆகும்.

## சிறிய நீர்ப்பாசனம்

இம் மாவட்டத்தில் சிறிய நீர்ப்பாசன செயற்றிட்டங்கள், கைவிடப்பட்ட பயிரிடத்தக்க நிலங்களின் சீரமைப்பு திட்டங்கள், கால்வாய்கள் மற்றும் அணைக்கட்டுகள் அபிவிருத்தி செய்வது தொடர்பான 54 செயற்றிட்டங்களுக்காக மதிப்பிடப்பட்டுள்ள தொகை 38.89 ரூபா மில்லியன் ஆகும். இச் செயற்றிட்டங்களுக்காக 30.09.2014 திகதி வரை 4.12 ரூபா மில்லியன் நிதி செலவிடப்பட்டுள்ளது.

## குடிநீர் வழங்கல் மற்றும் பொதுச் சுகாதாரம்

குடிநீர் வழங்கல் மற்றும் பொதுச் சுகாதாரம் தொடர்பான 33 செயற்றிட்டங்களினை அமுல்படுத்துவதற்காக மதிப்பிடப்பட்டுள்ள தொகை 97.64 ரூபா மில்லியன் ஆகும். 30.09.2014 திகதி வரையில் 23.31 ரூபா மில்லியன் நிதி செலவிடப்பட்டுள்ளது.

## வர்த்தகம்

2014 ஆம் ஆண்டில் காலி மாவட்ட வர்த்தக நடவடிக்கைகளை அபிவிருத்தி செய்வதற்காக மதிப்பிடப்பட்டுள்ள தொகை 134.19 ரூபா மில்லியன் ஆகும். இதற்காக அமுல்படுத்தப்பட்டு வருகின்ற செயற்றிட்டங்களின் எண்ணிக்கை 18 ஆகும்.


## ஏனையவை

கிராமப்புற மக்களின் வாழ்வாதார அபிவிருத்தி அடங்கலாக ஏனைய செயற்றிட்டங்களை அமுல்படுத்துவதற்காக 2014 ஆம் ஆண்டில் 24.37 ரூபா மில்லியன் மதிப்பிடப்பட்டுள்ளது. 61 செயற்றிட்டங்களின் வேலை நடைபெற்றுக்கொண்டிருக்கும் அதேவேளை இதற்காக 1.95 ரூபா மில்லியன் நிதி செலவிடப்பட்டுள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாத்தறை மாவட்டம்




## மாவட்டம் தொடர்பான அடிப்படைத் தரவுகள்

| | | |
|---|---|---|
| பிரதேச செயலகப் பிரிவுகளின் எண்ணிக்கை | | 16 |
| கிராம சேவகர் பிரிவுகளின் எண்ணிக்கை | | 650 |
| நிலப்பரப்பு (சதுர கி.மீ) | | 1,283 |
| மொத்த சனத்தொகை (2014) | | 826,000 |
| குடும்பங்களின் எண்ணிக்கை (2012) | | 203,626 |
| சமுர்த்தி நன்மை பெறும் குடும்பங்களின் எண்ணிக்கை (2014) | | 67,938 |
| குடியடர்த்தி (2014) நபர்களின் எண்ணிக்கை (சதுர கி.மீ) | | 651 |
| சனத்தொகையை வகைப்படுத்தல் | | |
| பால் ரீதியாக (2014) | ஆண்கள் | 397,000 |
| | பெண்கள் | 429,000 |

மூலம்: தொகைமதிப்பு புள்ளிவிபரத் திணைக்களம், வாழ்வின் எழுச்சி அபிவிருத்தி திணைக்களம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அபிவிருத்தி திட்டங்களின் முன்னேற்ற மீளாய்வு - மாத்தறை மாவட்டம்



**மொத்த நிதி ஒதுக்கீடு**
**ரூபா 2,732.0 மில்.**

### நிகழ்ச்சித் திட்டம் ரீதியான ஒதுக்கீட்டு பகிர்வு

| நிதி வழங்குனர் | நிகழ்ச்சித் திட்டம் | ஒதுக்கீடு ரூபா (மில்) |
|---|---|---|
| உள்நாட்டு நிதி | ஒரு கிராமம் ஒரு திட்டம் | 650.00 |
| | கிராம எழுச்சி நிகழ்ச்சித் திட்டம் (கமநெகும) | 314.20 |
| | பலாத்நெகும / புறநெகும | 1,058.00 |
| | கிராம பாடசாலைகளில் கழிவகற்றல் மற்றும் ஏனைய வசதி-களை மேம்படுத்தல் | 42.00 |
| | பன்முகப்படுத்தப்பட்ட வரவுசெலவுத்திட்டம் | 45.00 |
| | மக்கள் பிரதிநிதிகளின் பங்களிப்புடனான திட்ட அமுலாக்கல்கள் | 175.00 |
| | வாழ்வின் எழுச்சி நிகழ்ச்சித் திட்டம் (திவி நெகும) | 140.00 |
| | கிராம பாலங்கள் மற்றும் அணுகு பாதைகளின் அபிவிருத்தி | 210.00 |
| | சிறிய நீர்ப்பாசன அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டம் | 98.00 |
| வெளிநாட்டு நிதித் திட்டங்கள் | | |
| மொத்தம் | | 2,732.00 |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அபிவிருத்திச் செயற்றிட்டங்களின் முன்னேற்றம்

## மின்சாரம்

மாவட்டத்தில் இருக்கும் அனைத்து வீடுகளுக்கும் மின்சக்தியை வழங்குவதை நோக்காக கொண்டு 2014 ஆம் ஆண்டில் மாத்தறை மாவட்டத்தில் கிராம எழுச்சி மற்றும் பிரதேச எழுச்சி ஆகிய நிகழ்ச்சித்திட்டங்களின் கீழ் வெலிமட மற்றும் மாத்தறை பிரதேச செயலக பிரிவு அடங்கும் வகையில் கிராமிய மின்சார அபிவிருத்திக்காக 1.31 ரூபா மில்லியன் நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. அதற்கமைய இவ்வருடத்திற்குள் 10 மின் வழங்கல் செயற்றிட்டங்கள் அமுல்படுத்துவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது. 2014.09.30 இல் 2 செயற்றிட்டங்கள் பூர்த்தி செய்யப்பட்டுள்ள அதேவேளை 06 வேலைத்திட்டங்கள் நடைபெற்றுக்கொண்டிருக்கின்றன.

## வீதிகள் மற்றும் பாலங்கள்

மாவட்டத்திற்குள் வீதி அபிவிருத்தி செய்வதற்காக 2014 ஆம் ஆண்டில் ரூபா 970.48 நிதி ஒதுக்கீடு செய்யப்பட்ட அதே வேளை 1,679 வீதிகளை அபிவிருத்தி செய்வதற்கு திட்டமிடப்பட்டது. 30.09.2014 ஆம் திகதி வரையில் 215.72 ரூபா மில்லியன் நிதி செலவிடப்பட்டு 16 பிரதேச செயலாளர் பிரிவுகளில் 558 வேலைத்திட்டங்கள் பூர்த்திசெய்யப்பட்டுள்ள அதேவேளை 743 வீதித் திருத்த வேலைத்திட்டங்கள் செயற்படுத்தபட்டு வருகின்றது. எதிர்பார்க்கப்பட்ட பயனாளர்களின் எண்ணிக்கை 347,143 ஆகும்.



கொங்கிறீட் கல் பதிக்கப்பட்ட
மிதெல்லமுர வீதி
தெவிநுவர பிரதேச செயலகப் பிரிவு



கொங்கிறீட் இடப்பட்ட
எகொடயாமுள்ள வீதி
மாலிம்பட பிரதேச செயலகப் பிரிவு

## கல்வி

கிராம பாடசாலைகளில் உட்கட்டமைப்பு வசதிகளை அபிவிருத்தி செய்வதற்காக 275 வேலைத்திட்டங்கள் 2014 ஆம் ஆண்டில் இனங்காணப்பட்டு அனுமதிக்கப்பட்டுள்ளது. அதற்காக ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ள நிதி 224.12 ரூபா மில்லியன் ஆகும். இதுவரை 158 வேலைத்திட்டங்கள் நடைபெற்றுக்கொண்டிருக்கின்றன. 43.36 ரூபா மில்லியன் நிதி செலவிடப்பட்டு 89 நிர்மாண வேலைத்திட்டங்கள் பூர்த்தி செய்யப்பட்டுள்ளன. இதன் மூலம் 52,705 மாணவர்கள் பயன் பெற்றுக்கொள்வார்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



நிர்மாணிக்கப்பட்டுள்ள தேவமுல்ல வித்தியாலயத்தின் பாதுகாப்பு வேலி
கிரிந்த புகுல்வெல்ல பிரதேச செயலகப் பிரிவு



கொகுலியத்த வித்தியாலயத்தின் பாதுகாப்பு மதில் நிர்மாணித்தல்
கிரிந்த புகுல்வெல்ல பிரதேச செயலகப் பிரிவு

## சுகாதாரம்

மாவட்டத்திற்குள் சுகாதார வசதிகளை மேம்படுத்துவதற்காக 61 செயற்றிட்டங்கள் இனங்காணப்பட்டுள்ளது. அவ்வேலைத்திட்டங்களில் 11 திட்டங்கள் பூர்த்தி செய்யப்பட்டுள்ள அதேவேளை 25 திட்டங்கள் நடைபெற்றுக்கொண்டிருக்கின்றன. இதற்காக ஒதுக்கப்பட்ட நிதி 52.87 ரூபா மில்லியன் ஆகும். 2014.09.30 திகதி வரையில் செலவிடப்பட்ட நிதி 5.05 ரூபா மில்லியன் ஆகும். எதிர்பார்க்கப்படும் பயனாளர்களின் எண்ணிக்கை 6,647 ஆகும்.



நிர்மாணிக்கப்பட்டுள்ள வைத்திய நிலையம்
அகுரெஸ்ஸ பிரதேச செயலகப் பிரிவு



முன் மண்டப கூரையிடப்பட்ட
கெமிலியபொல வடக்கு வைத்திய நிலையம்
ஹக்மன பிரதேச செயலகப் பிரிவு

## சமூக நலன்புரி

2014 ஆம் வருடத்தில் அனுமதிக்கப்பட்டுள்ள 603 சமூக நலன்புரி வேலைத்திட்டங்களுக்காக ஒதுக்கப்பட்ட நிதி 401.28 ரூபா மில்லியன் ஆகும். இவ் வேலைத்திட்டங்களில் 441 நடைபெற்றுக்கொண்டிருக்கின்றன. 2014.09.30 திகதி வரையில் 53 செயற்றிட்டங்களின் வேலைகள் நிறைவு செய்யப்பட்டுள்ள அதே வேளை அதற்கான செலவு 31.02 ரூபா மில்லியன் ஆகும். 168,030 பேருக்கு பயன்பாட்டை பெற்றுக்கொடுப்பதற்கு எதிர்பாக்கப்படுகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சிறிய நீர்ப்பாசனம்

மாவட்டத்தின் சிறிய நீர்ப்பாசனக் குளங்கள், அணைக்கட்டுக்கள் கால்வாய்கள் விவசாய வீதிகள் மற்றும் அணைக்கட்டுக்கள் போன்ற 143 அபிவிருத்தி செயற்றிட்டங்களுக்காக ஒதுக்கப்பட்ட நிதி 88.39 ரூபா மில்லியன் ஆகும். இதுவரையில் 31 செயற்றிட்டங்களின் வேலைகள் நிறைவு செய்யப்பட்டுள்ள அதேவேளை 75 வேலைத்திட்டங்கள் நடைபெற்றுக்கொண்டிருக்கின்றன. 30.09.2014 ஆம் திகதி வரையான செலவு 7.28 ரூபா மில்லியன் ஆகும். இதன் மூலம் 44,484 நபர்கள் பயன் பெற்றுக்கொள்வார்கள் என எதிர்பாக்கப்படுகின்றது.



புனர்நிர்மாணம் செய்யப்பட்ட மாகதுர மேற்கு பஹலயாய பீலி கால்வாய் வழி மற்றும் பாதுகாப்பு மதில்
முலடியன பிரதேச செயலகப் பிரிவு



புனர்நிர்மாணம் செய்யப்பட்ட மீகஹமுல்ல குபுர அருகிலுள்ள கால்வாய்
வெலிகம பிரதேச செயலகப் பிரிவு

## நீர்வழங்கல் மற்றும் பொதுச் சுகாதாரம்

நீர் வழங்கல் மற்றும் பொதுச் சுகாதார வேலைத்திட்டங்களை செயற்படுத்துவதற்காக ஒதுக்கப்பட்ட நிதி 96.78 ரூபா மில்லியன் ஆகும். இவ் வருடத்திற்குள் 195 நீர்வழங்கல் மற்றும் சுகாதார வேலைத்திட்டங்கள் 142,951 பேருக்கு பயன்பாட்டை பெற்றுத்தருவதை முன்னிட்டு செயற்படுத்துவதற்காக திட்டமிடப்பட்டுள்ளது. 2014.09.30 ஆம் திகதி வரையில் 53.61 ரூபா மில்லியன் நிதி செலவிடப்பட்டுள்ளது. 54 செயற்றிட்டங்கள் பூர்த்தி செய்யப்பட்டுள்ள அதேவேளை 102 திட்டங்கள் செயற்படுத்தப்படுகிறது.

## வர்த்தகம்

மாத்தறை மாவட்டத்தில் வியாபார செயற்பாடுகளை அபிவிருத்தி செய்வற்காக 174.07 ரூபா மில்லியன் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. அவற்றில் 20 வேலைகள் நடைமுறைப்படுத்தப்படுகின்றது. இவற்றுள் 4 செயற்றிட்டங்கள் பூர்த்தி செய்யப்பட்டுள்ள அதேவேளை மொத்த செலவு 3.25 ரூபா மில்லியன் ஆகும். இச்செயற்றிட்டங்களின் மூலம் 1,849 பயனாளிகள் நன்மையடைவார்கள் என எதிர்பார்க்கப்படுகிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வாழ்வாதார அபிவிருத்தி

கிராம மக்களின் பொருளாதாரத்தை வலுப்படுத்தும் நோக்கில் இம்மாவட்டத்தின் வாழ்வின் எழுச்சி, வாழ்வாதார செயற்றிட்டங்களுக்கு மேலதிகமாக செயற்படுத்தப்படும் ஏனைய அபிவிருத்தி வேலைத்திட்டங்களின் கீழ் விவசாய, கால்நடை வளர்ப்பு, மீன்வளர்ப்பு மற்றும் சிறியளவிலான கைத்தொழில் முயற்சிகள் முதலான 89 செயற்றிட்டங்களை அமுல்படுத்துவதற்காக 2014 ஆம் ஆண்டில் 90.79 மில்லியன் ரூபா நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. அதன் மூலம் மாவட்ட மக்களின் வாழ்வின் நிலையை மேம்படுத்துவதற்கு எதிர்ப்பார்க்கப்படுகின்றது. இவ்வாறன 38 வேலைத்திட்டங்கள் நடைபெற்றுக்கொண்டிருக்கின்ற அதேவேளை 11 செயற்றிட்டங்களின் வேலைகள் நிறைவுபெற்றுள்ளன. இதற்காக 27.29 மில்லியன் ரூபா செலவிடப்பட்டுள்ளது. இத்திட்டங்களினால் 27,414 பயனாளர்கள் பயனடைவர்.



பழச்செடிகள் வழங்குதல்
மாலிம்பட பிரதேச செயலகப் பிரிவு




பழச்செடிகள் வழங்குதல்
வெலிகம பிரதேச செயலகப் பிரிவு

## வனஜீவராசிகள் மற்றும் வன பாதுகாப்பு

மாவட்டத்தில் வனவிலங்கு மற்றும் வனபாதுகாப்புக்காக 0.1 ரூபா மில்லியன் நிதி ஒதுக்கீட்டின் கீழ் ஹிதுல்கெடியஹென தொல மற்றும் ரதாகே தொல வனங்களை வேறுபடுத்தி இனங்கண்டு கொள்வதற்காக கொங்கிரீட் தூண்கள் இடப்படும் செயற்றிட்டங்கள் அகுரெஸ்ஸ பிரதேச செயலாளர் பிரிவில் செயற்படுத்துவதற்கு திட்டமிடப்பட்டுள்ளது. இதன் மூலம் இப்பிரதேச மக்கள் பயன்பெறுவர்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அம்பாந்தோட்டை மாவட்டம்




## மாவட்டம் தொடர்பான அடிப்படைத் தரவுகள்

| | | |
|---|---|---|
| பிரதேச செயலகப் பிரிவுகளின் எண்ணிக்கை | | 12 |
| கிராம சேவகர் பிரிவுகளின் எண்ணிக்கை | | 572 |
| நிலப்பரப்பு (சதுர கி.மீ) | | 2,609 |
| மொத்த சனத்தொகை (2014) | | 616,000 |
| குடும்பங்களின் எண்ணிக்கை (2012) | | 155,031 |
| சமுர்த்தி நன்மை பெறும் குடும்பங்களின் எண்ணிக்கை (2014) | | 55,208 |
| குடியடர்த்தி (2014) நபர்களின் எண்ணிக்கை (சதுர கி.மீ) | | 247 |
| சனத்தொகையை வகைப்படுத்தல் | | |
| பால் ரீதியாக (2014) | ஆண்கள் | 303,000 |
| | பெண்கள் | 313,000 |

மூலம்: தொகைமதிப்பு புள்ளிவிபரத் திணைக்களம், வாழ்வின் எழுச்சி அபிவிருத்தி திணைக்களம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அபிவிருத்தி திட்டங்களின் முன்னேற்ற மீளாய்வு - அம்பாந்தோட்டை மாவட்டம்



**மொத்த நிதி ஒதுக்கீடு**
**ரூபா 2,614.0 மில்.**

### நிகழ்ச்சித் திட்டம் ரீதியான ஒதுக்கீட்டு பகிர்வு

| நிதி வழங்குனர் | நிகழ்ச்சித் திட்டம் | ஒதுக்கீடு ரூபா (மில்) |
|---|---|---|
| உள்நாட்டு நிதி | ஒரு கிராமம் ஒரு நிகழ்ச்சித் திட்டம் | 576.00 |
| | கிராம எழுச்சி நிகழ்ச்சித் திட்டம் (கமநெகும) | 240.00 |
| | பலாத்நெகும / புறநெகும் | 806.00 |
| | கிராம பாடசாலைகளில் கழிவகற்றல் மற்றும் ஏனைய வசதிகளை மேம்படுத்தல் | 30.00 |
| | வனஜீவராசிகள் மற்றும் வன பாதுகாப்பு | 60.00 |
| | பன்முகப்படுத்தப்பட்ட வரவு செலவுத்திட்டம் | 40.00 |
| | மக்கள் பிரதிநிதிகளின் பங்களிப்புடனான திட்ட அமுலாக்கல்கள் | 150.00 |
| | வாழ்வின் எழுச்சி நிகழ்ச்சித் திட்டம் (திவி நெகும) | 100.00 |
| | கிராம பாலங்கள் மற்றும் அணுகு பாதைகளின் அபிவிருத்தி | 150.00 |
| | சிறிய நீர்ப்பாசன அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டம் | 192.0 |
| வெளிநாட்டு நிதி திட்டங்கள் | | 270.00 |
| மொத்தம் | | 2,614.00 |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அபிவிருத்திச் செயற்றிட்டங்களின் முன்னேற்றம்

## மின்சாரம்


2014 ஆம் ஆண்டில் அம்பாந்தோடை மாவட்டத்தில் 34 மின்சார செயற்றிட்டங்கள் அமுல்படுத்துவதற்காக 2.31 ரூபா மில்லியன் நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. 5 செயற்றிட்டங்கள் பூர்த்தி செய்யப்பட்டுள்ள அதே வேளை 29 வேலைத்திட்டங்கள் செயற்படுத்தப்படுகின்றன. 30.09.2014 திகதி வரையான மொத்த செலவு 0.86 ரூபா மில்லியன் ஆகும்.

## வீதிகள் மற்றும் பாலங்கள்

2014 ஆம் ஆண்டில் அம்பாந்தோடை மாவட்டத்தில் வீதி அபிவிருத்தியின் கீழ் அனைத்து செயலகப் பிரிவுகளும் அடங்கும் வகையிலாக கிராம வீதிக்கு கொங்கிறீட் இடுதல், காபட் இடுதல், கொங்கிறீட் கல் பதித்தல் அடங்கலாக ஏனைய வீதி அபிவிருத்தி வேலைகளுக்காக 613.86 ரூபா மில்லியன் நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. 724 செயற்றிட்டங்கள் அமுல்படுத்துவதற்கு அனுமதி பெறப்பட்டுள்ளது. 30.09.2014 திகதி வரையில் 378.02 ரூபா மில்லியன் நிதி செலவிடப்பட்டு 343 செயற்றிட்டங்களின் வேலைகள் பூர்த்திசெய்யப்பட்டுள்ள அதேவேளை 310 செயற்றிட்டங்களின் வேலைகள் நடைபெற்றுக்கொண்டிருக்கின்றன. இந்த வேலைத்திட்டத்தினால் 229,260 பயனாளிகள் பிரதிலாபம் பெற்றுக்கொள்வார்கள் என எதிர்பார்க்கப்படுகிறது.



கொங்கிறீட் இடப்பட்ட
முலன்யாய இலுக லித வீதி
வீரகெடிய பிரதேச செயலகப் பிரிவு




புனர்நிர்மாணம் செய்யப்பட்ட
தும்சிரிகம வீதி
அம்பாந்தோட்டை பிரதேச செயலகப் பிரிவு

## கல்வி

2014 ஆம் ஆண்டில் கல்வித்துறையில் கீழ் பாடசாலை உட்கட்டமைப்பு வசதிகளின் அபிவிருத்திக்காக 414 செயற்றிட்டங்கள் அங்கீகரிக்கப்பட்டுள்ளன. அதற்காக 109.37 ரூபா மில்லியன் நிதி ஒதுக்கப்பட்டுள்ளதுடன் 307 செயற்றிட்டங்களின் வேலைகள் நடைபெற்றுக்கொண்டிருக்கின்ற அதேவேளை 107 செயற்றிட்டங்களின் வேலைகள் பூர்த்தி செய்யப்பட்டுள்ளன. இதற்காக 32.33 ரூபா மில்லியன் நிதி செலவிடப்பட்டுள்ளது. இந்த வேலைத்திட்டத்தினால் 129,238 பயனாளிகள் பிரதிலாபம் பெற்றுள்ளனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



புனரமைப்பு செய்யப்பட்ட பதுகிரிய வித்தியாலயத்தின் வகுப்பு
அம்பாந்தோட்டை பிரதேச செயலகப் பிரிவு

## சுகாதாரம்

மாவட்டத்திற்குள் சுகாதார வசதிகளை மேம்படுத்துவதற்காக சிறுவர் மற்றும் மாதர் சுகாதார சிகிச்சை நிலையங்களை மீண்டும் கட்டியெழுப்புதல், கட்டிடங்களை புனரைமைப்பு செய்தல் ஆகிய சுகாதார துறைக்குரிய 77 செயற்றிட்டங்கள் இனங்காணப்பட்டுள்ளதுடன் அவற்றில் 25 செயற்றிட்டங்களின் வேலைகள் பூர்த்திசெய்யப்பட்டுள்ளன. 52 செயற்றிட்டங்களின் வேலைகள் நடைபெற்றுக்கொண்டிருக்கின்ற அதேவேளை 52.35 ரூபா மில்லியன் நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. 30.09.2014 திகதி வரையில் 3.31 ரூபா மில்லியன் நிதி செலவிடப்பட்டுள்ளது.

## சமூக நலன்புரி

2014 ஆம் ஆண்டில் அம்பாந்தோடை மாவட்டத்தின் சமூக நலன்புரிச் செயற்றிட்டங்களுக்காக முன்பள்ளி, சேவை நிலையங்கள், பல்நோக்கு கட்டிடங்கள் ஆகிய அபிவிருத்தி செயற்பாடுகளுக்காக 886 செயற்றிட்டங்கள் இனங்காணப்பட்டுள்ள அதே வேளை அவற்றிற்காக 512.93 ரூபா மில்லியன் நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. இவற்றுள் 160 செயற்றிட்டங்கள் பூர்த்தி செய்யப்பட்டுள்ளன. 726 செயற்றிட்டங்களின் வேலைகள் நடைபெற்றுக்கொண்டிருக்கின்றன. 30.09.2014 திகதி வரையில் மொத்த செலவு 136.48 ரூபா மில்லியன் ஆகும். பயனாளர்களின் எண்ணிக்கை 314,260 ஆகும்.



நிர்மாணிக்கப்பட்டுள்ள ரன்ன தெகெனஹிர பல்நோக்கு கட்டிடம்
தங்கல்ல பிரதேச செயலகப்பிரிவு



நிர்மாணிக்கப்பட்டுள்ள அங்ஜலிகல ஒன்றுகூடல் மண்டபம்
திஸ்ஸமஹாராம பிரதேச செயலகப்பிரிவு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சிறிய நீர்ப்பாசனம்

மாவட்டத்தினுள் கால்வாய் நிர்மாணித்தல் மற்றும் கொங்கிறீட் இடுதல், விவசாய பாதை மற்றும் அணைக்கட்டு அபிவிருத்தி, வாவி நிர்மாணம் மற்றும் புனர்நிர்மாணம். உ ஸ்ஸான நீர் வழங்கல் முறை ஆகிய 211 செயற்றிட்டங்களிற்காக 186.96 ரூபா மில்லியன் நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. 30.09.2014 திகதி வரையில் 74.93 ரூபா மில்லியன் நிதி செலவிடப்பட்டுள்ளது. 79 செயற்றிட்டங்கள் பூர்த்தி செய்யப்பட்டுள்ளதுடன் 132 செயற்றிட்டங்களின் வேலைகள் நடைபெற்றுக்கொண்டிருக்கின்றன.



புனர்நிர்மாணம் செய்யப்பட்ட
வலதொல கால்வாய்
தங்கல்ல பிரதேச செயலகப் பிரிவு



புனர்நிர்மாணம் செய்யப்பட்ட நெடொல்பிடிய
உதுர பஹல வாவி கால்வாய்
தங்கல்ல பிரதேச செயலகப் பிரிவு

## குடிநீர் வழங்கல் மற்றும் பொதுச் சுகாதாரம்

2014 ஆம் ஆண்டில் குழாய் கிணறு, நீர வடிகாலமைப்பு முறை, நீர் தாங்கி நிர்மாணம், நீர் வழங்கல் மற்றும் விஸ்தரித்தல் ஆகிய செயற்பாடுகள் அடங்கலாக குடிநீர் திட்டம் மற்றும் சுகாதார செயற்றிட்டங்களை செயற்படுத்துவதற்காக 79.17 ரூபா மில்லியன் நிதி ஒதுக்கப்பட்டுள்ளதுடன் இது தொடர்பான 572 திட்டங்கள் அமுல்படுத்துவதற்கு திட்டமிடப்பட்டுள்ளது. 30.09.2014 திகதி வரையில் 48.32 ரூபா மில்லியன் நிதி செலவிடப்பட்டுள்ளது. 123 செயற்றிட்டங்கள் பூர்த்தி செய்யப்பட்டுள்ளதுடன் 95 செயற்றிட்டங்களின் வேலைகள் நடைபெற்றுக்கொண்டிருக்கின்றன. இதனூடாக 26,184 பயனாளிகளுக்கு குடிநீர் வசதிகளை பெற்றுக்கொடுப்பதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது.

## வர்த்தகம்

2014 ஆம் வருடத்தில் அம்மாவட்டத்தினுள் வர்த்தக நடவடிக்கைகளை அபிவிருத்தி செய்வதற்காக 49.0 ரூபா மில்லியன் நிதி ஒதுக்கப்பட்டுள்ளதுடன் அதனைப் பயன்படுத்தி வாரச்சந்தை மற்றும் 12 கிராம சந்தை அபிவிருத்தி வேலைத்திட்டங்கள் நடைபெற்றுக்கொண்டிருக்கின்றன. அதே வேளை 16,593 பயனாளிகளுக்கு பிரதிலாபத்தை பெற்றுக்கொடுப்பதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வாழ்வாதார அபிவிருத்தி

கிராம மக்களின் பொருளாதாரத்தை மேம்படுத்துவதற்காக மாவட்டத்தில் வாழ்வின் எழுச்சி வாழ்வாதார செயற்றிட்டங்களுக்கு மேலதிகமாக செயற்படுத்தப்படும் ஏனைய அபிவிருத்தி வேலைத்திட்டங்களின் கீழ் விவசாய, கால்நடை வளர்ப்பு, மீன்வளர்ப்பு மற்றும் சிறியளவிலான கைத்தொழில் செயற்றிட்டங்களை அமுல்படுத்துவதற்காக 2014 ஆம் ஆண்டில் 65.41 ரூபா மில்லியன் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. 161 செயற்றிட்டங்கள் இனங்காணப்பட்டுள்ளன. அதன் மூலம் மாவட்ட மக்களின் வாழ்வின் நிலையை மேம்படுத்துவதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது. 2014.09.30 ஆம் திகதி வரையில் 13,157 பயனாளர்கள் இனங்காணப்பட்டுள்ளனர். 155 வேலைத்திட்டங்கள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்ற அதேவேளை 6 செயற்றிட்டங்கள் நிறைவு செய்யப்பட்டுள்ளன. இதற்காக 14.23 மில்லியன் ரூபா செலவிடப்பட்டுள்ளது.

## வனஜீவராசிகள் மற்றும் வன பாதுகாப்பு

அம்பாந்தோட்டை, சூரியவெவ, திஸ்ஸமஹாராம மற்றும் லுணுகம்வெஹெர ஆகிய பிரதேச செயலகப்பிரிவுகளில் வனவிலங்கு மற்றும் வன பாதுகாப்பு அபிவிருத்தி செய்வதற்காக அமுல்படுத்துவதற்கு எதிர்பார்க்கப்பட்ட 18 செயற்றிட்டங்களில் 15 நடைபெற்றுக்கொண்டிருக்கின்றன. அதற்காக 9.81 ரூபா மில்லியன் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விசேட குறிப்பு - 03

# கிராமிய பொருளாதாரத்தை அதிகரிப்பதில் கமநல அபிவிருத்தி திணைக்களத்தின் பங்களிப்பு

கமநல அபிவிருத்தி திணைக்களமானது 2013 ஆம் ஆண்டின் முற்பகுதியில் பொருளாதார அபிவிருத்தி அமைச்சுடன் ஒன்றிணைக்கப்பட்டு கிராமத்தில் வாழும் விவசாயிகளின் மனங்களை மலரச்செய்து ஒளிமயமான புதிய வாழ்கைக்கு இட்டுச்செல்வதை கருத்திற்கொண்டு சேவையாற்றி வருகிறது. இத்திணைக்களமானது நிலைபேறான அபிவிருத்தியினூடாக நாட்டின் பொருளாதாரத்தை உயர்த்தும் நோக்கைக்கருத்திற் கொண்டு பயிர் செய்யக்கூடிய அனைத்து பயிர்நிலங்களையும் விவசாய நிலங்களுடன் ஒருங்கிணைத்த கிராமிய விவசாயிகளிற்கு உந்துதலை வழங்கி அவர்களிடமிருந்து உச்ச பயன்பாட்டையுடைய விவசாயத்தை உருவாக்கும் நோக்கில் பின்வரும் நிகழ்ச்சித்திட்டங்களை அமுல்படுத்தி வருகின்றது.

- கைவிடப்பட்ட வயல்நிலங்களில் பயிர்ச்செய்கை மேற்கொள்ளலும் மற்றும் சிறிய நீர்ப்பாசன குளங்களை புனரமைத்தலும் ஆகிய நிகழ்ச்சித்திட்டங்களானது கமநல அபிவிருத்தி திணைக்களத்தினால் நடைமுறைப்படுத்தப்படும் பிரதானமாக செய்யப்படும் அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டமாகும். இத்திட்டத்தினூடாக நாடளாவிய ரீதியில் நெல் ஏற்றுமதிப் பொருளாதாரத்தை மேம்படுத்தும் நோக்கில் கைவிடப்பட்ட வயல்நிலங்களில் நெற் பயிர்ச்செய்கையை மேற்கொள்ள எதிர்பார்க்கப்படுகின்றது. மேலும் 2014 ஆம் ஆண்டில் ரூபா 2,450.00 மில்லியன் நிதி ஒதுக்கப்பட்டுள்ளது."



இந்துருவ அணைக்கட்டிலிருந்து கொடவெல வயல்நிலங்கள் வரை விரிவுபடுத்தப்பட்ட கால்வாய் குறுவிட்ட பிரதேச செயலகப்பிரிவு



பலலல்ல கவைய வாய்க்காலிருந்து புனரமைக்கப்பட்ட உப வாய்க்கால் வெலிப்பிட்டிய பிரதேச செயலகப்பிரிவு

- இதற்கு மேலதிகமாக கிராமிய எழுச்சி நிகழ்ச்சித்திட்டம், மாகாண எழுச்சி நிகழ்ச்சித்திட்டம் மற்றும் சமுதாய வேண்டுகோள் ஆகியவற்றின் அடிப்படையில் மாவட்ட ரீதியான ஒதுக்கீட்டிலிருந்து சிறிய நீர்ப்பாசனக் குளங்களின் புனரமைப்பிற்காக நிதி வழங்கப்பட்டுள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

• உரக்களஞ்சியங்களை நிர்மாணித்தல்

மகிந்த சிந்தனையின் எதிர்கால நோக்கின் அடிப்படையில் அனைத்து மாவட்டங்களையும் உள்ளடக்கி நாடளாவிய ரீதியில் 25 களஞ்சியங்களை நிர்மாணிப்பதற்காக ரூபா 50.0 மில்லியன் ஒதுக்கப்பட்டுள்ளதுடன் இந் நிர்மாணப்பணிகள் நடைபெறுகின்றன.

• கமநல சேவை நிலையங்களை புனரமைத்தல்

கமநல சேவை நிலையங்களில் இருந்து சேவைகளை பெறும் நோக்கில் வருகைத் தரும் விவசாயிகளை ஊக்குவிக்கும் முகமாக நவீன தொழில்நுட்பங்களைப் பயன்படுத்தி பயிர்ச்செய்கை மாதிரிகளை உருவாக்கும் புதிய திட்டத்தினூடாக கமநல சேவை நிலையங்களைப் புனரமைக்கத் தீர்மானிக்கப்பட்டுள்ளது. இப்புனரமைப்பு பணிகளுக்காக 2014ஆம் ஆண்டு ரூபா 450 மில்லியன் ஒதுக்கப்பட்டுள்ளது. மேலும் ரூபா 30.0 மில்லியன் பிரதான அலுவலகங்கள், மாவட்ட அலுவலகங்களின் புனரமைப்பிற்காகவும் மற்றும் புதிய கமநல நிலையங்களைக் கட்டுவதற்காக ரூபா 150.0 மில்லியனும் ஒதுக்கப்பட்டுள்ளது.



புனரமைக்கப்பட்ட
ஜீலிமல் கமநல சேவை நிலையம்
இரத்தினபுரி பிரதேசச் செயலகப்பிரிவு



புனரமைக்கப்பட்ட
கிரியல்ல கமநல சேவை நிலையம்
கிரியல்ல பிரதேச செயலகப்பிரிவு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 30.09.2014 ஆம் திகதி வரையில் கமநல அபிவிருத்தி திணைக்களத்தின்

### அபிவிருத்தி கருத்திட்டங்களின் முன்னேற்றம்


| நிகழ்ச்சித்திட்டம் | திட்டங்களின் எண்ணிக்கை | ஒதுக்கீட்டு நிதி (ரூ.மில்) | நிறைவு பெற்ற திட்டங்கள் | நடை பெற்றுக் கொண்டிருக்கும் திட்டங்கள் | ஆரம்பிக் கப்படாத திட்டங்கள் | செலவினம் (ரூ. மில்) |
|---|---|---|---|---|---|---|
| 1. குளங்கள், சிறிய நீர்பாபாசன திட்டங்கள் மற்றும் மீள பயிரிடப்படும் கைவிடப்பட்ட நெல் வயல்கள் | 2,451 | 2,450.00 | | 1,455 | 654 | 322.75 |
| 2. உரக் களஞ்சியங்களை அமைத்தல் | 25 | 50.00 | 342 | 18 | 1 | 18.31 |
| 3. கமநல சேவைகள் நிலையங்களை புனரமைத்தல் | 675 | 450.00 | | 339 | 21 | 203.04 |
| 4. மாவட்ட அலுவலகம் மற்றும் தலைமை அலுவலகத்தை புனரமைத்தல் | 24 | 30.00 | 6 | 10 | 4 | 7.18 |
| 5. புதிய கமநல சேவைகள் நிலையங்களை அமைத்தல் | 18 | 150.00 | 315 | 17 | 0 | 21.55 |
| 6. திருகோணமலையில் சிறிய குளங்களை புனரமைத்தல் | 45 | 256.26 | 9 | 7 | 14 | 17.24 |
| 7. வனஜீவராசிகளைப் பாதுகாக்கும் நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் திருகோணமலையில் மின்வேலிகளை அமைத்தல். | 42 | 46.94 | 1 | 42 | | 5.08 |
| 8. *வாழ்வின் எழுச்சி நிகழ்ச்சித்திட்டம் | | 55.0 | 24 | | | 41.27 |
| மொத்தம் | 3,280 | 3,488.20 | 697 | 1,888 | 694 | 636.42 |

* வாழ்வின் எழுச்சி நிகழ்ச்சித்திட்டத்திற்கு இணையாக கமநலத் திணைக்களத்தின் கீழ் நடைமுறைப்படுத்தப்பட்ட நிகழ்ச்சித்திட்டம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ்ப்பாண மாவட்டம்




## மாவட்டம் தொடர்பான அடிப்படைத் தரவுகள்

| | | |
|---|---|---|
| பிரதேச செயலகப் பிரிவுகளின் எண்ணிக்கை | | 15 |
| கிராம சேவகர் பிரிவுகளின் எண்ணிக்கை | | 435 |
| நிலப்பரப்பு (சதுர கி.மீ) | | 1,025 |
| மொத்த சனத்தொகை (2014) | | 539,000 |
| குடும்பங்களின் எண்ணிக்கை (2012) | | 137,480 |
| சமுர்த்தி நன்மை பெறும் குடும்பங்களின் எண்ணிக்கை (2014) | | 53,907 |
| குடியடர்த்தி (2014) நபர்களின் எண்ணிக்கை (சதுர கி.மீ) | | 638 |
| சனத்தொகையை வகைப்படுத்தல் | | |
| பால் ரீதியாக (2014) | ஆண்கள் | 280,000 |
| | பெண்கள் | 313,000 |

மூலம்: தொகைமதிப்பு புள்ளிவிபரத் திணைக்களம், வாழ்வின் எழுச்சி அபிவிருத்தி திணைக்களம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அபிவிருத்தி திட்டங்களின் முன்னேற்ற மீளாய்வு - யாழ்ப்பாண மாவட்டம்



**மொத்த நிதி ஒதுக்கீடு**
**ரூபா 4,199.30 மில்.**

### நிகழ்ச்சித் திட்டம் ரீதியான ஒதுக்கீட்டு பகிர்வு

| நிதி வழங்குனர் | நிகழ்ச்சித் திட்டம் | ஒதுக்கீடு ரூபா (மில்) |
|---|---|---|
| உள்நாட்டு நிதி | கிராம எழுச்சி நிகழ்ச்சித் திட்டம் (கமநெகும) | 2.47 |
| | மாகாண / நகர எழுச்சி நிகழ்ச்சித் திட்டம் (பலாத்நெகும / புறநெகும) | 394.01 |
| | பன்முகப்படுத்தப்பட்ட வரவு செலவுத்திட்டம் | 41.25 |
| | வாழ்வின் எழுச்சி நிகழ்ச்சித் திட்டம் (திவி நெகும) | 10.00 |
| வெளிநாட்டு நிதித் திட்டங்கள | | 3,751.57 |
| **மொத்தம்** | | 4,199.30 |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அபிவிருத்திச் செயற்றிட்டங்களின் முன்னேற்றம்

## மின்சாரம்

யாழ்ப்பாண மாவட்டத்தில் மின்சாரம் வழங்கல் செயற்றிட்டத்தின் கீழ் சுன்னாகம் மின்பிறபாக்கி மற்றும் மின்விநியோகத்தை சீர்செய்வதற்காக 277.08 ரூபா மில்லியன் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு 190.73 ரூபா மில்லியன் நிதி செலவிடப்பட்டுள்ளது. இதன் மூலம் 68 கிலோமீற்றர் நீளத்திற்கு உயர் மின்னழுத்த மின்சாரத்தை வழங்கும் கம்பிகள் நிர்மாணிக்கப்பட்டுள்ளன.

## வீதிகள் மற்றும் பாலங்கள்

இம் மாவட்டத்திலுள்ள சகல பிரதேச செயலகப்பிரிவுகளையும் உள்ளடக்கியதாக வீதிப் புனரமைப்பு மற்றும் வீதித்திருத்த செயற்றிட்டத்தினூடாக 78.41 கிலோமீற்றர் வீதிகளிற்கு 949.66 மில்லியன் ரூபா நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. அவற்றுள் 48.31 கிலோமீற்றர் வீதிகளின் புனரமைப்பிற்காக 618.51 மில்லியன் ரூபா நிதி செலவிடப்பட்டுள்ளது. இதனால் 129,048 பயனாளிகள் பிரதிலாபமடைவர்.



மீள்நிர்மாணிக்கப்பட்ட மிருசுவில் வைத்தியசாலை முன் வீதி, சாவகச்சேரி பிரதேச செயலகப்பிரிவு



மீள்நிர்மாணிக்கப்பட்ட கொத்திக் குள வீதி, ஊர்காவற்றுறை பிரதேச செயலகப்பிரிவு



மீள்நிர்மாணிக்கப்பட்ட ஆலைகேசடி வீதி, காரைநகர் பிரதேச செயலகப்பிரிவு



மீள்நிர்மாணிக்கப்பட்ட நாவலர் வீதி, நல்லூர் பிரதேச செயலகப்பிரிவு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சமூக நலன்புரி

சமூக நலன்புரி அபிவிருத்திக்கென முன்னெடுக்கப்பட்ட செயற்றிட்டத்தின் கீழ் இருதய ஆண்டவர் சனசமூக நிலையம், எழுவைதீவு கட்டிடத்தொகுதி, நூலகம், கலாச்சார மண்டபங்கள் மற்றும் பூங்கா புனரமைப்பு மற்றும் உபகரணங்கள் கையளிப்புகள் போன்ற 25 செயற்றிட்டங்களுக்காக 61.75 மில்லியன் ரூபா நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இவற்றுள் 14 செயற்றிட்டங்கள் நிறைவு செய்யப்பட்டுள்ளன. இதற்காக 26.17 மில்லியன் ரூபா நிதி செலவிடப்பட்டுள்ளது. இத்திட்டத்தினால் 8,619 பயனாளிகள் நன்மையடைவார்கள்.

## நீர்ப்பாசனம்

நீர்ப்பாசனத்தை விருத்தி செய்யும் வேலைத்திட்டத்தின் கீழ் உப்புநீர் சுத்திகரிப்பு சுண்டிக்குளம், நாவற்குழி உட்பட 7 செயற்றிட்டங்களுக்காக 33.63 மில்லியன் ரூபா நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இவற்றுள் 5 செயற்றிட்டங்கள் நிறைவு செய்யப்பட்டுள்ளதுடன் 2 செயற்றிட்டங்கள் நடைபெற்றுக்கொண்டிருக்கின்றன. இதற்காக 14.60 மில்லியன் ரூபா செலவிடப்பட்டுள்ளது. இத்திட்டத்தினால் 1,646 பயனாளிகள் நன்மை பெறுவர்.



கடல்நீர் தடுப்பு அணை வல்லை
பருத்தித்துறை பிரதேச செயலகப்பிரிவு



கடல்நீர் தடுப்பு அணை வேலவறு
பருத்தித்துறை பிரதேச செயலகப்பிரிவு

## குடிநீர் வழங்கல் மற்றும் பொதுச் சுகாதாரம்


யாழ்ப்பாண மாவட்டத்திலுள்ள சகல பிரதேச செயலகப்பிரிவுகளையும் உள்ளடக்கியதாக குடிநீர் வழங்கல் திட்டத்தின் கீழ் 3 செயற்றிட்டங்களிற்காக 168.89 ரூபா மில்லியன் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இவற்றுள் 2 செயற்றிட்டங்கள் நிறைவு செய்யப்பட்டுள்ளன. 112.40 ரூபா மில்லியன் நிதி செலவிடப்பட்டுள்ளது. இத் திட்டத்தின் ஊடாக 10,741 பயனாளிகள் பிரதிலாபம் பெறுவர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



நிர்மாணிக்கப்பட்ட கோயில்
குடியிருப்பு குடிநீர்க் கிணறு
காரைநகர் பிரதேச செயலகப்பிரிவு



நிர்மாணிக்கப்பட்ட குடிநீர்த் தாங்கி,
பருத்தித்துறை பிரதேச செயலகப்பிரிவு

## வர்த்தகம்


வர்த்தகத்துறையினை விருத்தி செய்யும் திட்டத்தின் கீழ் பலநோக்கு கூட்டுறவுச் சங்கம் அம்பிகைநகர் மற்றும் சரவணை என்பன புனரமைக்கப்பட்டுள்ளதுடன் கடைத்தொகுதி நிர்மாணம் அனலைதீவு பொதுச்சந்தை மதில்கள் புனரமைப்புக்கென 5 செயற்றிட்டங்கள் முன்னெடுக்கப்பட்டன. இதற்காக 179.98 மில்லியன் ரூபா நிதி ஒதுக்கீட்டில் அனைத்து செயற்றிட்டங்களும் நிறைவு செய்யப்பட்டுள்ளன. இவற்றிற்காக 46.71 மில்லியன் ரூபா செலவிடப்பட்டுள்ளது. இதன் மூலம் 6,270 பயனாளிகள் நன்மை பெறுவர்.

## வாழ்வாதார அபிவிருத்தி

மக்களின் வாழ்க்கைத்தரத்தை மேம்படுத்தும் நோக்கில் இத்திட்டத்தின் கீழ் பனை அபிவிருத்திச் சபை மற்றும் சிறிய அளவிலான கைத்தொழில் நிலையம் புனரமைப்புக்கென 3 செயற்றிட்டங்களுக்காக 11.05 மில்லியன் ரூபா நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இதற்காக 1.75 மில்லியன் ரூபா செலவிடப்பட்டுள்ளது. இதன் மூலம் 6,044 பயனாளிகள் நன்மை பெறுவர் என எதிர்பார்க்கப்படுகின்றது.

## மாவட்ட நிர்வாக வினைத்திறனை மேம்படுத்தல்

மாவட்ட அரச நிர்வாக கட்டிடத்தொகுதி புனரமைப்பு வேலைகள் 12 செயற்றிட்டங்கள் முன்னெடுக்கப்பட்டன. இதற்காக 618.61 ரூபா மில்லியன் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. செயற்றிட்டங்கள் யாவும் நிறைவு செய்யப்பட்டுள்ளன. இதற்கு 528.85 ரூபா மில்லியன் நிதி செலவிடப்பட்டுள்ளது. இதனால் மாவட்ட மக்கள் நன்மை பெறுவர்.






மீள் நிர்மாணிக்கப்பட்ட நெடுந்தீவு பிரதேச செயலகக் கட்டிடத்தொகுதி,
நெடுந்தீவு பிரதேச செயலகப்பிரிவு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மன்னார் மாவட்டம்




## மாவட்டம் தொடர்பான அடிப்படைத் தரவுகள்

| | | |
|---|---|---|
| பிரதேச செயலகப் பிரிவுகளின் எண்ணிக்கை | | 5 |
| கிராம சேவகர் பிரிவுகளின் எண்ணிக்கை | | 153 |
| நிலப்பரப்பு (சதுர கி.மீ) | | 1,996 |
| மொத்த சனத்தொகை (2014) | | 102,000 |
| குடும்பங்களின் எண்ணிக்கை (2012) | | 23,670 |
| சமுர்த்தி நன்மை பெறும் குடும்பங்களின் எண்ணிக்கை (2014) | | 13,166 |
| குடியடர்த்தி (2014) நபர்களின் எண்ணிக்கை (சதுர கி.மீ) | | 54 |
| சனத்தொகையை வகைப்படுத்தல் | | |
| பால் ரீதியாக (2014) | ஆண்கள் | 51,000 |
| | பெண்கள் | 51,000 |

மூலம்: தொகைமதிப்பு புள்ளிவிபரத் திணைக்களம், வாழ்வின் எழுச்சி அபிவிருத்தி திணைக்களம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அபிவிருத்தி திட்டங்களின் முன்னேற்ற மீளாய்வு - மன்னார் மாவட்டம்



**மொத்த நிதி ஒதுக்கீடு ரூபா 2,713.21 மில்.**

### நிகழ்ச்சித் திட்டம் ரீதியான ஒதுக்கீட்டு பகிர்வு

| நிதி வழங்குனர் | நிகழ்ச்சித் திட்டம் | ஒதுக்கீடு ரூபா (மில்) |
|---|---|---|
| உள்நாட்டு நிதி | கிராம எழுச்சி நிகழ்ச்சித் திட்டம் (கமநெகும) | 1.00 |
| | மாகாண/ நகர எழுச்சி நிகழ்ச்சித் திட்டம் (பலாத்நெகும / புறநெகும) | 156.30 |
| | பன்முகப்படுத்தப்பட்ட வரவு செலவுத் திட்டம் | 11.07 |
| | வாழ்வின் எழுச்சி நிகழ்ச்சித் திட்டம் (திவி நெகும) | 7.50 |
| வெளிநாட்டு நிதித் திட்டங்கள் | | 2,537.34 |
| மொத்தம் | | 2,713.21 |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அபிவிருத்திச் செயற்றிட்டங்களின் முன்னேற்றம்

## வீதிகள் மற்றும் பாலங்கள்

மன்னார் மாவட்டத்திலுள்ள அனைத்து பிரதேச செயலகப்பிரிவுகளையும் உள்ளடக்கியதாக வீதிகள் மற்றும் பாலங்கள் புனரமைப்புக்காக 528.12 மில்லியன் ரூபா நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இதில் 119 கிலோமீற்றர் வீதி, மற்றும் 4 சிறிய பாலங்கள், ஆர்.பி. பாடசாலை வீதி, பாலைக்குழி வீதி, மறுச்சுக்கட்டி வீதி, சிலாவத்துறை கொக்குபுடையன் வீதி மற்றும் வேப்பம்குளம், பிச்சைவன்னியன்குளம் வீதி என்பன உள்ளடங்கலாக மன்னார் மாவட்டத்தில் 112.91 கிலோமீற்றர் வீதிகள் நிறைவு செய்யப்பட்டுள்ளன. இதற்காக 357.04 ரூபா மில்லியன் நிதி செலவிடப்பட்டுள்ளது. இதனால் 88,716 பயனாளிகள் நன்மையடைவர்.



கூளான்குளம் உள்வீதி
முசலி பிரதேச செயலகப்பிரிவு



மாந்தை பரப்புகடந்தான் வீதி
மாந்தை மேற்கு பிரதேச செயலகப்பிரிவு

## சமூக நலன்புரி

இத்திட்டத்தின் கீழ் சனசமூக நிலையக்கட்டிடங்கள், நூலகம் மற்றும் சிறுவர் பூங்கா புனரமைப்பு மற்றும் மீள்நிர்மாணிப்புப் பணிகளுக்கென 65.80 மில்லியன் ரூபா நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இவற்றுள் 10 செயற்றிட்டங்கள் நிறைவு செய்யப்பட்டுள்ளன. இதற்கான 48.99 மில்லியன் ரூபா செலவிடப்பட்டுள்ளது.





அடம்பனில் புதிதாக நிர்மாணிக்கப்பட்ட சிறுவர் பூங்கா,
மாந்தை மேற்கு பிரதேச செயலகப்பிரிவு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### நீர்ப்பாசனம்

நீர்ப்பாசனத்திட்ட அபிவிருத்திக்காக மற்றும் புனரமைப்புக்காகவும் சிறிய குளங்கள், நீர்த்தாங்கி சீர்செய்தல் என்பவற்றிற்காக 205.65 ரூபா மில்லியன் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதுடன் 27 செயற்றிட்டங்கள் நிறைவு செய்யப்பட்டுள்ளது. இதற்காக 127.42 ரூபா மில்லியன் நிதி செலவிடப்பட்டுள்ளது. இதனால் 2,517 பயனாளிகள் நன்மை பெறுவர்.

### குடிநீர் வழங்கல் மற்றும் பொதுச் சுகாதாரம்

குடிநீர் வழங்கல் மற்றும் பொதுச் சுகாதாரம் திட்டத்திற்கென 1.20 ரூபா மில்லியன் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இதன்கீழ் 5 செயற்றிட்டங்கள் நிறைவு செய்யப்பட்டுள்ளன. இதற்காக 0.77 ரூபா மில்லியன் நிதி செலவிடப்பட்டுள்ளது. இதனால் 300 பயனாளிகள் நன்மையடைவார்கள்.



உயிலங்குளம் குடிநீர் வழங்கல் திட்டம்,
மன்னார் மேற்கு பிரதேச செயலகப்பிரிவு

### வர்த்தகம்

வர்த்தக செயற்பாடுகளை மேம்படுத்தும் நோக்கில் சந்தை கட்டிடத்தொகுதிகள் மற்றும் வர்த்தகக் கட்டிடங்கள் புனரமைப்புக்காக 46.79 ரூபா மில்லியன் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இதனூடாக 13 செயற்றிட்டங்கள் முன்னெடுக்கப்பட்டு 6 செயற்றிட்டங்கள் நிறைவு செய்யப்பட்டுள்ளன. இதற்காக 18.65 ரூபா மில்லியன் நிதி செலவிடப்பட்டுள்ளது.

### மாவட்ட நிர்வாக வினைத்திறனை மேம்படுத்தல்

மன்னார் மாவட்டத்தின் அரச நிர்வாகத்தை வினைத்திறன் கொண்ட துறையாக மேம்படுத்தும் நோக்கில் அலுவலகக் கட்டிடங்கள் புனரமைப்பு மற்றும் திருத்த வேலைகளுக்கென 4.13 ரூபா மில்லியன் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இதில் உதவி அரசாங்க அதிபர் விடுதி மற்றும் மாந்தை மேற்கு பிரதேச செயல மீள்நிர்மாணப்பணி கட்டம் II உட்பட 11 செயற்றிட்டங்களில் 10 செயற்றிட்டங்கள் நிறைவு செய்யப்பட்டுள்ளது. இதற்காக 1.15 ரூபா மில்லியன் நிதி செலவிடப்பட்டுள்ளது. இதனூடாக மாவட்டத்தில் உள்ள மக்கள் பிரதிலாபம் பெறுவர் என எதிர்பார்க்கப்படுகின்றது.



மீள்நிர்மாணிக்கப்பட்ட
உதவி அரசாங்க அதிபர் விடுதி,
மாந்தை மேற்கு பிரதேச செயலகப்பிரிவு




மீள்நிர்மாணிக்கப்பட்ட பிரதேச செயலக கட்டம் II
மாந்தை மேற்கு பிரதேச செயலகப்பிரிவு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வவுனியா மாவட்டம்




## மாவட்டம் தொடர்பான அடிப்படைத் தரவுகள்

| | | |
|---|---|---|
| பிரதேச செயலகப் பிரிவுகளின் எண்ணிக்கை | | 4 |
| கிராம சேவகர் பிரிவுகளின் எண்ணிக்கை | | 102 |
| நிலப்பரப்பு (சதுர கி.மீ) | | 1,967 |
| மொத்த சனத்தொகை (2014) | | 176,000 |
| குடும்பங்களின் எண்ணிக்கை (2012) | | 40,572 |
| சமுர்த்தி நன்மை பெறும் குடும்பங்களின் எண்ணிக்கை (2014) | | 11,986 |
| குடியடர்த்தி (2014) நபர்களின் எண்ணிக்கை (சதுர கி.மீ) | | 95 |
| சனத்தொகையை வகைப்படுத்தல் | | |
| பால் ரீதியாக (2014) | ஆண்கள் | 87,000 |
| | பெண்கள் | 89,000 |

மூலம்: தொகைமதிப்பு புள்ளிவிபரத் திணைக்களம், வாழ்வின் எழுச்சி அபிவிருத்தி திணைக்களம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அபிவிருத்தி திட்டங்களின் முன்னேற்ற மீளாய்வு - வவுனியா மாவட்டம்



**மொத்த நிதி ஒதுக்கீடு**
**ரூபா 1,578.70 மில்.**

### நிகழ்ச்சித் திட்டம் ரீதியான ஒதுக்கீட்டு பகிர்வு

| நிதி வழங்குனர் | நிகழ்ச்சித் திட்டம் | ஒதுக்கீடு ரூபா (மில்) |
|---|---|---|
| உள்நாட்டு நிதி | கிராம எழுச்சி நிகழ்ச்சித் திட்டம் (கமநெகும) | 1.00 |
| | மாகாண / நகர எழுச்சி நிகழ்ச்சித் திட்டம் (பலாத்நெகும / புறநெகும) | 122.46 |
| | பன்முகப்படுத்தப்பட்ட வரவுசெலவுத்திட்டம் | 10.02 |
| | வாழ்வின் எழுச்சி நிகழ்ச்சித் திட்டம் (திவி நெகும) | 6.33 |
| வெளிநாட்டு நிதித் திட்டங்கள் | | 1,438.89 |
| மொத்தம் | | 1,578.70 |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அபிவிருத்திச் செயற்றிட்டங்களின் முன்னேற்றம்

### மின்சாரம்

வவுனியா மாவட்ட மின்சார விநியோகத்திற்கென 4 செயற்றிட்டங்கள் இனங்காணப்பட்டு 0.412 ரூபா மில்லியன் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

### வீதிகள் மற்றும் பாலங்கள்

வவுனியா மாவட்ட போக்குவரத்துச் சேவைகளை மேம்படுத்தும் நோக்கில் வீதிப் புனரமைப்பு, வீதிச் செப்பனிடல் மற்றும் கிரவல் பாதை போன்ற செயற்றிட்டங்களுக்காக 359.57 மில்லியன் ரூபா நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இதன் மூலம் 52.71 கிலோமீற்றர் நீளமான மற்றும் 24 வீதிகள் என்பன அமைப்பதற்கு அனுமதிக்கப்பட்டு அவற்றில் 36.45 கிலோமீற்றர் வீதிகள் நிறைவு பெற்றுள்ளன. இதற்காக 260.38 மில்லியன் ரூபா செலவிடப்பட்டுள்ளது. இதனால் 48,776 பயனாளிகள் நன்மையடைவர்.



தோணிக்கல் லக்சபான வீதி,
வவுனியா தெற்கு பிரதேச செயலகப்பிரிவு



தேக்கவத்தை உள்வீதி,
வவுனியா பிரதேச செயலகப்பிரிவு

### கல்வி

வவுனியா மாவட்ட பாடசாலைக் கட்டிடங்கள் புனரமைப்புக்கென 5.79 ரூபா மில்லியன் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இதனூடாக 43 செயற்றிட்டங்கள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. இதனால் 12,050 மாணவர்கள் நன்மைபெறுவர்.

### சுகாதாரம்

வவுனியா மாவட்ட சுகாதார நிலையப் புனரமைப்புக்கு 0.49 ரூபா மில்லியன் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இதனால் 500 பேர் நன்மையடைவர்.

### சமூக நலன்புரி

இத்திட்டத்தின் கீழ் சனசமூக நிலையம் நிர்மாணித்தல், கலாச்சார மண்டபங்கள் மற்றும் சிறுவர் விளையாட்டு மைதானம் திருத்த வேலைகளுக்காக 46.51 ரூபா மில்லியன் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. 142 செயற்றிட்டங்கள் அனுமதிக்கப்பட்டு இவற்றுள் 3 செயற்றிட்டங்கள் நிறைவு செய்யப்பட்டுள்ளன. இதற்காக 0.62 ரூபா மில்லியன் நிதி செலவிடப்பட்டுள்ளது. இதனால் 46,016 பயனாளிகள் நன்மை பெறுவர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நீர்ப்பாசனம்

வவுனியா மாவட்ட நீர்ப்பாசனத் திட்ட புனரமைப்பு, நீர்த்தாங்கி திருத்த வேலைகளுக்காக 166.53 ரூபா மில்லியன் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. 17 செயற்றிட்டங்கள் இனங்காணப்பட்டு 14 செயற்றிட்டங்கள் நிறைவு செய்யப்பட்டுள்ளதுடன் இதற்காக 99.19 ரூபா மில்லியன் நிதி செலவிடப்பட்டுள்ளது. இதனால் 1,785 பயனாளிகள் நன்மை பெறுவர்.

## குடிநீர் வழங்கல் மற்றும் பொதுச் சுகாதாரம்

குடிநீர் வழங்கல் திட்டத்திற்காக 24 செயற்றிட்டங்கள் அமைச்சினால் அனுமதியளிக்கப்பட்டு முன்னெடுக்கப்பட்டுவருகின்றது. இதற்கு 12.80 மில்லியன் ரூபா நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. 30.09.2014 ஆம் திகதி வரை 0.51 மில்லியன் ரூபா செலவிடப்பட்டுள்ளது. இத்திட்டத்தினால் 9,116 பயனாளிகள் நன்மை பெறுவர்.

## வாழ்வாதார அபிவிருத்தி

வவுனியா மாவட்ட வாழ்வாதார அபிவிருத்திக்கென 70 செயற்றிட்டங்கள் இனங்காணப்பட்டு நடைமுறைப்படுத்தப்படுகின்றது. இதற்காக 40.70 ரூபா மில்லியன் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

## வர்த்தகம்

சந்தை கட்டிடங்கள் திருத்தம், புனரமைப்புக்காக 3 செயற்றிட்டங்கள் இனங்காணப்பட்டு 25.90 ரூபா மில்லியன் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. 1 செயற்றிட்டம் நிறைவு செய்யப்பட்டுள்ளது. இதற்காக 20.21 ரூபா மில்லியன் நிதி செலவிடப்பட்டுள்ளது.

## விவசாயம்

வவுனியா மாவட்ட விவசாய அபிவிருத்தி திட்டத்தின் கீழ் 10,823 தென்னம் விதைகளை பயனாளிகளுக்கு வழங்குதல் மற்றும் விவசாய மேம்பாட்டிற்காக 2.80 ரூபா மில்லியன் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. தென்னம் விதைகள் கையளிக்கப்பட்ட நிலையில் 2 செயற்றிட்டங்கள் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது. இதற்காக 1.33 ரூபா மில்லியன் நிதி செலவிடப்பட்டுள்ளது. இதனால் 9,775 பயனாளிகள் நன்மை பெறுவர்.

## மாவட்ட நிர்வாக வினைத்திறனை மேம்படுத்தல்

வவுனியா மாவட்ட பிரதேச செயலக ஆண்கள் விடுதிக்கட்டிடம் உள்ளடங்கலாக இம்மாவட்டத்தின் நிர்வாக வினைத்திறனை மேம்படுத்தும் நிர்மாண வேலைகள், அலுவலக கட்டிட புனரமைப்பு மற்றும் திருத்தவேலைகள் போன்றவற்றிற்காக 41.24 மில்லியன் ரூபா நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இவ்வாறான 4 செயற்றிட்டங்களில் 3 நிறைவு செய்யப்பட்டுள்ளன. இதற்கு 8.50 மில்லியன் ரூபா செலவிடப்பட்டுள்ளது. இதனால் வவுனியா மாவட்டத்தில் பணிபுரிகின்ற தூர இடங்களைச் சேர்ந்த ஊழியர்கள் அனைவரும் நன்மை பெறுவர்.




நிர்மாணிக்கப்பட்ட ஆண்கள் பிரதேச செயலக விடுதிகட்டடம்
வவுனியா வடக்கு பிரதேச செயலகப்பிரிவு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முல்லைத்தீவு மாவட்டம்




## மாவட்டம் தொடர்பான அடிப்படைத் தரவுகள்

| | | |
|---|---|---|
| பிரதேச செயலகப் பிரிவுகளின் எண்ணிக்கை | | 6 |
| கிராம சேவகர் பிரிவுகளின் எண்ணிக்கை | | 136 |
| நிலப்பரப்பு (சதுர கி.மீ) | | 2,617 |
| மொத்த சனத்தொகை (2014) | | 93,000 |
| குடும்பங்களின் எண்ணிக்கை (2012) | | 24,531 |
| சமுர்த்தி நன்மை பெறும் குடும்பங்களின் எண்ணிக்கை (2014) | | 11,037 |
| குடியடர்த்தி (2014) நபர்களின் எண்ணிக்கை (சதுர கி.மீ) | | 39 |
| சனத்தொகையை வகைப்படுத்தல் | | |
| பால் ரீதியாக (2014) | ஆண்கள் | 47,000 |
| | பெண்கள் | 46,000 |

மூலம்: தொகைமதிப்பு புள்ளிவிபரத் திணைக்களம், வாழ்வின் எழுச்சி அபிவிருத்தி திணைக்களம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அபிவிருத்தி திட்டங்களின் முன்னேற்ற மீளாய்வு - முல்லைத்தீவு மாவட்டம்



**மொத்த நிதி ஒதுக்கீடு**
**ரூபா 4,413.01 மில்.**

நிகழ்ச்சித் திட்டம் ரீதியான ஒதுக்கீட்டு பகிர்வு

| நிதி வழங்குனர் | நிகழ்ச்சித் திட்டம் | ஒதுக்கீடு ரூபா (மில்) |
|---|---|---|
| உள்நாட்டு நிதி | கிராம எழுச்சி நிகழ்ச்சித் திட்டம் (கமநெகும) | 1.18 |
| | மாகாண / நகர எழுச்சி நிகழ்ச்சித் திட்டம் (பலாத்நெகும / புறநெகும) | 100.00 |
| | பன்முகப்படுத்தப்பட்ட வரவு செலவுத் திட்டம் | 6.09 |
| | வாழ்வின் எழுச்சி நிகழ்ச்சித் திட்டம் (திவி நெகும) | 5.00 |
| வெளிநாட்டு நிதித் திட்டங்கள் | | 4,300.74 |
| **மொத்தம்** | | 4,413.01 |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அபிவிருத்திச் செயற்றிட்டங்களின் முன்னேற்றம்

## வீதிகள் மற்றும் பாலங்கள்

முல்லைத்தீவு மாவட்டத்திலுள்ள எல்லா பிரதேச செயலகப்பிரிவுகளையும் உள்ளடக்கியதாக வீதிகள் மற்றும் பாலங்களை புனரமைத்தல் மற்றும் செப்பனிடல் செயற்றிட்டங்களுக்காக 965.02 ரூபா மில்லியன் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இவற்றில் 41.36 கிலோமீற்றர் வீதிகளின் புனரமைப்பு மற்றும் செப்பனிடல் வேலைகள் நிறைவு செய்யப்பட்டுள்ளன. இதற்காக 926.54 ரூபா மில்லியன் செலவிடப்பட்டுள்ளது. இதனால் 16,994 பயனாளிகள் நன்மையடைவர்.



38 km நீளமான மாங்குளம், வெள்ளாங்குளம் வீதி ஒட்டிசுட்டான், துணுக்காய் பிரதேச செயலகப்பிரிவுகள்



புல்மோட்டை மூன்று முறிப்பு வீதி துணுக்காய் பிரதேச செயலகப்பிரிவு

## சமூக நலன்புரி


பொது கட்டிடங்கள் மற்றும் நூலகம் நிர்மாணித்தல், கலாச்சார மண்டபம் திருத்தவேலைகளுக்காக 15.24 ரூபா மில்லியன் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. 11 செயற்றிட்டங்கள் இனங்காணப்பட்டு முன்னெடுக்கப்பட்டுவருகின்றன. இதில் 4 செயற்றிட்டங்கள் நிறைவு செய்யப்பட்டுள்ளதுடன் இதற்காக 5.18 ரூபா மில்லியன் செலவிடப்பட்டுள்ளது. இதனால் 5,860 பயனாளிகள் நன்மை பெறுவர்.

## நீர்ப்பாசனம்

முல்லைத்தீவு மாவட்டத்தின் நீர்ப்பாசனத்திட்டத்தை மேம்படுத்த குடிதாங்கியான்குளம் புனர்நிர்மாணம் ஒட்டிசுட்டான் பிரதேச செயலகப் பிரிவு மற்றும் சிறிய நீர்நிலைகள் நிர்மாணிப்புக்காக 791.48 ரூபா மில்லியன் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. 31 செயற்றிட்டங்கள் பூர்த்தி செய்யப்பட்டுள்ளதுடன் இதற்காக 457.69 ரூபா மில்லியன் நிதி செலவிடப்பட்டுள்ளது. இதனால் 907 பயனாளிகள் நன்மை பெறுவர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புனர்நிர்மாணிக்கப்பட்ட குடிதாங்கியான் குளம்,
ஒட்டிசுட்டான் பிரதேச செயலகப் பிரிவு

## குடிநீர் வழங்கல் மற்றும் பொதுச் சுகாதாரம்

குடிநீர் வழங்கல் மற்றும் பொதுச் சுகாதார வசதிகளை ஏற்படுத்திக் கொடுக்கும் திட்டத்திற்காக முல்லைத்தீவு மாவட்டத்திற்கென 1.75 மில்லியன் ரூபா நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இதனூடாக 2 செயற்றிட்டங்கள் பூர்த்தி செய்யப்பட்டுள்ளன. இதற்காக 0.93 ரூபா மில்லியன் நிதி செலவிடப்பட்டுள்ளது. இதனால் 4,619 பயனாளிகள் நன்மை பெறுவர்.

## வர்த்தகம்

இம் மாவட்டத்தின் வர்த்தக மேம்பாட்டிற்காக பலநோக்கு கூட்டுறவுச் சங்க கிளை கட்டிடம், கடைத்தொகுதி மற்றும் சந்தைப்பகுதி நிர்மாணத்திற்காக 157.88 ரூபா மில்லியன் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இதனூடாக 6 செயற்றிட்டங்கள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. இதற்காக 64.74 ரூபா மில்லியன் நிதி செலவிடப்பட்டுள்ளது.


## மாவட்ட நிர்வாக வினைத்திறனை மேம்படுத்தல்

முல்லைத்தீவு மாவட்ட அலுவலகக் கட்டிடங்களை திருத்ததிற்காகவும், புனரமைப்புக்கென 144.84 ரூபா மில்லியன் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இச்செயற்றிட்டங்களுள் 5 பூர்த்தி செய்யப் பட்டுள்ளதுடன் இதற்காக 141.86 ரூபா மில்லியன் செலவிடப்பட்டுள்ளது. இதனூடாக மாவட்டத்தில் உள்ள பெரும்பாலான மக்கள் நன்மையடைவர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கிளிநொச்சி மாவட்டம்




## மாவட்டம் தொடர்பான அடிப்படைத் தரவுகள்

| | | |
|---|---|---|
| பிரதேச செயலகப் பிரிவுகளின் எண்ணிக்கை | | 4 |
| கிராம சேவகர் பிரிவுகளின் எண்ணிக்கை | | 95 |
| நிலப்பரப்பு (சதுர கி.மீ) | | 1,279 |
| மொத்த சனத்தொகை (2014) | | 118,000 |
| குடும்பங்களின் எண்ணிக்கை (2012) | | 28,304 |
| சமுர்த்தி நன்மை பெறும் குடும்பங்களின் எண்ணிக்கை (2014) | | 11,733 |
| குடியடர்த்தி (2014) நபர்களின் எண்ணிக்கை (சதுர கி.மீ) | | 98 |
| சனத்தொகையை வகைப்படுத்தல் | | |
| பால் ரீதியாக (2014) | ஆண்கள் | 58,000 |
| | பெண்கள் | 60,000 |

மூலம்: தொகைமதிப்பு புள்ளிவிபரத் திணைக்களம், வாழ்வின் எழுச்சி அபிவிருத்தி திணைக்களம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அபிவிருத்தி திட்டங்களின் முன்னேற்ற மீளாய்வு - கிளிநொச்சி மாவட்டம்



**மொத்த நிதி ஒதுக்கீடு**
**ரூபா 2,463.59 மில்.**

### நிகழ்ச்சித் திட்டம் ரீதியான ஒதுக்கீட்டு பகிர்வு

| நிதி வழங்குனர் | நிகழ்ச்சித் திட்டம் | ஒதுக்கீடு ரூபா (மில்) |
|---|---|---|
| உள்நாட்டு நிதி | கிராம எழுச்சி நிகழ்ச்சித் திட்டம் (கமநெகும) | 1.00 |
| | மாகாண/ நகர எழுச்சி நிகழ்ச்சித் திட்டம் (பலாத்நெகும / புறநெகும) | 200.00 |
| | பன்முகப்படுத்தப்பட்ட வரவு செலவுத் திட்டம் | 3.74 |
| | வாழ்வின் எழுச்சி நிகழ்ச்சித் திட்டம் (திவி நெகும) | 5.00 |
| வெளிநாட்டு நிதித் திட்டங்கள் | | 2,253.85 |
| மொத்தம் | | 2,463.59 |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அபிவிருத்திச் செயற்றிட்டங்களின் முன்னேற்றம்

### வீதிகள் மற்றும் பாலங்கள்

கிளிநொச்சி மாவட்டத்திலுள்ள சகல பிரதேச செயலகப்பிரிவுகளையும் உள்ளடக்கியதாக வீதிகள் மற்றும் பாலங்கள் புனரமைப்பு செயற்றிட்டத்தினூடாக 29.44 கிலோமீற்றர் வீதி, 3 சிறு வீதிகள் மற்றும் 6 சிறிய பாலங்கள் புனரமைப்புக்குமாக 533.41 ரூபா மில்லியன் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இவற்றில் 28.34 கிலோமீற்றர் வீதிகள், 3 சிறு வீதிகள் மற்றும் 6 சிறிய பாலங்கள் நிறைவு செய்யப்பட்டுள்ளன. இதற்காக 198.20 ரூபா மில்லியன் நிதி செலவிடப்பட்டுள்ளது. இத்திட்டத்தினால் 9,721 பயனாளிகள் நன்மையடைவர்.



நிர்மாணிக்கப்பட்ட முகாவில் வீதி,
பச்சிலைப்பள்ளி பிரதேச செயலகப்பிரிவு



நிர்மாணிக்கப்பட்ட இயக்கச்சி விநாயகபுரம் வீதி,
பச்சிலைப்பள்ளி பிரதேச செயலகப்பிரிவு

### சமூக நலன்புரி

பொதுக்கட்டிடங்கள், வைத்தியசாலைக் கட்டிடங்கள் புனரமைப்பதற்காக 20.87 ரூபா மில்லியன் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. 4 செயற்றிட்டங்கள் பூர்த்தி செய்யப்பட்டுள்ளதுடன் இதற்கு 12.71 ரூபா மில்லியன் நிதி செலவிடப்பட்டுள்ளது.




புனரமைக்கப்பட்ட பிரதேச வைத்தியசாலை,
பூநகரி பிரதேச செயலகப்பிரிவு

### நீர்ப்பாசனம்

நீர்ப்பாசனத்திட்டத்தின் ஊடாக பிரமந்தனாறு பிரதான நீர்ப்பாசனத்திட்டம் கண்டாவளை பிரதேச செயலகப்பிரிவு மற்றும் சிறிய நீர்ப்பாசனத் திட்டங்களுக்காக 41.11 ரூபா மில்லியன் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. 25 செயற்றிட்டங்கள் பூர்த்தி செய்யப்பட்டுள்ளதுடன் இதற்காக 35.41 ரூபா மில்லியன் நிதி செலவிடப்பட்டுள்ளது. இதனால் 2,486 பயனாளிகள் நன்மை பெறுவர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




புனரமைக்கப்பட்ட பிரமந்தனாறு பிரதான நீர்ப்பாசனத்திட்டம்,
கண்டாவளை பிரதேச செயலகப்பிரிவு

## குடிநீர் வழங்கல் மற்றும் பொதுச் சுகாதாரம்

குடிநீர் வழங்கல் மற்றும் பொதுச் சுகாதார திட்டத்திற்காக 3.35 ரூபா மில்லியன் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு இதனூடாக 11 செயற்றிட்டங்கள் பூர்த்தி செய்யப்பட்டுள்ளன. இதற்காக 1.53 ரூபா மில்லியன் நிதி செலவிடப்பட்டுள்ளது. இதனால் 2,828 பயனாளிகள் நன்மை பெறுவர்.

## வர்த்தகம்

பலநோக்கு கூட்டுறவுச் சங்க கட்டிடங்கள், சந்தை கடைத்தொகுதி, சந்தைப்பகுதி புனரமைப்புக்காக 42.87 ரூபா மில்லியன் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இதனூடாக 8 செயற்றிட்டங்கள் முன்னெடுக்கப்பட்டு 3 செயற்றிட்டங்கள் பூர்த்தி செய்யப்பட்டுள்ளன. இதற்காக 29.32 ரூபா மில்லியன் நிதி செலவிடப்பட்டுள்ளது.



கனகபுரம் பிரதேசத்தில் புனரமைக்கப்பட்ட பல
நோக்கு கூட்டுறவுச் சங்க கட்டடம்,
கரைச்சி பிரதேச செயலகப்பிரிவு

## சிறிய நடுத்தரக் கைத்தொழில்

ஆனையிறவிலுள்ள உப்பளக் கட்டடங்களின் புனரமைப்பு மற்றும் சீர்செய்வற்காக 100.0 ரூபா மில்லியன் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. 30.09.2014 ஆம் திகதி வரையில் இதற்காக 13.07 மில்லியன் ரூபா செலவிடப்பட்டுள்ளது. இதனூடாக 2,000 வேலைவாய்ப்புக்கள் எதிர்காலத்தில் உருவாக்கக் கூடியதாக உள்ளதுடன் மாகாண ரீதியாகவும் தேசிய ரீதியாகவும் உள்நாட்டு உற்பத்தியை உயர்வடைய செய்ய முடியும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org






ஆனையிறவு உப்பளங்கள் மற்றும் உப்பளத் தொகுதி புனரமைப்பு,
கரைச்சி பிரதேச செயலகப்பிரிவு

## மாவட்ட நிர்வாக வினைத்திறனை மேம்படுத்தல்

மாவட்ட நிர்வாக வினைத்திறனை மேம்படுத்துவதற்காக கிளிநொச்சி மாவட்ட நிர்வாக அலுவலகக் கட்டிடங்களை திருத்தவும் மற்றும் புனரமைக்கவும் என 80.0 ரூபா மில்லியன் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. 6 செயற்றிட்டங்கள் பூர்த்தி செய்யப்பட்டுள்ளதுடன் இதற்காக 75.27 ரூபா மில்லியன் நிதி செலவிடப்பட்டுள்ளது. இதனூடாக மாவட்டத்தில் உள்ள மக்கள் நன்மை பெறுவர் எனஎதிர்பார்ப்படுகிறது.





மாவட்ட நிர்வாக கட்டிடத்தொகுதி கிளிநொச்சி,
கரைச்சி பிரதேச செயலகப்பிரிவு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விசேட குறிப்பு - 04

# தேசிய விவசாய வர்த்தக அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டம்

## 2014 ஆம் ஆண்டு காலப்பகுதியில் கருத்திட்டம் அமுல்படுத்தப்பட்டுள்ளது

தேசிய விவசாய வர்த்தக அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டத்தின் மொத்த முதலீடானது ரூபா 1,027.01 மில்லியன் ஆகும். இக்கருத்திட்டம் பிரதானமாக கிளிநொச்சி, பதுளை, மற்றும் களுத்துறை மாவட்டங்களில் இவ்வருடத்தில் கடந்த ஒன்பது மாதங்களாக சிறிய விவசாய உற்பத்தியாளர்களின் பெறுமதிசேர் பொருட்களின் அபிவிருத்தி மற்றும் சந்தை வாய்ப்பை வழங்குதன் முலம் அவர்களது வாழ்கைத்தரத்தை உயர்த்துவதை நோக்காகக் கொண்டு நடைபெற்று வருகிறது.

சில முன்னணி நிறுவனங்கள் பெறுமதிசேர் பொருட்களின் அபிவிருத்திக் கருத்திட்டத்திலிருந்து எதிர்பார்த்த பெறுபேற்றை பெறுவதில் நேரடியாக தொடர்பு கொண்டுள்ளன. இக்கருத்திட்டத்திலிருந்து அதிகமானோர் நேரடியாகவும் மறைமுகமாகவும் நன்மை பெற்றுவருகின்றனர்.

அதி மேதகு ஜனாதிபதியின் அறிவுறுத்தலுக்கமைவாக இக்கருத்திட்டத்தின் கீழ் களுத்துறை மாவட்டத்தில் கைவிடப்பட்ட வயல் நிலங்களில் மீள்பயிர்ச்செய்கை நடைபெற்று வருகிறது. களுத்துறை மாவட்டத்தில் இம் முன்னோடிக் கருத்திட்டத்திற்கான வேலைகள் வாழ்வின் எழுச்சி தேசிய வேலைத்திட்டத்திற்கு இணையாக நடைபெற்றுக்கொண்டிருக்கின்றன.


மேலும் 2014 ஆம் ஆண்டு பெரும்போகத்தில் கமநல அபிவிருத்தி பிரிவில் 2,514 ஹெக்ரர் வயல் நிலம் மதுரவெல, ஹல்ஹந்தவில, பமுனுகம, பண்டாரகம, வலஹெதர, தொடாங்கொட, இத்தபன, பெலவெத, மிலனிய, மத்துகம ஆகிய பிரதேசங்களில் மீளப் பயிரிடுவதற்கு தெரிவுசெய்யப்பட்டுள்ளது.

அத்துடன் 486 கால்வாய்கள், 109 மதகுகள், 63 விவசாய வீதிகள் புனரமைக்க எதிர்பார்க்கப்பட்டுள்ளது. இத்தபன, மிலனிய ஆகிய கமநல சேவைகள் அபிவிருத்தி பிரிவில் நெல் பதனிடும் நிலையம் நிர்மானிப்பதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது. இச்செயற் திட்டத்தின் ஊடாக சமுகத்தில் பாரம்பரிய நெல்லினங்கள் பிரபலமடைவதுடன் ஏறத்தாழ 13,000 குடும்பங்கள் நன்மை பெறும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மட்டக்களப்பு மாவட்டம்




## மாவட்டம் தொடர்பான அடிப்படைத் தரவுகள்

| | | |
|---|---|---|
| பிரதேச செயலகப் பிரிவுகளின் எண்ணிக்கை | | 14 |
| கிராம சேவகர் பிரிவுகளின் எண்ணிக்கை | | 346 |
| நிலப்பரப்பு (சதுர கி.மீ) | | 2,854 |
| மொத்த சனத்தொகை (2014) | | 534,000 |
| குடும்பங்களின் எண்ணிக்கை (2012) | | 133,773 |
| சமுர்த்தி நன்மை பெறும் குடும்பங்களின் எண்ணிக்கை (2014) | | 79,542 |
| குடியடர்த்தி (2014) நபர்களின் எண்ணிக்கை (சதுர கி.மீ) | | 204 |
| சனத்தொகையை வகைப்படுத்தல் | | |
| பால் ரீதியாக (2014) | ஆண்கள் | 255,000 |
| | பெண்கள் | 279,000 |

மூலம்: தொகைமதிப்பு புள்ளிவிபரத் திணைக்களம், வாழ்வின் எழுச்சி அபிவிருத்தி திணைக்களம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அபிவிருத்தி திட்டங்களின் முன்னேற்ற மீளாய்வு - மட்டக்களப்பு மாவட்டம்



**மொத்த நிதி ஒதுக்கீடு**
**ரூபா 2,064.52 மில்.**

### நிகழ்ச்சித் திட்டம் ரீதியான ஒதுக்கீட்டு பகிர்வு

| நிதி வழங்குனர் | நிகழ்ச்சித் திட்டம் | ஒதுக்கீடு ரூபா (மில்) |
|---|---|---|
| உள்நாட்டு நிதி | ஒரு கிராமம் ஒரு நிகழ்ச்சித் திட்டம் | 346.00 |
| | பலாத்நெகும / புறநெகும | 250.00 |
| | கிராம பாடசாலைகளில் கழிவகற்றல் மற்றும் ஏனைய வசதிகளை மேம்படுத்தல் | 18.00 |
| | பன்முகப்படுத்தப்பட்ட வரவுசெலவுத்திட்டம் | 30.00 |
| | மக்கள் பிரதிநிதிகளின் பங்களிப்புடனான திட்ட அமுலாக்கல்கள் | 75.00 |
| | வாழ்வின் எழுச்சி நிகழ்ச்சித் திட்டம் (திவி நெகும) | 60.00 |
| | கிராம பாலங்கள் மற்றும் அணுகுபாதைகளின் அபிவிருத்தி | 90.00 |
| வெளிநாட்டு நிதி திட்டங்கள | | 1,195.52 |
| மொத்தம் | | 2,064.52 |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அபிவிருத்திச் செயற்றிட்டங்களின் முன்னேற்றம்

## மின்சாரம்

மட்டக்களப்பு மாவட்டத்தில் மின்சக்தி விரிவாக்கம் மற்றும் பராமரிப்பு ஆகியவற்றிற்காக 2.33 ரூபா மில்லியன் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதுடன் 8 மின்சக்தி திட்டங்கள் இனங்காணப்பட்டுள்ளது. இவற்றில் 3 கருத்திட்டப் பணிகள் முடிவடைந்துள்ளதுடன் 5 கருத்திட்டப் பணிகள் தற்போது நடைபெற்றுவருகிறது. 30.09.2014 திகதி வரையான மொத்த செலவு 0.26 ரூபா மில்லியன் ஆகும். மேலும் இத்திட்டங்களினூடாக 20,689 பயனாளிகள் பயன் பெறுவர்.

## வீதிகள் மற்றும் பாலங்கள்

பொருளாதார அபிவிருத்தி அமைச்சினால் 2014 ஆம் ஆண்டில் வீதிகள், பாலங்களின் அபிவிருத்தி வேலைத்திட்டத்திற்காக 796.08 ரூபா மில்லியன் ஒதுக்கப்பட்டுள்ளதுடன் 397 வீதிகள், 9 பாலங்கள் புனரமைப்புக்காக இனங்காணப்பட்டுள்ளன. இவற்றில் 98 வீதிகள், 9 பாலங்கள் புனரமைக்கப்பட்டுள்ளதுடன் 253 வீதிகளின் புனரமைப்பு வேலைகள் நடைபெறுகின்றன. 30.09.2014 வரை இப்பணிக்கான செலவீனம் 234.74 ரூபா மில்லியன் ஆகும்.



கொங்கிறீட் இடப்பட்ட இறால் ஓடை பிரதான வீதி
கோறளைபற்று வடக்கு பிரதேச செயலகப் பிரிவு



கொங்கிறீட் இடப்பட்ட மைதான வீதி
ஏறாவூர் பற்று வடக்கு பிரதேச செயலகப் பிரிவு



கனகபுர வீதியில் அமைக்கப்படும் பாலம்
கோறளைப் பற்று வடக்கு பிரதேச செயலகப் பிரிவு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கல்வி

ஆரம்ப மற்றும் இரண்டாம் தர பாடசாலைகளின் உட்கட்டமைப்பு வசதிகளை தரமுயர்த்தும் செயற்பாட்டில் அப்பாடசாலைகளின் கட்டடப் புனரமைப்பு, விளையாட்டு மைதான அபிவிருத்தி மற்றும் மலசல கூடங்களின் புனரமைப்பு ஆகியவற்றில் விசேட கவனம் செலுத்தப்பட்டுள்ளது. இம்மாவட்டத்தில் 192 செயற்றிட்டங்கள் இனங்காணப்பட்டுள்ளன. அதற்காக ஒதுக்கப்பட்டுள்ள தொகை 57.03 ரூபா மில்லியன் ஆகும். 30.09.2014 திகதி வரையில் 68 முடிவடைந்துள்ளதுடன் 121 செயற்திட்டப்பணிகள் நடைபெறுகின்றன. 3.21 ரூபா மில்லியன் நிதி செலவிடப்பட்டுள்ளது. இதன் ஊடாக 132,459 மாணவர்கள் மற்றும் ஆசிரியர்கள் நன்மை பெறுகின்றனர்.




புனரமைக்கப்பட்ட
அல் ஹிரா வித்தியாலய கட்டடம்
காத்தான்குடி பிரதேச செயலகப் பிரிவு



குடிநீர் கருத்திட்டம் ம/கக/கழுவான்கேணி
விவேகானந்தா வித்தியாலயம்
காத்தான்குடி பிரதேச செயலகப் பிரிவு

## சுகாதாரம்

பொருளாதார அபிவிருத்தி அமைச்சினால் மட்டக்களப்பு மாவட்டத்தில் சுகாதார வசதிகளை மேம்படுத்தும் நோக்கில் வைத்தியசாலை கட்டடங்களை புனரமைத்தல் மற்றும் வைத்திய உபகரணங்களை நன்கொடை வழங்கல் போன்ற நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன. இவ்வாண்டு 1.25 ரூபா மில்லியன் நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. மேலும் 1 கருத்திட்டத்தின் பணி முடிவடைந்துள்ளதுடன் 2 கருத்திட்டப் பணிகள் நடைபெறுகின்றன.

## சமூக நலன்புரி

மட்டக்களப்பு மாவட்டத்தின் சமூக நலன்புரிச் செயற்றிட்டங்களுக்கு பங்களிப்பு வழங்கும் வகையில் 2014 ஆம் ஆண்டு 250.65 ரூபா மில்லியன் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இவ் ஒதுக்கீட்டில் 30.09.2014 திகதி வரையில் 664 செயற்றிட்டங்கள் இனங்காணப்பட்டுள்ளன. தெரிவுசெய்யப்பட்ட கருத்திட்டங்களில் 262 முடிவடைந்துள்ளதுடன் 373 செயற்திட்டப்பணிகள் நடைபெறுகின்றன. இவற்றின் நிதி முன்னேற்றம் 49.75 ரூபா மில்லியன் ஆகும்.



நிர்மாணிக்கப்படும் பொது விளையாட்டு மைதானம்
கோறலைப் பற்று வடக்கு பிரதேச செயலகப்



நிர்மாணிக்கப்படும் பலநோக்கு மண்டபம்
ஏறாவூர் பற்று வடக்கு பிரதேச செயலகப் பிரிவு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




புனரமைக்கப்படும் ஸ்ரீ முருகன் கோவில்
ஏறாவூர் பற்று பிரதேச செயலகப் பிரிவு

## நீர்ப்பாசனம்

பொருளாதார அபிவிருத்தி அமைச்சு இம் மாவட்டத்தில் சிறிய நீர்ப்பாசனக் கால்வாய்கள், விவசாயக்கிணறுகள் மற்றும் விவசாய வீதிகளை புனரமைக்கும் நோக்கில் 58.08 ரூபா மில்லியன் ஒதுக்கப்பட்டுள்ளது. மேலும் 30.09.2014 அன்றுவரை 8 செயற்றிட்டங்கள் இனங்காணப்பட்டுள்ளதுடன் இவற்றில் 7 முடிவடைந்துள்ளது ஒரு செயற்திட்டப்பணி நடைபெறுகின்றது. இச் செயற்றிட்டங்களுக்காக 30.09.2014 திகதி வரை 26.70 ரூபா மில்லியன் நிதி செலவிடப்பட்டுள்ளது.

## குடிநீர் வழங்கல் மற்றும் பொது சுகாதாரம்

இம்மாவட்டத்தின் குடிநீர் வழங்கல் மற்றும் பொதுசுகாதார வசதிகளை மேம்படுத்தும் முகமாக கிணறுகள் அமைத்தல், நீர்த்தாங்கிகள் வழங்கல் போன்ற 38 கருத்திட்டங்கள் இனங்காணப்பட்டுள்ளதுடன் இதற்காக 32.38 ரூபா மில்லியன் நிதி ஒதுக்கப்பட்டுள்ளதுடன். இவற்றில் 30.09.2014 திகதி வரையில் 24 கருத்திட்டப் பணிகள் நிறைவடைந்துள்ளதுடன் 12 கருத்திட்டப்பணிகள் நடைபெறுகின்றன. 14.63 ரூபா மில்லியன் செலவிடப்பட்டுள்ளது.



புனரமைக்கப்படும் அழகபுரி பொதுக்கிணறு
கோறளைப் பற்று வடக்கு பிரதேச செயலகப் பிரிவு

## வர்த்தகம்

மட்டக்களப்பு மாவட்டத்தில் வியாபார நடவடிக்கைகளை அபிவிருத்தி செய்வதற்காக ஒதுக்கப்பட்டுள்ள தொகை 111.60 ரூபா மில்லியன் ஆகும். 878 செயற்றிட்டங்கள் இனங்காணப்பட்டுள்ளன. இவற்றில் 301 முடிவடைந்துள்ளதுடன் 576 செயற்திட்டப்பணிகள் நடைபெறுகின்றன. 30.09.2014 திகதி வரையில் 52.85 ரூபா மில்லியன் நிதி செலவிடப்பட்டுள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



நிர்மாணிக்கப்பட்ட ஆரையம்பதி சந்தை
மண்முனைப்பற்று பிரதேச செயலகப் பிரிவு



நிர்மாணிக்கப்பட்ட சந்தை
ஏறாவூர்பற்று பிரதேச செயலகப் பிரிவு

## ஜீவனோபாய அபிவிருத்தி

மட்டக்களப்பு மாவட்டத்தில் மக்களின் வாழ்வாதார அபிவிருத்தியை மேம்படுத்த விவசாயம், மீன்பிடி மற்றும் கால்நடை வளர்ப்பு போன்ற பல செயற்றிட்டங்கள் 2014 ஆம் ஆண்டில் அமுல்படுத்தப்படுகின்றன. இங்கு 2,917 செயற் திட்டங்கள் இனங்காணப்பட்டுள்ளன. இவற்றில் 185 செயற்திட்டப்பணிகள் முடிவடைந்துள்ளதுடன் 2,732 செயற்றிட்டங்களின் வேலை நடைபெற்றுக்கொண்டிருக்கும் அதேவேளை 30.09.2014 வரை இதற்காக 17.95 ரூபா மில்லியன் நிதி செலவிடப்பட்டுள்ளது.

## மாவட்ட நிர்வாகக் கட்டமைப்பை வலுப்படுத்தல்

பொருளாதார அபிவிருத்தி அமைச்சு இம் மாவட்டத்தில் செயற்திறனுள்ள அரச சேவையை பெற்றுக்கொள்ளும் நோக்கில் உட்கட்டமைப்பை வலுப்படுத்துவதற்காகவும் பயிற்சிநெறிகளை வழங்குவதற்காகவும் 130.88 ரூபா மில்லியன் ஒதுக்கப்பட்டுள்ளது. மேலும் 48 செயற்றிட்டங்கள் இனங்காணப்பட்டுள்ளதுடன் இவற்றில் 7 முடிவடைந்துள்ளது 22 செயற்திட்டப்பணிகள் நடைபெறுகின்றன. 30.09.2014 திகதி வரையில் மொத்த செலவு 64.17 ரூபா மில்லியன் ஆகும்.



நிர்மாணிக்கப்பட்ட பிரதேச சபை கட்டடம்
மண்முனை தென்மேற்கு பிரதேச செயலகப் பிரிவு



நிர்மாணிக்கப்பட்ட பிரதேச சபை கட்டடம்
மண்முனைப்பற்று பிரதேச செயலகப் பிரிவு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org






9-01-2014 அன்று கிழக்கு மாகாண முதலமைச்சர் அவர்களால் கனரக இயந்திரங்கள் கையளிக்கும் வைபவம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அம்பாறை மாவட்டம்




## மாவட்டம் தொடர்பான அடிப்படைத் தரவுகள்

| | | |
|---|---|---|
| பிரதேச செயலகப் பிரிவுகளின் எண்ணிக்கை | | 20 |
| கிராம சேவகர் பிரிவுகளின் எண்ணிக்கை | | 503 |
| நிலப்பரப்பு (சதுர கி.மீ) | | 4,415 |
| மொத்த சனத்தொகை (2014) | | 666,000 |
| குடும்பங்களின் எண்ணிக்கை (2012) | | 161,758 |
| சமுர்த்தி நன்மை பெறும் குடும்பங்களின் எண்ணிக்கை (2014) | | 75,010 |
| குடியடர்த்தி (2014) நபர்களின் எண்ணிக்கை (சதுர கி.மீ) | | 158 |
| சனத்தொகையை வகைப்படுத்தல் | | |
| பால் ரீதியாக (2014) | ஆண்கள் | 323,000 |
| | பெண்கள் | 343,000 |

மூலம்: தொகைமதிப்பு புள்ளிவிபரத் திணைக்களம், வாழ்வின் எழுச்சி அபிவிருத்தி திணைக்களம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அபிவிருத்தி திட்டங்களின் முன்னேற்ற மீளாய்வு - அம்பாறை மாவட்டம்



**மொத்த நிதி ஒதுக்கீடு ரூபா 2,344.34 மில்.**

### நிகழ்ச்சித் திட்டம் ரீதியான ஒதுக்கீட்டு பகிர்வு

| நிதி வழங்குனர் | நிகழ்ச்சித் திட்டம் | ஒதுக்கீடு ரூபா (மில்) |
|---|---|---|
| உள்நாட்டு நிதி | ஒரு கிராமம் ஒரு நிகழ்ச்சித் திட்டம் | 529.00 |
| | கிராம எழுச்சி நிகழ்ச்சித் திட்டம் (கமநெகும) | 80.00 |
| | பலாத்நெகும / புறநெகும | 270.00 |
| | கிராம பாடசாலைகளில் கழிவகற்றல் மற்றும் ஏனைய வசதிகளை மேம்படுத்தல் | 30.00 |
| | வனஜீவராசிகள் மற்றும் வன பாதுகாப்பு | 100.00 |
| | பன்முகப்படுத்தப்பட்ட வரவுசெலவுத்திட்டம் | 40.00 |
| | மக்கள் பிரதிநிதிகளின் பங்களிப்புடனான திட்ட அமுலாக்கல்கள் | 200.00 |
| | வாழ்வின் எழுச்சி நிகழ்ச்சித் திட்டம் (திவி நெகும) | 100.00 |
| | கிராம பாலங்கள் மற்றும் அணுகு பாதைகளின் அபிவிருத்தி | 150.00 |
| | சிறிய நீர்ப்பாசனக் குளங்களின் அபிவிருத்தி | 845.34 |
| வெளிநாட்டு நிதி திட்டங்கள | | 2,344.34 |
| மொத்தம் | | 2,212.50 |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அபிவிருத்திச் செயற்றிட்டங்களின் முன்னேற்றம்

## மின்சாரம்

மின்சக்தி விரிவாக்கம் மற்றும் பராமரிப்பு ஆகியவற்றிற்காக 12.54 ரூபா மில்லியன் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதுடன் 64 மின்சக்தி திட்டங்கள் இனங்காணப்பட்டுள்ளது. இவற்றில் 25 கருத்திட்டப் பணிகள் முடிவடைந்துள்ளதுடன் 38 கருத்திட்டப் பணிகள் தற்போது நடைபெற்றுவருகிறது. 30.09.2014 திகதி வரையான மொத்த செலவு 5.49 ரூபா மில்லியன் ஆகும்.

## வீதிகள் மற்றும் பாலங்கள்

பொருளாதார அபிவிருத்தி அமைச்சினால் வீதிகள், பாலங்களின் அபிவிருத்தி வேலைத்திட்டத்திற்காக 717.13 ரூபா மில்லியன் ஒதுக்கப்பட்டுள்ளதுடன் 543 வீதிகள் மற்றும் 14 பாலங்கள் புனரமைப்புக்காக இனங்காணப்பட்டுள்ளன. இவற்றில் 153 வீதிகள் மற்றும் 7 பாலங்கள் புனரமைக்கப்பட்டுள்ளதுடன் 398 வீதிகள், 7 பாலங்களின் புனரமைப்பு வேலைகள் நடைபெறுகின்றன. 30.09.2014 வரை இப்பணிக்கான செலவீனம் 289.84 ரூபா மில்லியன் ஆகும்.



கொங்கிறீட் இடப்பட்ட அரசுநகர் வீதி
ஆலையடிவேம்பு பிரதேச செயலகப் பிரிவு



புனரமைக்கப்படும் ஹந்தஹிந்த குளம் நோக்கிய வீதி
லகுஹல பிரதேச செயலகப் பிரிவு

## கல்வி

ஆரம்ப மற்றும் இரண்டாம் தர பாடசாலைகளின் உட்கட்டமைப்பு வசதிகளை தரமுயர்த்தும் செயற்பாட்டில் அப்பாடசாலைகளின் கட்டடப் புனரமைப்பு, விளையாட்டு மைதான அபிவிருத்தி மற்றும் மலசல கூடங்களின் புனரமைப்பு ஆகியவற்றில் விசேட கவனம் செலுத்தப்பட்டுள்ளது. இம்மாவட்டத்தில் 343 செயற்றிட்டங்கள் இனங்காணப்பட்டுள்ளன. இதற்கு ஒதுக்கப்பட்டுள்ள தொகை 170.86 ரூபா மில்லியன் ஆகும். 30.09.2014 திகதி வரையில் 29 முடிவடைந்துள்ளதுடன் 314 செயற்திட்டப்பணிகள் நடைபெறுகின்றன. இதற்காக 7.04 ரூபா மில்லியன் நிதி செலவிடப்பட்டுள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



றோ.க.உ பெண்கள் பாடசாலைக்கு
கணணி வழங்கல்
காரைதீவு பிரதேச செயலகப் பிரிவு



புனரமைக்கப்பட்ட அல் அக்ஸர் தேசிய
பாடசாலை மலசலகூடம்
நிந்தவூர் பிரதேச செயலகப் பிரிவு

## சுகாதாரம்

பொருளாதார அபிவிருத்தி அமைச்சினால் அம்பாறை மாவட்டத்தில் சுகாதார வசதிகளை மேம்படுத்தும் நோக்கில் வைத்தியசாலை கட்டிடங்களை புனரமைத்தல் மற்றும் வைத்திய உபகரணங்களை நன்கொடை வழங்கல் போன்ற நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன. இவ்வாண்டு 30.53 ரூபா மில்லியன் நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. மேலும் 1 கருத்திட்டத்தின் பணி முடிவடைந்துள்ளதுடன் 20 கருத்திட்டப் பணிகள் நடைபெறுகின்றன.



புனரமைக்கப்பட்ட சிறுவர் மற்றும்
மகப்பேற்று சிகிச்சை நிலையம்
நிந்தவூர் பிரதேச செயலகப் பிரிவு

## சமூக நலன்புரி

அம்பாறை மாவட்டத்தின் சமூக நலன்புரிச் செயற்றிட்டங்களுக்கு பங்களிப்பு வழங்கும் வகையில் 2014 ஆம் ஆண்டு 476.83 ரூபா மில்லியன் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இவ் ஒதுக்கீட்டில் 30.09.2014 திகதி வரையில் 1,201 செயற்றிட்டங்கள் இனங்காணப்பட்டுள்ளன. தெரிவு செய்யப்பட்ட கருத்திட்டங்களில் 367 முடிவடைந்துள்ளதுடன் 832 செயற்திட்டப்பணிகள் நடைபெறுகின்றன. இவற்றின் நிதி முன்னேற்றம் 95.90 ரூபா மில்லியன் ஆகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



புனரமைக்கப்பட்ட பொது
விளையாட்டு மைதானம்
லகுஹல பிரதேச செயலகப் பிரிவு



புனரமைக்கப்பட்ட
அரசடி அம்மன் கோவில்
கல்முனை பிரதேச செயலகப் பிரிவு

## நீர்ப்பாசனம்

பொருளாதார அபிவிருத்தி அமைச்சு இம் மாவட்டத்தில் சிறிய நீர்ப்பாசனக் கால்வாய்கள், விவசாயக்கிணறுகள் மற்றும் விவசாய வீதிகளை புனரமைக்கும் நோக்கில் 66.61 ரூபா மில்லியன் ஒதுக்கப்பட்டுள்ளது. மேலும் 30.09.2014 அன்றுவரை 59 செயற்றிட்டங்கள் இனங்காணப்பட்டுள்ளதுடன் இவற்றில் 11 முடிவடைந்துள்ளது 48 செயற்திட்டப்பணிகள் நடைபெறுகின்றன. இச் செயற்றிட்டங்களுக்காக 30.09.2014 திகதி வரை 12.99 ரூபா மில்லியன் நிதி செலவிடப்பட்டுள்ளது.



உல்லாவெல கமநல சேவை திணைக்களம்
முன்பான ஆழப்படுத்தப்பட்ட கால்வாய்
லகுஹல பிரதேச செயலகப் பிரிவு



ஆழப்படுத்தப்பட்ட எருவன் வடக்கில்
கண்டம் கால்வாய்
நிந்தாவூர் பிரதேச செயலகப் பிரிவு

## குடிநீர் வழங்கல் மற்றும் பொதுச் சுகாதாரம்

இம்மாவட்டத்தின் குடிநீர் வழங்கல் மற்றும் பொது சுகாதார வசதியை மேம்படுத்தும் முகமாக நீர்த்தாங்கிகள் வழங்கல் போன்ற 111 கருத்திட்டங்கள் இனங்காணப்பட்டுள்ளன. இவற்றில் 30.09.2014 திகதி வரையில் 23 கருத்திட்டப் பணிகள் நிறைவடைந்துள்ளதுடன் 88 கருத்திட்டப்பணிகள் நடைபெறுகின்றன. இதற்காக 47.39 ரூபா மில்லியன் நிதி ஒதுக்கப்பட்டுள்ளதுடன் 16.92 ரூபா மில்லியன் செலவிடப்பட்டுள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



நீர்த்தாங்கிகள் வழங்கல்
பதியத்தலாவை பிரதேச செயலகப் பிரிவு

## வர்த்தகம்

அம்பாறை மாவட்டத்தில் வர்த்தக நடவடிக்கைகளை அபிவிருத்தி செய்வதற்காக 31 செயற்றிட்டங்கள் இனங்காணப்பட்டுள்ளன. இவற்றில் 6 முடிவடைந்துள்ளதுடன் 25 செயற்திட்டப்பணிகள் நடைபெறுகின்றன. இவற்றிற்காக ஒதுக்கப்பட்டுள்ள தொகை 143.24 ரூபா மில்லியன் ஆகும். 30.09.2014 திகதி வரையில் 80.36 ரூபா மில்லியன் நிதி செலவிடப்பட்டுள்ளது.



நிர்மாணிக்கப்பட்ட சேரன்கட சந்தைத்தொகுதி
பதியத்தலாவை பிரதேச செயலகப் பிரிவு



நிர்மாணிக்கப்பட்ட
திருக்கோவில் சந்தைத்தொகுதி
திருக்கோவில பிரதேச செயலகப் பிரிவு

## ஜீவனோபாய அபிவிருத்தி

அம்பாறை மாவட்டத்தில் மக்களின் வாழ்வாதார அபிவிருத்தியை மேம்படுத்த விவசாயம், மீன்பிடி மற்றும் கால்நடை வளர்ப்பு போன்ற பல செயற்றிட்டங்கள் 2014 ஆம் ஆண்டில் அமுல்படுத்தப்படுகின்றன. இதற்காக 91.70 ரூபா மில்லியன் ஒதுக்கீட்டின் கீழ் 190 செயற்றிட்டங்கள் இனங்காணப்பட்டுள்ளன. இவற்றில் 15 செயற்திட்டப்பணிகள் முடிவடைந்துள்ளதுடன் 175 செயற்றிட்டங்களின் வேலை நடைபெற்றுக்கொண்டிருக்கும் அதேவேளை 30.09.2014 வரை இதற்காக 6.86 ரூபா மில்லியன் நிதி செலவிடப்பட்டுள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



மீனவர் சமூகத்திற்கு
மீன்பிடி உபகரணங்கள் வழங்கல்
இரக்காமம் பிரதேச செயலகப் பிரிவு

## வனஜீவராசிகள் மற்றும் வன பாதுகாப்பு

பொருளாதார அபிவிருத்தி அமைச்சினூடாக வன ஜீவராசிகளின் நிலைபேறான தன்மை மற்றும் காட்டைப் பாதுகாக்கும் முகமாக 100 ரூபா மில்லியன் ஒதுக்கீடு செய்துள்ளது. இங்கு இனங்காணப்பட்ட 2 கருத்திட்ட பணிகள் செயற்படுத்தப்படுகின்றன. இதற்காக 29.52 ரூபா மில்லியன் நிதி செலவிடப்பட்டது.

## மாவட்ட நிர்வாகக் கட்டமைப்பை வலுப்படுத்தல்

பொருளாதார அபிவிருத்தி அமைச்சு இம் மாவட்டத்தில் செயற்திறனுள்ள அரச சேவையை பெற்றுக்கொள்ளும் நோக்கில் உட்கட்டமைப்பை வலுப்படுத்துவதற்காகவும், பயிற்சிநெறிகளை வழங்குவதற்காகவும் 273.08 ரூபா மில்லியன ஒதுக்கப்பட்டுள்ளது. மேலும் 10 செயற்றிட்டங்கள் இனங்காணப்பட்டுள்ளதுடன் இவற்றில் 6 முடிவடைந்துள்ளது 4 செயற்திட்டப்பணிகள் நடைபெறுகின்றன. 30.09.2014 திகதி வரையில் மொத்த செலவு 147.19 ரூபா மில்லியன் ஆகும்.



நிர்மாணிக்கப்பட்ட பிரதேச சபை கட்டடம்
பதியத்தலாவை பிரதேச செயலகப் பிரிவு




நிர்மாணிக்கப்பட்ட பிரதேச சபை கட்டடம்
லகுஹல பிரதேச செயலகப் பிரிவு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருகோணமலை மாவட்டம்




## மாவட்டம் தொடர்பான அடிப்படைத் தரவுகள்

| | | |
|---|---|---|
| பிரதேச செயலகப் பிரிவுகளின் எண்ணிக்கை | | 11 |
| கிராம சேவகர் பிரிவுகளின் எண்ணிக்கை | | 230 |
| நிலப்பரப்பு (சதுர கி.மீ) | | 2,727 |
| மொத்த சனத்தொகை (2014) | | 389,000 |
| குடும்பங்களின் எண்ணிக்கை (2012) | | 95,610 |
| சமுர்த்தி நன்மை பெறும் குடும்பங்களின் எண்ணிக்கை (2014) | | 39,401 |
| குடியடர்த்தி (2014) நபர்களின் எண்ணிக்கை (சதுர கி.மீ) | | 154 |
| சனத்தொகையை வகைப்படுத்தல் | | |
| பால் ரீதியாக (2014) | ஆண்கள் | 193,000 |
| | பெண்கள் | 196,000 |

மூலம்: தொகைமதிப்பு புள்ளிவிபரத் திணைக்களம், வாழ்வின் எழுச்சி அபிவிருத்தி திணைக்களம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அபிவிருத்தி திட்டங்களின் முன்னேற்ற மீளாய்வு - திருகோணமலை மாவட்டம்



**மொத்த நிதி ஒதுக்கீடு**
**ரூபா 2,742.57 மில்.**

### நிகழ்ச்சித் திட்டம் ரீதியான ஒதுக்கீட்டு பகிர்வு

| நிதி வழங்குனர் | நிகழ்ச்சித் திட்டம் | ஒதுக்கீடு ரூபா (மில்) |
|---|---|---|
| உள்நாட்டு நிதி | ஒரு கிராமம் ஒரு நிகழ்ச்சித் திட்டம் | 230.00 |
| | கிராம எழுச்சி நிகழ்ச்சித் திட்டம் (கமநெகும) | 109.07 |
| | சிறிய நீர்ப்பாசனக் குளங்களைப் புனரமைத்தல் | 353.99 |
| | கிராம பாடசாலைகளில் கழிவகற்றல் மற்றும் ஏனைய வசதிகளை மேம்படுத்தல் | 18.00 |
| | வனஜீவராசிகள் மற்றும் வன பாதுகாப்பு | 75.00 |
| | பன்முகப்படுத்தப்பட்ட வரவுசெலவுத்திட்டம் | 25.00 |
| | மக்கள் பிரதிநிதிகளின் பங்களிப்புடனான திட்ட அமுலாக்கல்கள் | 100.00 |
| | சூழல் பூங்கா அபிவிருத்தி | 25.00 |
| | வாழ்வின் எழுச்சி நிகழ்ச்சித் திட்டம் (திவி நெகும) | 71.95 |
| | கிராம பாலங்கள் மற்றும் அணுகுபாதைகளின் அபிவிருத்தி | 90.00 |
| வெளிநாட்டு நிதித் திட்டங்கள் | | 1,644.56 |
| மொத்தம் | | 2,742.57 |


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அபிவிருத்தி செயற்றிட்டங்களின் முன்னேற்றம்

## மின்சாரம்

மின்சக்தி விரிவாக்கம் மற்றும் பராமரிப்பு ஆகியவற்றிற்காக 13.52 ரூபா மில்லியன் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதுடன் 14 மின்சக்தி திட்டங்கள் இனங்காணப்பட்டுள்ளது. இவற்றில் 4 கருத்திட்டப் பணிகள் முடிவடைந்துள்ளதுடன் 10 கருத்திட்டப் பணிகள் தற்போது நடைபெற்றுவருகிறது. 30.09.2014 திகதி வரையான மொத்த செலவு 3.04 ரூபா மில்லியன் ஆகும்.

## வீதிகள் மற்றும் பாலங்கள்

பொருளாதார அபிவிருத்தி அமைச்சினால் வீதிகள், பாலங்களின் அபிவிருத்தி வேலைத்திட்டத்திற்காக 620.00 ரூபா மில்லியன் ஒதுக்கப்பட்டுள்ளதுடன் 244 வீதிகள், 312 சிறிய பாலங்கள் புனரமைப்புக்காக இனங்காணப்பட்டுள்ளன. இவற்றில் 86 வீதிகள், 133 பாலங்கள் புனரமைக்கப்பட்டுள்ளதுடன் 158 வீதிகள், 179 பாலங்களின் புனரமைப்பு வேலைகள் நடைபெறுகின்றன. 30.09.2014 வரை இப்பணிக்கான செலவீனம் 246.20 ரூபா மில்லியன் ஆகும்.




புனரமைக்கப்பட்ட
சின்ன ஜின்னாபுரம் வீதி புல்மோட்டை
குச்சவெளி பிரதேச செயலகப் பிரிவு



புனரமைக்கப்படும் கந்தளாய் குளம் வீதி
நகரமும் சூழலும் பிரதேச செயலகப் பிரிவு

## கல்வி

ஆரம்ப மற்றும் இரண்டாம் தர பாடசாலைகளின் உட்கட்டமைப்பு வசதிகளை தரமுயர்த்தும் செயற்பாட்டில் அப்பாடசாலைகளின் கட்டடப் புனரமைப்பு, விளையாட்டு மைதான அபிவிருத்தி மற்றும் மலசல கூடங்களின் புனரமைப்பு ஆகியவற்றில் விசேட கவனம் செலுத்தப்பட்டுள்ளது. இம்மாவட்டத்தில் 223 செயற்றிட்டங்கள் இனங்காணப்பட்டுள்ளன. அதற்காக ஒதுக்கப்பட்டுள்ள தொகை 37.70 ரூபா மில்லியன் ஆகும். 30.09.2014 திகதி வரையில் 97 முடிவடைந்துள்ளதுடன் 126 செயற்திட்டப்பணிகள் நடைபெறுகின்றன. 12.52 ரூபா மில்லியன் நிதி செலவிடப்பட்டுள்ளது.



புனரமைக்கப்பட்ட சாம்பல்த்தீவு பாடசாலை
நகரமும் சூழலும் பிரதேச செயலகப் பிரிவு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### சுகாதாரம்

பொருளாதார அபிவிருத்தி அமைச்சினால் திருகோணமலை மாவட்டத்தில் சுகாதார வசதிகளை மேம்படுத்தும் முகமாக இவ்வாண்டு 9.94 ரூபா மில்லியன் நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. மேலும் 1 கருத்திட்டத்தின் பணி முடிவடைந்துள்ளதுடன் 9 திட்டப் பணிகள் நடைபெறுகின்றன. 30.09.2014 ஆம் திகதி வரை 1.56 ரூபா மில்லியன் நிதி செலவிடப்பட்டுள்ளது.

### சமூக நலன்புரி

திருகோணமலை மாவட்டத்தின் சமூக நலன்புரிச் செயற்றிட்டங்களுக்கு பங்களிப்பு வழங்கும் வகையில் 2014 ஆம் ஆண்டு 470.53 ரூபா மில்லியன் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இவ் ஒதுக்கீட்டில் 30.09.2014 திகதி வரையில் 435 செயற்றிட்டங்கள் இனங்காணப்பட்டுள்ளன. தெரிவுசெய்யப்பட்ட கருத்திட்டங்களில் 155 முடிவடைந்துள்ளதுடன் 271 செயற்திட்டப்பணிகள் நடைபெறுகின்றன. இவற்றின் நிதி முன்னேற்றம் 120.02 ரூபா மில்லியன் ஆகும்.




பொழுதுபோக்கு பூங்கா திறப்பு விழா 09.08.2014



புனரமைக்கப்பட்டு நிலம் சமப்படுத்தப்பட்ட
இக்பால் திறந்த அரங்கு
குச்சவெளி பிரதேச செயலகப் பிரிவு



புனைற்றற் மரணச்சடங்கு குழுவிற்கு
ஒலிபெருக்கி வழங்கல்
தம்பலகாமம் பிரதேச செயலகப் பிரிவு

### நீர்ப்பாசனம்

பொருளாதார அபிவிருத்தி அமைச்சு இம் மாவட்டத்தில் சிறிய நீர்ப்பாசனக் கால்வாய்கள், விவசாயக்கிணறுகள் மற்றும் விவசாய வீதிகளை புனரமைக்கும் நோக்கில் 379.83 ரூபா மில்லியன ஒதுக்கப்பட்டுள்ளது. மேலும் 30.09.2014 அன்றுவரை 83 செயற்றிட்டங்கள் இனங்காணப்பட்டுள்ளதுடன் இவற்றில் 33 செயற்றிட்டங்கள் முடிவடைந்துள்ளது 50 செயற்திட்டப்பணிகள் நடைபெறுகின்றன. இச் செயற்றிட்டங்களுக்காக 30.09.2014 திகதி வரை 49.50 ரூபா மில்லியன் நிதி செலவிடப்பட்டுள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



நிர்மாணிக்கப்படும் எதிபெந்திவேவ சிறிய குளம்
மொறவேவ பிரதேச செயலகப் பிரிவு

## குடிநீர் வழங்கல் மற்றும் பொதுச்சுகாதாரம்

இம்மாவட்டத்தின் குடிநீர் வழங்கல் மற்றும் பொதுச்சுகாதார வசதியை மேம்படுத்தும் முகமாக நீர்த்தாங்கிகள் வழங்கல் போன்ற 63 கருத்திட்டங்கள் இனங்காணப்பட்டுள்ளன. இவற்றில் 30.09.2014 திகதி வரையில் 12 கருத்திட்டப் பணிகள் நிறைவடைந்துள்ளதுடன் 51 கருத்திட்டப்பணிகள் நடைபெறுகின்றன. இதற்காக 607.66 ரூபா மில்லியன் நிதி ஒதுக்கப்பட்டுள்ளதுடன் 282.89 ரூபா மில்லியன் செலவிடப்பட்டுள்ளது.

## வர்த்தகம்

திருகோணமலை மாவட்டத்தில் வர்த்தக நடவடிக்கைகளை அபிவிருத்தி செய்வதற்காக 8 செயற்றிட்டங்கள் இனங்காணப்பட்டுள்ளன. இவற்றில் 7 முடிவடைந்துள்ளதுடன் ஒரு செயற்திட்டத்தின் பணிகள் நடைபெறுகின்றன. இவற்றிற்காக ஒதுக்கப்பட்டுள்ள தொகை 113.20 ரூபா மில்லியன் ஆகும். 30.09.2014 திகதி வரையில் 54.86 ரூபா மில்லியன் நிதி செலவிடப்பட்டுள்ளது.

## ஜீவனோபாய அபிவிருத்தி

திருகோணமலை மாவட்டத்தில் மக்களின் வாழ்வாதார அபிவிருத்தியை மேம்படுத்த விவசாயம், மீன்பிடி மற்றும் கால்நடை வளர்ப்பு போன்ற பல செயற்றிட்டங்கள் 2014 ஆம் ஆண்டில் அமுல்படுத்தப்படுகின்றன.. இங்கு 224 செயற் திட்டங்கள் இனங்காணப்பட்டுள்ளன. இவற்றில் 211 செயற்திட்டப்பணிகள் முடிவடைந்துள்ளதுடன் 13 செயற்றிட்டங்களின் வேலை நடைபெற்றுக்கொண்டிருகின்றது. 30.09.2014 வரை இதற்காக 4.27 ரூபா மில்லியன் நிதி செலவிடப்பட்டுள்ளது.

## நிர்வாக செயற்பாட்டை வலுப்படுத்தல்

பொருளாதார அபிவிருத்தி அமைச்சின்கீழ் மாவட்டத்தின் செயற்திறனுள்ள அரச சேவையை பெற்றுக்கொள்ளும் நோக்கில் உட்கட்டமைப்பை வலுப்படுத்துவதற்காகவும் பயிற்சி நெறிகளை வழங்குவதற்காகவும் 139.23 ரூபா மில்லியன ஒதுக்கப்பட்டுள்ளது. மேலும் 7 செயற்றிட்டங்கள் இனங்காணப்பட்டுள்ளதுடன் இவற்றில் 6 முடிவடைந்துள்ளது 1 செயற்திட்டத்தின் பணி நடைபெறுகின்றது. 30.09.2014 திகதி வரையில் மொத்த செலவு 82.57 ரூபா மில்லியன் ஆகும்.



நிர்மாணிக்கப்பட்ட பிரதேச சபை கட்டடம்
கோமரன்கடவல பிரதேச செயலகப் பிரிவு



நிர்மாணிக்கப்பட்ட பிரதேச சபை கட்டடம்
குச்சவெளி பிரதேச செயலகப் பிரிவு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விசேட குறிப்பு - 05

# தேசத்தின் பாரம்பரிய விவசாய முறைமை அறுவடை விழா

பாரம்பரிய நீர்ப்பாசன முறைமைக்கு உரிமை கோரும் இலங்கை பிரஜைகளின் எளிமையான வாழ்க்கை முறையை மேம்படுத்த கமத்தொழிலை பிரதானமாக கொண்டு விவசாயத்துறை உயிர் வாழ்கின்றது. வானத்திலிருந்து வரும் ஒவ்வொரு துளியிலிருந்தும் உச்ச பயன்பாட்டை பெற்றுக் கொள்வதற்காக செயற்படுத்தப்பட்ட இலங்கையின் சிறந்த நீர்ப்பாசன கலாச்சாரத்தின் சக்தியினூடாக நேர காலத்திற்கு பெற்றுக்கொள்ளக் கூடியதாக இருக்கும் நீர் வளத்தை பயன்படுத்தி பெரும் போகத்தில் செய்யப்படும் நெற்பயிர்ச் செய்கையின் அதியுயர் அறுவடைப்பலனை ஜய ஸ்ரீ மஹாபோதிக்கு முன்பாக வைத்து வழிபாடு செய்தல் ஆதிகாலந்தொட்டு நடைபெற்று வரும் ஒரு உன்னதமான விழாவாகும். இறை அருளை பெற்றுக்கொள்ளக் கூடிய இந்த கௌரவமான பாரம்பரிய நிகழ்வு தற்பொழுது தேசத்தின் பாரம்பரிய விவசாய முறைமை அறுவடை விழா (அலுத் சஹல் மங்கல்ய) என குறிப்பிடப்படுகிறது.

இம்முறை 2014 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 3ஆம் திகதி 47ஆவது முறையாக நடாத்தப்பட்ட அறுவடைவிழா "அலுத் சஹல் மங்கல்ய" பூரண அரச அனுசரணையுடன் அதிமேதகு ஜனாதிபதியின் தலைமையில் பௌத்த மக்களின் உன்னத அறுவடைகளை அநுராதபுர ஜய ஸ்ரீ மஹாபோதியின் முன்பாக வைத்து கோலாகலமான முறையில் நடாத்தப்பட்டது.




வருடாந்தம் நடாத்தப்படும் இவ் வழிபாட்டு நிகழ்வில் பொருளாதார அபிவிருத்தி அமைச்சின் கீழ் செயற்படும் கமநல அபிவிருத்தி திணைக்களத்தால் சதுரங்க நுழைவாயிலில் பால் பொங்கப்பட்டு புதிய அரிசி ஊர்வலம் ஸ்ரீ மஹா போதியின் முன்பாக கொண்டு வரப்பட்டு அரிசி பூஜை செய்யப்படும் வரையான செயற்பாடுகளை முன்னெடுத்தது. பாரம்பரியமாக நிகழ்த்தப்படும் தேன் பூஜை மற்றும் நெய் பூஜை இம்முறை ஆதிவாசிகளின் தலைவர் வன்னிய எத்தோ என்பவரின் தலைமையில் ஆதிவாசி மக்களினால் நடாத்தப்பட்டது. நாட்டின் அனைத்து கமநல சேவை நிலையங்களினால் சேகரித்துக் கொடுக்கப்பட்ட அரிசிகளும் பூஜைக்கு சேர்த்துக் கொள்ளப்பட்ட அதேவேளை நாடு பூராகவும் இருக்கும் பல்வேறு கமநல சங்கங்களினால் செய்யப்பட்ட அரிசி மற்றும் நிதி உதவி ஒரு உன்னதமான செயற்பாடாகும். அனைத்து இலங்கை பிரஜைகளினதும் தெய்வீக வழிபாடாகிய புதிய அரிசி அறுவடை விழாவிற்கு வட மத்திய மாகாண சபை அடங்கலாக அனைத்து அரச மற்றும் தனியார் நிறுவனங்களிலிருந்தும் பெரும் பங்களிப்பு கிடைக்கப்பெற்றது. இத் தேசத்தின் பாரம்பரிய விவசாய முறைமை அறுவடை விழாவிற்காக இம்முறை நினைவுச்சின்னம் வெளியிடப்பட்டது.

இலங்கையின் தேசிய பொருளாதாரத்தின் அடிப்படையான விவசாயத் துறையின் பாரிய விழா இவ் அறுவடை விழாவாகும் மகிந்த சிந்தனையை மெய்யாக்குவதற்கு வளம்மிக்க கிராமத்தை புனர் நிர்மாணம் செய்தல் தேசிய கடமையின் பிரதான தொடர்பாகும். மேம்படுத்தபட்ட விவசாயத் துறையின் செழிப்பை எடுத்துக்காட்டும் அறுவடை விழாவின் எதிர்காலத்தை மென்மேலும் புத்துயிர் பெற்றுத்தரும் செயற்பாடாக்குதல் பொருளாதார அபிவிருத்தி அமைச்சிற்குரிய அபிவிருத்தி செயற்பாடுகளின் கௌரவமான ஆராதனையாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குருநாகல் மாவட்டம்




## மாவட்டம் தொடர்பான அடிப்படைத் தரவுகள்

| | | |
|---|---|---|
| பிரதேச செயலகப் பிரிவுகளின் எண்ணிக்கை | | 30 |
| கிராம சேவகர் பிரிவுகளின் எண்ணிக்கை | | 1,610 |
| நிலப்பரப்பு (சதுர கி.மீ) | | 4,816 |
| மொத்த சனத்தொகை (2014) | | 1,636,000 |
| குடும்பங்களின் எண்ணிக்கை (2012) | | 438,889 |
| சமுர்த்தி நன்மை பெறும் குடும்பங்களின் எண்ணிக்கை (2014) | | 149,977 |
| குடியடர்த்தி (2014) நபர்களின் எண்ணிக்கை (சதுர கி.மீ) | | 354 |
| சனத்தொகையை வகைப்படுத்தல் | | |
| பால் ரீதியாக (2014) | ஆண்கள் | 787,000 |
| | பெண்கள் | 849,000 |

மூலம்: தொகைமதிப்பு புள்ளிவிபரத் திணைக்களம், வாழ்வின் எழுச்சி அபிவிருத்தி திணைக்களம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அபிவிருத்தி திட்டங்களின் முன்னேற்ற மீளாய்வு - குருநாகல் மாவட்டம்



**மொத்த நிதி ஒதுக்கீடு**
**ரூபா 5,703.1 மில்.**

### நிகழ்ச்சித் திட்டம் ரீதியான ஒதுக்கீட்டு பகிர்வு

| நிதி வழங்குனர் | நிகழ்ச்சித் திட்டம் | ஒதுக்கீடு ரூபா (மில்) |
|---|---|---|
| உள்நாட்டு நிதி | ஒரு கிராமம் ஒரு நிகழ்ச்சித் திட்டம் | 1,610.00 |
| | கிராம எழுச்சி நிகழ்ச்சித் திட்டம் (கமநெகும) | 606.60 |
| | பலாத்நெகும / புறநெகும | 2,040.00 |
| | கிராம பாடசாலைகளில் கழிவகற்றல் மற்றும் ஏனைய வசதிகளை மேம்படுத்தல் | 84.00 |
| | வனஜீவராசிகள் மற்றும் வன பாதுகாப்பு | 85.00 |
| | பன்முகப்படுத்தப்பட்ட வரவுசெலவுத்திட்டம் | 75.00 |
| | மக்கள் பிரதிநிதிகளின் பங்களிப்புடனான திட்ட அமுலாக்கல்கள் | 275.00 |
| | வாழ்வின் எழுச்சி நிகழ்ச்சித் திட்டம் (திவி நெகும) | 280.00 |
| | கிராம பாலங்கள் மற்றும் அணுகு பாதைகளின் அபிவிருத்தி | 280.00 |
| | சிறு நீர்ப்பாசன அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டம் | 328.00 |
| வெளிநாட்டு நிதித் திட்டங்கள் | | 39.50 |
| மொத்தம் | | 5703.10 |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அபிவிருத்தி செயற்றிட்டங்களின் முன்னேற்றம்

## மின்சாரம்

2014 ஆம் ஆண்டில் குருநாகல் மாவட்டத்தில் 171 மின்சார செயற்றிட்டங்களை அமுல்படுத்துவதற்காக இம் மாவட்டத்திற்கு 63.7 ரூபா மில்லியன் நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. 64 செயற்றிட்டங்கள் நிறைவு செய்யப்பட்டுள்ள அத்துடன் ஏனைய வேலைத்திட்டங்கள் நடைபெற்றுக்கொண்டிருக்கின்றது.

## வீதிகள் மற்றும் பாலங்கள்

வீதி அபிவிருத்திக்கென 4,046 வேலைத்திட்டங்களை அமுல்படுத்துவதற்கு அனுமதி பெறப்பட்டுள்ள அதேவேளை வீதி வசதிகள் அபிவிருத்தியினூடாக கிராம மக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்த முடியும் என எதிர்பார்க்கப்படுகிறது. 1,294 செயற்றிட்டங்களின் நிர்மாணப்பணிகள் 30.09.2014 திகதி வரையில் பூர்த்தி செய்யப்பட்டுள்ளன. இதற்காக 2,189.53 ரூபா மில்லியன் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதுடன் 337.92 ரூபா மில்லியன் நிதி செலவிடப்பட்டுள்ளது.



கொங்கிறீட் கல் பதித்து சீரமைக்கப்பட்ட கெடபத் வெஹெர கபுகொடுவவிலிருந்து மடலஸ்ஸ வெல்யாய வரையான வீதி பமுணாகொடுவ பிரதேச செயலகப் பிரிவு




கொங்கிறீட் செய்யப்பட்ட சந்தகல வாவியின் மதில் மேலாக செல்லும் வீதி வீரமுகெதர பிரதேச செயலகப் பிரிவு

## கல்வி

2014 ஆம் ஆண்டில் இம்மாவட்டத்திலுள்ள பாடசாலைகளின் உட்கட்டமைப்பு வசதிகளை அபிவிருத்தி செய்வதற்காக 713 செயற்றிட்டங்கள் இனங்காணப்பட்டுள்ளதுடன் அதற்காக 170.31 ரூபா மில்லியன் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. 30.09.2014 திகதி வரையில் 171 செயற்றிட்டங்களின் வேலைகள் பூர்த்தி செய்யப்பட்டுள்ளன. இதற்காக 19.85 ரூபா மில்லியன் நிதி செலவிடப்பட்டுள்ளது. இதனூடாக அண்ணளவாக 216,886 மாணவர்கள் நன்மை பெறுவார்கள் என எதிர்பார்க்கப்படுகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



நிர்மாணிக்கப்பட்டுள்ள மலசலகூடம்
கரவுள்ள கனிஷ்ட வித்தியாலயம்
உடுபத்தாவ பிரதேச செயலகப் பிரிவு



நிர்மாண பணிகள் நடைபெற்றுக்
கொண்டிருக்கும் ஹிபவ்வ தெடுதில்
கனிஷ்ட வித்தியாலயத்தின்
மலசலகூட முறைமை
இப்பாகமுவ பிரதேச செயலகப் பிரிவு

## சுகாதாரம்

மாவட்டத்திற்குள் சுகாதார வசதிகளை மேம்படுத்துவதற்காக 39 செயற்றிட்டங்களுக்கு அனுமதி பெறப்பட்டுள்ளதுடன் இதற்காக 24.39 ரூபா மில்லியன் நிதி செலவிடப்பட்டுள்ளது. 30.09.2014 திகதி வரையில் 7 செயற்றிட்டங்களின் வேலைகள் பூர்த்தி செய்யப்பட்டுள்ளன. இதற்காக 1.33 ரூபா மில்லியன் நிதி செலவிடப்பட்டுள்ளது. தாய்மார்களுக்கான சிகிச்சை நிலையங்களை நிர்மாணித்தல் மற்றும் புனர்நிர்மாணம் செய்தல் என்பன இச் செயற்றிட்டங்களில் பிரதான இடத்தை வகிக்கின்றது.



நிர்மாணிக்கப்பட்டுள்ள தியகம
மாதர் சிகிச்சை நிலையம்
நிகவெரட்டிய பிரதேச செயலகப் பிரிவு



நிர்மாணிக்கப்பட்டுள்ள ஹாதலவ புதிய
மாதர் சிகிச்சை நிலையம்
கொபயிகனே பிரதேச செயலகப் பிரிவு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சமூக நலன்புரி

2014 ஆம் ஆண்டு 2,342 சமூக நலன்புரி தொடர்பான செயற்றிட்டங்களை அமுல்படுத்துவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளதுடன் அதற்காக 696.71 ரூபா மில்லியன் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. 30.09.2014 திகதி வரையில் 815 செயற்றிட்டங்களின் வேலைகள் பூர்த்தி செய்யப்பட்டுள்ளன. இதற்காக 63.44 ரூபா மில்லியன் நிதி செலவிடப்பட்டுள்ளது. 1153 செயற்றிட்டங்களின் வேலைகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன.



நிர்மாணிக்கப்பட்ட ஒலியாதெனிய
மயான இல்லம்
நாரம்மல பிரதேச செயலகப் பிரிவு



நிர்மாண பணிகள் நடைபெறுகின்ற
மாவதகம நகரின் பொத மண்டபம்
மாவதகம பிரதேச செயலகப் பிரிவு

## சிறிய நீர்ப்பாசனம்

இம் மாவட்டத்தில் சிறிய நீர்ப்பாசன செயற்றிட்டங்கள், கைவிடப்பட்ட பயிரிடத்தக்க நிலங்களின் சீரமைப்பு திட்டங்கள், கால்வாய்கள் மற்றும் அணைக்கட்டுகள் அபிவிருத்தி செய்வது தொடர்பான 1,024 செயற்றிட்டங்களுக்காக மதிப்பிடப்பட்டுள்ள தொகை 772.0 ரூபா மில்லியன் ஆகும். 266 செயற்றிட்டங்களின் வேலைகள் பூர்த்தி செய்யப்பட்டுள்ளன. இச் செயற்றிட்டங்களுக்காக 30.09.2014 திகதி வரை 62.45 ரூபா மில்லியன் நிதி செலவிடப்பட்டுள்ளது.



வண்டல் அகற்றி சீரமைக்கப்பட்ட
ரத்கரவ்வ கேனேகெதர வாவி
மாஸ்பொத பிரதேச செயலகப் பிரிவு



புனர்நிர்மாணம் செய்யப்பட்டுள்ள
தெதிலிஅங்க மொரகொள்ள வாவி
இப்பாகமுவ பிரதேச செயலகப் பிரிவு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## விவசாயம்

2014 ஆம் ஆண்டில் இம்மாவட்டத்தினுள் விவசாயத்துறையை மேம்படுத்துவதற்காக 126 செயற்றிட்டங்கள் இனங்காணப்பட்டு இதற்காக 36.10 ரூபா மில்லியன் ஒதுக்கீடு வழங்கப்பட்டுள்ளதுடன் இதுவரையில் 16 செயற்றிட்டங்களின் பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. ஒரு திட்டம் பூர்த்தி செய்யப்பட்டுள்ளது. இதற்காக 3.25 ரூபா மில்லியன் நிதி செலவிடப்பட்டுள்ளது. இதனால் 2,701 பயனாளிகளுக்கு பிரதிலாபத்தை பெற்றுக்கொடுப்பதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது.

## கால்நடை வளர்ப்பு

2014 ஆம் ஆண்டில் இம்மாவட்டத்தினுள் கிராமிய பொருளாதாரத்தை மேம்படுத்துவதற்காக 29 செயற்றிட்டங்கள் இனங்காணப்பட்டு அமுல்படுத்துவதற்கு எதிர்பார்க்கப்பட்டுள்ளதுடன் இதற்காக 7.43 ரூபா மில்லியன் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. 30.09.2014 திகதியில் 4 செயற்றிட்டங்களின் வேலைகள் நடைபெற்றுக்கொண்டிருக்கின்றது

## மீன்வளர்ப்பு

2014 ஆம் ஆண்டில் இம்மாவட்டத்தில் மீன்வளர்ப்புதுறையை மேம்படுத்துவதற்காக 31 செயற்றிட்டங்கள் இனங்காணப்பட்டு அமுல்படுத்துவதற்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளதுடன் 2.89 ரூபா மில்லியன் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. 30.09.2014 திகதி வரையில் 11 செயற்றிட்டங்களின் வேலைகள் நடைபெற்றுக்கொண்டிருக்கின்றன. இதனால் 1,622 பயனாளிகளுக்கு பிரதிலாபத்தை பெற்றுக்கொடுப்பதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது.

## கிராமிய மற்றும் சிறிய கைத்தொழில்

2014 ஆம் ஆண்டில் இம்மாவட்டத்தில் கிராமபுற மக்களின் பொருளாதாரத்தை மேம்படுத்தும் நோக்கில் கிராமிய மற்றும் சிறிய கைத்தொழில் 59 செயற்றிட்டங்கள் இனங்காணப்பட்டு அமுல்படுத்துவதற்கு எதிர்பார்க்கப்பட்டுள்ளதுடன் இதற்காக 52.59 ரூபா மில்லியன் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. 30.09.2014 திகதியில் 6 செயற்றிட்டங்கள் பூர்த்தி செய்யப்பட்டுள்ளன. 16 செயற்றிட்டங்களின் வேலைகள் நடைபெற்றுக்கொண்டிருக்கின்றது


## வனஜீவராசிகள் மற்றும் வன பாதுகாப்பு

2014 ஆம் ஆண்டில் இம்மாவட்டத்தில் வனஜீவராசிகள் மற்றும் வன பாதுகாப்பிற்காக 128.94 ரூபா மில்லியன் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இவ் ஒதுக்கீட்டை பயன்படுத்தி புதிய மின்சார வேலி நிர்மாணித்தல், இருக்கின்ற மின்சார வேலியை சீரமைத்தல், மின்சார வேலிக்கு சமமாக வீதி நிர்மாணம் செய்தல், மின் வழங்கல் அலகுகளை நிர்மாணித்தல் மற்றும் கிராமங்களிற்கு வரும் யானைகளை காடுகளுக்கு திரும்பியனுப்புதல் மற்றும் யானைகளை பிடித்து வேறு வனாந்தரங்களில் விடுதல் ஆகிய செயற்பாடுகளுக்காக 22 வேலைத்திட்டங்களை அமுல்படுத்துவதற்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது. 30.09.2014 திகதி வரையில் 5 செயற்றிட்டங்கள் பூர்த்தி செய்யப்பட்டுள்ளன. 17 செயற்றிட்டங்களின் பணிகள் தொடர்கின்றன. இதற்காக 7.57 ரூபா மில்லியன் நிதி செலவிடப்பட்டுள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புத்தளம் மாவட்டம்




## மாவட்டம் தொடர்பான அடிப்படைத் தரவுகள்

| | | |
|---|---|---|
| பிரதேச செயலகப் பிரிவுகளின் எண்ணிக்கை | | 16 |
| கிராம சேவகர் பிரிவுகளின் எண்ணிக்கை | | 548 |
| நிலப்பரப்பு (சதுர கி.மீ) | | 3,072 |
| மொத்த சனத்தொகை (2014) | | 778,000 |
| குடும்பங்களின் எண்ணிக்கை (2012) | | 200,807 |
| சமுர்த்தி நன்மை பெறும் குடும்பங்களின் எண்ணிக்கை (2014) | | 55,875 |
| குடியடர்த்தி (2014) நபர்களின் எண்ணிக்கை (சதுர கி.மீ) | | 270 |
| சனத்தொகையை வகைப்படுத்தல் | | |
| பால் ரீதியாக (2014) | ஆண்கள் | 378,000 |
| | பெண்கள் | 400,000 |

மூலம்: தொகைமதிப்பு புள்ளிவிபரத் திணைக்களம், வாழ்வின் எழுச்சி அபிவிருத்தி திணைக்களம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அபிவிருத்தி திட்டங்களின் முன்னேற்ற மீளாய்வு - புத்தளம் மாவட்டம்



**மொத்த நிதி ஒதுக்கீடு**
**ரூபா 2,314.56 மில்.**

### நிகழ்ச்சித் திட்டம் ரீதியான ஒதுக்கீட்டு பகிர்வு

| நிதி வழங்குனர் | நிகழ்ச்சித் திட்டம் | ஒதுக்கீடு ரூபா (மில்) |
|---|---|---|
| உள்நாட்டு நிதி | ஒரு கிராமம் ஒரு நிகழ்ச்சித் திட்டம் | 548.00 |
| | கிராம எழுச்சி நிகழ்ச்சித் திட்டம் (கமநெகும) | 216.00 |
| | பலாத்நெகும / புறநெகும | 729.00 |
| | கிராம பாடசாலைகளில் கழிவகற்றல் மற்றும் ஏனைய வசதிகளை மேம்படுத்தல் | 36.00 |
| | வனஜீவராசிகள் மற்றும் வன பாதுகாப்பு | 80.00 |
| | பன்முகப்படுத்தப்பட்ட வரவுசெலவுத்திட்டம் | 40.00 |
| | மக்கள் பிரதிநிதிகளின் பங்களிப்புடனான திட்ட அமுலாக்கல்கள் | 150.00 |
| | வாழ்வின் எழுச்சி நிகழ்ச்சித் திட்டம் (திவி நெகும) | 120.00 |
| | கிராம பாலங்கள் மற்றும் அணுகுபாதைகளின் அபிவிருத்தி | 180.00 |
| | சிறிய நீர்ப்பாசன அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டம் | 127.00 |
| வெளிநாட்டு நிதித் திட்டங்கள் | | 88.56 |
| மொத்தம் | | 2,314.56 |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அபிவிருத்திச் செயற்றிட்டங்களின் முன்னேற்றம்

## மின்சாரம்

மட்டக்களப்பு மாவட்டத்தில் மின்சக்தி விரிவாக்கம் மற்றும் பராமரிப்பு ஆகியவற்றிற்காக 2.33 ரூபா மில்லியன் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதுடன் 8 மின்சக்தி திட்டங்கள் இனங்காணப்பட்டுள்ளது. இவற்றில் 3 கருத்திட்டப் பணிகள் முடிவடைந்துள்ளதுடன் 5 கருத்திட்டப் பணிகள் தற்போது நடைபெற்றுவருகிறது. 30.09.2014 திகதி வரையான மொத்த செலவு 0.26 ரூபா மில்லியன் ஆகும். மேலும் இத்திட்டங்களினூடாக 20,689 பயனாளிகள் பயன் பெறுவர்.

## வீதிகள் மற்றும் பாலங்கள்


பொருளாதார அபிவிருத்தி அமைச்சினால் 2014 ஆம் ஆண்டில் வீதிகள், பாலங்களின் அபிவிருத்தி வேலைத்திட்டத்திற்காக 796.08 ரூபா மில்லியன் ஒதுக்கப்பட்டுள்ளதுடன் 397 வீதிகள், 9 பாலங்கள் புனரமைப்புக்காக இனங்காணப்பட்டுள்ளன. இவற்றில் 98 வீதிகள், 9 பாலங்கள் புனரமைக்கப்பட்டுள்ளதுடன் 253 வீதிகளின் புனரமைப்பு வேலைகள் நடைபெறுகின்றன. 30.09.2014 வரை இப்பணிக்கான செலவீனம் 234.74 ரூபா மில்லியன் ஆகும்.



கொங்கிறீட் இடப்பட்ட இறால் ஓடை பிரதான வீதி
கோறளைபற்று வடக்கு பிரதேச செயலகப் பிரிவு



கொங்கிறீட் இடப்பட்ட மைதான வீதி
ஏறாவூர் பற்று வடக்கு பிரதேச செயலகப் பிரிவு



கனகபுர வீதியில் அமைக்கப்படும் பாலம்
கோறளைப் பற்று வடக்கு பிரதேச செயலகப் பிரிவு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சுகாதாரம்

இவ்வாண்டு புத்தள மாவட்டத்தின் சுகாதார வசதிகளை மேம்படுத்துவதற்கு 48 செயற்றிட்டங்களுக்காக 41.54 ரூபா மில்லியன் நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. 30.09.2014 வரை 5 செயற்றிட்டங்கள் நிறைவு செய்யப்பட்டுள்ளன. இதற்காக 2.28 ரூபா மில்லியன் நிதி செலவிடப்பட்டு 9 வேலைத்திட்டங்கள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. இந்த வேலைத்திட்டத்தினால் 8,211 பயனாளிகள் நன்மையடைவார்கள் என எதிர்பார்க்கப்படுகிறது.



சிகிச்சை நிலையம் நிர்மாணப்பணி கருக்குவ
மாதம்பே பிரதேச செயலகப் பிரிவு



நடைபாதை நிர்மாணித்தல் மகாவெவ
மகாவெவ பிரதேச செயலகப் பிரிவு

## சமூக நலன்புரி

2014ஆம் ஆண்டு இம்மாவட்டத்தில் சமூக நலன்புரிச் மேம்பாட்டிற்கு 1,221 செயற்றிட்டங்களிற்காக 441.67 ரூபா மில்லியன் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. 30.09.2014 திகதி வரையில் 189 நிறைவடைந்துள்ளது. இதற்காக 44.91 ரூபா மில்லியன் நிதி செலவிடப்பட்டுள்ளது. 502 வேலைத்திட்டங்கள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. இதனால் 238,106 பயனாளிகள் நன்மையடைவார்கள்.



மாலிகாவத்த சனசமூக நிலையம் நிர்மாணம்
சிலாபம் பிரதேச செயலகப் பிரிவு

## சிறிய நீர்ப்பாசனம்

இம்மாவட்டத்தில் சிறிய நீர்ப்பாசனக் அணைக்கட்டுக்கள், கால்வாய்கள், விவசாய வீதிகள் மற்றும் கைவிடப்பட்ட நெற்காணிகள் என்பவற்றை அபிவிருத்தி செய்வதற்கு 149 செயற்றிட்டங்களிற்காக 112.45 ரூபா மில்லியன் ஒதுக்கப்பட்டுள்ளது. 30.09.2014 வரை 20 செயற்றிட்டங்கள் நிறைவடைந்துள்ளது. இதற்காக 20.99 ரூபா மில்லியன் நிதி செலவிடப்பட்டுள்ளது.



நிர்மாணப்பணி மீஓயா நீர்வழங்கல்
புத்தள பிரதேச செயலகப் பிரிவு



புனரமைப்பு வடக்கரை குளம்
ஆனைமடுவ பிரதேச செயலகப் பிரிவு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## குடிநீர் வழங்கல் மற்றும் பொது சுகாதாரம்

நீர் வழங்கல் மற்றும் பொது சுகாதார செயற்பாட்டின் கீழ் 235 திட்டங்களுக்கு அனுமதியளிக்கப்பட்டுள்ளன. இதற்காக 139.13 ரூபா மில்லியன் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதுடன் 30.09.2014 திகதி வரை 16 செயற்றிட்டங்கள் பூர்த்தி செய்யப்பட்டுள்ளன. இதற்கு 21.50 ரூபா மில்லியன் நிதி செலவிடப்பட்டுள்ளது. இதனூடாக அண்ணளவாக 27,658 பயனாளிகளுக்கு நன்மை பெற்றுக்கொடுக்கப்படுகின்றது.

## வர்த்தகம்

புத்தள மாவட்டத்தில் வர்த்தக வசதிகளை மேம்படுத்தும் நோக்கில் வர்த்தக அபிவிருத்திக்காக 0.15 ரூபா மில்லியன் ஒதுக்கப்பட்டுள்ளது.

## விவசாயம்

இம்மாவட்டத்தில் விவசாயத்தை மேம்படுத்துவதற்கு 11 செயற்றிட்டங்களிற்காக 1.29 ரூபா மில்லியன் ஒதுக்கப்பட்டுள்ளது. 30.09.2014 வரை 2 செயற்றிட்டங்கள் நிறைவடைந்துள்ளது. இதற்காக 0.39 ரூபா மில்லியன் நிதி செலவிடப்பட்டுள்ளது.

## வாழ்வாதார அபிவிருத்தி

இம் மாவட்டத்தினுள் 2014 ஆம் ஆண்டில் 51 வாழ்வாதார அபிவிருத்தி செயற்றிட்டங்களான மீன்பிடி, கால்நடை வளர்ப்பு, கிராமிய சிறியளவிலான கைத்தொழில்கள் போன்ற துறைகள் அடங்கலாக பல்வேறுபட்ட வாழ்வாதார அபிவிருத்திக் கருத்திட்டங்கள் அடங்குகின்றன. 2014.09.30 ஆம் திகதி வரையில் 14 செயற்றிட்டங்கள் நிறைவு செய்யப்பட்டுள்ளன. இதற்காக 0.67 ரூபா மில்லியன் நிதி செலவிடப்பட்டுள்ளது.



நிர்மாணிக்கப்பட்ட கைத்தறி நிலையம்
இல்பதெனியா
சிலாபம் பிரதேச செயலகப் பிரிவு

## வனவிலங்கு மற்றும் வன பாதுகாப்பு

வனவிலங்கு மற்றும் வன பாதுகாப்பு நடவடிக்கையானது 4 பிரதேச செயலகப் பிரிவுகளை உள்ளடக்கியதாக 30 செயற்றிட்டங்கள் இனங்காணப்பட்டுள்ளன. இதற்காக 80.0 ரூபா மில்லியன் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. 2014.09.30 ஆம் திகதி வரையில் 8 செயற்றிட்டங்கள் நிறைவு செய்யப்பட்டுள்ளன. மேலும் 6 செயற்றிட்டங்கள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விசேட குறிப்பு - 6

# கிராமிய பாலங்களை நிர்மாணிக்கும் நிகழ்ச்சித்திட்டம்

ஒரு நாட்டின் அபிவிருத்தியைத் துரிதப்படுத்தவதற்கு உள்நாட்டுப் போக்குவரத்து முறைமையின் திறன்விருத்தியானது பிரதான காரணியாக விளங்குகின்றது. இந்நிகழ்ச்சித்திட்டமானது பின்தங்கிய பிரதேசங்களிலிருந்து பொருட்கள் மற்றும் சேவைகளை நகரப் பகுதிகளுக்கு விநியோகிப்பதற்குத் தேவையான போக்குவரத்து வசதிகளை வழங்கும். மேலும் வீதி வலைப்பின்னலின் அபிவிருத்தியுடன் நாட்டில் புதிய கைத்தொழில் முயற்சிகளை நிறுவுவதற்கான அவசியமான உட்கட்டமைப்பு வசதிகள் முன்னேற்றமடையும். இது கிராமத்திற்கும் நகரத்திற்குமிடையேயான அபிவிருத்தித் தூரத்தைக் குறைக்கின்றது.

இக்கருத்திட்டத்தின்கீழ், கிராமங்கள் மற்றும் நகரங்களுடன் இணைக்கப்படுவதுடன் வினைத்திறனுள்ள போக்குவரத்து முறைமை உருவாக்கி கிராமிய சமுதாயத்தின் வாழ்க்கைத்தரத்தை உயர்த்துவதற்காக நாடளாவியரீதியில் 210 உருக்குப் பாலங்கள் நிர்மாணிக்கப்படவுள்ளது. இப்பாலங்களின் நீளமானது 6 மீற்றரில் இருந்து 30 மீற்றர்கள் வரை வேறுபடுகின்றது. இத்திட்டத்திற்கான மொத்த முதலீடு 35 மில்லியன் ஸ்ரேலிங் பவுண்களாகும் (ரூபா 6,2121.5 மில்லியன்) இதற்கு 30.09.2014 ஆம் திகதி வரையான மொத்த செலவினம் ரூபா 2,757.71 மில்லியன் ஆகும்.

மேலும் இந்நிகழ்ச்சித்திட்டத்தின் இரண்டாம் கட்டமாக 1,000 பாலங்களை நாடு முழுவதும் நிர்மாணிப்பதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

**30.09.2014 வரையான பௌதீக முன்னேற்றம்**

| மாவட்டம் | இலக்கிடப்பட்ட பாலங்களின் எண்ணிக்கை | கட்டப்பட்டுக் கொண்டிருக்கும் பாலங்களின் எண்ணிக்கை | நிறைவு செய்யப்பட்ட பாலங்களின் எண்ணிக்கை | பொது மக்களிடம் கையளிக்கப்பட்ட பாலங்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|
| அநுராதபுரம் | 14 | 10 | 4 | |
| பதுளை | 10 | 6 | 4 | |
| காலி | 5 | 5 | | |
| அம்பாந்தோட்டை | 9 | 6 | 3 | |
| களுத்துறை | 14 | 10 | 4 | |
| கண்டி | 33 | 22 | 11 | 4 |
| கேகாலை | 25 | 10 | 15 | 8 |
| மாத்தளை | 26 | 9 | 17 | 11 |
| மாத்தறை | 13 | 7 | 6 | |
| மொனராகலை | 12 | 9 | 3 | |
| நுவரேலியா | 2 | 1 | 1 | 1 |
| பொலன்னறுவை | 13 | 8 | 5 | |
| இரத்தினபுரி | 34 | 26 | 8 | |
| மொத்தம் | 210 | 129 | 81 | 24 |

இவ்வாண்டு கட்டிமுடிக்கப்பட்ட கருத்திட்டங்கள்



தெல்கந்தெனிய பாலம், அம்பாந்தோட்டை மாவட்டம்



வலமித்தியாவ பாலம், மாத்தளை மாவட்டம்




வரகொல்ல பாலம், கண்டி மாவட்டம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அநுராதபுர மாவட்டம்




## மாவட்டம் தொடர்பான அடிப்படைத் தரவுகள்

| | | |
|---|---|---|
| பிரதேச செயலகப் பிரிவுகளின் எண்ணிக்கை | | 22 |
| கிராம சேவகர் பிரிவுகளின் எண்ணிக்கை | | 694 |
| நிலப்பரப்பு (சதுர கி.மீ) | | 7,179 |
| மொத்த சனத்தொகை (2014) | | 879,000 |
| குடும்பங்களின் எண்ணிக்கை (2012) | | 228,136 |
| சமுர்த்தி நன்மை பெறும் குடும்பங்களின் எண்ணிக்கை (2014) | | 63,045 |
| குடியடர்த்தி (2014) நபர்களின் எண்ணிக்கை (சதுர கி.மீ) | | 132 |
| சனத்தொகையை வகைப்படுத்தல் | | |
| பால் ரீதியாக (2014) | ஆண்கள் | 430,000 |
| | பெண்கள் | 449,000 |

மூலம்: தொகைமதிப்பு புள்ளிவிபரத் திணைக்களம், வாழ்வின் எழுச்சி அபிவிருத்தி திணைக்களம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அபிவிருத்தி திட்டங்களின் முன்னேற்ற மீளாய்வு - அநுராதபுர மாவட்டம்



## மொத்த நிதி ஒதுக்கீடு ரூபா 4,855.46 மில்.

### நிகழ்ச்சித் திட்டம் ரீதியான ஒதுக்கீட்டு பகிர்வு

| நிதி வழங்குனர் | நிகழ்ச்சித் திட்டம் | ஒதுக்கீடு ரூபா (மில்) |
|---|---|---|
| உள்நாட்டு நிதி | ஒரு கிராமம் ஒரு நிகழ்ச்சித் திட்டம் | 694.00 |
| | கிராம எழுச்சி நிகழ்ச்சித் திட்டம் (கமநெகும) | 301.10 |
| | பலாத்நெகும / புறநெகும | 1,007.00 |
| | கிராம பாடசாலைகளில் கழிவகற்றல் மற்றும் ஏனைய வசதி-களை மேம்படுத்தல் | 42.00 |
| | வனஜீவராசிகள் மற்றும் வன பாதுகாப்பு | 200.00 |
| | பன்முகப்படுத்தப்பட்ட வரவுசெலவுத்திட்டம் | 45.00 |
| | மக்கள் பிரதிநிதிகளின் பங்களிப்புடனான திட்ட அமுலாக்கல்கள் | 175.00 |
| | வாழ்வின் எழுச்சி நிகழ்ச்சித் திட்டம் (திவி நெகும) | 140.00 |
| | கிராம பாலங்கள் மற்றும் அணுகுபாதைகளின் அபிவிருத்தி | 210.00 |
| | சிறிய நீர்ப்பாசனக் அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டம் | 469.00 |
| வெளிநாட்டு நிதி திட்டங்கள | | 1,572.46 |
| மொத்தம் | | 4,855.46 |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அபிவிருத்திச் செயற்றிட்டங்களின் முன்னேற்றம்

## மின்சாரம்

இம்மாவட்டத்தில் 13 மின் வழங்கல் செயற்றிட்டங்கள் அனுமதிக்கப்பட்டுள்ளன. 1.84 மில்லியன் ரூபா நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. 3 செயற்றிட்டங்களின் பணிகள் பூர்த்தி செய்யப்பட்டுள்ளன அதே வேளை மிகுதி 10 செயற்றிட்டங்களின் வேலைகள் நடைப்பெற்றுக்கொண்டிருக்கின்றன. அதற்காக செலவிடப்பட்டுள்ள தொகை 0.39 மில்லியன் ரூபா ஆகும் இதன் மூலம் 1,216 பயனாளிகள் நன்மை பெற்றுக்கொள்வர்.

## வீதிகள் மற்றும் பாலங்கள்

இந்த வருடத்தில் அநுராதபுர மாவட்டத்தின் வீதி அபிவிருத்திக்காக 921 செயற்றிட்டங்களுக்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளதுடன் 698.42 மில்லியன் ரூபா நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. 506 செயற்றிட்டங்களின் வேலைகள் பூர்த்தி செய்யப்பட்டுள்ளன. 415 செயற்றிட்டங்களின் வேலைகள் நடைப்பெற்றுக்கொண்டிருக்கின்றன. வீதி அபிவிருத்தி செயற்றிட்டங்களுக்காக 339.34 மில்லியன் ரூபா செலவிடப்பட்டுள்ளது. இதன் மூலம் 418,276 பயனாளர்கள் பிரதிலாபம் பெற்றுக்கொள்வார்கள் என எதிர்ப்பார்க்கப்படுகின்றது.



அபிவிருத்தி செய்யப்பட்டுள்ள
குடாவெவல்கடவிலிருந்து
மகிச்சாவ வரையான வீதி
ஹொரவப்பொதான பிரதேச செயலகப் பிரிவு



அபிவிருத்தி செய்யப்படுகின்ற
சங்கமித்த மாவத்தை
கிழக்கு நுவரகம பிரதேச செயலகப் பிரிவு

## கல்வி

பாடசாலை உட்கட்டமைப்பு வசதிகளின் அபிவிருத்திக்காக 250 செயற்றிட்டங்கள் அநுராதபுர மாவட்டத்தில் அனுமதிக்கப்பட்டுள்ளதுடன் அதற்காக 139.16 மில்லியன் ரூபா நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. இதுரையில் 127 செயற்றிட்டங்களின் வேலைகள் பூர்த்தி செய்யப்பட்டுள்ள அதே வேளை மிகுதி 111 செயற்றிட்டங்களின் வேலைகள் நடைப்பெற்றுக்கொண்டிருக்கின்றன. இதற்காக 51.83 மில்லியன் ரூபா செலவிடப்பட்டுள்ளது. 80,064 பயனாளர்கள் பிரதிலாபம் பெற்றுக்கொள்வர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



நிர்மாணிக்கப்பட்டுள்ள சிரி சீவல
வித்தியாலயத்தின் கட்டிடம்
கல்நேவ பிரதேச செயலகப் பிரிவு



நிர்மாணிக்கப்பட்டுள்ள அநுராதபுர மத்திய மகா
வித்தியாலயத்தின் மைதானம்
நுவரகம் பலாத்த பிரதேச செயலகப் பிரிவு

## சுகாதாரம்


அநுராதபுர மாவட்டத்தில் 32 சுகாதாரச் செயற்றிட்டங்கள் அனுமதிக்கப்பட்டுள்ளதுடன் அதற்காக 6.99 மில்லியன் ரூபா நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. 5 செயற்றிட்டங்கள் பூர்த்தி செய்யப்பட்டுள்ள அதே வேளை 27 வேலைத்திட்டங்களின் வேலைகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. அதற்காக 5.70 மில்லியன் ரூபா செலவிடப்பட்டுள்ளது. இதன் மூலம் 72,925 பயனாளர்கள் பிரதிலாபம் பெற்றுக்கொள்வர்.

## சமூக நலன்புரி

சமூக நலன்புரிச் செயற்பாடுகளுக்காக 1,457 செயற்றிட்டங்கள் அனுமதிக்கப்பட்டுள்ளதுடன் அதற்காக 379.24 மில்லியன் ரூபா நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. இதில் 501 செயற்றிட்டங்களின் வேலைகள் பூர்த்தி செய்யப்பட்டுள்ளது. தற்பொழுது 956 செயற்றிட்டங்களின் வேலைகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. இதற்காக 119.22 மில்லியன் ரூபா செலவிடப்பட்டுள்ளது.



நிர்மாணிக்கப்பட்டுள்ள முன்பள்ளி கட்டிடம்
ஹொரவப்பொத்தான பிரதேச செயலகப் பிரிவு



நிர்மாணிக்கப்பட்டுள்ள பலநோக்கு கட்டிடம்
கலென்பிதுனுவெவ பிரதேச செயலகப் பிரிவு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சிறிய நீர்ப்பாசனம்

மாவட்டத்தில் 436 நீர்ப்பாசன செயற்றிட்டங்கள் அனுமதிக்கப்பட்டுள்ளதுடன் அதற்காக 1575.01 மில்லியன் ரூபா நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இதற்காக 385 செயற்றிட்டங்கள் பூர்த்தி செய்யப்பட்டுள்ளன. மேலும் 36 செயற்றிட்டங்களின் வேலைகள் நடைப்பெற்றுக்கொண்டிருக்கின்றன. அதற்காக 1,193.83 மில்லியன் ரூபா செலவிடப்பட்டுள்ளது. இதன் மூலம் 16,712 பயனாளர்கள் பிரதிலாபம் பெற்றுக்கொள்வர்.



அபிவிருத்தி செய்யப்பட்டுள்ள கலுவாவல வாவி
ஹொரவப்பொத்தான பிரதேச செயலகப் பிரிவு

## குடிநீர் வழங்கல் மற்றும் பொதுச் சுகாதாரம்

குடிநீர் வழங்கல் மற்றும் பொதுச் சுகாதார நடவடிக்கைகளுக்காக மாவட்டத்தில் 130 செயற்றிட்டங்கள் அனுமதிக்கப்பட்டுள்ளதுடன் அதற்காக 62.96 மில்லியன் ரூபா நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. 52 செயற்றிட்டங்களின் பணிகள் பூர்த்தி செய்யப்பட்டுள்ளன. 78 செயற்றிட்டங்களின் வேலைகள் நடைபெற்றுக்கொண்டிருக்கின்றன. இதற்காக 17.61 மில்லியன் ரூபா செலவிடப்பட்டுள்ளது. இதன் மூலம் 73,712 பயனாளர்கள் பிரதிலாபம் பெற்றுக்கொள்வர்.



நிர்மாணிக்கப்பட்டுள்ள கல்கந்தேகம நீர்த் தாங்கி
மதவாச்சி பிரதேச செயலகப் பிரிவு

## வர்த்தகம்

மாவட்டத்தில் 16 வர்த்தக செயற்றிட்டங்கள் அனுமதிக்கப்பட்டுள்ளதுடன் அதற்காக 83.58 மில்லியன் ரூபா நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இதுவரையில் 1 செயற்றிட்டத்தின் வேலை பூர்த்தி செய்யப்பட்டுள்ளது. 15 செயற்றிட்டங்களின் வேலைகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. இச்செயற்றிட்டங்களுக்காக 18.35 மில்லியன் ரூபா செலவிடப்பட்டுள்ளது. இதன் மூலம் 78,741 பயனாளர்கள் பிரதிலாபம் பெற்றுக்கொள்வர் என எதிர்ப்பார்க்கப்படுகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வாழ்வாதார அபிவிருத்தி

அநுராதபுர மாவட்டத்தில் வாழ்வாதார அபிவிருத்தி செயற்பாடுகளுக்காக 143 செயற்றிட்டங்கள் அனுமதிக்கப்பட்டுள்ளது. அதற்காக 239.69 மில்லியன் ரூபா நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. இதுவரையில் 10 செயற்றிட்டங்களின் வேலைகள் பூர்த்தி செய்யப்பட்டுள்ளதுடன் 133 செயற்றிட்டங்களின் வேலைகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. இதற்காக 68.4 மில்லியன் ரூபா செலவிடப்பட்டுள்ளது. இதன் மூலம் 26,655 பயனாளர்கள் நன்மை பெற்றுக்கொள்வர்.


## வனஜீவராசிகள் மற்றும் வன பாதுகாப்பு

இம் மாவட்டத்தில் வனஜீவராசிகள் மற்றும் வன பாதுகாப்பு நடவடிக்கைகளுக்காக 31 செயற்றிட்டங்கள் அனுமதிக்கப்பட்டுள்ளதுடன் அதற்காக 133.68 மில்லியன் ரூபா நிதி ஒதுக்கிடப்பட்டுள்ளது. 14 செயற்றிட்டங்களின் வேலைகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. இது வரையில் 133.68 மில்லியன் ரூபா செலவிடப்பட்டுள்ளது. இதன் மூலம் பிரதிலாபம் பெற்றுக்கொள்பவர்களின் எண்ணிக்கை 8,206 ஆகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொலனறுவை மாவட்டம்




## மாவட்டம் தொடர்பான அடிப்படைத் தரவுகள்

| | | |
|---|---|---|
| பிரதேச செயலகப் பிரிவுகளின் எண்ணிக்கை | | 7 |
| கிராம சேவகர் பிரிவுகளின் எண்ணிக்கை | | 295 |
| நிலப்பரப்பு (சதுர கி.மீ) | | 3,293 |
| மொத்த சனத்தொகை (2014) | | 412,000 |
| குடும்பங்களின் எண்ணிக்கை (2012) | | 552,324 |
| சமுர்த்தி நன்மை பெறும் குடும்பங்களின் எண்ணிக்கை (2014) | | 29,577 |
| குடியடர்த்தி (2014) நபர்களின் எண்ணிக்கை (சதுர கி.மீ) | | 134 |
| சனத்தொகையை வகைப்படுத்தல் | | |
| பால் ரீதியாக (2014) | ஆண்கள் | 204,000 |
| | பெண்கள் | 208,000 |

மூலம்: தொகைமதிப்பு புள்ளிவிபரத் திணைக்களம், வாழ்வின் எழுச்சி அபிவிருத்தி திணைக்களம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அபிவிருத்தி திட்டங்களின் முன்னேற்ற மீளாய்வு - பொலனறுவை மாவட்டம்



**மொத்த நிதி ஒதுக்கீடு**
**ரூபா 1,840.86 மில்.**

### நிகழ்ச்சித் திட்டம் ரீதியான ஒதுக்கீட்டு பகிர்வு

| நிதி வழங்குனர் | நிகழ்ச்சித் திட்டம் | ஒதுக்கீடு ரூபா (மில்) |
|---|---|---|
| உள்நாட்டு நிதி | ஒரு கிராமம் ஒரு நிகழ்ச்சித் திட்டம் | 295.00 |
| | கிராம எழுச்சி நிகழ்ச்சித் திட்டம் (கமநெகும) | 148.40 |
| | பலாத்நெகும / புறநெகும | 499.30 |
| | கிராம பாடசாலைகளில் கழிவகற்றல் மற்றும் ஏனைய வசதிகளை மேம்படுத்தல் | 24.00 |
| | வனஜீவராசிகள் மற்றும் வன பாதுகாப்பு | 80.00 |
| | பன்முகப்படுத்தப்பட்ட வரவுசெலவுத்திட்டம் | 20.00 |
| | மக்கள் பிரதிநிதிகளின் பங்களிப்புடனான திட்ட அமுலாக்கல்கள் | 100.00 |
| | வாழ்வின் எழுச்சி நிகழ்ச்சித் திட்டம் (திவி நெகும) | 80.00 |
| | கிராம பாலங்கள் மற்றும் அணுகுபாதைகளின் அபிவிருத்தி | 120.00 |
| | சிறிய நீர்ப்பாசன அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டம் | 161.00 |
| வெளிநாட்டு நிதித் திட்டங்கள் | | 313.16 |
| மொத்தம் | | 1,840.86 |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அபிவிருத்தி செயற்றிட்டங்களின் முன்னேற்றம்

## மின்சாரம்

பொலன்னறுவை மாவட்டத்தில் அனுமதிக்கப்பட்டுள்ள மின் வழங்கல் செயற்றிட்டங்களின் எண்ணிக்கை 34 ஆகும். 4.63 மில்லியன் ரூபா நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. 6 செயற்றிட்டங்கள் பூர்த்தி செய்யப்பட்டுள்ள அதே வேளை 28 வேலைத்திட்டங்களின் வேலைகள் நடைபெற்றுக்கொண்டிருக்கின்றன. அதற்காக செலவிடப்பட்டுள்ள மொத்த தொகை 0.64 மில்லியன் ரூபா ஆகும் இதன் மூலம் 545 பயனாளர்கள் பிரதிலாபம் பெற்றுக்கொள்வர்.

## வீதிகள் மற்றும் பாலங்கள்

மாவட்டத்தில் 762 வீதி அபிவிருத்தி செயற்றிட்டங்களுக்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளதுடன் 588.3 மில்லியன் ரூபா நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. 442 செயற்றிட்டங்களின் வேலைகள் பூர்த்தி செய்யப்பட்டுள்ளன. 322 செயற்றிட்டங்களின் வேலைகள் நடைபெற்றுக்கொண்டிருக்கின்றன. வீதி அபிவிருத்தி செயற்றிட்டங்களுக்காக 370.14 மில்லியன் ரூபா செலவிடப்பட்டுள்ளது. இதன் மூலம் 197,289 பயனாளர்கள் பிரதிலாபம் பெற்றுக்கொள்வர்.



அபிவிருத்தி செய்யப்பட்டுள்ள
பராக்கிரம விகாரை வீதி
எலஹெர பிரதேச செயலகப் பிரிவு



அபிவிருத்தி செய்யப்பட்டுள்ள
விஜயபுர வீதி
மெதிரிகிரிய பிரதேச செயலகப் பிரிவு

## கல்வி

பாடசாலை உட்கட்டமைப்பு வசதிகளின் அபிவிருத்திக்காக 414 செயற்றிட்டங்கள் பொலனறுவை மாவட்டத்தில் அனுமதிக்கப்பட்டுள்ளதுடன் அதற்காக 194.53 மில்லியன் ரூபா நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. இதுரையில் 195 செயற்றிட்டங்களின் வேலைகள் பூர்த்தி செய்யப்பட்டுள்ள அதே வேளை 532 செயற்றிட்டங்களின் வேலைகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. இதற்காக 50.0 மில்லியன் ரூபா செலவிடப்பட்டுள்ளது. 205,620 பயனாளர்கள் பிரதிலாபம் பெற்றுக்கொள்வர் என எதிர்ப்பார்க்கப்படுகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



புனர் நிர்மாணம் செய்யப்பட்டுள்ள
தியசென்புர மகா வித்தியாலயம்
மெதிரிகிரிய பிரதேச செயலகப் பிரிவு



நவீனமயப்படுத்தப்பட்ட
திம்புலான வித்தியாலயம்
வெலிகந்த பிரதேச செயலகப் பிரிவு

## சுகாதாரம்

பொலன்னறுவை மாவட்டத்தில் 54 சுகாதாரச் செயற்றிட்டங்கள் அனுமதிக்கப்பட்டுள்ளதுடன் அதற்காக 40.75 மில்லியன் ரூபா நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. 9 செயற்றிட்டங்கள் பூர்த்தி செய்யப்பட்டுள்ள அதே வேளை 42 வேலைத்திட்டங்களின் வேலைகள் நடைபெற்றுக்கொண்டிருக்கின்றன. அதற்காக 5.31 மில்லியன் ரூபா செலவிடப்பட்டுள்ளது. இதன் மூலம் 27,598 பயனாளர்கள் பிரதிலாபம் பெற்றுக்கொள்வர்.



புனர் நிர்மாணம் செய்யப்பட்டுள்ள
சிங்கபுர தாய்மார் சிகிச்சை நிலையம்
வெலிகந்த பிரதேச செயலகப் பிரிவு



புனர் நிர்மாணம் செய்யப்பட்டுள்ள
மருந்தக கட்டிடம்
மெதிரிகிரிய பிரதேச செயலகப் பிரிவு

## சமூக நலன்புரி

சமூக நலன்புரிச் செயற்பாடுகளுக்காக 1,614 செயற்றிட்டங்கள் அனுமதிக்கப்பட்டுள்ளதுடன் அதற்காக 346.34 மில்லியன் ரூபா நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. இதுவரையில் 535 செயற்றிட்டங்களின் வேலைகள் பூர்த்தி செய்யப்பட்டுள்ளது. தற்பொழுது 1,069 செயற்றிட்டங்களின் வேலைகள் நடைபெற்றுக்கொண்டிருக்கின்றன. இதற்காக 101.5 மில்லியன் ரூபா செலவிடப்பட்டுள்ளது. இதன் மூலம் 112,839 பயனாளர்கள் பிரதிலாபம் பெற்றுக்கொள்வர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



நிர்மாணிக்கப்பட்டுள்ள சேவை நிலையம்
லங்காபுர பிரதேச செயலகப் பிரிவு



நிர்மாணிக்கப்பட்டுள்ள
சமுர்த்தி வங்கி கட்டிடம்
வெலிகந்த பிரதேச செயலகப் பிரிவு

## சிறிய நீர்ப்பாசனம்

மாவட்டத்தில் 23 நீர்ப்பாசன செயற்றிட்டங்கள் அனுமதிக்கப்பட்டுள்ளதுடன் அதற்காக 36.96 மில்லியன் ரூபா நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. 10 செயற்றிட்டங்கள் பூர்த்தி செய்யப்பட்டுள்ளன. 13 செயற்றிட்டங்களின் வேலைகள் நடைப்பெற்றுக்கொண்டிருக்கின்றன. அதற்காக 19.57 மில்லியன் ரூபா செலவிடப்பட்டுள்ளது. இதன் மூலம் 6,806 பயனாளர்கள் பிரதிலாபம் பெற்றுக்கொள்வர்.



நிர்மாணிக்கப்பட்டுள்ள
பேபியாவ நெலும் வெவ அணைக்கட்டு
மெதிரிகிரிய பிரதேச செயலகப் பிரிவு



நிர்மாணிக்கப்பட்டுள்ள
சுங்காவில பெரப்பன்காது
லங்காபுர பிரதேச செயலகப் பிரிவு

## குடிநீர் வழங்கல் மற்றும் சுத்திகரிப்பு

குடிநீர் வழங்கல் மற்றும் சுத்திகரிப்பு நடவடிக்கைகளுக்காக மாவட்டத்தில் 725 செயற்றிட்டங்கள் அனுமதிக்கப்பட்டுள்ளதுடன் அதற்காக 227.25 மில்லியன் ரூபா நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. 261 செயற்றிட்டங்களின் பணிகள் பூர்த்தி செய்யப்பட்டுள்ளன. 117 செயற்றிட்டங்களின் வேலைகள் நடைபெற்றுக்கொண்டிருக்கின்றன. அதற்காக 149.70 மில்லியன் ரூபா செலவிடப்பட்டுள்ளது. இதன் மூலம் 23,403 பயனாளர்கள் பிரதிலாபம் பெற்றுக்கொள்வர்.



நிர்மாணிக்கப்பட்டுள்ள மல்லில நீர்தாங்கி
வெலிகந்த பிரதேச செயலகப் பிரிவு



பெற்றுத்தரப்பட்டபாதுகாப்பு நீர் வடிகாலமைப்பு
மெதிரிகிரிய பிரதேச செயலகப் பிரிவு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வர்த்தகம்

மாவட்டத்தில் 12 வர்த்தக செயற்றிட்டங்கள் அனுமதிக்கப்பட்டுள்ளதுடன் அதற்காக 29.35 மில்லியன் ரூபா நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இதுவரையில் ஒரு செயற்றிட்டத்தின் வேலை பூர்த்தி செய்யப்பட்டுள்ளது. 11 செயற்றிட்டங்களின் வேலைகள் நடைபெற்றுக்கொண்டிருக்கின்றன. வர்த்தக செயற்றிட்டங்களுக்காக 1.15 மில்லியன் ரூபா செலவிடப்பட்டுள்ளது. இதன் மூலம் 2,243 பயனாளர்கள் பிரதிலாபம் பெற்றுக்கொள்வர் என எதிர்ப்பார்க்கப்படுகின்றது.

## வாழ்வாதார அபிவிருத்தி


வாழ்வாதார அபிவிருத்தி செயற்பாடுகளுக்காக 85 செயற்றிட்டங்கள் அனுமதிக்கப்பட்டுள்ளதுடன் அதற்காக 251.0 மில்லியன் ரூபா நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. இதுரையில் 16 செயற்றிட்டங்களின் வேலைகள் பூர்த்தி செய்யப்பட்டுள்ளது. தற்பொழுது 43 செயற்றிட்டங்களின் வேலைகள் நடைபெற்றுக்கொண்டிருக்கின்றன. இதற்காக 54.24 மில்லியன் ரூபா செலவிடப்பட்டுள்ளது. இதன் மூலம் 20,625 பயனாளர்கள் நன்மை பெற்றுக்கொள்வர்.



கைவேலை உற்பத்தி
எலஹெர பிரதேச செயலகப் பிரிவு

## வனஜீவராசிகள் மற்றும் வன பாதுகாப்பு

மாவட்டத்தில் வனவிலங்கு மற்றும் வன பாதுகாப்பு நடவடிக்கைகளுக்காக 37 செயற்றிட்டங்கள் அனுமதிக்கப்பட்டுள்ளதுடன் அதற்காக 80.0 மில்லியன் ரூபா நிதி ஒதுக்கிடப்பட்டுள்ளது. இதில் 9 செயற்றிட்டங்களின் வேலை பூர்த்தி செய்யப்பட்டுள்ளன. 23 செயற்றிட்டங்களின் வேலைகள் நடைப்பெற்றுக்கொண்டிருக்கின்றன. இது வரையில் 1.15 மில்லியன் ரூபா செலவிடப்பட்டுள்ளது. இதன் மூலம் பிரதிலாபம் பெற்றுக்கொள்பவர்களின் எண்ணிக்கை 17,450 ஆகும்



மின்சார வேலி இடுவதற்காக
வழங்கப்பட்டுள்ள கம்பி மற்றும் பலகை
வெலிகந்த பிரதேச செயலகப் பிரிவு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விசேட குறிப்பு - 07

# தாய் சேய் மகப்பேற்று சிகிச்சை நிலையங்களை அபிவிருத்தி செய்வதனூடாக புத்திமிக்க ஆரோக்கியமான குழந்தைகளை உருவாக்கல்

ஆரோக்கியமான மனித வளமானது இலங்கையை ஆசியாவின் ஆச்சரியம் எனும் பாதையை நோக்கிப் பயணிப்பதற்கும், மஹிந்த சிந்தனையின் எதிர்கால நோக்கான அபிவிருத்தி எனும் குறிக்கோளை அடைவதற்கு வழிவகுக்கும் அபிவிருத்தியின் முக்கிய காரணியாக இனங்காணப்பட்டது.

கிராம மட்டத்தில் அடிப்படை சுகாதார சேவையை வழங்கும் நிலையமாக தாய்சேய் மகப்பேற்று சிகிச்சை நிலையங்கள் செயற்பட்டு வருகின்றன. இச்சிகிச்சை நிலையங்கள் ஆரோக்கியமான மனித வளத்தை உருவாக்கலை ஆதாரமாகக் கொண்டு, ஒரு தாய் கர்ப்பம் தரிப்பதற்கு முன்பிருந்து குழந்தை 5 வயதை அடையும் வரை தொடர்ச்சியான கவனிப்பை வழங்குவதுடன் தாய்மார் மற்றும் குடும்ப உறுப்பினர்களின் உடல் நலத்தில் விசேட கவனத்தை செலுத்துகின்றது.

இதன் காரணமாக, மஹிந்த சிந்தனையின் எதிர்கால நோக்கிலுள்ளவாறு தாய் சேய் சிகிச்சை நிலையங்களை அபிவிருத்தி செய்வதில் விசேட கவனம் செலுத்தப்படுகின்றது. முதற்கட்டமாக கம்பஹா மாவட்டத்தில் இச்செயற்றிட்டமானது 2010ஆம் ஆண்டிலிருந்து வெற்றிகரமாக அமுல்படுத்தப்பட்டுள்ளது. 2014ஆம் ஆண்டு காலப்பகுதியில் இத்திட்டத்தினைப் படிப்படியாக ஏனைய மாவட்டங்களிற்கும் விஸ்தரிப்பதற்கு பொருளாதார அபிவிருத்தி அமைச்சானது நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது.

**தாய் சேய் மகப்பேற்று சிகிச்சை நிலையங்களினூடாக பெறப்படும் பயன்கள்**

- தாய் சேய் போசணை மட்டத்தை உயர்த்துவதற்கான வழிமுறைகளையும் அறிவுறுத்தல்களையும் சமுதாய மட்டத்தில் வழங்கி இது தொடர்பான விழிப்புணர்வை ஏற்படுத்தல்
- கர்ப்பிணித் தாயின் ஆரோக்கியத்தை உறுத்திப்படுத்தலும் அறிவுறுத்தல்களை வழங்கலும்
- மக்கள் மத்தியில் உணவுப் பாதுகாப்பு, பாதுகாப்பான குடிநீர், சுகாதார பழக்கவழக்கங்களை பின்பற்றுதல் தொடர்பான விழிப்புணர்வை ஏற்படுத்தல்.
- தடுப்பூசி வழங்கல்
- இந் நிலையங்களினூடாக சுகாதாரத்துறை பயனுள்ளதாகவும், பணியாளர்களின் நிறைவான சேவையை வழங்குவதாகவும் வினைத்திறன் மிக்க நவீன உபகரணங்களையும் சேவைகளையும் வழங்குவதாகவும் தொழிற்படல்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

2010 ஆம் ஆண்டிலிருந்து கம்பஹா மாவட்டத்தில் 56 தாய் சேய் சிகிச்சை நிலையங்களின் முன்னோடிக் கருத்திட்டமாக கட்டிமுடிக்கப்பட்டுள்ளது. 2014 ஆண்டு வரை ரூபா 50.17 மில்லியன் செலவிடப்பட்டுள்ளது.



மருத்துவப் பரிசோதனை செய்யப்படும் கர்ப்பிணித் தாய்




சுகாதார சிகிச்சை நிலையத்தில் சிகிச்சைக்காக அமர்ந்துள்ள கர்ப்பிணித் தாய்மார் மற்றும் குழந்தைகள்

முன்னோடிக் கருத்திட்டத்தின் வெற்றியைத் தொடர்ந்து பொருளாதார அபிவிருத்தி அமைச்சு தாய் சேய் சிகிச்சை நிலையங்களை நாடளாவிய ரீதியில் அமைப்பதற்காக 2014 ஆம் ஆண்டு ரூபா 1,032.79 மில்லியன் ஒதுக்கீடு செய்துள்ளது. 31.08.2014 ஆம் திகதியில் 513 தாய் சேய் சிகிச்சை நிலையங்கள் கட்டுவதற்கு அனுமதியளிக்கப்பட்டுள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பதுளை மாவட்டம்




## மாவட்டம் தொடர்பான அடிப்படைத் தரவுகள்

| | | |
|---|---|---|
| பிரதேச செயலகப் பிரிவுகளின் எண்ணிக்கை | | 15 |
| கிராம சேவகர் பிரிவுகளின் எண்ணிக்கை | | 567 |
| நிலப்பரப்பு (சதுர கி.மீ) | | 2,861 |
| மொத்த சனத்தொகை (2014) | | 831,000 |
| குடும்பங்களின் எண்ணிக்கை (2012) | | 212,527 |
| சமுர்த்தி நன்மை பெறும் குடும்பங்களின் எண்ணிக்கை (2014) | | 57,024 |
| குடியடர்த்தி (2014) நபர்களின் எண்ணிக்கை (சதுர கி.மீ) | | 294 |
| சனத்தொகையை வகைப்படுத்தல் | | |
| பால் ரீதியாக (2014) | ஆண்கள் | 399,000 |
| | பெண்கள் | 432,000 |

மூலம்: தொகைமதிப்பு புள்ளிவிபரத் திணைக்களம், வாழ்வின் எழுச்சி அபிவிருத்தி திணைக்களம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அபிவிருத்தி திட்டங்களின் முன்னேற்ற மீளாய்வு - பதுளை மாவட்டம்



**மொத்த நிதி ஒதுக்கீடு**
**ரூபா 2,820.22 மில்.**

### நிகழ்ச்சித் திட்டம் ரீதியான ஒதுக்கீட்டு பகிர்வு

| நிதி வழங்குனர் | நிகழ்ச்சித் திட்டம் | ஒதுக்கீடு ரூபா (மில்) |
|---|---|---|
| உள்நாட்டு நிதி | ஒரு கிராமம் ஒரு நிகழ்ச்சித் திட்டம் | 596.00 |
| | கிராம எழுச்சி நிகழ்ச்சித் திட்டம் (கமநெகும) | 244.80 |
| | பலாத்நெகும / புறநெகும | 823.60 |
| | கிராம பாடசாலைகளில் கழிவகற்றல் மற்றும் ஏனைய வசதி-களை மேம்படுத்தல் | 54.00 |
| | வனஜீவராசிகள் மற்றும் வன பாதுகாப்பு | 70.00 |
| | பன்முகப்படுத்தப்பட்ட வரவுசெலவுத்திட்டம் | 35.00 |
| | மக்கள் பிரதிநிதிகளின் பங்களிப்புடனான திட்ட அமுலாக்கல்கள் | 175.00 |
| | வாழ்வின் எழுச்சி நிகழ்ச்சித் திட்டம் (திவி நெகும) | 180.00 |
| | கிராம பாலங்கள் மற்றும் அணுகுபாதைகளின் அபிவிருத்தி | 270.00 |
| | சிறிய நீர்ப்பாசனக் அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டம் | 139.00 |
| வெளிநாட்டு நிதி திட்டங்கள | | 232.82 |
| மொத்தம் | | 2,820.22 |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அபிவிருத்தி செயற்றிட்டங்களின் முன்னேற்றம்

## மின்சாரம்

கிராமத்திற்கு மின்சாரம் வழங்கலை விஸ்தரித்தல் என்பது கிராமத்தின் உற்பத்தித்திறனை அதிகரிக்கச் செய்து வறுமையை தணிக்க உதவும் ஒரு சிறந்த கருவியாகும். பதுளை மாவட்டத்தில் செயற்றிட்டங்களுக்காக 0.25 மில்லியன் ரூபா நிதி ஒதுக்கப்பட்டுள்ளதுடன் 0.1 மில்லியன் ரூபா செலவீட்டில் 02 செயற்றிட்டங்களின் பணிகள் நடைபெற்றுக்கொண்டிருக்கின்றன. இதன் மூலம் 20 பயனாளர்களுக்கு பிரதிலாபத்தை பெற்றுக்கொள்ளக் கூடியதாக இருக்கும் என எதிர்ப்பார்க்கப்படுகின்றது.

## வீதிகள் மற்றும் பாலங்கள்

ஒரு கிராமத்திற்கு ஒரு வேலை, கிராம எழுச்சி பிராந்திய அபிவிருத்தி ஆகிய நிகழ்ச்சித்திட்டங்களினூடாக கிராமிய வீதி அபிவிருத்தி மற்றும் பாலங்கள் நிர்மாணித்தல் ஆகிய 2,421 செயற்றிட்டங்கள் அமுல்படுத்தப்படுகின்றன. இதற்காக 1,826.26 மில்லியன் ரூபா நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. 30.09.2014 திகதியில் உள்ளவாறு 551.54 மில்லியன் ரூபா செலவில் 999 வீதிகள் மற்றும் பாலங்கள் தொடர்பான செயற்றிட்டங்களின் வேலைகள் பூர்த்தி செய்யப்பட்டுள்ளதுடன் 1,422 வேலைத்திட்டங்களின் பணிகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. இந்த வேலைத்திட்டத்தினால் 371>951 பயனாளிகள் பிரதிலாபம் பெற்றுக்கொள்வார்கள் என எதிர்பார்க்கப்படுகிறது



அபிவிருத்தி செய்யப்பட்ட
தியதலாவ பொது மருத்துவமனை வீதி
ஹப்புத்தளை பிரதேச செயலகப் பிரிவு



கொங்கிரீட் இடப்பட்ட
கெமுனு பாடசாலைக்கான வீதி
பஸ்ஸரை பிரதேச செயலகப் பிரிவு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



நிர்மாணிக்கப்பட்டுள்ள
கஹத்தேவல உடுதுறே பாலம்
ஹப்புத்தளை பிரதேச செயலகப் பிரிவு



புனர் நிர்மாணம் செய்யப்பட்டுள்ள
பதுலுபிடிய அந்தெனிய தொங்கு பாலம்
பதுளை பிரதேச செயலகப் பிரிவு

## கல்வி

மாணவர்களினது கல்வி மட்டத்தில் பொதுவாகவே பாடசாலைச் சூழ்நிலைகள் மற்றும் உட்கட்டமைப்பு வசதிகள் என்பன தாக்கம் ஏற்படுத்துகின்றன. நகர் புற பாடசாலைகளிலும் கிராமப்புற பாடசாலைகளிலும் நிலவும் கல்விக்கான வசதி வாய்ப்புக்களின் ஏற்றத்தாழ்வை குறைப்பதற்காக எமது அமைச்சானது பல்வேறு செயற்றிட்டங்களை கிராமப்புற பாடசாலைகளுக்கு அறிமுகப்படுத்தியுள்ளது.

அண்ணளவாக 109,921 பதுளை மாவட்டத்தைச் சேர்ந்த மாணவர்களுக்கு நன்மையை பெற்றுத்தருவதற்காக பாடசாலைகளின் சுகாதார அபிவிருத்தி, பாடசாலைகளுக்கு மின்சாரம் மற்றும் நீர் வழங்கல், பாடசாலைக் கட்டிட நிர்மாணம் புனர்நிர்மாணம் மற்றும் விளையாட்டு வசதி வாய்ப்புக்கள் ஆகிய 511 செயற்றிட்டங்கள் 92.55 மில்லியன ரூபா நிதி ஒதுக்கீட்டில் அமுல்ப்படுத்தப்பட்டுள்ளதுடன் 7.41 மில்லியன் ரூபா செலவீட்டில் 166 செயற்றிட்டங்களின் வேலைகள் பூர்த்தி செய்யப்பட்டுள்ளன மிகுதி 345 வேலைத்திட்டங்களின் செயற்பாடுகள் நடைபெறுகின்றது.

## சுகாதாரம்

தாய்மார் சிகிச்சை நிலையங்கள் மற்றும் சுகாதார நிலையங்கள் என்பன நாட்டின் சிசு மற்றும் தாய்மார் மரண வீதத்தை குறைப்பதற்கு பாரிய உதவியை வழங்கியுள்ளன என்பது மறுக்கமுடியாத உண்மை.

இந்த உண்மைக்கமைய மாவட்டத்திற்குள் சுகாதார நிலையங்கள், சிறுவர் மற்றும் மாதர் சுகாதார சிகிச்சை நிலையங்களை நிர்மாணித்தல், புனர் நிர்மாணம் செய்தல், உடற் பயிற்சி மேடைகளை நிர்மாணித்தல் மற்றும் வைத்திய உபகரணங்களை வழங்குதல் ஆகிய சுகாதார துறைக்குரிய 30 செயற்றிட்டங்கள் அமுல்படுத்துவதற்காக 52.35 ரூபா மில்லியன் ரூபா நிதி ஒதுக்கப்பட்டுள்ளது அவற்றில் 05 செயற்றிட்டங்களின் வேலைகள் பூர்த்திசெய்யப்பட்டுள்ளன. 25 செயற்றிட்டங்களின் வேலைகள் நடைபெற்றுக்கொண்டிருக்கின்ற அதேவேளை. 30.09.2014 திகதி வரையில் 2.83 மில்லியன் ரூபா நிதி செலவிடப்பட்டுள்ளது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




நிர்மாணிக்கப்பட்டுள்ள வெல்லஸ மாணிக்க வள்ளி
தாய்மார் சிகிச்சை நிலையம்
பதுளை பிரதேச செயலகப் பிரிவு



நிர்மாணிக்கப்பட்டுள்ள மய்லகஸ்தென்ன
தாய்மார் சிகிச்சை நிலையம்
பதுளை பிரதேச செயலகப் பிரிவு

## சமூக நலன்புரி

2014 ஆம் ஆண்டில் மாவட்டத்தின் 09 தேர்தல் தொகுதிகளில் முன்பள்ளி, வழிபாட்டு தலங்கள், சிறுவர் மற்றும் முதியோர் நிலையங்களின் அபிவிருத்தி, சேவை நிலையங்கள், பல நோக்கு கட்டிடங்களின் நிர்மாணம் மற்றும் புனர் நிர்மாணம் ஆகிய 1212 அபிவிருத்தி செயற்பாடுகளுக்காக 147.56 ரூபா மில்லியன் நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. இவற்றுள் 188 செயற்றிட்டங்கள் 136.48 மில்லியன் ரூபா செலவில் பூர்த்தி செய்யப்பட்டுள்ளன. 30.09.2014 திகதி வரையில் 1024 செயற்றிட்டங்களின் பணிகள் நடைபெற்றுக்கொண்டிருக்கின்றன. பயனாளர்களின் எண்ணிக்கை 107,076 ஆகும்.



நிர்மாணிக்கப்பட்டுள்ள
பல்லேகம சேவை நிலையம்
பஸ்ஸர பிரதேச செயலகப் பிரிவு



நடைபெற்றுக்கொண்டிருக்கின்ற அபயபுர பலநோக்கு
கட்டிட நிர்மாண பணிகள்
ரிதிமாலியத்த பிரதேச செயலகப் பிரிவு

## சிறிய நீர்ப்பாசனம்

மாவட்டத்தினுள் கால்வாய்கள், தாங்கிகள் மற்றும் விவசாய கிணறுகள் நிர்மாணித்தல் மற்றும் புனர்நிர்மாணம செய்தல் ஆகிய 71 செயற்றிட்டங்களிற்காக 55.66 ரூபா மில்லியன் நிதி ஒதுக்கப்பட்டு 30.09.2014 திகதி வரையில் 12.64 மில்லியன் ரூபா நிதி செலவிடப்பட்டு 09 செயற்றிட்டங்கள் பூர்த்தி செய்யப்பட்டுள்ளதுடன் 62 செயற்றிட்டங்களின் வேலைகள் நடைபெற்றுக்கொண்டிருக்கின்றன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



நிர்மாணிக்கப்பட்டுள்ள றஞ்ஜல்லவ
நீர்ப்பாசன கால்வாய்
ஹபுத்தளை பிரதேச செயலகப் பிரிவு

## குடிநீர் வழங்கல் மற்றும் சுத்திகரிப்பு

"மனிதர்களின் தூய்மையானதும் ஆரோக்கியமானதுமான வாழ்க்கை தூயநீர்வளம் கிடைப்பதில் தங்கியுள்ளது." இக் கூற்றை உண்மையாக்குவதற்காக குழாய் கிணறு அமைத்தல், மலசலகூடங்களை நிர்மாணித்தல், நீர் வழங்கல் ஆகிய செயற்பாடுகள் தொடர்பான 646 திட்டங்கள் அமுல்படுத்துவதற்கு திட்டமிடப்பட்டுள்ளது. இதற்காக 113.48 மில்லியன் ரூபா நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. 30.09.2014 திகதி வரையில் 62.83 ரூபா மில்லியன் நிதி செலவிடப்பட்டு 263 செயற்றிட்டங்கள் பூர்த்தி செய்யப்பட்டுள்ளதுடன் 194 செயற்றிட்டங்களின் வேலைகள் நடைபெற்றுக்கொண்டிருக்கின்றன. இதனூடாக பதுளை மாவட்டத்திற்கான 54,754 பயனாளிகளுக்கு குடிநீர் வசதிகளை பெற்றுக்கொடுப்பதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது.



கொஸ்கனுவெகம நீர்வழங்கல் திட்டம்
வெலிமட பிரதேச செயலகப் பிரிவு



கருகஹ எனசல்பட்டே நீர்வழங்கல் திட்டம்
கலிஎல பிரதேச செயலகப் பிரிவு

## வர்த்தகம்

பதுளை மாவட்டத்தில் பொருளாதார அபிவிருத்தி அமைச்சினால் மாகாண மற்றும் கிராம எழுச்சி நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் 14 கிராம சந்தைகளை புதிதாகவும் மீள்நிர்மாணம் செய்வதற்காகவும் 35.68 ரூபா மில்லியன் நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. 30.09.2014 ஆம் திகதி வரையில் 1.74 ரூபா மில்லியன் நிதி செலவிடப்பட்டு 4 செயற்றிட்டங்கள் பூர்த்தி செய்யப்பட்டுள்ளதுடன் 10 செயற்றிட்டங்களின் வேலைகள் நடைபெற்றுக்கொண்டிருக்கின்றன. இதன் மூலம் 2,802 பயனாளிகளுக்கு பிரதிலாபத்தை பெற்றுக்கொடுப்பதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வாழ்வாதார அபிவிருத்தி

விவசாயம் நமது நாட்டின் முக்கியமானதோர் வருமானத்தை அதிகரிக்கச்செய்யும் முதலாகும். நெல் அறுவடைசெய்தல், வீட்டுத்தோட்டம் செய்தல், விதை உற்பத்தி, பழவகை உற்பத்தி மற்றும் காளான் வளர்ப்பு, தென்னை உற்பத்தி போன்ற பல திட்டங்கள் விவசாயிகளை ஊக்குவிக்கும் நோக்குடன் புதிய விவசாய உற்பத்திகளை மேற்கொள்ளும் நோக்குடனும் அமுலாக்கம் செய்யப்பட்டு வருகின்றன. மேலும் கிராம மற்றும் சிறிய அளவிலான கைத்தொழில்களின் உற்பத்தித் திறனை மேம்படுத்தும் வழிகாட்டிகளை இது தோற்றுவிக்கும். பதுளை மாவட்டத்தில் 6 விவசாய மற்றும் 6 சிறு அளவிலான கைத்தொழில் உற்பத்தி செயற்றிட்டங்களிற்காக 14.38 மில்லியன் ரூபா ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இதன்மூலம் 1,107 பயனாளர்கள் நன்மையடைவர்.



கட்டுகஹ பிரதேச வாழ்வின் எழுச்சி
பயனாளிகளை வலுவூட்டல்
ஹாலிஎல பிரதேச செயலகப் பிரிவு


## வனவிலங்குகள் மற்றும் வன பாதுகாப்பு

தேசிய பொருளாதாரத்தை வலுப்படுத்துவதற்கும் கிராமப்புற மக்களின் சமூக நலனிற்கும் வனவியலின் பங்களிப்பு மிகவும் இன்றியமையாததொன்றாகும். எனவே வனஜீவராசிகளையும் மற்றும் வன பாதுகாப்பையும் மேற்கொள்ளவேண்டியுள்ளது. எனவே இம் மாவட்டத்தில் மின்வேலிகளை அமைத்தல் மற்றும் வனசரணாலயங்கள் பாதுகாப்பிற்காக 2 செயற்றிட்டங்களுக்காக 0.40 ரூபா மில்லியன் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மொனராகலை மாவட்டம்




## மாவட்டம் தொடர்பான அடிப்படைத் தரவுகள்

| | | |
|---|---|---|
| பிரதேச செயலகப் பிரிவுகளின் எண்ணிக்கை | | 11 |
| கிராம சேவகர் பிரிவுகளின் எண்ணிக்கை | | 319 |
| நிலப்பரப்பு (சதுர கி.மீ) | | 5,639 |
| மொத்த சனத்தொகை (2014) | | 463,000 |
| குடும்பங்களின் எண்ணிக்கை (2012) | | 119,417 |
| சமுர்த்தி நன்மை பெறும் குடும்பங்களின் எண்ணிக்கை (2014) | | 47153 |
| குடியடர்த்தி (2014) நபர்களின் எண்ணிக்கை (சதுர கி.மீ) | | 84 |
| சனத்தொகையை வகைப்படுத்தல் | | |
| பால் ரீதியாக (2014) | ஆண்கள் | 231,000 |
| | பெண்கள் | 232,000 |

மூலம்: தொகைமதிப்பு புள்ளிவிபரத் திணைக்களம், வாழ்வின் எழுச்சி அபிவிருத்தி திணைக்களம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அபிவிருத்தி திட்டங்களின் முன்னேற்ற மீளாய்வு - மொனராகலை மாவட்டம்



**மொத்த நிதி ஒதுக்கீடு**
**ரூபா 1,927.25 மில்.**

### நிகழ்ச்சித் திட்டம் ரீதியான ஒதுக்கீட்டு பகிர்வு

| நிதி வழங்குனர் | நிகழ்ச்சித் திட்டம் | ஒதுக்கீடு ரூபா (மில்) |
|---|---|---|
| உள்நாட்டு நிதி | ஒரு கிராமம் ஒரு நிகழ்ச்சித் திட்டம் | 319.00 |
| | கிராம எழுச்சி நிகழ்ச்சித் திட்டம் (கமநெகும) | 164.50 |
| | பலாத்நெகும / புறநெகும | 554.00 |
| | கிராம பாடசாலைகளில் கழிவகற்றல் மற்றும் ஏனைய வசதிகளை மேம்படுத்தல் | 40.00 |
| | வனஜீவராசிகள் மற்றும் வன பாதுகாப்பு | 90.00 |
| | பன்முகப்படுத்தப்பட்ட வரவுசெலவுத்திட்டம் | 25.00 |
| | மக்கள் பிரதிநிதிகளின் பங்களிப்புடனான திட்ட அமுலாக்கல்கள் | 100.00 |
| | வாழ்வின் எழுச்சி நிகழ்ச்சித் திட்டம் (திவி நெகும) | 80.00 |
| | கிராம பாலங்கள் மற்றும் அணுகுபாதைகளின் அபிவிருத்தி | 140.00 |
| | சிறிய நீர்ப்பாசன அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டம் | 211.00 |
| வெளிநாட்டு நிதித் திட்டங்கள் | | 264.45 |
| **மொத்தம்** | | 1,987.25 |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அபிவிருத்திச் செயற்றிட்டங்களின் முன்னேற்றம்

## மின்சாரம்

"அனைத்து கிராமங்களுக்கும் மின்சாரம்" எனும் மகிந்த சிந்தனையின் எதிர்கால நோக்கிற்கமைய கிராமப்புற மின்சார வழங்கலை விஸ்தரிப்பதற்காக ஒரு கிராமத்திற்கு ஒரு வேலை மற்றும் பிராந்திய எழுச்சி வேலைத்திட்டம் ஆகிய நிகழச்சித்திட்டங்களினூடாக 8 திட்டங்கள் அமுல்படுத்தப்பட்டுள்ளன. இதற்கு 0.67 ரூபா மில்லியன் நிதி ஒதுக்கீட்டில் 1 செயற்றிட்டம் நிறைவு செய்யப்பட்டுள்ள அதே வேளை 7 வேலைத்திட்டங்கள் செயற்படுத்தப்படுகின்றன. இதற்கான மொத்த செலவு 0.25 ரூபா மில்லியன் ஆகும்.

## வீதிகள் மற்றும் பாலங்கள்

கிராமத்தில் வாழும் மக்கள் இலகுவாக நகர்ப்புறங்களுக்கு செல்வதனூடாக தமது வாழ்க்கை தரத்தை விருத்தி செய்வதற்கான முக்கியமான வழியாக கிராமப்புற வீதிகள் காணப்படுகின்றன. இந் நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் கிராம வீதிகளை அபிவிருத்தி செய்தல் அல்லது நிர்மாணித்தல் ஆகிய 801 வேலைத்திட்டங்களுக்காக 480.04 ரூபா மில்லியன் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. 30.09.2014 திகதி வரையில் 253 செயற்றிட்டங்களின் வேலைகள் பூர்த்திசெய்யப்பட்டுள்ளன. இதற்காக 188.46 ரூபா மில்லியன் நிதி செலவிடப்பட்டுள்ளது. 538 செயற்றிட்டங்களின் வேலைகள் நடைபெற்றுக்கொண்டிருக்கின்றன. இந்த வேலைத்திட்டத்தினால் 164,970 பயனாளிகள் நன்மையடைவார்கள் என எதிர்பார்க்கப்படுகிறது.



சீரமைக்கப்பட்ட ருகுணுதணவ்வ நீதிமன்ற வீதி
சியம்பலாண்டுவ பிரதேச செயலகப் பிரிவு



நிர்மாணிக்கப்பட்ட ஹரலுவெவ துன்ஹிரியாய குடாகமோன வீதி
செவனகல பிரதேச செயலகப் பிரிவு

## கல்வி

இத்துறையின் கீழ் மொனராகலை மாவட்டத்திலுள்ள பாடசாலைகளை அபிவிருத்தி செய்வதற்காக பல்வேறுபட்ட செயற்பாடுகள் அமுல்படுத்தப்பட்டன அவையானவன, சுகாதார அபிவிருத்தி, பாடசாலைகளுக்கு மின்சாரம் வழங்கல். நீர் வழங்கல், பாடசாலைக் கட்டிடங்களை புனர்நிர்மாணம் செய்தல், புதிய கட்டிடங்களை நிர்மாணித்தல், விளையாட்டு வசதிகள் மற்றும் ஆய்வுகூட வசதிகள் என்பனவாகும். இதற்காக 23.78 ரூபா மில்லியன் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதுடன் 182 செயற்றிட்டங்கள் அமுல்படுத்தப்படுகின்றது. இவற்றுள் 14 செயற்றிட்டங்களின் வேலைகள் பூர்த்தி செய்யப்பட்டுள்ளன. இதற்காக 4.28 ரூபா மில்லியன் நிதி செலவிடப்பட்டுள்ளது. 168 செயற்றிட்டங்கள் நடைபெற்றுக்கொண்டிருக்கின்றன.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சுகாதாரம்

"ஆரோக்கியமே நாட்டின் உயர்ந்த செல்வம்" எனும் கூற்றுக்கமைய 2014 ஆம் ஆண்டு 38 சுகாதாரம் தொடர்பான செயற்றிட்டங்களுக்காக 4.05 ரூபா மில்லியன் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. மாவட்டத்திற்குள் சுகாதார நிலையங்கள், சிறுவர் மற்றும் மாதர் சுகாதார சிகிச்சை நிலையங்கள் புனரமைப்பு, நடைபாதை அமைத்தல் மற்றும் வைத்திய உபகரணங்களை வழங்கல் ஆகியன அடங்குகின்றன. அவற்றில் 2 செயற்றிட்டங்களின் வேலைகள் பூர்த்திசெய்யப்பட்டுள்ளன. இதற்காக 0.81 மில்லியன் ரூபா செலவிடப்பட்டுள்ளது. 36 செயற்றிட்டங்களின் வேலைகள் நடைபெற்றுக்கொண்டிருக்கின்றன.

## சமூக நலன்புரி

2014 ஆம் ஆண்டில் இம்மாவட்டத்தின் சமூக நலன்புரிச் செயற்றிட்டங்களுக்காக முன்பள்ளி அபிவிருத்தி, சமய நிலையங்கள், சிறுவர் காப்பகங்கள் மற்றும் முதியோர் இல்லங்களின் அபிவிருத்தி மற்றும் ஏனைய சமூக அபிவிருத்தி ஆகிய செயற்பாடுகளுக்காக 206.47 ரூபா மில்லியன் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. 901 செயற்றிட்டங்கள் அமுல்படுத்தப்பட்டுள்ளன. இவற்றுள் 289 செயற்றிட்டங்கள் பூர்த்தி செய்யப்பட்டுள்ளன. இதற்கான மொத்த செலவு 17.11 ரூபா மில்லியன் ஆகும். 612 செயற்றிட்டங்கள் நடைபெற்றுக்கொண்டிருக்கின்றன.



ஹிதிகிவ்வல விஹாரஸ்தான வளாகத்தில்
நிர்மாணிக்கப்பட்டுள்ள முன்பள்ளி
மொனராகலை பிரதேச செயலகப் பிரிவு



புனர்நிர்மாணம் செய்யப்பட்ட
பரவயாய பல்நோக்கு கட்டிடம்
சியம்பலாண்டுவ பிரதேச செயலகப் பிரிவு

## சிறிய நீர்ப்பாசனம்

இம்மாவட்டத்தில் 19.48 ரூபா மில்லியன் நிதி ஒதுக்கீட்டில் 10 சிறிய நீர்ப்பானத்திட்டங்கள் அமுல்படுத்தப்பட்டுள்ளன. அதில் 8 செயற்றிட்டங்கள் நிறைவுபெற்றும் மற்றும் 2 செயற்றிட்டங்களின் வேலைகள் நடைபெற்றுக்கொண்டுமிருக்கின்றன. 30.09.2014 திகதி வரையில் 12.47 ரூபா மில்லியன் நிதி செலவிடப்பட்டுள்ளது. பயனாளர்களின் எண்ணிக்கை 1,645 ஆகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



நிர்மாணிக்கப்பட்டுள்ள கிவ்ல அற தாங்கி
சியம்பலாண்டுவ பிரதேச செயலகப் பிரிவு



பீலகம வாவி
வெல்லவாய பிரதேச செயலகப் பிரிவு

## குடிநீர் வழங்கல் மற்றும் பொதுச் சுகாதாரம்

2014 ஆம் ஆண்டில் பொதுக் குழாய்க்கிணறு நிர்மாணித்தல், மலசலகூடங்களை நிர்மாணித்தல் மற்றும் நீர் வழங்கல் திட்டம் ஆகியன இனங்காணப்பட்டு 525 திட்டங்கள் அமுல்படுத்தப்பட்டுள்ளன. இதற்காக 107.69 ரூபா மில்லியன் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதுடன் 26 செயற்றிட்டங்கள் பூர்த்தி செய்யப்பட்டுள்ளன. இதற்காக 15.05 ரூபா மில்லியன் நிதி செலவிடப்பட்டுள்ளது. 164 செயற்றிட்டங்களின் வேலைகள் நடைபெற்றுக்கொண்டிருக்கின்றன. இதனூடாக அண்ணளவாக 84,197 பயனாளிகளுக்கு நன்மை பெற்றுக்கொடுப்பதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது.



ரோகண புரவிலிருந்து இதுனில்புர வரையான
நீர்வழங்கல் திட்டம்
தனமன்வில பிரதேச செயலகப் பிரிவு



நீர்வழங்கல் திட்டம் பீலவெல
புத்தள பிரதேச செயலகப் பிரிவு

## வர்த்தகம்

சந்தை என்பது கேள்வியாளனதும், நிரம்பலாளனதும் தேவைகளை நிறைவு செய்யும் இடமாகும் அவர்களுக்கு உதவுவதற்காக எமது அமைச்சானது கிராம சந்தைகள் மற்றும் களஞ்சிய சாலைகளை நிர்மாணித்தல், புனர்நிர்மாணம் செய்தல் ஆகிய திட்டங்களை அறிமுகப்படுத்தியுள்ளது. இதற்காக 59.33 ரூபா மில்லியன் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதுடன் 4 திட்டங்கள் அமுல்படுத்தப்பட்டுள்ளன. 30.09.2014 திகதி வரையில் 23.50 மில்லியன் ரூபா செலவிடப்பட்டுள்ளது. ஒரு செயற்றிட்டம் பூர்த்தி செய்யப்பட்டுள்ளதுடன் 75,000 பயனாளிகளுக்கு பிரதிலாபத்தை பெற்றுக்கொடுப்பதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





புத்தள வாரச்சந்தை
புத்தள பிரதேச செயலகப் பிரிவு

## வாழ்வாதார அபிவிருத்தி

2014 ஆம் ஆண்டில் 89 வாழ்வாதார செயற்றிட்டங்கள் இனங்காணப்பட்டு அமுல்படுத்தப்பட்டுள்ளன அதன் மூலம் நெற்பயிர்ச்செய்கை, விதை உற்பத்தி நாற்றுமேடைகள் மற்றும் ஏனைய பயிர்ச்செய்கைகளை மேம்படுத்துவதற்கு 16.16 ரூபா மில்லியன் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது 2014.09.30 ஆம் திகதி வரையில் ஒரு செயற்றிட்டம் நிறைவு செய்யப்பட்டுள்ளது. ஏனைய வேலைத்திட்டங்கள் நடைபெற்றுக்கொண்டிருக்கின்றன. 5,684 பயனாளிகளுக்கு பிரதிலாபத்தை பெற்றுக்கொடுப்பதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது.



கஹம்பான பிரதேச பயிர்ச்செய்கை
மொனராகலை பிரதேச செயலகப் பிரிவு



போகம கொடித்தோடை பயிர்ச்செய்கை
செவனகல பிரதேச செயலகப் பிரிவு

## வனவிலங்குகள் மற்றும் வன பாதுகாப்பு

வனவிலங்குகள் மற்றும் வனப் பாதுகாப்பு நடவடிக்கையானது வனவிலங்குளினதும் காடுகளிற்கு அருகில் வாழும் மனிதர்களினதும் பாதுகாப்பிற்கு உதவுகின்றது. இதற்காக 33.85 ரூபா மில்லியன் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. வனப்பாதுகாப்பு தொடர்பான 8 செயற்றிட்டங்கள் புத்தள பிரதேச செயலகப் பிரிவிலும் மேலும் மின்சாரவேலி நிர்மாணித்தலுக்கான செயற்றிட்டங்கள் மொனராகலை மற்றும் தனமல்வில பிரதேச செயலகப் பிரிவுகளிலும் அமுல்படுத்தப்பட்டுள்ளன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விசேட குறிப்பு - 08

# நுகர்வோர் பயனுறும் அதேவேளை சிறு மற்றும் நடுத்தர அளவிலான தொழில் முயற்சியாளர்களுக்கான வாராந்த சந்தை வசதிகளை விரிவுபடுத்தும் அபிவிருத்தி வேலைத்திட்டம்

இலங்கையில் அதிகளவிலான மக்கள் கிராமப் புறங்களிலும் பெருந்தோட்டப் பகுதிகளிலும் வாழ்ந்து வருகின்றார்கள். இவர்களது நாளாந்த தேவையை பூர்த்தி செய்வதில் பங்களிப்பு செய்யும் காரணியாக வாரந்த சந்தைகளின் அபிவிருத்தி வேலைத்திட்டத்தினை பொருளாதார அபிவிருத்தி அமைச்சினால் இனங்காணப்பட்டது.

இவ்வாறு வாராந்த சந்தைகளை அபிவிருத்தி செய்யும் போது, அது மஹிந்த சிந்தனையின் எதிர்கால நோக்கிலுள்ளவாறு உள்நாட்டுப் பொருளாதாரத்தை வலிமையாக்கும் நோக்கத்தை நிறைவுபடுத்துவதோடு திவிநெகும பயனாளிகளின் மேலதிக விவசாய உற்பத்திப் பொருட்களையும். சிறுகைத்தொழில் முயற்சியாளர்களின் உற்பத்திகளையும் நுகர்வோருக்கு சிறந்த விலையில் வழங்க வழிவகுக்கின்றது.

வாராந்தச் சந்தை அபிவிருத்தியானது இன்றைய காலகட்டத்தில் அவசியமான ஒன்றாகும். மேலும் கிராம உற்பத்திகளை சந்தைப்படுத்துவதன் மூலம் கிராமிய பொருளாதாரத்தை வலுவூட்டுவதற்காக கமநெகும நிகழ்ச்சித்திட்டதின் மூலம் புனரமைக்கப்பட்ட கிராமிய வீதி வலையமைப்புக்களின் பயன்பாட்டிற்கும் இது வாய்ப்பளிக்கின்றது.

அவ்வாறே, வாராந்த சந்தை அபிவிருத்தியானது விசேடமாக கிராமப் புறங்களில் வாழும் மக்களின் வாழ்வாதாரத்தை உயர்த்துவதோடு அமைச்சால் அமுல்படுத்தப்படும் அனைத்து நிகழ்ச்சித்திட்டங்கள் மற்றும் கருத்திட்டங்களின் மூலமான உற்பத்தி அதிகரிப்பிலும் அது பங்களிப்புச் செய்கின்றது.

**வாராந்த சந்தைகளை அபிவிருத்தி செய்வதனூடாக பெறப்பட்ட பயன்கள்**

- சத்துள்ள மற்றும் ஆரோக்கியமான உணவுப் பொருட்களைப் பெற்றுக்கொள்ளும் திறன் ஏற்படும்
- விற்பனையாளர்கள் மற்றும் நுகர்வோர்கள் நிரந்தரமான சந்திப்பை ஏற்படுத்தல்
- கிராம மற்றும் திவிநெகும சிறுகைத்தொழில் முயற்சியாளர்களுக்குச் சந்தை வாய்ப்பினை வழங்குவதன் மூலம் அவர்களின் வாழ்க்கைத்தரத்தை உயர்த்துதல்
- சந்தைகளைச் சூழவுள்ள இடங்களில் அகற்றப்படும் கழிவுகளை நாளாந்தம் சுத்திகரித்து முகாமை செய்தல் மூலம் சூழல் மாசடைதலைக் குறைத்தல்.

கம்பஹா மாவட்டத்தில் வாரந்தச் சந்தை அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டமானது முன்னோடி நிகழ்ச்சித்திட்டமாக 2011 ஆம் ஆண்டிலிருந்து 2014 ஆம் ஆண்டு வரை நடைபெறுகிறது. இதில் 30.09.2014 ஆம் திகதிய காலப்பகுதி வரை 16 வாராந்தச் சந்தைகள் கட்டி முடிக்கப்பட்டுள்ளன. மேலும் 5 சந்தைத் தொகுதிகள் கட்டப்படுகின்றன. இதற்காக 149.72 ரூபா மில்லியன் செலவிடப்பட்டுள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org






வாராந்தச் சந்தைத் தொகுதிக்குள் விற்பனையாளர்களும் நுகர்வோரும்.

முன்னோடிக் கருத்திட்டத்தின் வெற்றியைத் தொடர்ந்து பொருளாதார அபிவிருத்தி அமைச்சு வாராந்தச் சந்தையை நாடளாவிய ரீதியில் அமைப்பதற்காக 2014 ஆம் ஆண்டு 691.29 ரூபா மில்லியன் ஒதுக்கீடு செய்துள்ளது. 31.08.2014 ஆம் திகதியில் 110 வாராந்தச் சந்தைகளைக் கட்டுவதற்கு அனுமதியளிக்கப்பட்டுள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இரத்தினபுரி மாவட்டம்




### மாவட்டம் தொடர்பான அடிப்படைத் தரவுகள்

| | | |
|---|---|---|
| பிரதேச செயலகப் பிரிவுகளின் எண்ணிக்கை | | 17 |
| கிராம சேவகர் பிரிவுகளின் எண்ணிக்கை | | 575 |
| நிலப்பரப்பு (சதுர கி.மீ) | | 3,275 |
| மொத்த சனத்தொகை (2014) | | 1,110,000 |
| குடும்பங்களின் எண்ணிக்கை (2012) | | 283,797 |
| சமுர்த்தி நன்மை பெறும் குடும்பங்களின் எண்ணிக்கை (2014) | | 111,950 |
| குடியடர்த்தி (2014) நபர்களின் எண்ணிக்கை (சதுர கி.மீ) | | 343 |
| சனத்தொகையை வகைப்படுத்தல் | | |
| பால் ரீதியாக (2014) | ஆண்கள் | 549,000 |
| | பெண்கள் | 561,000 |

மூலம்: தொகைமதிப்பு புள்ளிவிபரத் திணைக்களம், வாழ்வின் எழுச்சி அபிவிருத்தி திணைக்களம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அபிவிருத்தி திட்டங்களின் முன்னேற்ற மீளாய்வு - இரத்தினபுரி மாவட்டம்



**மொத்த நிதி ஒதுக்கீடு**
**ரூபா 3,609.00 மில்.**

### நிகழ்ச்சித் திட்டம் ரீதியான ஒதுக்கீட்டு பகிர்வு

| நிதி வழங்குனர் | நிகழ்ச்சித் திட்டம் | ஒதுக்கீடு ரூபா (மில்) |
|---|---|---|
| உள்நாட்டு நிதி | ஒரு கிராமம் ஒரு நிகழ்ச்சித் திட்டம் | 575.00 |
| | கிராம எழுச்சி நிகழ்ச்சித் திட்டம் (கமநெகும) | 406.00 |
| | பலாத்நெகும / புறநெகும | 1,362.00 |
| | கிராம பாடசாலைகளில் கழிவகற்றல் மற்றும் ஏனைய வசதிகளை மேம்படுத்தல் | 90.00 |
| | வனஜீவராசிகள் மற்றும் வன பாதுகாப்பு | 25.00 |
| | பன்முகப்படுத்தப்பட்ட வரவுசெலவுத்திட்டம் | 50.00 |
| | மக்கள் பிரதிநிதிகளின் பங்களிப்புடனான திட்ட அமுலாக்கல்கள் | 175.00 |
| | வாழ்வின் எழுச்சி நிகழ்ச்சித் திட்டம் (திவி நெகும) | 180.00 |
| | கிராம பாலங்கள் மற்றும் அணுகுபாதைகளின் அபிவிருத்தி | 360.00 |
| | சிறிய நீர்ப்பாசன அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டம் | 106.00 |
| வெளிநாட்டு நிதித் திட்டங்கள் | | 280.00 |
| மொத்தம் | | 3,609.00 |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மின்சாரம்

கிராமப்புற மின்சார வழங்கலை விஸ்தரித்தல் மற்றும் பராமரித்தல் அடங்கலான 11 மின்சார செயற்றிட்டங்களை அமுல்படுத்துவதற்காக இரத்தினபுரி மாவட்டத்திற்கு 1.58 ரூபா மில்லியன் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இவற்றுள் 3 செயற்றிட்டங்கள் நிறைவு செய்யப்பட்டுள்ளதோடு மிகுதி வேலைத்திட்டங்கள் அனைத்தும் தற்போது செயற்படுத்தப்பட்டுவருகின்றன.

## வீதிகள் மற்றும் பாலங்கள்

பொருளாதார அபிவிருத்தி அமைச்சினால் இம்மாவட்டத்தில் கிராம வீதிகள் மற்றும் பாலங்களை அபிவிருத்தி செய்யும் வேலைத்திட்டத்தின் கீழ் 3,426 கருத்திட்டங்கள் தெரிவுசெய்யப்பட்டன. இவற்றிற்காக 2,267.99 ரூபா மில்லியன் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. 30.09.2014 திகதி வரையில் 1,439 செயற்றிட்டங்களின் வேலைகள் பூர்த்திசெய்யப்பட்டுள்ளன. 1,987 செயற்றிட்டங்களின் வேலைகள் நடைபெற்றுக்கொண்டிருக்கின்றன. இவ்வேலைத்திட்டங்களிற்காகவும் 658.92 மில்லியன் ரூபா செலவிடப்பட்டுள்ளது.



கொங்கிரீட் இடப்பட்ட கங்காபட ஹந்த வீதி, ஆயகம பிரதேச செயலகப் பிரிவு



கொங்கிரீட் இடப்பட்ட குக்குழுவத்த வீதி, ரக்வான பிரதேச செயலகப் பிரிவு

## கல்வி

இரத்தினபுரி மாவட்டத்தில் இனங்காணப்பட்ட 417 செயற்றிட்டங்கள் பாடசாலைகளில் சுகாதார அபிவிருத்தி, பாடசாலைகளுக்கு மின்சாரம் வழங்கல், நீர் வழங்கல், பாடசாலைக் கட்டிடங்களை புனர்நிர்மாணம் செய்தல், புதிய கட்டிடங்களை நிர்மாணித்தல், விளையாட்டு வசதிகள் மற்றும் ஆய்வுகூட வசதிகள் போன்ற அபிவிருத்தி வேலைகளைச் செய்வதற்காக 175.18 ரூபா மில்லியன் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இவ்வேலைத்திட்டங்களுள் 133 செயற்றிட்டங்கள் பூர்த்தி செய்யப்பட்டுள்ளதுடன் 284 செயற்றிட்டங்கள் நடைபெற்றுக்கொண்டிருக்கின்றன. இதற்காக 20.61 ரூபா மில்லியன் நிதி செலவிடப்பட்டுள்ளது. அண்ணளவாக 281,278 மாணவர்கள் மற்றும் ஆசிரியர்கள் நன்மையடையவுள்ளனர்.



பாதுகாப்பு வலைகளுடன் புனரமைப்புச் செய்யப்பட்ட சுவர்ணா ஜயந்தி வித்தியாலயம், அகெலியகொட பிரதேச செயலகப் பிரிவு



சுற்றுமதில் மற்றும் பாடசாலை நுழைவாயில் நிர்மாணிக்கப்பட்ட கவந்திஸ்ஸ வித்தியாலயம், பலாங்கொட பிரதேச செயலகப் பிரிவு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுகாதார வசதிகளை விருத்திசெய்யும் குறிக்கோளுடன் சுகாதார விடயங்கள் சார்ந்த 34 செயற்றிட்டங்களுக்காக 35.39 ரூபா மில்லியன் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. மாவட்டத்திற்குள் சுகாதார நிலையங்கள், சிறுவர் மற்றும் மாதர் சிகிச்சை நிலையங்களின் புனரமைப்பு, வைத்திய உபகரணங்களை வழங்கல் மற்றும் உடற்பயிற்சி மேடைகளை அமைத்தல் ஆகியன இவற்றுள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. 4 செயற்றிட்டங்கள் பூர்த்தி செய்யப்பட்டுள்ளதோடு 30 செயற்றிட்டங்கள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. 30.09.2014 திகதி வரையில் இதற்காக 2.37 ரூபா மில்லியன் நிதி செலவிடப்பட்டுள்ளது. இச்செயற்றிட்டங்களின் மூலம் 86,861 மக்கள் பயனடையவுள்ளனர்.

## சமூக நலன்புரி செயற்பாடுகள்

இம்மாவட்டத்தின் 17 பிரதேச செயலகங்களிலும் முன்பள்ளி அபிவிருத்தி, சமய நிலையங்கள், சிறுவர் காப்பகங்கள் மற்றும் முதியோர் இல்லங்களின் அபிவிருத்தி மற்றும் ஏனைய சமூக அபிவிருத்திச் செயற்பாடுகளுக்காக 896 செயற்றிட்டங்கள் இனங்காணப்பட்டுள்ளன. இவற்றிற்காக 348.63 ரூபா மில்லியன் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. 30.09.2014 திகதி வரையில் 174 செயற்றிட்டங்கள் பூர்த்தி செய்யப்பட்டுள்ளதுடன் 722 செயற்றிட்டங்கள் நடைபெற்றுக்கொண்டிருக்கின்றன. இதற்கான மொத்த செலவினம் 104.43 ரூபா மில்லியன் ஆகும். இச்செயற்றிட்டங்களின் மூலம் 342,849 மக்கள் பயனடையவுள்ளனர்.



கட்டட நிர்மாண வேலைகள் நிறைவுற்றுள்ள
தம்புளுவான சேவா பியச,
அலபத் பிரதேச செயலகப் பிரிவு

## சிறிய நீர்ப்பாசனம்

இம்மாவட்டத்தில் சிறிய நீர்ப்பானத்திட்டங்களை அபிவிருத்தி செய்யும் குறிக்கோளுடன் 264 செயற்றிட்டங்கள் இனங்காணப்பட்டுள்ளன. 126.46 ரூபா மில்லியன் நிதி ஒதுக்கிடப்பட்டுள்ளது. அவற்றுள் 22 செயற்றிட்டங்கள் நிறைவுபெற்றுள்ளதுடன் 184 திட்டங்கள் நடைபெற்றுக்கொண்டிருக்கின்றன. 30.09.2014 திகதி வரையில் 26.61 மில்லியன் ரூபா செலவிடப்பட்டுள்ளது. இம்மாவட்டத்திலுள்ள 52,615 மக்கள் இத்திட்டங்களினால் பயனடையவுள்ளனர்.

## குடிநீர் வழங்கல் மற்றும் பொதுச் சுகாதாரம்

2014 ஆம் ஆண்டில் பொது குழாய் கிணறு நிர்மாணித்தல், மலசலகூடங்களை நிர்மாணித்தல் மற்றும் நீர் வழங்கல் திட்டம் ஆகிய 889 திட்டங்கள் இனங்காணப்பட்டு அமுல்படுத்தப்பட்டு வருகின்றன. இதற்காக 127.35 மில்லியன் ரூபா நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதுடன் 132 செயற்றிட்டங்கள் பூர்த்தி செய்யப்பட்டுள்ளதுடன் 757 செயற்றிட்டங்கள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. இதற்காக 38.64 ரூபா மில்லியன் செலவிடப்பட்டுள்ளது. ஏறத்தாழ 35,993 பயனாளிகள் இத்திட்டங்களால் பயனடைவார்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வர்த்தகம்

கிராம சந்தைகள் மற்றும் களஞ்சிய சாலைகளின் நிர்மாணம் மற்றும் புனரமைப்பு செய்தல் போன்றவற்றிற்காக 35.07 ரூபா மில்லியன் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதுடன் 30.09.2014 திகதி வரையில் 10 செயற்றிட்டங்கள் பூர்த்தி செய்யப்பட்டுள்ளன.

## வாழ்வாதார அபிவிருத்தி

இவ்வாண்டில் 2014.09.30 ஆம் திகதி வரையில் 8 வாழ்வாதார செயற்றிட்டங்கள் இனங்காணப்பட்டு அமுல்படுத்தப்பட்டுள்ளன. அதன் மூலம் வீட்டுத்தோட்டங்கள், ஆடு வளர்ப்பு, கோழி வளர்ப்பு, பால் உற்பத்தி, முட்டைகள், மற்றும் சிறியளவிலான மீன்பிடி போன்ற வாழ்வாதார செயற்றிட்டங்களை ஊக்குவிக்கும் முகமாக விதைகள், நாற்றுக்கள் மற்றும் மரங்கள் விநியோகிக்கப்பட்டுள்ளன. இவற்றிற்காக 15.40 ரூபா மில்லியன் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.


## வனவிலங்குகள் மற்றும் வனப் பாதுகாப்பு

இம்மாவட்டத்தில் வனவிலங்குகள் மற்றும் வனப்பகுதி பாதுகாப்பிற்காக மின்வேலிகள் அமைத்தல், இவ்வேலிகளிற்கு இணையாக எலுமிச்சை போன்ற முட் தாவரங்களை அமைத்தல் போன்ற செயற்பாடுகளிற்காக 25.00 ரூபா மில்லியன் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. வேலிகபொல, எம்பிலிப்பிட்டிய, பலாங்கொட மற்றும் இம்புலுபெ பிரதேச செயலகப் பிரிவில் 8 வனபாதுகாப்பு திட்டங்கள் இனங்காணப்பட்டுள்ளன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கேகாலை மாவட்டம்




## மாவட்டம் தொடர்பான அடிப்படைத் தரவுகள்

| | | |
|---|---|---|
| பிரதேச செயலகப் பிரிவுகளின் எண்ணிக்கை | | 11 |
| கிராம சேவகர் பிரிவுகளின் எண்ணிக்கை | | 573 |
| நிலப்பரப்பு (சதுர கி.மீ) | | 1,693 |
| மொத்த சனத்தொகை (2014) | | 850,000 |
| குடும்பங்களின் எண்ணிக்கை (2012) | | 218,293 |
| சமுர்த்தி நன்மை பெறும் குடும்பங்களின் எண்ணிக்கை (2014) | | 68,282 |
| குடியடர்த்தி (2014) நபர்களின் எண்ணிக்கை (சதுர கி.மீ) | | 505 |
| சனத்தொகையை வகைப்படுத்தல் | | |
| பால் ரீதியாக (2014) | ஆண்கள் | 407,000 |
| | பெண்கள் | 443,000 |

மூலம்: தொகைமதிப்பு புள்ளிவிபரத் திணைக்களம், வாழ்வின் எழுச்சி அபிவிருத்தி திணைக்களம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அபிவிருத்தி திட்டங்களின் முன்னேற்ற மீளாய்வு - கேகாலை மாவட்டம்



**மொத்த நிதி ஒதுக்கீடு ரூபா 2,911.00 மில்.**

### நிகழ்ச்சித் திட்டம் ரீதியான ஒதுக்கீட்டு பகிர்வு

| நிதி வழங்குனர் | நிகழ்ச்சித் திட்டம் | ஒதுக்கீடு ரூபா (மில்) |
|---|---|---|
| உள்நாட்டு நிதி | ஒரு கிராமம் ஒரு நிகழ்ச்சித் திட்டம் | 573.00 |
| | கிராம எழுச்சி நிகழ்ச்சித் திட்டம் (கமநெகும) | 311.00 |
| | பலாத்நெகும / புறநெகும் | 1,045.00 |
| | கிராம பாடசாலைகளில் கழிவகற்றல் மற்றும் ஏனைய வசதிகளை மேம்படுத்தல் | 54.00 |
| | பன்முகப்படுத்தப்பட்ட வரவுசெலவுத்திட்டம் | 50.00 |
| | மக்கள் பிரதிநிதிகளின் பங்களிப்புடனான திட்ட அமுலாக்கல்கள் | 200.00 |
| | வாழ்வின் எழுச்சி நிகழ்ச்சித் திட்டம் (திவி நெகும) | 180.00 |
| | கிராம பாலங்கள் மற்றும் அணுகுபாதைகளின் அபிவிருத்தி | 225.00 |
| | சிறிய நீர்ப்பாசன அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டம் | 51.00 |
| | | |
| வெளிநாட்டு நிதி திட்டங்கள் | | 222.00 |
| மொத்தம் | | 2,911.00 |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மின்சாரம்

2014 ஆம் ஆண்டில் இம் மாவட்டத்தில் மின்சார வழங்கலை விஸ்தரித்தல் மற்றும் பராமரித்தல் அடங்கலான 98 மின்சார செயற்றிட்டங்கள் அமுல்படுத்தப்படுகின்றன. 30.09.2014 ஆம் திகதி வரை ரூபா 4.82 மில்லியன் நிதி செலவீடு செய்யப்பட்டுள்ளது.

## வீதி மற்றும் பாலங்கள்

கேகாலை மாவட்டத்தில் கிராம வீதிகள் மற்றும் பாலங்களை அபிவிருத்தி செய்யும் பணியின் கீழ் 11 பிரதேச செயலக பிரிவுகளில் 3,848 கருத்திட்டங்கள் தெரிவுசெய்யப்பட்டன. 30.09.2014 திகதி வரையில் 487 செயற்றிட்டங்களின் வேலைகள் பூர்த்திசெய்யப்பட்டுள்ளன. 3,361 செயற்றிட்டங்கள் நடைபெற்றுக்கொண்டிருக்கின்றன. இவ்வேலைத்திட்டங்களிற்காக 279.32 ரூபா மில்லியன் நிதி செலவிடப்பட்டுள்ளது.



கொங்கிறீட் இடப்பட்ட மஹாவலி வீதி
யடியாந்தோட்டை பிரதேச செயலக பிரிவு



கொங்கிறீட் இடப்பட்ட
பொடவெல்ல குருந்தெனிய வீதி
வரகாபொல பிரதேச செயலக பிரிவு

வீதி அபிவிருத்திக்கு இணையாக வீதியினை பாதுகாக்கும் நோக்கோடு தடுப்புச் சுவர்கள், கல்வெட்டுக்கள் மற்றும் பாலங்கள் நிர்மாணிக்கப்பட்டுவருகின்றன. 2014.09.30 ஆம் திகதி வரையான பௌதீக, நிதி முன்னேற்றங்கள் கீழே தரப்பட்டுள்ளன.

| கருத்திட்டம் | அனுமதிக்கப்பட்ட கருத்திட்ட எண்ணிக்கை | கருத்திட்ட எண்ணிக்கை | | 30.09.2014 வரையான செலவீனம் |
|---|---|---|---|---|
| | | கருத்திட்டம் | நிறைவுபெற்றவை | |
| தடுப்புச் சுவர்கள் நிர்மாணித்தல் | 192 | 138 | 54 | 10.30 |
| கல்வெட்டுக்கள் நிர்மாணித்தல் | 105 | 67 | 38 | 4.46 |
| பாலங்கள் நிர்மாணித்தல் | 292 | 289 | 3 | |



நிர்மாணிக்கப்பட்ட மங்களகம பாலம்,
ரம்புக்கணை பிரதேச செயலகப் பிரிவு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கல்வி

பாடசாலைகளில் கட்டிடங்களை புனர்நிர்மாணம் செய்தல், சுகாதார வசதிகளை ஏற்படுத்திக்கொடுத்தல் போன்ற உட்கட்டுமான வசதிகளை மேம்படுத்துவதற்காக 54 மில்லியன் ரூபா நிதியானது இம்மாவட்டத்திற்கு ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இந்நிதியில் தெரிவு செய்யப்பட்ட வேலைத்திட்டங்களுள் 13 செயற்றிட்டங்கள் பூர்த்தி செய்யப்பட்டுள்ளதுடன் 175 நடைபெற்றுக்கொண்டிருக்கின்றன. இதற்காக 30.09.2014 ஆம் திகதி வரையில் 5.42 மில்லியன் ரூபா செலவிடப்பட்டுள்ளது.

## சமூக நலன்புரி

வாராந்தச் சந்தைகள், மகப்பேற்று சிகிச்சை நிலையங்கள், சனசமூகக் கட்டடங்கள், சமய நிலையங்கள் போன்றவற்றை அபிவிருத்தி செய்யும் குறிக்கோளுடன் 568 செயற்றிட்டங்கள் இவ்வாண்டில் இனங்காணப்பட்டுள்ளன. அவற்றுள் 30.09.2014 திகதி வரையில் 107 செயற்றிட்டங்கள் பூர்த்தி செய்யப்பட்டுள்ளதுடன் 461 நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. இதற்கான மொத்த செலவினம் 29.55 மில்லியன் ரூபா ஆகும்.



புதிதாக நிர்மாணிக்கப்பட்ட
மகப்பேற்று சிகிச்சை நிலையம்,
ரம்புக்கணை பிரதேச செயலகப் பிரிவு



புதிதாக நிர்மாணிக்கப்பட்ட
வாராந்தச் சந்தைகள்,
வரகாபொல பிரதேச செயலகப் பிரிவு



புதிதாக நிர்மாணிக்கப்பட்ட
வாராந்தச் சந்தைகள்,
கேகாலை பிரதேச செயலகப் பிரிவு



புதிதாக நிர்மாணிக்கப்பட்ட
பஸ் தரிப்பு நிலையம்,
கலிகமுவ பிரதேச செயலகப் பிரிவு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சிறிய நீர்ப்பாசனம்

இம் மாவட்டத்தில் சிறிய நீர்ப்பானத் திட்டங்களை மெருகூட்டுதல் மற்றும் விவசாய கிணறுகளை நிர்மாணிக்கும் குறிக்கோளுடன் 146 செயற்றிட்டங்களுக்காக 51.00 மில்லியன் ரூபா நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. அவற்றுள் 30.09.2014 திகதி வரையில் 10 செயற்றிட்டங்கள் நிறைவு பெற்றுள்ளதுடன் 122 நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. இவற்றிற்கான செலவீனம் 7.88 மில்லியனாகும்.

## குடிநீர் வழங்கல் மற்றும் பொதுச் சுகாதாரம்

கேகாலை மாவட்டத்தில் நீர் வழங்கல் குழாய்களை விருத்தி செய்தல் மற்றும் நீர்த் தாங்கிகளை நிர்மாணித்தல் போன்ற நீர் வழங்கல் திட்டங்களை மேம்படுத்தும் நோக்கோடு 566 செயற்றிட்டங்கள் இனங்காணப்பட்டுள்ளன. இவற்றுள் 109 செயற்றிட்டங்கள் பூர்த்தி செய்யப்பட்டுள்ளதுடன் 457 நடைபெற்றுக்கொண்டிருக்கின்றன. இதற்காக 30.59 மில்லியன் ரூபா நிதி செலவிடப்பட்டுள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விசேட குறிப்பு - 09

# சுற்றுலா அபிவிருத்தி

ஆசியாவின் ஆச்சரியம் எனும் இலக்கை நோக்கி பயணித்துக்கொண்டிருக்கும் இலங்கை சுற்றுலா துறையில் எதிர்பார்க்கும் இலக்கை அடைவதற்காக சுற்றுலா நடவடிக்கைகளை விஸ்தரிப்பதற்கு தேவையான உபாய வழிமுறைகள் இனங்கண்டறியப்பட்டுள்ளது. 2016 ஆம் ஆண்டின் போது 2.5 மில்லியன் சுற்றுலா பயணிகளை வரவழைத்துக்கொள்ளும் நோக்கை நிறைவேற்றுவதற்கு தேவையான எதிர்கால நோக்கு மற்றும் உபாய வழிமுறைகள் அடங்கிய 2011 -2016 சுற்றுலா வழிமுறைகள் தயாரிக்கப்பட்டுள்ளது.

சுற்றுலா பயணிகளின் வருகை

கடந்த ஆண்டுகளில் 1.2 மில்லியனாக இருந்த சுற்றுலா பயணிகளின் வருகை 2014 செப்தெம்பர் 30 ஆம் திகதி வரையில் 1.27 மில்லியன் இலக்கை அடைய முடிந்துள்ளது. 2014 ஆம் ஆண்டு ஜனவரியிலிருந்து செப்தெம்பர் மாதம் வரையான காலப்பகுதியில் இந்நாட்டிற்கு வருகை தந்துள்ள சுற்றுலா பயணிகளின் எண்ணிக்கை 1,107,178 ஆவதுடன் சென்ற ஆண்டுகளில் இக்காலப்பபகுதியில் வருகை தந்துள்ள சுற்றுலா பயணிகளுடன் ஒப்பிடும் பொழுது அது 16.8 சதவீத அதிகரிப்பை காட்டுகின்றது.

2014 ஆம் ஆண்டில் செப்தெம்பர் வரையான காலப்பகுதியில் இலங்கைக்கு சுற்றுலா பயணிகள் வருகை தந்த நாடுகளில் இந்தியா முதலிடத்தை பெற்றுள்ளதுடன் வருகை தந்துள்ள சுற்றுலா பயணிகளின் எண்ணிக்கை 170,671 ஆகும். இது 2013ஆம் வருடத்துடன் இக்காலப் பகுதியினை ஒப்பிடும் போது 18 சதவீதத்தால் அதிகரித்துள்ளதைக் காட்டுகின்றது. சுற்றுலா பயணிகள் அதிகமாக வருதை தந்துள்ள ஏனைய நாடுகளை வரிசையாக பார்த்தால் அவை ஐக்கிய ராச்சியம், சீனா,ஜெர்மனி மற்றும் பிரான்ஸ் ஆகிய நாடுகளாகும்.



பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையத்தில் நாட்டிற்கு
வருகை தந்த பத்துலட்சமாவது சுற்றுலா பயணியை வரவேற்றல்

2016 ஆம் ஆண்டளவில் அதியுயர் வலுவுடன் கூடிய 2.5 மில்லியன் சுற்றுலாப் பயணிகளின் வருகை எனும் இலக்கை அடைந்து கொள்வதற்கு புதிய சுற்றுலா கைத்தொழில்கள், சுற்றுலா வசதிகளின் அபிவிருத்தி, சுற்றுலா நடவடிக்கைகளை விஸ்தரித்தல் மற்றும் சுற்றுலா துறையின் மித வளத்தை மேம்படுத்தல் ஆகிய 3 பிரிவுகளையும் வினைத்திறனாகவும் முறையாகவும் கண்காணிப்பு செய்வது அவசியமாகும்.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1. சுற்றுலாப் பயணிகளின் உற்பத்தி அபிவிருத்தி

1.1 சுற்றுலா வசதிகளின் அபிவிருத்தி

முதலாவதாக வருகை தரும் சுற்றுலா பயணிகளுக்காக தங்குமிட வசதி வழங்கல், அவர்களுக்கு கேளிக்கை மற்றும் பொழுது போக்கு அறிவை பெற்றுக்கொடுக்கக் கூடிய சுற்றுலா ரீதியாக உள்நாட்டு பொழுது போக்கை வழங்குவதற்கு தேவையான சுற்றுலா உற்பத்தியாளர்கள் மற்றும் ஏனைய வசதிகளை வழங்குதல் இதன் கீழ் எதிர்பார்க்கப்படுகின்றது.

சுற்றுலா பொழுது போக்கினூடாக இலங்கையின் இயற்கையை அனுபவிக்கும் சுற்றுலா பயணிகள்




விசேட சுற்றுலா பயணிகளின் இறுதி இலக்காகிய கல்பிடிய, பாசிக்குடா, குச்சவெளி, தெத்துவ மற்றும் யால பலட்டுபான ஆகிய புதிய சுற்றுலா வலயங்களை சூழலுக்கு இயைபான வகையில் அபிவிருத்தி செய்யும் நடவடிக்கைகள் தங்குமிட வசதிகளை வழங்குதல் என்ற நோக்கை அப்படையாக கொண்டு இவ்வருடத்திலும் இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபையினால் செயற்படுத்தப்படுகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுற்றுலா வலயங்களில் நிர்மாணப்பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ள சுற்றுலா விடுதிகள்



உகாபே சுற்றுலா விடுதி பாசிக்குடா



நீலகுடா சுற்றுலா விடுதி பாசிக்குடா

சுற்றுலா விடுதிகள் நிர்மாணிப்பதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ள கல்பிட்டிய சுற்றுலா வலயம்





சுற்றுலா பயணிகளின் வருகை எனும் இலக்கிற்காக தேவைப்படும் அறைகளின் எண்ணிக்கை 45,000 ஆவதோடு 2013 செப்டெம்பர் 30 ஆம் திகதிக்கு சுற்றுலா துறைக்கு உரித்தான அறைகளின் எண்ணிக்கை 27,710 ஆகும்.

| தங்குமிடம் | விடுதிகளின் எண்ணிக்கை | அறைகளின் எண்ணிக்கை |
|---|---|---|
| நட்சத்திரம் 1 இலிருந்து 5 வரையான விடுதிகள் | 112 | 9,207 |
| புடிக் (Boutique) விடுதி | 56 | 666 |
| விருந்தினர் விடுதி (Guest Houses) | 732 | 7,858 |
| வகைப்படுத்தப்படாத விடுதிகள் | 659 | 9,979 |
| மொத்தம் | 1559 | 27,710 |


சுற்றுலாத் துறையின் இலக்கை அடைந்துகொள்வதற்கு தேவையாக காணப்படும் அறைகளின் எண்ணிக்கையை அதிகரித்துக் கொள்வதற்கான உபாய வழிமுறைகள் சென்ற காலம் முழுவதற்கும் செயற்படுத்தப்பட்டது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## புதிய சுற்றுலா விடுதிகள் நிர்மாணிப்பதற்கான செயற்பாட்டுத்திட்டம்

இதில் விசேடமாக சுற்றுலா விடுதிகள் செயற்றிட்டங்களுக்க முதலீடு செய்வதற்கு ஆர்வம் உள்ள தேசிய மற்றும் சர்வதேச முதலீட்டாளர்களுக்கு வசதிகளை வழங்குவதற்காக ஒரு கூரையின் கீழ் அனைத்து வசதிகளையும் வழங்கும் அலகானது (one stop unit) 2010 ஆம் ஆண்டில் ஸ்தாபிக்கப்பட்டது. இதனூடாக சுற்றுலா துறையில் முதலிட ஆர்வம் காட்டுபவர்களுக்கு ஒரு இடத்திலேயே வசதிகளை பெற்றுக்கொடுத்தல் மற்றும் அவர்களின் பிரச்சனைகளை தீர்த்தல் எனும் செயற்பாடுகளை ஆற்றுவதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது.



நிர்மாணிப்பதற்கு திட்டமிடப்பட்டுள்ள ஹைட் சுற்றுலா விடுதி கொழும்பு



நிர்மாணிப்பதற்கு திட்டமிடப்பட்டுள்ள சங்கரிலால் சுற்றுலா விடுதி கொழும்பு

### பிரதான முதலீட்டை வழங்கியுள்ள சர்வதேச சுற்றுலா விடுதிகள் வலையமைப்பு

ஸெரடன், மெரியட், சங்கரிலால், ஐ.டி.சி. பெஸ்ட் வெஸ்டன் கிரவுன், நெக்ஸ்ட், ஆர்.யு.ஐ முவர்ன்பிக், சென்டாரா, ஓசோ, ஹயாட், சிக்ஸ் சென்சஸ், ரமாடா, தாஜ், ஹில்டன், அநன்தரா

### புதிய முதலீட்டை வழங்கியுள்ள இலங்கையின் விடுதிகள் வலையமைப்பு

ஜெட்வின், எயிட்கன் ஸ்பென்சஸ், சினமன், பலு வோடர்ஸ், அமாயா, சிட்ரஸ், லாயா, டில்மாலெஜர், டென்ஜரீன், அநிலானா, மாலு மாலு, லாஸ்

## சுற்றுலா உபசரிப்பு விடுதி நிகழ்ச்சித்திட்டம்

இலங்கை பிரஜைகளுடன் தேசிய உணவு, பானங்கள், பழக்கவழக்கங்கள் மற்றும் விருந்தோம்பல் என்பவற்றை அனுபவிப்பதன் மூலம் தேசிய வாழ்க்கை முறை மற்றும் கலாச்சார பெறுமதி பற்றிய அனுபவங்களை பெற்றுக்கொள்வதற்காக இந்நாட்டிற்கு வரும் குறைந்தளவிலான செலவினங்களை மேற்கொள்ளும் சுற்றுலா பயணிகளை இலக்காக கொண்டு இந்த நிகழ்ச்சித்திட்டம் செயற்படுத்தபப்டுகின்றது. குறைந்த முதலீட்டில் சுற்றுலா கைத்தொழிலின் இலக்கை அடைவதற்கு தேவையான அறைகளின் அவசியத்தை பூர்த்தி செய்து கொள்ளல், சுற்றுலா கைத்தொழிலின் நேரடி பிரதிலாபம் கிராம மக்களுக்கு நேரடியாக கிடைப்பதற்கான வழியை அமைத்தல் என்பன இதன் மூலம் எதிர்பார்க்கப்படுகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | |
|---|---|---|
| பதிவு செய்யும் நோக்கில் பெற்றுக்கொள்ளப்பட்ட விண்ணப்பங்களின் எண்ணிக்கை | - | 196 |
| பரிசீலனை செய்யயப்பட்ட வீடுகளின் எண்ணிக்கை (சென்ற ஆண்டில் கிடைத்த விண்ணப்பங்கள் அடங்கலாக) | - | 203 |
| பதிவு செய்யக்கூடிய தரத்திலுள்ள வீடுகளின் எண்ணிக்கை | - | 52 |
| தற்போது தரமுயர்த்தும் செயற்பாடுகள் நடைபெறுகின்றதுமான வீடுகளின் எண்ணிக்கை | - | 143 |
| பதிவு செய்யப்பட்டுள்ள மொத்த வீடுகளின் எண்ணிக்கை | - | 476 |
| பதிவு செய்யப்பட்டுள்ள மொத்த அறைகளின் எண்ணிக்கை | - | 1692 |





வெளிநாட்டு குடும்பமொன்று சுற்றுலா உபசார இல்லம் ஒன்றின் புதிய அனுபவத்தினை கொண்டிருக்கும் சூழல்

## உள்நாட்டு சுற்றுலா பயணிகளை இலக்காக கொாண்ட நிகழ்ச்சித்திட்டம்

1. சுற்றுலா விடுமுறை விடுதி

அநுராதபுரம், நுவரேலியா, கதிர்காமம், பெந்தோட்டை ஆகிய விடுமுறை விடுதி ஹொரவபொதான மற்றும் மஹவ்வ விடுமுறை இல்லம் புனரமைப்பு செய்தல் ஆகிய நடவடிக்கைகள் தொடர்பாக திட்டமிடப்படுகின்றன. அவற்றுள் ஹொரவபொதான விடுமுறை இல்லம் 2014 வரவு செலவு திட்டத்தின் முன்மொழிவாக சமர்ப்பிக்கப்பட்ட கலைஞர்களுக்கான விடுமுறை விடுதிகள் நிர்மாணித்தலின் கீழ் அபிவிருத்தி செய்யப்பட்டுள்ளது. இதற்கு மேலதிகமாக குச்சவெளி, யால, கல்பிட்டிய மற்றும் நுவரேலியா ஆகிய பிரதேசங்களில் பொருத்தமான இடங்களை இனங்காணும் நடவடிக்கைகள் இடம்பெறுகின்றன.

2. கெலிடோ வெரல பூங்கா நிர்மாணித்தலானது தேசிய சுற்றுலா பயணிகளை இலக்காக கொண்டு செயற்படுத்தப்படுகின்றது.

## 2. சுற்றுலா நடவடிக்கைகளின் விருத்தி

வருடம் முழுவதும் ஒரேயளவான சுற்றுலா பயணிகளை இந்நாட்டிற்குள் வரவழைத்துக் கொள்வதை நோக்காக கொண்டு இலங்கை சுற்றுலா ஊக்குவிப்பு நிறுவனத்தினால் சுற்றுலா நடவடிக்கைகளின் விருத்தி மேற்கொள்ளப்படுகின்றது. சுற்றுலா நடவடிக்கைகளின் விருத்திக்காக மேற்கொள்ளப்பட்ட படிமுறைகள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 2.1. சர்வதேச வர்த்தக கண்காட்சிகளில் கலந்துகொள்ளல்

2014 ஆம் ஆண்டில் செப்தெம்பர் வரையான காலப்பகுதியில் 31 சுற்றுலாத்துறைக் கண்காட்சிகள் 21 நாடுகளில் இடம்பெற்றதோடு வீதிக் களியாட்டங்கள் பீஜிங்கில் இடம்பெற்றன. புதிய சந்தை இலக்காகிய ஐரோப்பிய மக்களை கவர்ந்து கொள்வதற்காக 11 நாடுகளில் 13 வர்த்தக கண்காட்சிகள் இடம்பெற்றுள்ளதுடன் அதற்கு மேலதிகமாக இந்தியா (SATTE Travel fair, OTM, IITM) சீனா ஆகிய நாடுகளில் மேம்படுத்தல் நிகழ்ச்சிகள் நடாத்தப்பட்டது.




IFTM வர்த்தக கண்காட்சி - பிரான்ஸ்



ITB வர்த்தக கண்காட்சி -ஜெர்மனி



JATA வர்த்தக கண்காட்சி - ஜப்பான

## 2.2. சர்வதேச ஊடகவியலாளர்களையும் மற்றும் முக்கிய நபர்களையும் விழிப்புணர்வு பெறச்செய்தல்

இதன் கீழ் ஜப்பான், கனடா, பிரான்ஸ், பிலிப்பைன்ஸ், சீனா, பெல்ஜியம் மற்றும் பாலஸ்தீனம் ஆகிய 7 நாடுகளின் 107 ஊடகவியலாளர்களின் பங்குபற்றுதலுடன் இலங்கை பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்தும் பயணம் (FAM Tours) மேற்கொள்ளப்பட்டது.

## 2.3 விளம்பரம்

இலங்கை பற்றிய விழிப்புணர்வை மேற்கொள்வதற்காக சீனா, ஐக்கியராச்சியம், ஜெர்மனி மற்றும் பிரான்ஸ் ஆகிய நாடுகளில் 300 பேருந்துகளும் 775 வாடகை வாகனங்களும் விளம்பரத்திற்காக பயன்படுத்தப்பட்டுள்ளது. இதற்கு மேலதிகமாக வானொலி, இணையத்தளம் மற்றும் தொலைக்காட்சி (அல்-ஜசீரா, சீ.என்.என்.) ஆகிய ஊடகங்களை பயன்படுத்தி மேம்படுத்தல் செயற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**கூட்டங்கள், மேம்படுத்தல் பயணங்கள், கருத்தரங்குகள் மாநாட்டு குழு**

இத்துறையினூடாக உயர்ந்தளவு செலவிடக்கூடிய சுற்றுலா பயணிகளை ஈர்த்துக்கொள்ளும் நோக்கில் MICE சுற்றுலா செயற்பாடுகள் இலங்கை மாநாட்டு நிறுவகத்தினால் ஒழுங்கமைக்கப்பட்டுள்ளது. 2014 ஆம் ஆண்டு முதல் 6 மாதததிற்குள் இவ்வமைப்பினால் பெற்றுக்கொள்ளப்பட்ட பெறுபேறாக 76,000 சுற்றுலா பயணிகள் வருகை தந்தமையை குறிப்பிட முடிவதுடன் அதற்காக உபயோகிக்கப்பட்ட வெளிநாட்டு முதலீடு அமெரிக்க டொலர் 101.0 மில்லியன் ரூபாவாகும்.

நடைபெற்ற மாநாடு, கருத்தரங்குகள், கூட்டங்கள் மற்றும் ஊக்குவிப்புப் பயணங்கள்

| பெயர் | காலம் |
|---|---|
| 1. ஹட்ரோ ஆசிய மாநாடு | மார்சு 2014 |
| 2. ஆசிய பசுபிக் மாநாடு | மே 2014 |
| 3 CANSO சிவில் ஆகாய விமான சேவை ஒழுங்கமைப்பு | மே 2014 |
| 4. உலக இரத்ததான தினம் | ஜூன் 2014 |
| 5. மனநல சுகாதார மாநாடு | ஜூலை 2014 |
| 6. மக்கள் குடிநீர் சேவை மாநாடு | ஒகஸ்ட்2014 |



MICE மேம்பாட்டுத்திட்டம் கோலாலம்பூர் - ஜூலை 2014



மனநல சுகாதார மாநாடு - ஜூலை 2014

இதற்கமைய இலங்கை மாநாட்டு நிறுவனத்தினால் இந்த வருடத்தில் சீனாவில் GT MICE, MICE Talk, MIM, Big Issue, Trav Talk ஆகிய சஞ்சிகைகளிலும் மற்றும் ITB சர்வதேச கண்காட்சிகளில் சுற்றுலாவின் கேந்திரமாக இலங்கையை பிரபல்யப்படுத்தப்பட்டது.

3. சுற்றுலா துறையில் மனித வள அபிவிருத்தி

அதிகரித்து வரும் சுற்றுலா பயணிகளின் வருகையை ஈடுகொடுப்பதற்கு அதற்கு தேவையான மனித வளத்தை பயிற்சியளித்தல் அவசியமாகின்றது. இலங்கையின் சுற்றுலாத்துறையில் மனித வளம் தொடர்பாக பயிற்சி அளிக்கும் பிரதான அரச நிறுவனம் இலங்கை சுற்றுலா மற்றும் விடுதி முகாமைத்துவ நிறுவனமாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொழும்பில் அமைந்துள்ள பிரதான அலுவலகத்திற்கு மேலதிகமாக கண்டி, கொக்கலை, பண்டாரவெல, அநுராதபுரம், மற்றும் இரத்தினபுரி ஆகிய நகரங்களில் அமைந்துள்ள ஐந்து பிரதேச ஹோட்டல் பாடசாலைகளும் அதில் அடங்கும். இவ்வனைத்து ஹோட்டல் பாடசாலைகளினூடாக சர்வதேச சுற்றுலா பயணிகள், உள்நாட்டு சுற்றுலா பயணிகளை இலக்காகக்கொண்டு தேவையான மனித வளத்தை திட்டமிடல் நடவடிக்கை மேற்கொள்ளப்படுகின்றது.

2014 ஆம் ஆண்டில் பாடநெறிகளுக்கான பதிவு செய்யப்பட்ட மாணவர்களின் எண்ணிக்கை

| நிகழ்ச்சிகள் | மாணவர்களின் எண்ணிக்கை | |
|---|---|---|
| | முதல்தடவையாக அனுமதிக்கப்பட்ட மாணவர்களின் எண்ணிக்கை | இரண்டாம் தடவையாக அனுமதிக்கப்பட்ட மாணவர்களின் எண்ணிக்கை |
| அடிப்படை தேர்ச்சி மட்டம் (Craft Level) | 356 | |
| சான்றிகழ் பாடநெறி | 859 | 860 |
| சான்றிதழ் பாடநெறி (ஐவெநசஅநனையைவந) | 58 | - |
| மூன்று வருட முகாமைத்துவ பாடநெறி | 144 | - |
| சலவை பாடநெறி | 6 | - |
| பேக்கரி மற்றும் பேஸ்ட்ரி | 14 | - |
| தொழில்வழிமுறை பாடநெறி | 128 | - |
| குறுங்கால பாடநெறி (Crash Course) | 42 | - |
| **மொத்தம்** | 1607 | 860 |



உணவு அலங்கார பாடநெறி கற்கை



உணவு உபசரிப்பு பாடநெறிகளின் கற்கை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விசேட குறிப்பு - 10

# நிலக்கண்ணிவெடி அகற்றும் நிகழ்ச்சித்திட்டம்

**இக்கருத்திட்டத்தின் குறிக்கோள்**

வடக்கு, கிழக்கு மாகாணங்களில் யுத்தம் நிறைவடைந்த பிற்பாடு இப்பகுதிகளில் புதைக்கப்பட்டிருந்த நிலக்கண்ணிவெடிகள் மக்கள் தம் சொந்த நிலங்களில் மீளக்குடியமர்தலுக்கும், அப்பிரதேசங்களில் அமுல்படுத்த முனைந்த அபிவிருத்தி திட்டங்களுக்கும் பெரும் அச்சுறுத்தலாகக் காணப்பட்டது.

இச்சவாலை எதிர்நோக்க மனிதாபிமான நிலக்கண்ணி அகற்றும் நிகழ்ச்சித்திட்டம் ஆரம்பிக்கப்பட்டு அப்பகுதிகளில் பரவலாக காணப்பட்ட நிலக்கண்ணிவெடிகள், மனிதனுக்கும் , வாகனங்களுக்கும் தீங்கு விளைவிக்கும் வெடிக்காத வெடிபொருட்கள் ஆகியவற்றை அகற்றி மக்களின் சாதாரண வாழ்வுக்கு வழிவகுக்கப்பட்டது.

ஆரம்பகால கட்டத்தில் 2,064,796,286 சதுர மீற்றர் பரப்பளவு கண்ணிவெடிப் பாதிப்புக்கு உள்ளானதாக அறியப்பட்டது. அந்நிகழ்ச்சித்திட்டத்தினூடாக 30.09.2014 ஆம் திகதி வரை 1,985,383,836 சதுர மீற்றர் பரப்பளவில் நிலக்கண்ணி வெடி அகற்றப்பட்டுள்ளதுடன் 79,412,450 சதுர மீற்றர் பரப்பளவில நிலக்கண்ணி வெடி அகற்றப்பட வேண்டிய பரப்பளவாகவுள்ளது.

**30.09.2014 வரையான நிலக்கண்ணி அகற்றும் நிகழ்ச்சித்திட்ட முன்னேற்றம்**

| மாவட்டம் | நிலக்கண்ணிவெடியில் பாதிப்புக்குள்ளான பரப்பளவு (சதுர மீற்றர்) | நிலக்கண்ணிவெடி முழுவதுமாக அகற்றப்பட்ட பரப்பளவு (சதுர மீற்றர்) | நிலக்கண்ணிவெடி அகற்றப்பட வேண்டிய பரப்பளவு (சதுர மீற்றர்) |
|---|---|---|---|
| யாழ்ப்பாணம் | 51,935,532 | 48,584,967 | 3,350,565 |
| கிளிநொச்சி | 597,375,765 | 579,983,138 | 17,392,627 |
| முல்லைத்தீவு | 230,331,444 | 216,357,568 | 13,973,876 |
| வவுனியா | 223,251,300 | 218,589,777 | 4,661,523 |
| மன்னார் | 314,669,910 | 298,800,919 | 15,868,991 |
| உபமொத்தம் | 1,417,563,951 | 1,362,316,368 | 55,247,582 |
| திருகோணமலை | 101,665,234 | 95,282,716 | 6,382,518 |
| மட்டக்களப்பு | 495,262,449 | 480,893,265 | 14,369,184 |
| அம்பாறை | 6,651,013 | 46,586,452 | 64,561 |
| உபமொத்தம் | 643,578,695 | 622,762,433 | 20,816,263 |
| அநுராதபுரம் | ,547,971 | 31,225 | ,316,746 |
| பொலன்னறுவை | 05,669 | 3,810 | 1,859 |
| உபமொத்தம் | 3,653,640 | 305,035 | 3,348,605 |
| மொத்தம் | 2,064,796,286 | 1,985,383,836 | 79,412,450 |


மூலம்: கண்ணிவெடி செயற்றிட்டத்தின் தகவல் முகாமைத்துவ தொகுதி **(IMSMA)**




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குறிப்பு: கண்ணிவெடியால் பாதிக்கப்பட்டது என இனங்காணப்பட்ட பகுதி தொழில்நுட்பமல்லாத முறையில் தொடர்ந்து அறியப்படுகின்றது. இதனால் காலத்திற்கு காலம் புள்ளிவிபரம் வேறுபடும்.

## 30.09.2014 அன்று உள்ள முன்னேற்றம்




2009 ஆம் ஆண்டு பாதிக்கப்பட்ட பகுதி




30.09.2014 இல் பாதிக்கப்பட்ட பகுதி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விசேட குறிப்பு - 11

# இந்திய வீடமைப்புத் திட்டம்

**நோக்கம்**

- உள்நாட்டில் இடம்பெயர்ந்த மக்கள் மீளக்குடியமர்வதை துரிதப்படுத்தல்
- மீளக்குடியமரும் பிரதேசங்களில் வாழ்வாதார அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டங்களை முன்னெடுத்து அப்பிரதேசத்தின் பொருளாதாரத்தை மீளக்கட்டியெழுப்பல்.
- பாதிக்கப்பட்ட மக்களுக்கு வீடுகளை வழங்கல

- மொத்த நிகழ்ச்சித்திட்டத்திற்குமான மொத்த மதிப்பீட்டுச் செலவு (2012-2015) - ரூ 29.3 பில்லியன்
- கருத்திட்ட முழுக்காலப்பகுதியில் கட்டத் தீர்மானிக்கப்பட்ட வீடுகளின் எண்ணிக்கை - 49,000
- 30.09.2014 வரை கட்டி முடிக்கப்பட்டுள்ள வீடுகளின் எண்ணிக்கை - 14,763
- 30.09.2014 வரை வேலைகள் நடைபெற்றுக்கொண்டிருக்கும் வீடுகளின் எண்ணிக்கை - 19,599
- 01. 01.2014 வரை செலவு செய்யப்பட்டுள்ள தொகை - ரூ 6,758.18 மில்
- 30. 09.2014 வரை செலவு செய்யப்பட்டுள்ள கருத்திட்டமுழுமைக்குமான மொத்தத் தொகை - ரூ 14,576.33மில்.

**30.09.2014 வரையான மாவட்ட ரீதியான பௌதீக முன்னேற்றம்**

| மாவட்டம் | வீடுகளின் எண்ணிக்கை | | 30.09.2014 வரையான செலவினம் (ரூ.மில்) | 30. 09.2014 வரை செலவு செய்யப்பட்டுள்ள கருத்திட்டமுழுமைக்குமான மொத்தத் தொகை | பயனாளிகளின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|---|
| | கட்டப்பட்டுக் கொண்டிருப்பவை | நிறைவு செய்யப்பட்டவை | | | |
| யாழ்ப்பாணம் | 2,250 | 2,514 | 889.48 | 2,254.13 | 4,764 |
| வவுனியா | 2,118 | 954 | 504.20 | 1,103.50 | 3,072 |
| முல்லைத்தீவு | 6,197 | 4,822 | 2,062.25 | 4,675.35 | 11,019 |
| கிளிநொச்சி | 3,352 | 3,878 | 1,348.70 | 3,336.90 | 7,230 |
| மன்னார் | 4,048 | 2,199 | 1,371.55 | 2,432.05 | 6,247 |
| மட்டக்களப்பு | 1,579 | 396 | 576.50 | 768.90 | 1,975 |
| திருகோணமலை | 55 | 0 | 5.50 | 5.50 | 55 |
| மொத்தம் | 19,599 | 14,763 | 6,758.18 | 14,576.33 | 34,362 |



கிராமம்: கனகராயன்குளம்
பிரதேச செயலகப் பிரிவு: வவுனியா
மாவட்டம்: வவுனியா



கிராமம்: புதுக்குடியிருப்பு
பிரதேச செயலகப் பிரிவு : புதுக்குடியிருப்பு
மாவட்டம்: முல்லைத்தீவு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விசேட குறிப்பு - 12

# அபிவிருத்தியில் உலக உணவுத் திட்டத்தின் பங்களிப்பு

**கருத்திட்டத்தின் குறிக்கோள்**

- பாதிக்கப்பட்ட மக்களின் உணவுப் பாதுகாப்பை உறுதிப்படுத்தல்
- கர்ப்பிணித் தாய்மார், பாலூட்டும் தாய்மார் மற்றும் 6 - 59 மாத வயதுடைய குழந்தைகள் ஆகியோரிடையேயுள்ள போசாக்கின்மையை குறைத்தல்.
- மீள் குடியமரும் மக்களுக்கு விவசாயம் சார் பயிற்சிகளையும் வாழ்வாதார திறனையும் வழங்குவதனூடாக அவர்களது வாழ்வாதாரத்தை மீளக்கட்டியெழும்பல்.
- மீள் குடியமர்ந்த குடும்பங்களினதும், இடம் பெயர்ந்த
- குடும்பங்களினதும் பிள்ளைகளின் பாடசாலை வரவை அதிகரிக்க செய்வதும் உறுதிப்படுத்துவதும்.



வேலைக்கான உணவு நிகழ்ச்சித்திட்டம்

**இக்கருத்திட்டம் நடைமுறைப்படுத்தப்படும் பிரதேசங்கள**

வடக்கு மாகாணம் (கிளிநொச்சி, முல்லைத்தீவு, வவுனியா, மன்னார், யாழ்ப்பாணம்)

**2014 ஆம் ஆண்டின் இலக்கு**

ரூபா 1,315 மில்லியன் செலவில் 13,086 மெற்றிக்தொன் உணவு வடக்கு மாகாணத்திற்கு வழங்கத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.



பாடசாலை உணவு நிகழ்ச்சித்திட்டம்

**இக்கருத்திட்டத்தின் கீழ் பிரதானமாக நடைமுறைப்படுத்தப்படும் நிகழ்ச்சித்திட்டங்கள்**

1. வறுமைக் கோட்டின் கீழ் உள்ள மக்களுக்கு உணவு வழங்கல்
2. பாடசாலை உணவு நிகழ்ச்சித்திட்டம்
3. தாய் சேய் சுகாதாரம் போசணை நிகழ்ச்சித்திட்டம்
4. வேலைக்கான உணவு நிகழ்ச்சித்திட்டம்

**30.09.2014 வரையான முன்னேற்றம்**

ரூபா 771.97 மில்லியன் செலவில் 4,666.6 மெற்றிக்தொன் உணவு 281,182 பயனாளிகளுக்கு பகிர்ந்தளிக்கப்பட்டுள்ளது.

மேலும் வறட்சி நிவாரணமாக ரூபா 253.05 மில்லியன் செலவில் 2,074.8 மெற்றிக்தொன் உணவு 187,800 வறட்சியால் பாதிக்கப்பட்டோருக்கு பகிர்ந்தளிக்கப்பட்டுள்ளது.



வறுமைக்கோட்டின் கீழ் உள்ள மக்களுக்கு உணவு வழங்கல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விசேட குறிப்பு - 13

# கிராமத்திற்குக் கிராமம் வீட்டுக்கு வீடு சமூகத் தேவைகளை இனங்காண்பதற்கான நடமாடும் சேவை மற்றும் சமூக ஆதரவுக்கருத்திட்டம்

இந் நிகழ்ச்சித்திட்டமானது கிராம மக்களின் பிரச்சினைகளை இனங்கண்டு அவற்றைத் தீர்க்கும் முகமாக பின்வரும் நோக்கங்களுடன் பல்வேறு கட்டங்களாக நடைமுறைப்படுத்தப்பட்டது.

**நோக்கங்கள்:**

- கிராம சேவையாளர் பிரிவிற்குள்ளேயே தனிப்பட்டவர்களின் பிரச்சனைகள் மற்றும் குடும்ப ரீதியான பிரச்சனைகளுக்கான தீர்வுகளை ஏற்படுத்த நடவடிக்கையெடுத்தல்
- கிராம மக்களுக்கு அவர்களின் கிராமத்திற்குள்ளேயே அனைத்து அரச நிறுவனங்களின் சேவைகளை வழங்குவதுடன் அது சம்பந்தமாக அவர்களை உணர்வூட்டல்
- மருத்துவ சிகிச்சைகள் மற்றும் ஆலோசனை வழங்கல் கிராம மக்கள் அவர்களுடைய தேவையை நிறைவேற்றிக்கொள்வதற்கு உணர்வூட்டல் மற்றும் பயிற்சித்திட்டங்களினூடாக அவர்களின் பங்களிப்பைப் பெற்றுக்கொள்ளல்.
- ஒரு கிராம அபிவிருத்திக்குத் தேவையான பொதுவான தேவைகளை இனங்காணல் திட்டமிடல் நடைமுறைப்படுத்தல், கண்காணித்தல் மற்றும் மதிப்பீடு செய்தல் போன்ற அபிவிருத்தியின் எல்லா படிநிலைகளிலும் மக்களின் செயற்திறனான பங்களிப்பை ஊக்குவித்தல்.

கட்டம் 1

தேசத்திற்கு மகுடம் அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டம் 2014 ஆம் ஆண்டிற்கு அமைவாக குருநாகல் புத்தளம் மற்றும் கேகாலை ஆகிய மாவட்டங்களில் சகல கிராம சேவையாளர் பிரிவுகளையும் உள்ளடக்கி 2013 ஜுலை முதலாம் திகதி மக்கள் சந்திப்புக்கள் மற்றும் நடமாடும் நிவாரண சேவைகள் ஒழுங்குபடுத்தப்படடன. இதன்விளைவாக 2,731 நடமாடும் சேவைகள் கிராம சேவையாளர் பிரிவுரீதியாக நடாத்தப்பட்டதுடன் தேர்தல் தொகுதி ரீதியாக 28 நடமாடும் சேவைகள் இடம்பெற்றன.

| மாவட்டம் | கிராம மட்ட நடமாடும் சேவைகள் | |
|---|---|---|
| | நடைமுறைப்படுத்தப்பட்ட நடமாடும் சேவைகளின் எண்ணிக்கை | இனங்காணப்பட்ட பிரச்சனைகளின் எண்ணிக்கை |
| குருநாகல் | 1,610 | 596,861 |
| புத்தளம் | 548 | 242,562 |
| கேகாலை | 573 | 306,569 |
| **மொத்தம்** | 2,731 | **1,145,992** |

கிடைக்கப்பெற்ற பிரச்சனைகளின் எண்ணிக்கையின் அடிப்படையில் பிறப்புச்சான்றிதழ், திருமணச் சான்றிதழ், மரணச் சான்றிதழ், காணி அனுமதிப்பத்திரம், கடவுச்சீட்டு போன்ற ஆவணங்களைப் பெற்றுக்கொள்ளல் தொடர்பான பிரச்சினைகளே அதிகமாகக் காணப்பட்டன. இதற்கு மேலதிகமாக மக்கள் சந்திப்பு மற்றும் நடமாடும் சேவையின் போது இனங்காணப்பட்ட தேவைகளான சக்கரநாற்காலி, ஊன்றுகோல், மூக்குக்கண்ணாடி, விளையாட்டு உபகரணங்கள், கூரைத்தகடுகள், குளியலறைப்பொருட்கள், பயிரினங்கள், பசு மற்றும் கோழி போன்ற விலங்குகள் என்பனவும் வழங்கப்பட்டன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதேவேளை சுகாதார சிகிச்சைகள், தாய்சேய் சிகிச்சைகள் வாழ்வின் எழுச்சி விழிப்புணர்வு நிகழ்ச்சித்திட்டங்கள், போதைப்பொருள் எதிர்ப்பு நிகழ்ச்சித்திட்டங்கள், சிரமதான நிகழ்ச்சித்திட்டங்கள், (தன்னார்வ தொழிலாளர்கள்) சுற்றாடல் நிகழ்ச்சித்திட்டங்கள், மத நிகழ்ச்சித்திட்டங்கள் போன்றனவும் மேற்கொள்ளப்பட்டன.

கட்டம் 2

பதுளை மற்றும் மொனராகலை மாவட்டங்களைச் சேர்ந்த 886 கிராம சேவையாளர் பிரிவுகளில் நடமாடும் சேவைகளை நடாத்துவதற்கு திட்டமிடப்பட்டது. தற்போது அவை நடைபெற்றுக்கொண்டிருக்கின்றன.

| மாவட்டம் | கிராம மட்ட நடமாடும் சேவைகள் | | |
|---|---|---|---|
| | திட்டமிடப்பட்ட நடமாடும் சேவைகளின் எண்ணிக்கை | நடைமுறைப்படுத்தப்பட்ட நடமாடும் சேவைகளின் எண்ணிக்கை | நடைமுறைப்படுத்தப்பட்ட நடமாடும் சேவைகளின் எண்ணிக்கை |
| பதுளை | 567 | 519 | 177,963 |
| மொனராகலை | 319 | 304 | 121,058 |
| மொத்தம் | 886 | 823 | 299,021 |

''வளமான தாய்நாடு - அபரிமிதமான வீடு'' - வீடு அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டம்

இந் நிகழ்ச்சித்திட்டம் குறைந்த வருமானம் பெறும் குடும்பங்களின் வீடுகளை அபிவிருத்தி செய்வதற்காக நடைமுறைப்படுத்தப்படுகின்றது இதன் முதற்கட்டத்தில் குருநாகல், புத்தளம் மற்றும் கேகாலை மாவட்டங்களில் நடமாடும் சேவையுடன் விசேட நிகழ்ச்சித்திட்டம் ஒன்று மேற்கொள்ளப்பட்டது. இரண்டாம் கட்டத்தில் பதுளை மற்றும் மொனராகலை மாவட்டங்களில் குறைந்த வருமானம் பெறும் குடும்பங்களுக்காக இந் நிகழ்ச்சித்திட்டத்தின் ஆரம்ப செயற்பாடுகள் இடம்பெற்றுக்கொண்டிருக்கின்றன.

2014.09.30 திகதி வரையில் வீடு அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டத்தின் முன்னேற்றம்
அபிவிருத்தி செய்யப்பட்ட வீடுகளின் எண்ணிக்கை

| மாவட்டம் | வீடுகளின் எண்ணிக்கை |
|---|---|
| குருநாகல் | 3,675 |
| கேகாலை | 1,038 |
| புத்தளம் | 3,222 |

அபிவிருத்தி செய்யப்படுவதற்கு முன்மொழியப்பட்ட வீடுகளின் எண்ணிக்கை

| மாவட்டம் | வீடுகளின் எண்ணிக்கை |
|---|---|
| பதுளை | 11,510 |
| மொனராகலை | 5,266 |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விசேட குறிப்பு - 14

## தேசத்தின் மகுடம் - மக்களை மையப்படுத்திய அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டம்

வறுமையற்றதோர் இலங்கை 2013 -2015 நிகழ்ச்சித் திட்ட இலக்குகளை அடைவதற்காக வீட்டுத்திட்டம், மகப்பேற்று விடுதிகள், அடிப்படை சுகாதார வசதிகள், குடிநீர் விநியோகம், கிராம மின்சாரத் திட்டங்கள், சிறிய நீர்ப்பாசனத் திட்டங்கள், கிராம வீதி அபிவிருத்ததி திட்டங்கள் ஆகிய நிகழ்ச்சித்திட்டங்கள் மற்றும் கருத்திட்டங்கள் 2013 வரவு செலவுத்திட்ட உரையாற்றுகையின் போது விரைவுபடுத்தி அமுல்படுத்துவதற்கு இனங்காணப்பட்டன. இவற்றுக்கு மேலதிகமாக முன் பள்ளிகளுக்கு மலசலகூட வசதி, கட்டிடவசதி மற்றும் சுற்றுச்சூழல் அபிவிருத்தியுடன் கிராம மருந்தங்களுக்கான வசதிகள் அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டங்கள் மற்றும் கருத்திட்டங்கள் புள்ளி விபரவியல் திணைக்களத்தின் தகவல் மற்றும் தரவு அடிப்படையில் முன்னுரிமை அடிப்படையில் இனங்காணப்பட்டன.

தேசத்தின் மகுடம் நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் குருநாகல், புத்தளம் மற்றும் கேகாலை மாவட்டங்களுக்குத் தேவையான அபிவிருத்தி திட்டங்கள் இனங்காணப்பட்டு முன்னெடுக்கப்பட்டது. 30.09.2014 இல் உள்ளவாறான முன்னேற்றம்

| பிரிவு | குருநாகல் | | புத்தளம் | | கேகாலை | |
|---|---|---|---|---|---|---|
| | திட்டங்களின் எண்ணிக்கை | ஒதுக்கீடு (ரூ.மில்) | திட்டங்களின் எண்ணிக்கை | ஒதுக்கீடு (ரூ.மில்) | திட்டங்களின் எண்ணிக்கை | ஒதுக்கீடு (ரூ.மில்) |
| குடிநீர் வழங்கல் | 244 | 337.34 | 320 | 488.89 | 67 | 157.95 |
| சிறிய நீர்ப்பாசனத் திட்டம் | 330 | 234.39 | 96 | 92.27 | 259 | 103.85 |
| புதிய மகப்பேற்று நிலையம் | 50 | 605.74 | 20 | 260.34 | 32 | 353.81 |
| மகப்பேற்று நிலைய திருத்தவேலை | 94 | 101.46 | 69 | 132.59 | 73 | 85.93 |
| வாரச் சந்தை | 23 | 1307.79 | 10 | 296.80 | 9 | 234.76 |
| வாகன தரிப்பிடம் | 1 | 25.13 | 6 | 13.70 | | |
| பஸ் தரிப்பு நிலையம் மற்றும் சிறிய பஸ் தரிப்பு நிலையம் | 9 | 318.06 | 6 | 236.36 | 5 | 154.90 |
| ஒன்றுகூடல் மண்டபம் | 2 | 119.40 | 15 | 266.50 | | |
| மயானம் | 10 | 128.38 | 2 | 26.74 | 2 | 45.43 |
| உபகரணங்கள் வழங்கல் | | | | | 105 | 63.45 |
| கொங்கிறீட் வீதி | | | | | 2,293 | 847.29 |
| கழிவுப்பொருட்கள் முகாமைத்துவம் | | | | | 1 | 6.58 |
| சிறிய சந்தை | | | 2 | 4.5 | 1,137 | 58.00 |
| சிறுவர் பூங்கா | | | 2 | 13.55 | | |
| நடைபாதை | | | 4 | 59.2 | | |
| மொத்தம் | **763** | **3177.69** | **552** | **1891.44** | **3,983** | **2111.95** |

இத்துடன் 2015 தேசத்தின் மகுடம் வேலைத்திட்டத்தின் கீழ் காலி, மாத்தறை, அம்பாந்தோட்டை மற்றும் இரத்தினபுரி மாவட்டங்கள் அபிவிருத்தி செய்ய எதிர்பார்க்கப்படுகின்றது.

| மாவட்டம் | காலி | மாத்தறை | அம்பாந்தோட்டை | இரத்தினபுரி | மொத்தம் |
|---|---|---|---|---|---|
| ஒதுக்கீடு செய்யப்பட்ட தொகை (ரூபா.மில்) | 2,001 | 1,535 | 1,547 | 2,442 | 7,525 |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விசேட குறிப்பு - 15

# கால்நடை அபிவிருத்தி கருத்திட்டம்

பால் உற்பத்தியில் தன்னிறைவு எனும் இலக்கை அடைவதற்காகவும் நாட்டின் கால்நடை துறையை முன்னேற்றுவதற்காகவும் ஓர் கருத்திட்டம் உருவாக்கப்பட்டுள்ளது. தற்போது நாட்டின் தேசிய பால் தேவையானது 785 மில்லியன் லீற்றர் ஆக இருக்கின்றபோது ஆண்டுக்கான பால் உற்பத்தி 312 மில்லியன் லீற்றர் ஆக உள்ளது. இக்கருத்திட்டத்தின் கீழ் வர்த்த ரீதியாக கலப்பின உயர்ரக கால்நடைகளை கொண்ட பாற்பண்ணைகளை நாடளாவிய ரீதியில் அமைப்பதற்கும் பாற்பண்ணை கைத்தொழிலை ஓர் இலாபகரமான வியாபாரமாக முன்னேற்றுவதற்கும், திரவ பால் நுகர்வினை பால்மா பாவனைக்கு பதிலாக உள்ளூர் மக்களிடையே ஊக்குவிப்பதற்கும் நாட்டின் பால் உற்பத்தியை அதிகரிப்பதற்கும் எதிர்பார்க்கப்படுகின்றது.

இக் கருத்திட்டத்தின் காலம் இரண்டு வருடங்கள் (2014 -2015) ஆகும். மேலதிக கால்நடை விநியோகத்தைத் தவிர இக் கருத்திட்டமானது பாற்பண்ணை விவசாயிகளுக்கான பயிற்சி, விரிவாக்கல் சேவை மற்றும் தொழில் நுட்ப உதவி வழங்குவதற்காக ஒழுங்குபடுத்தப்பட்டுள்ளது. இக் கருத்திட்டம் கால்நடை மற்றும் கிராம அபிவிருத்தி அமைச்சு ஊடாக திட்ட ஒருங்கிணைப்பு மற்றும் தொழில் நுட்ப மேற்பார்வையுடன் அமுல்படுத்தப்படும். கால்நடை விநியோகத்திற்காக வில்லோட் கிராம ஏற்றுமதிகள் என்ற வெளிநாட்டு நிறுவனத்துடன் ஓர் உடன்படிக்கை 14 ஆம் திகதி ஒக்டோபர் மாதம் 2014 ஆண்டு கையொப்பம் இடப்பட்டுள்ளது. இதன் பிரகாரம் 20,000 பசு மாடுகள் இரண்டு வருட காலப்பகுதியில் ஒரு தடவையில் 2000 பசு மாடுகள் என்ற வகையில் வந்தடையவுள்ளன.



20,000 பாற்பசுகள் இறக்குமதி செய்வதற்கான உடன்படிக்கை கைச்சாத்திடல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தயாரிப்பு
**திட்டமிடல் மற்றும் கண்காணிப்புப் பிரிவு**
**பொருளாதார அபிவிருத்தி அமைச்சு**
இல. 464/A ரி.பி. ஜெயா மாவத்தை
கொழும்பு -10
தொலைபேசி இல: 011 2673568
011 2676816

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org